84

# பாளையப்பட்டுக்களின் வம்சாவளி - தொகுதி-II



தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூல்நிலையம்

# பாளையப்பட்டுக்களின் வரலாறு

## தொகுதி - II

தமிழ்நாடு அரசு
கீழ்த்திசை நூலகச்
சுவடி

பதிப்பாசிரியர்
**ந. மார்க்சீயகாந்தி** எம். ஏ.,
கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை

பொறுப்பாசிரியர்
**டாக்டர். இரா. நாகசாமி**

வெளியிட்டோர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
1981.

First Edition: 1981
T. N. D. A. Pub. No. 84

© Tamilnadu State Department of Archaeology

**Palayappattukkalin Varalaru, Vol. II**

954.82

Editor
**N. Marxia Gandhi** M.A.

General Editor
DR. R. NAGASWAMY

Price Rs. 9-75

Printed and Published by the State Department of Archaeology
on behalf of
Oriental Manuscripts Library, Madras.

செ. அரங்கநாயகம்
கல்வி அமைச்சர், தமிழ்நாடு அரசு

செயின்ட்ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600009.

தமிழ்நாடு அரசு இதுகாறும் அச்சில் வெளிவராத பழம் ஓலைச்சுவடிகளைப் படி எடுத்து அச்சிட்டுப் பதிப்பிக்க ஒரு திட்டத்தை மேற்கொண்டுள்ளது. அதற்கு உரிய பண ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாட்டிலும், மற்றும் நாட்டின் பிற பகுதிகளிலும், பல்வேறு சுவடி நூலகங்களில் தமிழக மருத்துவம், கணக்கு, இசை, நாட்டியம், சிற்றிலக்கியங்கள், பேரிலக்கியங்கள் இன்னபிற நூல்கள் அச்சிடாமல் இருப்பது கணக்கிடப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள பல்வேறு சுவடி நூலகங்களையும், அந்நிறுவனங்களில் உள்ள அச்சில் வராத நூல்களை அச்சிடும் பணிக்கு உதவுமாறு அரசு கேட்டுள்ளது. பல்வேறு நூலகத்தார்களும் தேவையான வசதிகளை அளிக்க மனமுவந்து முன் வந்துள்ளனர். தமிழ்த் துறையில் வல்லுநர்கள் இந்நூல்களை ஆராய்ச்சிக் குறிப்புடனும், முன்னுரையுடனும் பதிப்பித்துத்தர முன்வந்துள்ளனர். இந்த நூல்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் அடிக்குறிப்புக்களுடன் வெளியிடப்படும் ஓலைச்சுவடிகளைத் தேர்ந்தெடுத்துப் படி எடுத்துப் பதிப்பிக்கும் பணியைத் தொல்பொருள் ஆய்வுத்துறை, மேற்கொண்டுள்ளது.

இதுகாறும் 75 நூல்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல அச்சாகி இந்நூல் வரிசையில் வெளி வருகின்றன. அரசின் இந்தப் பணியில் ஒத்துழைக்க முன்வந்துள்ள ஆராய்ச்சி வல்லுநர்களையும், தமிழ்ப் பெரியோர்களையும், சுவடி நூலகங்களையும் நான் வாழ்த்துகின்றேன். இதுபோன்று விரைவில் அச்சில் வராத அனைத்து நூல்களும் ஆராய்ச்சியாளர்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் மற்றும் பொது நூலகங்களுக்கும் கிடைக்கும் வகையில் வெளிவரும் என்பதில் ஐயம் இல்லை. இதன் பயனாய் காலந்தோறும் தமிழில் தோன்றிய பல்வேறு கருத்துக்களையும் பண்பாட்டையும் முழுமையாக அறிந்து கொள்ள இயலும் என்பதில் ஐயம் இல்லை.

**செ. அரங்கநாயகம்**
*27-12-1980*

C. ARANGANAYAGAM
Minister for Education
Government of Tamilnadu

Fort St. George
Madras-600009.
27-12-80

The Government of Tamilnadu, under a special scheme of publication of unpublished Tamil Manuscripts have come forward to undertake the printing and publishing of all the available unpublished Tamil Manuscripts in the State. Necessary funds towards the publication have been provided for the purpose. It is estimated that several hundred unpublished Tamil manuscripts dealing with native medicines, mathematics, music, fine arts, and literary compositions of various nature, are lying unpublished in different Manuscripts Libraries of this State and also in other parts of the country. Various Manuscript Libraries in the State, have been approached to make available their unpublished texts for publication. The authorities of these Manuscripts Libraries have come forward with interest and enthusiasm to afford necessary facilities for the same. Eminent Tamil Scholars, well-versed in the art of editing have been requested to take up the work of editing. Under the scheme the texts will be critically edited with suitable foot-notes and brief introductory analysis both in English and Tamil for the benefit of researchers and scholars. The selection of manuscripts, copying and editing have been entrusted to the Tamilnadu State Department of Archaeology.

So far the texts of 75 manuscripts have been copied and a number of them edited and are made available in printed form in this series. I am thankful to all the institutions and scholars who have come forward to join the Government in this venture. It is only a beginning and I do hope that all the available texts will be in the hands of scholars, educational institutions and public Libraries, so that the contribution of the Tamils through the centuries in different fields will be available for the proper understanding and comprehension of the Tamil Language, Literature and Culture.

C. ARANGANAYAGAM
27-12-80.

# INTRODUCTION

The manuscripts published under this title "Palayappattukalin Varalaru" were collected by Col. Mackenzie, the well known collector of historical documents and Literary manuscripts. These are well known to historians as *Mackenzie Manuscripts* and are now preserved in the Government Oriental Manuscripts Library, Madras. Summaries of these Manuscripts have appeard in English and the Madras University has published one volume in English edited by Dr. T. V. Mahalingam. Even in this edition only the summary of the texts are given.The entire collection has not been published in original so far. We are now publishing the entire collection in original in four volumes.

A perusal of the text shows that, Mackenzie collected these family history of the erstwhile Palayappattu Pattakkārars and Zemindars, to prove their claim for titles and previleges and hence these are the most valuable documents which show the transition from the native administrative set up and life to the colonial yoke and how steadily the independence of the local lords were eroded. It is interesting to note that many of these families were able to give sufficient account of their ancestors. Most of them were able to recollect as far back as 16th century and some upto 14th century, beyond which the tradition is unable to bear any authenticity. In some cases, they plainly said that they have lost their family history in the political unrests and efflux of time. Many of the decendents of the families are still alive though reduced in their status.

The collection of the family history of the erstwhile local chiefs, besides throwing light on their wa yof functioning, provides ample evidence on the social customs and manners, that were prevalent in 16th to 18th centuries A. D This aspect has not been fully utilised by Sociologists and hope that this series will provide the basis for further research.

**Dr. R. Nagaswamy**

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| புரவி பாளையங் கோபண மன்றாடியார் வம்சாவளி | 1 |
| மசகூர்க் குமார சோழியாண்டான் கவுண்டன் வமிசாவளி | 13 |
| பொருளூர் நல்ல பெரியக் கவுண்டன் பட்டக்காரன் வமிசாவளி | 17 |
| நிலக்கோட்டை ஜமீன்தாரி கூளப்ப நாய்க்கன் வமுசாவழி | 22 |
| சுக்காம்பட்டி பாளையப்பட்டு ஜமீன்தார் வமிசாவளியும், பட்டையமும் | 30 |
| சுக்காம்பட்டி ஜமீன்தாருடைய வம்ஷாவழிக் கணக்கு | 41 |
| தொட்டயங் கோட்டை சமீன்தார் வமுசாவழி கணக்கு | 49 |
| தாறாபுரம் துக்குடி புள்ளாச்சி தாலுகா பாளையகாற் தேவனாயக்கற் கைபீது | 55 |
| பல்லியப்ப நாயக்கனூர் ஜமீன்தார் வம்முசாவழி கணக்கு | 63 |
| ரெட்டயம்பாடி பாளையக்காரர் கைபீது | 69 |
| வேணு ஓடையாக் கவுண்டன் வம்சாவளி | 80 |
| நிமிந்த பட்டி நீலியப்பக் கவுண்டன் வமிசாவளி | 87 |
| மாம்பரை பாளையப்பட்டுப் பாளையக்காரர் வமிசாவளி | 93 |
| நடுவுக்குறிச்சிப் பாளையக்காரன் வமிசாவளி கைபீது | 106 |
| சமத்தூர் வாணவறாயக் கவுண்டன் வமுசாவளி | 112 |
| திண்டிக்கல் வகையறாவுக்குச் சேர்ந்த போடினாயக்கர் பாளையப்பட்டு வமுசாவளி | 124 |
| திண்டுக்கல் ஜமீன்தார் வம்சாவளி | 129 |
| திண்டுக்கல் ஆரணி விஜய வேங்கடபதி சாசனப் - பட்டயம் | 141 |
| வள்ளாற் கவுண்டன் வமிசாவளி | 143 |
| விருபாட்சி பாளையப்பட்டு | 152 |

# புரவிபாளையங்
# கோபண மன்றாடியார் வமிசாவளி

## D: 2964

புள்ளாச்சி தாலுகாவுக்கு சேந்த பொறவிபாளையத்துலே யிறுக்கும் இம்முடிப்பட்டத்து கோபண மன்ன்றாடி யெண்ணப் பட்ட பாளையகாறனுடைய வமுசாவளி முதலான கைபீது யென்னவென்றால்

பூற்வத்தில் சேர ராசா பூந்துரைப் பட்டணம் வாசத்தறாயி றாச்சியாதிபத்தியம் பண்ணிக்கொண்டு வருகுர நாளையில், அக்காலத்து தொண்டமண்டலத்துக்கு காத்தப்ப னாடு உடுவூருலே யிறுக்கப்பட்ட வேட சாதியில் னூத்தி அரவதுநாயிரம் வீட்டுக் காற்களில் னாகன் யெனங்குர வேடன், அவன் புண்சாதி தத்தை இவற்களுக்கு புத்திர சத்தானம் மில்லாமல் ஸ்ரீ காள அஸ்தீசுவரரை னோக்கி தபசு செயிது கொண்டுயிருந்தபடியினாலே யீசுவரர் அனுகிறஹத்துநாலே புள்ளை உண்டாயி வேட சாதியரானவரும் அந்த புள்ளைக்கு திண்ணனென்று பேற் வச்சுயிருந்தாற்கள்-

அந்த திண்ண நென்ங்குர வேடன் ஸ்ரீ காள அஸ்தீசுவறருடைய பாதங்களுக்கு, தான் வேட்டையாடுகுர மது மாம்சங்கள்னாலே பூசை நெயிவேத்தியங்கள் பண்ணி கொண்டு வந்த பகுத்தினாலே யீசுவர பகுத்தனாயி நடந்து கொண்டு வந்தபடியனாலே யீசுவர வரபிறசாதத்துலே கண்ணப்ப னயினாற் யென்ங்குர பேற் வரப்பட்டது.

கண்ணப்ப நாயினாற்யென்ங்குர சிவ பகுத்...ய் நடத்தையளை யெல்லாம் சேருமான் பெருமாள் கேள்விப்பட்டு உடுப்பூருலே யிருக்குப்பட்ட வேடசாதி னூத்தி அ[ருவ]து நாயிரம் பேறையும் அளைச்சு கொண்டு தம்முடைய சோ[தே]சமான கொங்கு தேசத்தில் சிருது பேறா தினபிரதியும் னூத்தி அரவது கற்பூவு யேடுத்து வருகுர பூந்தோட்டம் காற்க்குறபடிக்கு

சிருது பேரை வூருகளுக்கு காவல் காற்த்துக் கொண்டு வரும் படியாக்கி, சிருது பேரை கள்ளனாயிருக்குரவாளை ஆக்கினை பண்ணிவிக்கும் படியாக்கி, யிப்படிக்கு அந்த வேடசாதி அனவறுக்கும் வூளியங்கள் கட்டு பண்ணி கொங்கு தேசத்தில் நெலைநாட்டு பண்ணிநாற்கள். யிப்படிக்கு சேறமாம் பெருமாள் கொங்கு தேசத்திலே நெலைநாட்டு பண்ணப்பட்ட வேட சாதி அனவறுக்கும் மெயிகாவல் காத்து வரப்பட்டவற்களுக்கு வலவரென்றும், பூந்தோட்டம் காற்க்கப்பட்டவற்களுக்கு பூவலவரென்றும், கள்ளரை ஆக்கினை பண்ணப்பட்டவர்களுக்கு வேட்டுவன் என்றும், யிப்படிக்கு பேற்உண்டானவர்களாயி அவரவற்களுக்கு யிட்ட வூளியத்து நாட்டுக்காற்களாஇ யிருந்தாற்கள்.

யிப்படிக்கு க்ாணியாட்சிக் கா்றகள்்ாஇ இருக்கப்பட்ட பூவலவ சாதியிலுள்ள அனவற்களும் சேரமான் பெறுமாள் கட்டு பண்ணின ஊளியம் பண்ணிக்கொண்டு வருகுரனாளையில் பூவல சாதியில் ஒருவன் - யீசுவர பகுத்தனாயி தன்னுடைய சோதற்மம் நடத்தையள் நாலே ஈசுபரனை குரிச்சு புத்திர சந்தானத்துக்காக தவசு பண்ணிக்கொண்டு யிருந்தான். ஈசுவரர் அனுக்கிரஹத்துநாலே சொப்பனத்துலே புத்திர சத்தானம் உண்டாகுரதென்றும்; வராக்க நாட்டுலே கப்பளாங்கரை யென்ங்குர யிடத்தில் சான்னித்தியமாக யிருப்போமென்றும், வுன் புள்ளைக்கு கொப்பண னென்ங்குர பேற் வௌங்க பண்ணிக்கொண்டு வரச் சொல்லியும் சொப்பனமா்யி புள்ளை புரந்துது. அந்த ஓடனே கப்பளாங்கரையில் கொப்பணமாற் யென்ங்குர தேவாலயம் பண்ணி யிஷ்ட்ட தயிவமாக கோரிக்கொண்டு வந்தா்றகள்.

சுவப்பனா அனுக்கிரஹத்து நாலே உண்டான் கொப்பணரென்ங்குரவன், அதிசூர பாக்கிரம சாலியாயி யிருந்து சேர ராசா கடா்ட்சம்சம்பாதிச்சுக் கொ்ண்டு கா்வலவன், வேட்டுவன், பூவலவன், யிவற்களுக்கெல்லாம் மொதன்மைக் காரனாக பிர்சுத்திப் பட்டவனாக யிருந்தான்.

யிப்படிக்கி தெயிவ கடா்ட்சயத்துனாலே உண்டாகிய கொப்பண னென்ங்குரபேற் பிறசுத்திப்பட்டவனாயி யிருக்கும்

நாளையில் அக்காலத்து சேர றாச்சியம் பாண்டிய றாசா கைக் கொண்டு கொங்கு தேசத்துக்கும் றாச்சிய பிறபுத்துவாதிகாரி யாகி பாண்டிய றாசா ஆண்டுக்கொண்டு வருகுர, நாளையில் கொப்பணன் யென்ங்குரவன் வமுசத்தில் குல தெயிவமான கோப்பணமாற் பேறாலே கொப்பண னென்ங்குரவன் பாண் டிய றாசா அவற்கள் பேட்டிக்கு போயி, தன்னுடைய சாதி வர லாறு முதலாகிய ஸ்ரீ காள அஸ்தீசுவறருடைய வரபிதத்துனாலே கண்ணப்ப நயினாற் யென்ங்குர பேற் வுண்டான ...... டைய வரலாரும், கொங்கு சீற்மையிலே காணியாளற்களாக காவலவன், வேட்டுவன், பூவலவன் யிவற்களுக்கெல்லாம் முதமைக்காரனாக யிருந்து வருகுர தன்னுடைய வமுசத்தருடைய சேதி...யெல்லாம் அரிய பண்ணிக்கொண்டான். அக்காலத்துக்கு சந்திரகுல பாண்டிய றாசா அவற்கள் சந்தோஷப்பட்டு சேர றாசா நடப்பி விச்ச முதமைக்கார அதிகாரத்துக்கு அதிகமாக நடப்பிவிக்குரோ மென்று சொல்லி கலியுகம் 1714 கொங்கு நாட்டுலே நீ மனசப் புதாரனாக யிறுமென்று கட்டளையிட்டு பட்டமு கட்டி அம்பலவாணற் கடாட்சயத்துலே வெளங்கி உண்டாகப்பட்ட மன்றாடியாறுடைய [பேற்] மன்றாடியென்று பேறும் குடுத்து முடியும் சூட்டி பட்டாபிஷேகம் பண்ணினபடியனாலே தெயிவானுக்கிரஹத்துனாலே வுண்டாகிய குல தெயிவமான கொப்பண னென்ங்குர பேறும் சேர றாசா றாச்சியாதி காரத்துக்கு பிற்காலம் பாண்டிய றாசா முடியும் சூட்டி பட்டாபிஷேகம் பண்ணினபடியனாலே இம்முடிப்பட்டம் யென்றும், பாண்டியறாசா அவற்கள் நாலே கிதாபு உண்டாகிய மன்றாடி யென்றும் யிம்முடிப்பட்டம் கொப்பண மன்றாடி யென்ங்குர பேற் வறப்பட்டவற்களாயி பிறசுத்திப் பட்டு கொங்கு நாட்டுகளிலே சென்னிமலைக்கு மேற்க்கு, கறும்புளைக்கு கிளக்கு, ஆனைமலைக்கும் வடக்கு, பால மலைக்கு தெற்க்கு யிந்த நாற்ப்பாங்கு யெல்லை சதிரத்துக்கு வுள்பட்ட சீற்மைக்கு து[ரை]த்தன்ம் செயிதுக்கொண்டு வெள்ளயன்கிறி நகரம், குருஞ்சி நகரம் யிந்த ரெண்டு பட்டணம்ங்களிலேயும் யிருந்துக் கொண்டு வமுச பரம்பரை யாஇ பட்டம் ஆண்டு கொண்டு வந்தாற்கள்.

யிப்படிக்கு குருஞ்சி நகரம், வெள்ளியன்கிரி நகரத்திலே யிருந்து பட்டம் ஆண்டுக்கொண்டு வருகுர நாளையில் பாண்டிய

சமுஸ்தானம் யெடுபட்டு துலுக்காணியமாயி யிருந்து மேல் சீற்மை கன்னடியாள் வந்து துலுக்காள் பேரில் சண்டை பண்ணுகுர சமயத்தில், பாண்டிய றாசா அவற்களுக்கு ரொம்பவும் குமுக்காயி யிருந்து துலுக்காள் பேறில் சண்டை பண்ணி துரத்தி விட்டு, மேல் சீற்மை லிங்கதாரிகளிலே குமுண றாசா யென்ங் குரவற் பாண்டிய றாசா அவற்களுக்கு பட்டம் கட்டிப் போட்டு போனாற்கள்.

பாண்டிய றாசா அவற்களும் வெள்ளியன்கிரி, குருஞ்சி நகரம் பட்டணத்துக்கு சேந்த சீற்மையை ஆளப்பட்ட கொப்பண மன்றாடியாற் யிடத்தில் ரொம்பவும் சந்தோஷப் பட்டு, சிம்ஹல்லாடம், பல்லாக்கு, வுபய சாமரம், சுறுட்டி, சூரிய பான், வெள்ளக்கொடை, பச்சக்கொடை, பூச்சக்கிரவாள கொடை, பஞ்சவற்ண கொடை, மீனக்கொடி, அனுமடால், கெறுடடால், மகரடால், வசவசங்கரடால், வெட்டுப் பாவாடை, ஆனைமேல் பேறிகை, ஒட்டகைமேல் நகாறு, குதிரைமேல் டங்கா, வெங்கல துடுப்பு, தாரை, பூரிகை சின்னம், மல்லாரி, யெங்காளம், சிக்குமேளம், சாமதுரோஹாவெண்டயம், வீர கண்டாமணி, தரகனிகளம், ரணபாஷிக்கம், முத்துதுராயி, ஒண்டி, ரேக்கு, முத்தொண்டி, பச்சொண்டி, குதிரைக்கு மொக சல்லி, பக்க சல்லி, அண்டசல்லி, தாலதண்டை யிது முதலான ஆயுதங்களுடனே சகல பிறுதுகளும் பூற்வத்தில்வுள்ள பிறுதுகள் யெல்லாம் குடுத்து, மனசு புதாரறாயிறுமென்று கட்டு செயித படியனாலே வமுச பரம்பரையாயி இம்முடிபட்டமும் கொப்பண மன்றாடியாற் யென்ங்குர பேற் பிரசுத்திப் பட்டவற்களாயி வமுச பரம்பரையாயி வெள்ளியன்கிரி நகரத்தில் வாசமாயி யிருந்துக்கொண்டு சீமை ஆண்டு அனுபவிச்சுக்கொண்டு அந்தந்த காலத்துக்கு றாசியம் பிறபுத்துவம் பண்ணப்பட்ட றாசாக்கள் மனோதற்மமாயி பாளையப்பட்டு ஆண்டு அனுப விச்சுக்கொண்டு வந்தாற்கள்.

வெள்ளியன்கிறி பட்டணத்தில் சீற்மை ஆளப்பட்ட பாளையகாற் இம்முடிபட்டம் கோப்பண மன்றாடியாற் யென்ங்குர பட்டபேற் பிறசுத்திப்பட்டவர்களாயி ஆண்டு வறுகுர னாளையில், பாண்டிய சமுஸ்தானம் யெடுப்பட்டு ராய சமுஸ்தானத்துக்கு தட்சண பிரதேசமெல்லாம் சேந்து மதுரை

சமுஸ்தானத்துக்கு...ஷகம் நாகமனாயக்கற் பிள்ளை விசுவனாத நாயக்கரை மதுரை ராச சமுஸ்தானாதிபதியென்று பட்டாபி ஷேகம் செய்து நாய்க்கரவற்கள் ராச்சியாதிகாரத்தில் கணுவாயி கீள்ப்பட்ட பிறதேசமெல்லாம் மதுரை சமஸ்தானத்தில் சேந் துயிந்த மனசபுத்ரற் பாளையகாற்களை யெல்லாம் தரிவிச்சு கட்டளையிட்டபடிக்கு பாளையகாற் பாளையப்பட்டு ஆண்டு கொண்டு வறுகுர நாளையில் அக்காலத்தில் நாயக்கறவற்கள் காரியத்துக்கு கற்த்தறாகிய அளகாந்திரினாயக்கற் யென்ங் குரவற் கலியுகம் 4347க்கு செயவருஷம் சித்திரை மாதத்தில் காட்டு பேரூறுக்கு வந்து பட்டீசுவரசுவாமி தரிசனம் பண் ணிக்கொண்டு யிறுக்குர சமயத்தில், ராத்திரி சொப்பனத்தில் சுவாமியும் அம்மனுமாக வந்து கனகசபை அம்மன் கோவில் ஆயிரக்கால் மண்டபம் உண்டு பண்ண வேணுமென்று சொப்ப னமானபடியனாலே அளகாந்திரி னாயக்கற் வெள்ளியன்கிரி நகரத்தில் பாளையம்பட்டு செலுத்திக் கொண்டு யிருக்கப்பட்ட இம்முடிபட்டம் முத்துவேல்மணி சந்திர கோபண மன்றாடி யாரை தரிவிச்சு தமக்கு சொப்பனமானதுகளை சொன்னபடிய னாலே அந்த சமயத்தில் யெங்கள் பெரியோற்கள் இம்முடி பட்டம் முத்துவேல் மணி சந்திர கோபண மன்றாடியாற் காட்டு பேரூற் பட்டீசுவரசுவாமி சன்னதிக்கு கனகசபை, அம்மன் கோவில் மண்டபம், ஆயிரக்கல் மண்டபம், சீறனோ தாரணம் பண்ணிவிச்சாற்கள். கனகசபை முதலாகிய ஆயிரக் கால் மண்டபம் உண்டுபண்ணினபடியினாலே-அளகாந்திரி னாயக்கற் அவற்கள் யெங்கள் பெரியோற்கள் பேரிலே மிகவும் சந்தோஷப்பட்டு மதுரைக்கு அளச்சுக் கொண்டு போனார்கள்.

மதுரைக்கு போயி இருக்கும் னாளையில் சிருது நாளைக்கு பிற்க்காலம் கலியுகம் 4500க்கு மேல் பெரியோற்கள் இம்முடிப் பட்டம் முத்துவேல் மணி சந்திர கோப்பண மன்றாடியார் யிடத்தில் உண்டான குணாதிசயும்ங்களை யெல்லாம் மதுரை சமுஸ்தானாதிபதியான னாயக்கரவற்கள் சன்னிய தானத்துக்கு அளகாதிரி நாயக்கர் அரிக்கை பண்ணின படிய னாலே மெத்தவும் சந்தோஷப்பட்டுக் கொண்டு பூற்வத்து கொப்பண மன்றாடியாறுடைய சீற்மை செலுத்திக் கொண்டு வரப்பட்ட சங்கதிகளை அரிஞ்சிக் கொண்டு கொங்கு சீற்மையில்

மலைச்சறவுலே யிறுக்கப்பட்ட துஷ்ட்டற்களை யெல்லாம் நிக்கிறஹம் செய்ய சொல்லி கட்டுச் செயிது வெட்ட வாளும், கட்டக் கயரும் சதுரங்க பலமும் குடுத்து சகல வெகும்திகளும் செயிதாற்கள்.

மதுரை சமுஸ்தானத்துலே வெட்ட வாளும் கட்டக் கயறும் விருதுவாங்கி கொண்டு கொங்கு சீமைக்கு வந்து, துஷ்ட்டரை அய்யாயிரம் பேரை நிக்கிரஹம் செயிது, யெரணூத்தி முப்பத்தி அஞ்சு யானையும் கைக்காணக்கெயும் கொண்டு போயி மதுரையில் விசயரங்க கிர்ஷ்ட்டண முந்து வீரப்ப னாயக்கற் அவற்கள் சன்னியதானத்தில் ஆனைகளும் குடுத்து, மலைச்சருவுலே துஷ்டர்களை நிக்கிரஹம் பண்ணின சேதிகள் விண்ணப்பம் செயிது கொண்டயிடத்தில், ஆனை மேல் பயணம் பெறவே சம் செயிவிச்சு பச்ச பல்லாக்கும், பகல் தீபட்டி, உபய சாமரம், ரண பாஷிக்கம், முத்துராயி, செங்கோல் முத்திரையும், வெங்கல பேரிகையும், வீர சின்னமும், சந்திர சூரிய வாதியும், நாகசவாத்தியம் முதலாகிய சகல பிறுதுகளும் குடுத்து, கொங்கு னாட்டில் பூற்வத்தில்லுள்ள வெள்ளியன்கிரி, குறுஞ்சி நகரம் சீற்மையில் வனங்கள், நதிகள், மலைகள் தேவாலயம், பிறம்மணாலயம் முதலாகிய யெப்பேறப்பட்டதும் நீரே சுத்த சமன புத்ரராயி அனுபவிச்சுக் கொண்டு வறுஷம் 1-க்கு மதுரை சமுஸ்தானம் அஸ்தாந்திரத்துக்கு திருவாலூற சக்கிறம் 83000 நெல்லு சலிகை 50700 சலிகை நிகுதி பண்ணி சீற்மை அனுபவிச்சுக் கொண்டு வரச்சொல்லி கட்டளையிட்டாற்கள்.

மதுரை சமுஸ்தானத்தில் னாயக்கரவற்கள் கட்டளையிட்டபடிக்கு காஞ்சி னதீ சூள்ந்த வெள்ளியன்கிரி நகரத்துலே யிறுந்துக் கொண்டு சீற்மையில் தேவதாயம், பிறம்மதாயம் நடப்பிவிச்சுக் கொண்டு தேறு, திறுவுளாவு கட்டளை யேவி மதுரை அஸ்தாந்திரத்துக்கு நிகுதிபட்டிக்கு செலுத்திவிச்சுக் கொண்டு மனசு புத்தரராய்யி பிறபுத்துவம் பண்ணிக்கொண்டு பிறசுத்தி புருஷாளாயி இருந்தாற்கள்.

சேர றாசா னாளையிலே கொங்கு னாடுகளிலே வூளியம் னிகதி செயிது அந்த வூளியத்து பேற்களாலே பூவல சாதி யென்று பேற்பட்ட சாதியில் கோப்பணனென்ங்குரவன் உண்

டாயி கோப்பணலாரை குலதயிவமாக பிறாற்த்திச்சுக் கொண்டு குலதயிவ பிறாசனதத்துனாலே இம்முடி பட்டம் கொப்பண மன்னறாடியென்ங்குர, பேற் உண்டானவர்களாயி சீற்மை யாண்டு செலுத்திக் கொண்டு, துஷ்டனுக்கு மிறைனாக அர மனைக்கு குமாரவர்க்கமாக நடந்துகொண்டு, இம்முடி பட்டம் கொப்பணமன்றாடி யேன்ங்குர பேற் பூமியிலே விளங்கிக் கொண்டு வரப்பட்ட வமுச பரம்பரைகளும் பட்டம் ஆண்டு வரப்பட்டவற்களுடைய செவுரிய அவுதாரிய காம்பிரியங் களுடைய வரிசைகள் யிதின் கீள் யெளுதி வறுகுரது.

காம்பீரியங்களுடய பூர்வத்தில் குறுஞ்சி நகரத்தில் சீமை ஆண்டு கொண்டு வரப்பட்ட இம்முடி பட்டம் கொப்பண மன்றாடியார் அவர்கள், வருஷம் பிறிதியும் பள்ளியாண்டவற் திறுவிளா தாசி[ன]ம் பண்ணிக்கொண்டு வந்த சமயத்தில் ஷெ வய்யாபுரி னாட்டுப் பாளையகாரன் விசயகி சின்னோம னாயக்கற் விறுந்து பண்ணுகிர சமயத்தில் விரோதமாயி பள்ளி விட்டு ஆண்டவற் தரிசனம் பண்ணுமல் வந்தோமே யென்று மனசுலே வெகு சிந்தை அடஞ்சவனாயி வந்து கொண்டுயிறுக்குர சமயத்தில், ராத்திரி சொப்பனத்துலே பள்ளி யாண்டவர் வந்து ஒன்னுடைய சீமைக்கு போன ஒடனே ஒன்னுடைய சீற்மையிலே பொன் மலை மேல் நம்முடைய பாதம் வச்சுயிறுக்குறோம். நீயி வறுஷ பிரதி யும் அவடத்துலே தானே தனாதவுச்சவம் நடப்பிவிச்சு கொண்டு தரிசனம் பண்ணிக்கொண்டு வரவே அப்பணை மேல் பொன்மலை மேல் பாதங்கள் யிறுந்து அநேகமேரைக்கு ஆலயம் உண்டுபண்ணி உச்சவாதிகள் நடப்பிவிச்சுகொண்டு வந்தாற்கள்.

1. சந்திர கோப்பண மன்றாடியாற் பட்டம் ஆண்ட வருஷம்
2. யிவற் குமாரன் முத்துக் குமார கோப்பண மன்றாடி யார் பட்டம் ஆண்ட வருஷம்
3. யிவற் குமாரன் சுப்பராய கோப்பண மன்றாடியாற் பட்டம் ஆண்ட வருஷம்
4. யிவற் குமாரன் பெரிய கோப்புண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்

5. யிவற் குமாரன் சந்திர கோப்பண மன்றாடியாற் பட்டம் ஆண்ட வருஷம்
6. யிவற் குமாரன் கந்த கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
7. யிவற் குமாரன் கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
8. யிவற் குமாரன் முத்து வேல் மணி கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
9. யிவர் குமாரன் சுப்பறாய கோப்பண மன்றாடியாற் பட்டம் ஆண்ட வருஷம்
10. யிவற் குமாரன் பெரிய கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
11. யிவற் குமாரன் சந்திர கோப்பண மன்றாடியாற் பட்டம் ஆண்ட வருஷம்
12. யிவற் குமாரன் கந்த கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
13. யிவற் குமாரன் முத்து வேலக் குமார கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
14. யிவற் குமாரன் குமார கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
15. யிவற் குமாரன் சுப்பறாய கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
16. யிவற் குமாரன் பெரிய கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
17. யிவற் குமாரன் முத்துக் குமார
கோப்பண மன்றாடியார் பட்டம்
ஆண்ட வருஷம்
18. யிவற் குமாரன் சந்திர
கோப்பண மன்றாடியார் பட்
டம் ஆண்ட வருஷம்
19. சுப்பறாய
கோப்பண மன்றாடியார் பட்
டம் ஆண்ட வருஷம்

20. யிவற் குமாரன் பெரிய கோப்
பண மன்றாடியார் பட்டம்
ஆண்ட வருஷம்
21. யிவற் குமாரன் கந்த குமார
கோப்பண மன்றாடியார் பட்டம்
ஆண்ட வருஷம்
22, யிவற் குமாரன் பெரிய கோப்
பண மன்றாடியார் பட்டம்
ஆண்ட வருஷம்
23. யிவற் குமாரன் முத்து வேல்
மணிக் குமார கோப்பண
மன்றாடியார் பட்டம் வருஷம்
24. யிவற் குமாரன் சுப்பறாய
கோப்பண மன்றாடியார் பட்டம்
ஆண்ட வருஷம்
25. யிவற் குமாரன் சந்திர கோப்பண
மன்றாடியாற் பட்டம் ஆண்ட வருஷம்
26. யிவற் குமாரன் முத்துக் குமார
கோப்பண மன்றாடியார் பட்
டம் ஆண்ட வருஷம்
27. யிவற் குமாரன் பெரிய கோப்
பண மன்றாடியார் பட்
டம் ஆண்ட வருஷம்
28. யிவற் குமாரன் புலி குத்தி
கோப்பண மன்றாடியார் பட்
டம் ஆண்ட வருஷம்
29. யிவற் குமாரன் கோப்பண
மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்

போகுகாலமானபடியனாலே பட்டம்ங்களுடைய வரிசைகள் இம்முடி பட்டம் சந்திர கோப்பண மன்றாடியாற் நாள் முதல் பட்டம்ங்களுடைய வறிசைகளும் அவாளவாளுட சறியகளும் தெரியப்பட்டுது. சிறுது சாதங்களாலேயும், பெரியவாள் சொல்ல கேள்வினாலேயும் அரியப்புட்டு அந்தந்த

காலத்து யுத்த சன்னாகமங்களிலே அவாளவாளுடைய சவுரிய காம்பீரியங்கள் யிதின் கீளை யெளுதி வறுகுரது.

யெங்கள் பெரியோர்கள் வமுச பரம்பரையாயி, இம்முடி பட்டம் கோப்பண மன்றாடியார் யென்ங்குர பேற் பெறசுத்திப் பட்டவர்களாயி இறுந்து, மலையாளத்து ராசாக்களுக்கு ஆதீனத் துக்குப் பட்டம் கட்டவேணுமென்றால் தாம் போயிப் பட்டம் கட்டி வச்சு வருகுரது. மலையாளத்துலேயும் யிஷ்துலைகள் வருமானங்கள் உண்டு. அதுகளையும் அனுபவிச்சுக் கொண்டு அந்தந்த காலத்தில் ராச்சியாதிபதிகள் கட்டு செயிதபடிக்கு, கானல்களிலே துஷ்ட்டர், வனமிற்கங்கள் உபத்திரவங்கள் யில் லாமல் காத்து பரிபாலனம் பண்ணிக் கொண்டு, அரமனையாற் கட்டளையிட்ட நிகதிக்கு உள்ப்பட்டு நடந்து கொண்டு கிணத் துக்கடவு முதலான யிடங்களிலே கோட்டைபோட்டு, பொன் மலை வேலாயுத சுவாமி முதலாகிய தேவலாயங்களுக்கு தை உச்ச வங்கள் முதலானதுகளும் நடப்பி விச்சு கொண்டு, கிணத்துக் கடவு கோட்டையிலே டாணியும் போட்டு கொண்டு அனேகம் யானை குதிரை சேனகளுடனே, பெரியவாள் சம்பாதிக்கப் பட்ட பிறுதுகள், ஆயுதங்கள், வெளங்க பண்ணி கொண்டவர் களாயி கிணத்துக் கடவு வாசஸ்தறாயி இறுந்தார்கள்.

மயிசூறு சமுஸ்தானம் கற்த்தாக்கள் நாளையிலே அரம னையார் கட்டு செயிதபடிக்கு, கணுவாயிக்கு கீள்ப்பட்ட கெடிகள் யெல்லாம் சமுஸ்தானத்துக்கு சேந்துயிறுக்கும் காலத்தில் அரமனையார் கட்டு செயிதபடிக்கு மலையாளத்து ராசாக்கள் முதலாகிய சில்லறை பாளையகர்ர்களை யெல்லா ரையும் யுத்தம் பண்ணி செயிச்சு, மட்டக்கிப் போட்டு மயிசூறு கற்த்தாக்கள் யிடத்தில் சகல வெகுமதிகளும் கைக்கொண்டு, சமுஸ்தானத்து குமார வர்க்கமாயி இறுமென்று கட்டளை யிட்டபடிக்கு, மலைச்சரவு கானல்களிலே மாற்க்கங்களுக்கு ப்ாதிகாவல் காற்க்கும்படியாகவும் உத்திரவு செயிதபடிய னாலே, மலைச்சரவு கானலுகளிலே அரமனையாற்யிட்ட கட்டளை படிக்கு புரவிபாளையம் என்ங்குர ஊரு உண்டு பண்ணிக்கொண்டு, கானல்களிலேயும், மார்க்கங்களிலேயும், சில்லரை கள்ளர் உபத்திரவம் யில்லாமல் பண்ணிக்

கொண்டு, பாதுகாவிலிலே வரப்பட்ட மிராசியும் அனுபவிச்சுக் கொண்டு கோயமுத்தூற் கோட்டை வாசல் வரைக்கும் பாதி காவல் காத்துக்கொண்டு, பிறவிபாளையத்துக்குச் சேந்த கிறாமங்களுக்கு அரமனையாற் கட்டளையிட்ட நிகதிப் படிக்கி நடந்துக் கொண்டு, கானல்களிலேயும், மாற்கங்களி லேயும் சுங்கம், மகமை முதலாகிய மிறாசியும் அனுபவிச்சுக் கொண்டு பாளைப்பட்டு ஆண்டு அனுபவிச்சுக்கொண்டு வந்தாற்கள்.

மயிசூறு சமுஸ்தானத்து கற்த்தாக்கள் நாள் முதல் நபாபு அயிதரல்லீகான், டிப்பு சுலுதான் நாள்வரைக்கும், டிப்பு சுலுதான் அங்காமி முதலானதுகளுக்கும், சில்லரை பாளையகாற் அரமனை உபத்திரவங்கள் யிப்படிப்பட்ட சில்லரைகள் வந்துக்கொண்டு யிறுக்குர சமயத்தில், நாங்கள் சில்லரைகளை விட்டு மலையாள மாராசாக்கள் ஆசாரவுலே யிறுந்து கொண்டு, அரமனையாறுக்கு முந்தின வூளியங்களுக்கு மூன் நின்று வூளியங்கள் செயிதுகொண்டு, கானல் மாற்க்கங் களிலே சுங்கம், மகமை முதலானது அனுபவிச்சுக் கொண்டு மாற்கங்களிலே போட்ட துரும்பு முதலாகிய தினுசுகள் போட்ட யிடத்திலே யிறுக்கும்படியாக, காயிதா படித்தி நடப்பிவிச்சுக் கொண்டு பிரவிபாளையத்தில் வாசமாயிறுக்குரது.

மஹாராசராச ஸ்ரீ கும்பிணி துரைகள் துரைதனமாயி, யென் பெரிய தோப்பனாற் இம்முடி பட்டம் கோப்பண மன்றாடியாற் காலம் செண்ணுபோன பின்பு, னான் தத்து புத்திரனாக பட்டமுங் கட்டிக் கொண்டு இம்முடி பட்டம் சக மண்டலாதி பதி கோப்பண மன்றாடி யென்ங்குர பேற் வெளங்கி கொண் டவனாயி, யென் தோப்பனாற் பெறிய கோப்பண மன் றாடியாற் கும்பிணி சறுக்காறுக்கு ஆசறாக யிறுந்து ரஷது, முஸ்ததிகள் முதலானதுகளுக்கு ஸ்ரீரங்கபட்டணம் கொடி போடுகுர சமயத்தில், குமுக்கு செயிது கொண்டு கும்பினியாற் கட்டளையிட்ட சனங்களும் வச்சு சாகரியும் செயிவிச்சு மஹா ராச ஸ்ரீ கும்பிணி துரைகள் கடாஷ்சயத்துக்குப் பாத்திரனாக யிறுந்து நடந்துக் கொண்டு, கும்பிணி துரைகள் கடாஷ்சயத்து நாலே யெனக்கு கட்டளைச் செயிதபடிக்கு பிறவி பாளையத் துக்குச் சேந்த கிறாமுமும், பட்டியளுக்கும் வறுஷம் பிறிதி

கண(க்)கு முதலான பேரீசுக்கு பத்தில் மூணு யெனக்கு சாரி செயிது யிறுக்குரபடியனாலே, சாதுலவாறு சீபந்தி தவிர பத்தில் யேளு அரமனைக்கு செலுத்திவிச்சுக் கொண்டு கானல்களிலே பாதி காவலும் காத்து வுத்திரவாதம் பண்ணிக் கொண்டு யிறுக்குரேன்.

மஹறா ராச ராச ஸ்ரீ கும்பிணி துரையவர்கள், அவாளவாள் மானி மரியாதி அரிஞ்சி கடாஷ்சம் செய்து பரிபாலனம் பண்ணப்பட்ட தற்மம், புறபுக்கள்நாலே ஷெடி யனுலே பூர்வத்தில் யென்னாதீனத்து சீற்மைக்கு சேரப்பட்ட குலதய்வமாகிய கப்பளாங்கரை கோப்பணைமாரையும், பொன்மலை வேலாயுத சுவாமி முதலாகிய தேவாலயங்களுக்கு யென்செகுத்திக்கு தக்கினதாயி பணிவிடை செயிது நடப்பிவிச்சுக் கொண்டு, பூற்வம் முதலாக யென் ஆதீனத்துலே யிறுக்கப்பட்ட சனங்களுடைய வமுசஸ்தாள் முதலாகிய ஹூத்திஅன்பது சனத்துக்கு அஹமனியானிய காலஷ்செபம் நடப்பிவிச்சுக் கொண்டு, இம்முடிபட்டம் கோப்பண மன்றாடி யென்ங்குர பேற்வுள்ளவனாயி ஆசறுலே காத்துயிறுக்கு.

இம்முடிப் பட்டம் செகமண்ட
லாயபதி கோப்பண மன்றாடி ருசு

# மசகூர்க் குமார சோழியாண்டான் கவுண்டன் வமிசாவளி

D : 2968

கோயமுத்தூறு துக்குடிக்கு சேந்த சேவுரு தாலுகா, நம்பியான் பாளையம் மிட்ட மவுசே, கசுபா மசகூருலே யிருக்கும் குமாரச் சோளியாண்டான் கவுண்டன் யென்ங்குற பூர்வத்து நாட்டு பட்டக்காரனுடைய வமுசாவளி முதலான கைபீது யென்னவென்றால்:

பூற்வத்தில் ஒறையூர் பட்டணம் ஆளப்பட்ட சோழ சிம்ஹாஸனாதிபதியான மன்மாதிச் சோழ பூபால்கன், மண் மாரியிலே அடஞ்சு போனவராயிச் சோளறாசா பட்டஸ்ரீகள் சாமளாதேவி, சிங்களாதேவி, ரெண்டு பேரும் தெயிவானுக்கு றஹத்துனாலே சிங்களம்மாள் 'பூற்ன கிற்ப்பிணியா'யிறுக்கப் பட்ட ஸ்ரீயும், மேற்க்கு னோக்கி பிரப்பட்டு காஞ்சி மஹா நதீ தீரத்தில் கானல்களுலே வாசம் பண்ணிக்கொண்டு யிறுந் தாற்கள்.

அந்த சோள ராசா ஸ்ரீகள் ரெண்டுபேறும் கானல் களுலே வாசம் பண்ணிக்கொண்டு யிருக்குர சமயத்தில், நித்திய கிற்த்தியமாக வயீதீக மாற்க்கத்தில் அனுஷ்டானம் பண்ணிக் கொண்டு யிறுக்கப்பட்ட சோதி சாஸ்திரசப்பயனாற், யிந்த றாசஸ்ரீகள் ரெண்டுபேரையும் தங்கள் கிறகத்துலே வெய்ச்சுக் கொண்டு ஆதரணை பண்ணிக்கொண்டு யிறுந்து, ராச ஸ்ரீ பட்டமயிஷியானவள் பிரசவிச்சு சுகுமாரனையும் பெத்து யிருந்தாற்கள்.

அக்காலத்துக்கு யென் வமுச பரம்பரையிலே, முன் பெறி யோற்கள் நாளையிலே வடபரிசாற னாட்டுக்கு நாட்டு ஆதிபத் தியக் காரனாயி நாட்டுக்கு உள்ளக்கடையான செம்பிய நல்லூ றில், குமார கவுண்டன் யென்ங்குரவன் நாட்டு ஆதிபத்தியம்

பண்ணிக் கொண்டு செம்பிய நாட்டான் யென்ங்குர பேற் பிர சுத்திப்பட்டு யிறுக்கும் நாளையில், வயிதிக பிராமண சோச்சிய் யறிடத்தில் சேந்து யிருக்கப்பட்ட ராஜஸ்ரீகள் ரெண்டு பேறுக்கும், ஆதரணைக்கு அனுகூலமாற்க்கமாக நடப்பிவிச்சுக் கொண்டுவந்தாற்கள்.

சேற பாண்டிய யிறுவரும் சோழ தேசம் உன்னதுயென்றும் யென்னது யென்றும் இருவற்க் கொறுவற் சம்வாதம் வந்து, அந்தச் சமயத்துலே கெசலஷ்சுமி அனுக்கிறஹத்துனாலே வெள்ளியன்கிரி பட்டணத்துலே, வழந்துக் கொண்டு யிறுக்கப் பட்ட சிங்களா தேவி குமாரனுக்கு பூற்ன்ன கும்பா அபிஷேக மாயி கரிக்கால் சோழ ராசநெென்று நாமதேயம் உண்டானவராயி ஒரயூரு பட்டணத்துக்கு எழுந்தறளும் சமயத்தில், அவினாசி க்ஷேத்திரத்துக்கு வந்து தம்முடய றாயசம்மானத்துடனே குமாரக் கவுண்டன் யென்ங்குரவனை தரிவிச்சு அவினாசீஸ்வர் சன்னிய தானத்துலே, கரிக்காலச் சோழராசா தம்முடய பொரப்பு வழப்பு ஆதரணை மாற்கங்களுக்கு ரொம்ப அனுகூல பிரயனாக நடந்துக் கொண்டு வந்த மாற்கங்களுக்கு ரொம்ப சந்தோஷப் பட்டு, பூற்ன்னம் கும்பாபிஷேகம் பண்ணி பல்லாக்கு இது முத லான சகல வெகுமதிகளும் பண்ணி யிந்த வடா...... நாட்டுக்கு நீயேப் பட்டாதிகாரியாக யிறுமென்று கட்டளையிட்டு, குமார சோளியாண்டாரென்று பட்டபேறும் குடுத்தாற்.

அந்த னாள் முதல் செம்பியன் கீழானாடி நல்லூறான் இம்முடி குமார சோளியாண்டான் கவுண்டர் யென்று பேற் பிரசுத்தியாயி வரப்பட்டுது.

வட பரிசாற நாட்டுக்கு சேந்த வெள்ளியங்கிறி பட்ட ணத்தில் கரிகால்ச் சோழராசன் புரந்து வழந்த படியனாலே, அந்த வெள்ளியங்கிறி பட்டணம் காஞ்சிமகா நதீ தீரத்துக்கு தென்ங்கரை சோழ வழனாடென்றும், வட பரிசாற னாட்டு நாட்டாண்மைக்காரனான குமாரக் கவுண்டனுக்கு சோழ றாசா அனுகிரஹத்துனாலே, பட்டாதிகாறியாயி இம்முடி குமாரச் சோழியாண்டா கவுண்டன் யென்ங்குற பேற் பிரசுத் திப் பட்டவறாயி சீமை ஆண்டு அனுபவிச்சுக் கொண்டு வந்தார்கள்.

அந்த னாள் முதல் சோழ றாசா கட்டளையிட்ட படிக்கு வடபரிசாற நாட்டு ஆண்டுக்கொண்டு இமுடிகுமாரச் சோளியாண்டாரென்றும், இம்முடி சின்னச் சோளியாண் டாற் யென்றும், இப்படி றெண்டு னாமதேயம் யென் வமுச பரம்பரையாயி பேற் வெளங்கி கொண்டு வந்தவர்களாயி சீமை ஆண்டு வந்தார்றகள்.

அதின் பிர்க்கால முதல் அந்த காலத்து றாசாக்கள் இம் முடிக் குமாரச் சோளியாண்டார் கவுண்டன் ஆதீனம் யென்று, பரிபாலனம் பண்ணிக் கொண்டு வடபரிசாற நாட்டு பட்டக் காரன் யென்று, மான மறியாதியாஇ நடப்பி விச்சுக்கொண்டு வந்த படியனாலே, இம்முடி குமார சோளியாண்டாக் கவுண்டன் யென்று பேற்பிரசுத்திப் பலறாயி வமுச பரம்பரையாயி ஆண்டு கொண்டு வந்தாற்கள்.

அதின் பிற்க்காலம் முதல் மதுரை சமுஸ்தானத்தாற் னாளையிலே னாயக்கரவற்கள், யிந்த இம்முடி குமார சோளி யாண்டாக் கவுண்டற் ஆதீனம் வெகு புராதனமென்று மகா சூராக்கள் யென்றும், கேள்விப்பட்டு, ஆதீனக்காரனாயி நடப்பிவிச்சுக் கொண்டு வந்தாற்கள்.

அதின் பிற்க்காலும் மதுரை சமுஸ்தானத்து காறிய கற்த்தராகிய மதுரை றாமப்பய்யற் நாளையிலே, யெங் கள் வமுச பரம்பரைபாயி பாளையப்பட்டு ஆண்டுக் கொண்டு, வரப்பட்ட வடபரிசாற நாட்டு சீமைய்யை அரம னைக்கு கட்டிக் கொண்டு, யெனக்கு அஞ்சாம் தலைமுறை காரனான சேனாபதிக் கவுண்டன் யென்று பேர் உண்டான இம்முடி குமார சோளியாண்டாக் கவுண்டன் னாளெயிலே, தத்தனூறு கிறாமமும் ஆயிரம் யொன் கிறாம சற்வமானிய மாக உப்பிளிகையாக யெங்கள் ஆதீனத்துக்கு விட்டாற்கள்.

சேனாபதிக் கவுண்டன் பிள்ளை, சூரிய தேவ மண்ணாடி யாற் நாளையிலே, வட பரிசாற நாட்டு கிறாமங்களிலே வறுஷம் 1க்கு அயினூறு பொன் கிராமும் விட்டு ஆதீனக் காரனென்று மரியாதி நடப்பிவிச்சுக் கொண்டு வந்தாற்கள்.

அதின் பிற்க்காலும், மயிற்சூறாற் நாளையிலே யெங்கள் ஆதீனத்து சீமை பூமி யெல்லாம் அரமனைக்கு சேத்து கொண் டாற்கள்.

யெங்கள் சாதி பாலகுல வேளாா் பூற்வம் முதலாக இம் முடிக் குமாரச் சோளியாண்டாரென்று பேற் பிறசுத்திப் பட்டு, ஆதீனகாறாயி மசக்கவுண்டன் பாளையப்பட்டு யென் றும், சோளியாண்டாற் பாளையப்பட்டு யென்றும், பிரசுத்தி யாக யிறுந்த ஆதீனம்.

சோளியாண்டாற் ஆதீனத்துலே மஹா அசாய சூரறாயி யுந்தத்துலே அசாய சூர வல்லவனாயிறுந்து சேனாபதிக் கவுண்டற் யென்று பேர் உண்டான இம்முடி குமார சோளி யாண்டாக் கவுண்டன், சஹுஞ்சி சிவாசி யென்குர மராட்டி யுடனே யுத்தம் பண்ணி அத்திய காலத்திலே ரண ரங்கத் துலே வீரஸ்வர்ங்கத்தே அடைஞ்சாறற்.

பூற்வம் முதலாக சோளியாண்டாரெண்டு பேற் பிற சுத்திப் பட்டவற்களாயி சீமை ஆண்டுக் கொண்டு வரப்பட்ட காலத்துலே, அந்தந்தந்த யிடங்களிலே அனேக தேவால யங்கள் உத்தாரம் பண்ணியிருக்குராற்கள். கல்வெட்டுகள் நாலே தெரியவறுகுரது.

அப்படிப்பட்ட ஆதீனத்து வமுசத்திலே உண்டாகியனான வடமலைக் கவுண்டன் யென்று பேற்யிறுக்குர பட்டபேறான குமாரச் சோளியாண்டாக் கவுண்டன் யென்று பட்டபேற் உண்டாகிய வமுசஸ்தன் ரொம்பா வயசு செண்ணவனாயி எழுவத்தி ஆரு வயசு செண்ணவனாலும், யென் புள்ளையான காசிலிங்க கவுண்டனும் ரொம்பா யெளச்சவனாயி குடித் தினம் பண்ணிக்கொண்டு அரமனையிலே கட்டளையிட்ட படிக்கி நடந்துக்கொண்டு யிறுக்குரேன்.

ஆதீனம் வெகு புராதனத்தில் உண்டான ஆதீனம், வமுசாவளினுடைய சங்கதி சவிஸ்தாரம் தெரியவில்லை.

# பொருளூர் நல்ல பெரியக் கவுண்டன் பட்டக்காரன் வமிசாவளி

D : 2967

**தாராபுரம் தாலுக்கா பட்டக்காரனுடைய கைபீது:**

*தாறாபுரம் தாலுக்காவுக்கு சேற்ந்த பொருளூறுலே யிறுக்கிற மேல்கரை தலைய நாட்டு நல்ல பெறியாஇக் கவுண்டன் யெண்ணப்பட்ட பட்டக் காறுடைய வம்சா வளி முதலான கைபீது யென்னவென்றால்:-*

*பூற்வத்தில் பாண்டியறாசா நாளையில் இந்த சீமையில் செட்டி, சிவபிறாமணாள் காணியாளற்காளாஇ யிருந்தாற்கள். அக்காலத்தில் ஒட்டிய நெண்ணபட்டவன் ஷெ செட்டி சிவபிறாமணாளை கஸ்தப்படுத்தினபடியநாலே அந்த அங்காமிக்கு பொறுக்க மாட்ட(ாமல் கஷ்ட)ப்பட்டு உத்திர தேசத்துக்கு போனாற்கள்.*

*அக்காலத்தில் உத்திரதேசமான காளஹஸ்தி பிறதேசத்தில் ஸ்ரீகாளஅஸ்தீஸ்வறனுடைய அனுகிறஹத்துநாலே கண்ணப்ப னுடையன் யெங்குற சிவபகுத்தனுடைய வம்சத்தில். வேட்டுவ சாதியென்று முத்துறாசாக்கள் யென்று பேற்பிறசித்தி பட்டவாகளாஇ றாசியாதிகாரம் பண்ணிக்கொண்டு வரும் நாளையில். ஷெ பிறதேசத்தில் காறியகற்த்தனாகிய செக்கிற பாணி றாசாயிடத்தில் வந்து செட்டி சிவபிறாமணர்கள்ப் பட்ட சிறமங்கள் யெல்லாம் சொல்லிக் கொண்டு ஒட்டியனை அடக்கி போட்டு யெங்களைக் குடிநிலைக்க பண்ண வேணுமென்று சொல்லிக்கொண்டாற்கள்.*

*அதற்கு சக்கிறபாணி றாசா சொன்னது: ஒங்கள் தேசாதிபதியான பாண்டியறாசா அவற்கள் யிடத்தில் சொல்லி கோளுங்கோள் யென்றும், ஒட்டியன் அவாளுடைய மனுஷ நானப்படியநாலே அவாள் அடைக்கி ஒங்களை குடிநிலைக்க*

பண்ணுவாற்கள் யென்றும், அப்படிக்கு அவாள் மனு[ஷ்யரா]லே ஆகாமல் போனால், பாண்டியறாசா யெங்களுக்கு யெளுதி அனுப்பிவிச்சால் நாங்கள் யெங்கள் மனுஷாளெ அனுப்பிவிச்சு ஜெயம் பண்ணிவிச்சு குடுக்குரோமென்று சொன்னாற்கள்.

செட்டி சிவபிறாமணாள் மறுபடி பாண்டிய றாசா அவர்கள் யிடத்தில் வந்து சேற்ந்து ஒட்டியனை சம்ஹாரம் பண்ணுகுறதற்கு காளஹஸ்தி பிறதேசத்து முத்து றாசாக்களை தறுவிக்கவேணுமென்று சொல்லி கொண்டபடியநாலே, பாண்டிய றாஜா அவர்கள் அந்த ஒட்டியனை சம்ஹாரம் பண்ணப் பட்டவருக்கு அந்த சீமைய்யை குடுப்பிவிக்குரோமென்று காளஹஸ்தீ பிறதேசத்துக்கு சக்கிறபாணி றாசா அவற்களுக்கு யெழுதி அனுப்பிவிட்ச்சாற்கள்.

அந்த சமயத்தில் சக்கிறபாணி றாசா அவற்கள், முத்து றாசாக்கள் கூட்டத்தில் யெளுவது தண்டிகைக் காற்களை தெற்க்கு பிறாயத்துக்குப் போகும் படியாக நெமுகம் செயிதாற்கள்.

காளஹஸ்தி பிறதேசம் விட்டு யெளுவது தண்டிகைக் காற்களும் பிறப்பட்டு, தெற்கு னோக்கி பாண்டிய றாசா அவற்கள் பேட்டி பண்ணி கொண்டு, ஜயபேறி (வாங்கி) வாங்கி கொண்டு ஒட்டியனெ யுதம் பண்ணி ஜயம் பண்ணின படியனாலே யெளுவது தண்டிகைக் காற்களுக்கும் அவாளவாளுக்கு ஹத்து பிறிச்சு கிறாமங்களை விட்டாற்கள்.

அவற்களிலே யெங்கள் பெறியோற்கள் வம்சத்துலே துறதனத்தில் சுந்தறபாண்டிய வள்ளல் யெங்குறவற், தலையனாட்டு பாளையகாற் பட்டக்காற் யென்று பேற் பிறசுத்தி பட்டவற்களாஇ பிறப்புகுத்துவம் பண்ணி வறுகுற நாளையில், தலைய னாட்டு சீற்மை கிறாமங்களிலே பிறிவு பண்ணி பாண்டிய றாசா அவற்கள் சமக்ஷமத்துலே மேல்கரை தலைய நாட்டு கிறாமங்களுக்கு யெங்கள் பெறியோற்கள் பெறியாஇ கவுண்டர் யெண்ணப்பட்டவற்களுக்கு சகல பொகுமதிகளும் குடுத்து, மேல்கரை தலைய னாட்டுப் பட்டக்காற் யென்று பட்டமும் கட்டி, வள்ளல் பெறியாஇ கவுண்டற் யென்று பேறும் குடுத்தாற்கள்.

அந்தநாள் முதல் மேல்கரை தலைய நாட்டு பட்டக்காற் யென்று பட்டம் ஆண்டு வறுகுறவாளுக்கு, வள்ளல் பெறியாஇ கவுண்டற் யென்றும், நல்ல பெறியாஇ கவுண்டர் யென்றும், யெங்கள் வம்ச பரம்பறையாற் பட்டபேறாயி நாமதேயம் வைச்சு கொண்டு வந்தாற்கள்.

அந்தநாள் முதல் மேல்கரை தலையனாடு யென்று பட்டம் ஆண்டுவந்த வறிசைகளும் ஆவாளவாளுடைய சறிதை களும் தெறியவில்லை.

சாலிவாகன சகாபுதம் 1301 முதல் பட்டம்ங்களுடைய வறிசைகளும் அவாளுடை காலத்துலே நடக்கப்பட்ட வற லாறும் இதின் கீளே யெளுதி வறுகுறபடி இதில் தெறிய வறுகுறது.

சாலிவாக (ன) சகாபுதம் 1301க்கு சித்தாற்த்தி வருஷம் முதல் பட்டங்களாண்டவற்.

1. நல்ல சிறுவு பெறியாஇக் கவுண்டற்
   பட்டம் ஆண்ட வருஷம் 22
2. யிவற் குமாரன் - நல்ல பெரியாஇ கவுண்டற்
   பட்டம் ஆண்ட வருஷம் 36
3. யிவற் குமாரன் வள்ளல் பெறியாஇக் கவுண்டற்
   பட்டம் ஆண்ட வருஷம் 42
4. யிவற் குமாரன் நல்ல பெறியாஇக் கவுண்டற்
   பட்டம் ஆண்ட வருஷம் 15
5. யிவற் குமாரன் வள்ளல் பெறியாஇ கவுண்டற்
   பட்டம் ஆண்ட வருஷம் 8
6. இவற் குமாரன் நல்ல பெறியாஇக் கவுண்டற்
   பட்டம் ஆண்ட வருஷம் 19
7. யிவற் குமாரன் வள்ளல் பெறியாஇக் கவுண்டற்
   பட்டம் ஆண்ட வருஷம் 26
8. யிவற் குமாரன் நல்ல பெறியாஇக் கவுண்டற்
   பட்டம் ஆண்ட வருஷம் 52
9. யிவற் குமாரன் வள்ளல் பெறியாஇக் கவுண்டற்
   பட்டம் ஆண்ட வருஷம் 44

10. யிவற் குமாரன் நல்ல பெறியாஇக் கவுண்டற் பட்டம் ஆண்ட வருஷம் 25
11. யிவற் குமாரன் வள்ளல் பெறியாஇக் கவுண்டற் பட்டம் ஆண்ட வருஷம் 22
12. யிவற் குமாரன் நல்ல பெறியாஇக் கவுண்டற் பட்டம் ஆண்ட வருஷம் 29
13. யிவற் குமாரன் வள்ளல் பெறியாஇக் கவுண்டற் பட்டம் ஆண்ட வருஷம் 46

13 386

மேல் யெளுதப்பட்ட தலைமுரைகளில் அவாளவாளுடைய நாளில் நடந்து வந்த சறிதைகளும் அதுனுடைய வயணங்களும் யெளுதப்பட்டது.

ரெண்டான் தலைமுறைக்காற் பட்டக்கார் நல்லபெறியாஇக் கவுண்டற் மறுளபட்டியிலே கோட்டயும் போட்டு, சிறிது சனத்தையும் சேத்திக்கொண்டு, அக்காலத்து றாசியாதிபதியான துரைகள் வுத்திரபடிக்கு நடந்து கொண்டு பட்டம் ஆண்டு யிறுந்தார்கள்.

அஞ்சான் தலைமுரைக்காற் பட்டக்காற் வள்ளல் பெறியாஇக் கவுண்டற் நாளையில் கிளாகூண்டல் கிறாமத்தில் கோட்டையும் போட்டு, சிறிது சனத்தையும் கட்டி கொண்டு, அக்காலத்து றாசியாதிகளுடைய தயவு சம்பாதிச்சு கொண்டு பட்டம் ஆண்டு கொண்டு யிறுந்தாற்கள்.

சாலீவாகன சகாபுதம் 1687க்கு விய வருஷம், தை மாதம், 13 தேதி, சுக்குறவாரம், நாள் 20, தொப்பநாற் தெயிவகதியானதின் பிறகு, யெனக்கு அக்காலத்துக்கு மயிசூறு சமுஸ்தானத்துக்கு துரையாளான அயிதறலிகான் சாயபு அவர்கள் துரையவர்கள் நாளையில், இந்த சீற்மை அதிகாரத்துக்கு வந்த பீமறாயற் அவர்கள் உத்தறவு படிக்கு நாடனவறும் கூடி பட்டமும் கட்டி நல்ல பெரியாஇக் கவுண்டற் யென்று பேறும் வெளங்கப் பண்ணிநாற்கள்.

அந்த நாள் முதல் அறமனையார் யிட்ட கட்டளை படிக்கு நடந்து கொண்டு வந்தேன்.

மஹா ராஜ ராஜஸ்ரீ கும்பிணி சறுக்காறு ஆனநாள் முதல் நாளது வரைக்கும் துரைகள் தயவுக்கு பாத்திரனாயி இப்படி துரை கிறாமத்தில் குடிதிமை பண்ணிக் கொண்டு துரைகள் தயவுக்குப் பாத்திறநாயி மெத்த யேளையாயி ஆசறுலே காத்துகொண்டு யிறுக்குரேன்.

**நல்லப் பெரியாயி கவுண்டன் ருசு.**

# நிலக்கோட்டை ஜமீன்தாரி கூளப்ப நாயக்கன் வமுசாவழி

## D. 3161

மதுரை ஜில்லா திண்டுக்கல் வகையறா தாலுக்கா நிலக் கோட்டை பாளையப் பட்டு ஜெமீன்தாறி கூளப்ப நாயக்கன் வமுசாவழி விவரம்:

பூர்வத்தில் றாயசமஸ்தானத்தின் மீதில் பாதுசா தண் டெடுத்து வந்தபோது சமஸ்தானம் யெடுப்பட்டுப் போறதாக யிருக்கிற சமயத்தில், மகா ஸ்ரீ றாயரவர்கள் சிகப்புவஸ்திரங்கள் கொண்டு வந்து வைத்து, யிதில் சமுசாரத்தின் பேறில் ஆசையில் லாமலிருக்கப்பட்ட பேர்கள், பின்னாசையில்லாமல் முன்னுக்கு நடக்கப்பட்ட பேர்கள் யாரோ, அவர்கள் எல்லாம் சிகப்பு வஸ் திரங்கள் எடுத்துக் கொண்டு தாம்பூலம் வாங்கிக்கொண்டு றண கழத்துக்குப் போகச் சொல்லி உத்திரவு குடுத்தார்கள். அப் போது யெங்கள் முன்னோர்கள் பெனாசைவல்லக்கற் கோத்தி ரத்தில் மாக்கள நாயக்கர் அவர்களுடைய கோத்திரத்தாரையும் அழைத்துக்கொண்டு போய் றொம்பவும், பாளையத்தில் விழுந்து சண்டை செய்து யெதுறாளி படைகளை, முடிக்கி அடிச்சு வந்தார்கள். அப்போது றாயரவர்களுக்கு மிகவும் சந் தோஷம் வந்து வெகுமதி செய்தது. வெள்ளைக் குதிரை 1. வெள்ளைசுருட்டி 1. வெள்ளைக்கொடை 1. வெள்ளைப்ப கறடால் 1. வெண்சாமறம் 2.

சிறுது ஆபரணாதிகளும் வஸ்திரங்களும் குடுத்து, தங்கள் பூமியில் திண்டுக்கல் மதுறாபுரிக்கு மேற்கு முக்காத வழியில் யென்றைக்கும் நிலைக்கும்படியாய் கோட்டை போட்டுக் கொள் ளச் சொன்னார்கள். அப்போது யிவடத்துக்கு வந்து மண்கோட் டைப் போட்டு நிலக்கோட்டையென்று நாமகறணமும் வைத்து சிருது நாளிருந்தார்கள். அப்பால் றாயரவர்கள் காடுகளை வெட்டி, பூமியை ருசுபண்ணி 3 ஆக தொப்பாப்பணம் குடுத்து வரச்சொல்லி உத்திரவு செய்தார்கள். அப்போது யெங்கள் முன்

னோர்கள் எழுதிக்கொண்டது: யிவடத்து சீமை றொம்பவும் காடாயிருக்கிது. யெங்கள் கயில் ஆகாதென்று எழுதி கொண தில் பத்து வருஷத்துக்குப் பணம் குடுக்கவேண்டியதில்லை யென்று உத்திரவு அனுப்பினார்கள். அப்பால் அந்த உத்திர வுப்படிக்கு காடுகளையெல்லாம் வெட்டி பூமியும் ருசுபண்ணி பத்து வருஷக்கு பிறப்பாடு தொப்பாட்டை 1000 பொன்க் கொடுத்துக்கொண்டு...

12......1...... இப்படிக்கி முதலாவது மாக்கழ னாய்க்கற் துரைத்தனம் செய்த வருஷம் 12.

25......2. ரெண்டாவது பட்டம் ஷெ குமாரனாகிய கூளப்பநாயக்கர் சிறுபிள்ளையானத்துனாலே கள்ளர் சல்லியத் துனாலேயும் பூமி வசவிர்த்திக்கி வறாமல் யிருந்தது. அத்தறுணத் தில் இந்த மதுறாபுரிக்கு அதிபதியாயிருக்கிற சந்திர சேகர பாண்டியரிடத்தில் போய் காத்துக் கொண்டிருந்தார். அப் போது ஷெ பாண்டியன் பேறில், வீர சேகற சோழ றாசா தண்டு யெடுத்து, வந்ததில் பாண்டியன் நிறுவாகிக்கமாட்டாமல், றாய சமஸ்தானத்துக்குப் போறபோது, அவர்களுக்கு சீர்மை வந்தால் நமக்கு சீர்மை வருமென்று கூட்டுப்போனார்கள். அப்பால், றாயரவர்கள் கோப பத்மநாகநாயக்கரைப் பார்த்து, பாண்டிய னுக்கு மதுரை பட்டம் கட்டி வைத்து வரச்சொன்னதில், பாண் டியன் றாயர் சமுகத்தில், அந்த சீமை யெனக்கு சுவாதீனத்துக்கு வறாதென்று யெழுதிக்குடுத்து விட்டான். அப்பால் கோடிறு னாகமனாயக்கன் விசுவனாத னாயக்கருக்கு மதுரை பட்டம் வந்து அவர் கூடவே வந்து காத்திருந்து யெங்கள் கஷ்டத்தைச் சொல்லிக் கொண்டதில் ஆசீறாய் காத்திருக்கச் சொல்லி உத் திரவு செய்தார். அப்பால் விசுவனாத னாயக்கறவர்களும் அறிய னாயக முதலியாரவர்களும், மதுரையைச் சுத்தி யெழுபத்தி ரெண்டு கொத்தளத்துடனே கோட்டையும் போட்டு, எழுவத்தி ரெண்டு பாளையக்காரரையும் கொத்தளத்துக்கு ஒருவன் காத் திருக்ற தெண்ரு திட்டம் செய்தார். அப்போது யெங்களுடைய பிதுறார்சிதமான பூமிகளில் கோட்டையும் அதைச் சேர்ந்த ஒன்பது படிகளும் விட்டுக்குடுத்து வத்தலக்குண்டு, முன்னாடி மங் கலம், ஆத்தூரிலும் பாதிகாவலும் குடுத்து அதில் போயிருக்கச் சொல்லி உத்திரவு குடுத்தார்கள். சிறுது நாளைக்குப் பிறகு

கைத்தாத்துக்கோட்டை பஞ்சபாண்டியள் பேரில் சண்டைக் குப்போற போது, யெங்களையும் வறச்சொல்லி உத்திரவு குடுத் தார்கள். அந்தபடிக்கு கைதாத்துக்கொட்டை சண்டைக்குப் போய் அனேகம் சண்டைசெயிது, பஞ்ச பாண்டியாளையும் செயிச்சுக்கொண்டு கர்த்தாக்களுடனே மதுறாபுரிக்கு வந்ததில் மிகவும் சந்தோஷப்பட்டு சிறுது யினாமுங் கொடுத்து, அனுப்பி விச்சார்கள். அப்பால் கொஞ்சம் நாளைக்குப்பிறகு விசுவனாத நாயக்கறவர்கள் திருசுரபுரத்துக்குப் போற போது, யென்னூறு மார்க்கமா வந்தார்கள். அவர்களுக்கும் தளங்களுக்கும் விருந்து செய்து வைத்து னான் உண்டுபண்ணின கிறாமங்களையும் குளங்களையும் காண்பிவிச்சதில் றொம்பவும் சந்தோஷப்பட்டு, உன்மாத்திரம் திறாணிவாளில்லையென்று தொப்பாப்பணம் போதுமென்று நிகுதிசெய்து, அப்பால் ஒன்பதூர் கூளப்பநாயக்க ரென்று பேரும் குடுத்தார்கள். பின்னும் சகல தானதர்மங்களும் செய்து கொண்டு துரைத்தனம் செய்த வருஷம் 25.

மூன்றாவது பட்டம் ஷெ குமாரனாகிய பெறிய சுத்தம னாயக்கற் தொப்பா ஷெ தொப்பணம் குடுத்துக் கொண்டு துரைத்தனம் செய்த வருஷம் 25. 34.

னாலாவது ஷெ குமார னாகிய கூளப்ப நாயக்கர் தொப்பா பணம் 2000பொன் குடுத்துக் கொண்டு துரைத்தனம் செய்த வருஷம் 30.

35 அஞ்சாவது ஷெ குமாரனாகிய பெரியனாகம னாயக் கற் அதேப் பிறகாறம் தொப்பாப்பணம் குடுத்துக்கொண்டு துரைத்தனம் செய்த வருஷம் 30.

25 - 6 ஆறாவது குமாரனாகிய கூளப்பநாயக்கர் மேலெழுதியப்பிறகாறம் தொப்பாப்பணம் குடுத்துக்கொண்டு துரைத்தனம் செய்த வருஷம் 25.

30 - 7 யேழாவது அவர் குமாரன் சிந்தமநாயக்கர் அதே மொரைக்கி தொப்பாப்பணம் குடுத்துக்கொண்டு பட்டம் ஆண் டது வருஷம் 30.

25 - 8 யெட்டாவது பட்டம் ஷெ குமாரனாகிய னாகம னாயக்கர் கோபழநரசிங்கப்பெருமாள் கோவிலும் உபயநாச்சி

மாருக்கும் கோவிலும் கட்டி பிரதிஷ்டை செய்தார். அவர் துரை தனம் செய்த வருஷம் 25.

35 - 9 ஒன்பதாவது பட்டம் ஷெ குமாரனாகிய பெரிய மாத்தளு நாயனாக்கர் திம்மறாயப் பெருமாள் கோவில் கட்டி பிரதிஷ்டையும் செய்து ஷெ கோவிலுக்கருகாண்மையில், மன்னவ றாதிக்குளமும் வுண்டுபண்ணியும் அவர் துரைத்தனம் செய்த வருஷம் 35.

25 - 10 பத்தாவது பட்டம் ஷெ குமாரன் கூளப்பநாயக்கர் தொப்பாப்பணம் 2000 குடுத்துக்கொண்டு முத்திலாபுறம் குளமும் வுண்டுபண்ணி, அழகர் கோவிலும் கட்டி பிறதிஷ்டை செய்து, அவர் துரைத்தனம் செய்த வருஷம் 25.

30 - 11 பதினோறாவது பட்டம் ஷெ குமாரனாகிய பிட்டு கூளப்பநாயக்கர் தொப்பாப்பணம் 2000 குடுத்துக்கொண்டு, அவர் துரைத்தனம் செய்த வருஷம் 30.

25-12 பனிரெண்டாவது ஷெ குமாரன் தண்டு கூளப்ப னாயக்கர் நாளையில் சீவலச்செரகில் நரசிம்மப் பெருமாள் கோவிலுங்கட்டி, பிரதிஷ்டையும் செய்து வைத்தார். சீத்தாபுர அக்கிரகாரமும், குளமும் உண்டு பண்ணினார். அப் பால் கர்த்தாக்கள் வகை றாமப்பய்யற் சேதுபதி பேறில் தண் டெடுத்துப் போனதில் யிவருங்கூடவே போனார். அவடத்தில் சண்டை செய்ததில் சேதுபதி பாம்பனாத்துக்கு ஓடிபோயிட் டான். அப்போது இவர் அணைக்கட்டி அவனை சண்டைசெய்து பிடித்தபடியினாலே தண்டு கூளப்ப நாயக்கரென்று பேருங் குடுத்தார்கள். அவர் துரைத்தனம் செய்த வருஷம் 25.

பதிமூன்றாவது பட்டம் ஷெ குமாரனாகிய விறலிவிடுதூது கேட்ட னாகம னாயக்கர் நக்கனூத்து அக்கிரகாரமுங் கட்டி வைத்து, ஒரு குளமும் வெட்டி, நிலக்கோட்டையை கல்கோட்டை யாய் போட்டுவிச்சார். கொங்கர் குளம் கண்மாயும் வெட்டினார். அவர் துரைத்தனம் செய்த வருஷம் 30.

25-14 பதினாலாவது பட்டம் ஷெ குமாரன் கூளப்ப நாயக்கர் நாளையில் கரியாம்பட்டியும், குளமும், சீரங்கபாடியும்

குளமும்வுண்டு பண்ணினார். ஈசுவரன் கோயிலும் கட்டி பிரதிஷ்டையும் செய்து வைத்தார். அவர் துரைத்தனம் செய்த வருஷம் 25.

*30-15* பதினஞ்சாவது பட்டம் ஷை குமாரன் சிந்தம நாயக்கர் நாளையில் அயிதர் திண்டுக்கல் சீர்மை கட்டிக்கொண்டான். அப்போது தோப்பா நிகுதிசெயித்து 5000 பொன் அப்போ யிதுக்குச் சேர்ந்த கிறாமம் பிள்ளையாநத்தம் பித்தாளை படியையும் வகையிருப்புப் பணத்துக்கு யீடாக அடவுவைத்துப் பணம் வாங்கி செலுத்தி விச்சதில் அந்த செட்டிக்கிப் பணம் செலுத்து முன்னே ஷையான் தெய்வீகமானான். முதலாளிக்குப் பணம் சேகறம் செய்து ஸ்ரீரங்கப் பட்டனத்துக்கு அனுப்பினதில் அயிதர் அந்தப்பணத்தையும் வாங்கிக் கொண்டு, வலுவந்தமாய் அந்த ரெண்டு கிறாமத்தையும் கட்டிக்கொண்டார். அவர் துரைதனம் செய்த வருஷம் 30.

*15-16* பதினாறாவது பட்ட(ண)ம் ஷை கூளப்பநாயக்கர் நாளையில் திண்டுக்கல்லுக்கு சயிதுசாய்புவந்தார். அவர் தோப்பாப்பணம் நிகுதிசெய்தது கூலி பணம் 5900 பொன் குடுத்துக் கொண்டு துரைத்தனம் செய்த வருஷம் 15.

*27-17* பதினேழாவது பட்டம் ஷை குமாறன் கூளப்ப நாயக்கர் நாளையில் ரெங்கமக்குலூரளோட்டு துறையவர்கள் வந்தார்கள். அவர்களிடத்தில் ஷை கிறாமத்துச் சங்கதி சொல்லிக் கொண்டதில் ரொம்பவும் தரியாபத்து செய்து பிள்ளையாநத்தமும் பித்தாளைப்பட்டியையும் விட்டார்கள். தோப்பாப் பணமும், பணம் 5900மும் குடுத்து வறச்சொல்லி சன்னது குடுத்து அனுப்பினார்கள். அதெ மொறைக்கி வருஷாவருஷம் பணம் செலுத்தி வருகையில் உஞ்சிதுரை கலைகட்டாராகி வந்தார்கள். அவர் வந்த உடனே ஷை கிராமம் 2யும் கட்டினார்கள். அதைக்கட்டிக் கொண்டபடியினாலே பணம் நிலுவையாச்சுது. அயால் ஆறடீசு துரையவர்கள் வந்தார்கள். அப்போ பணம் நிலுவையாய் நிண்ணு, பின்னும் யென்னிடத்திலிருந்த ஆயுதங்களைய் சந்து சாமான்களையும் கச்சைக்கட்டி மலையில் ஒளித்திருந்தது அகப்பட்டுக் கொண்டபடியினாலே யென்பேரில்

கோபம் செய்து என்பாளையப்பட்டை, சிருது சிபாயிகளும் கும்பினி மனுஷாளும் சப்த்தி பண்ணவந்தார்கள். அதுவறிந்த நான் யென்பெண்சாதி பிள்ளைகளை போடினாகனூருக்கு அனுப்பிவித்துப்போட்டு மலை வழியாய் ஆணையூர் கள்ள நாட்டுக்குப் போய்விட்டேன். அப்பால் ஒரு கும்பினியாரும் சிருது கும்பினி மனுஷாளும் யென் பாளையப்பட்டை சப்த்தி பண்ணிக் கொண்டு நிலக்கொட்டை யிட்டாணையமாயிருந்தார் கள். அப்பால் நான் கள்ள நாட்டிலிருந்து சனங்களை சேகறம் செய்து கொண்டு றாவுக்குறாவே நிலக்கொட்டைக்கி வந்து கும்பினிமனுஷாளுடனே சண்டை செய்ததில் யென்னாலே நிரு வாகமில்லாமல் மருபடியும் மலைவழியாய் ஓடிப்போனேன். அது சேதியை அவடத்திலிருந்த கும்பினிமனுஷாள் ஆற்டீசு துரைய வர்களுக்கு அறியப்படுத்தினார்கள். அப்பால் ஆற்டீதுரையவர் களுக்கு என்பேரில் மிகவும் கோபம் வந்து ஒரு விளம்பரம் பண்ணினார்கள். இது யெப்படியானால் யென் தலையைக் கொண்டு வந்தபேருக்கு 1000 விறாகன் யினாம் குடுக்கிறோ மென்றும், யென்குஞ்சு குளைந்தைகளைக் கொண்டு வந்த வனுக்கு 50 ரூபாய் யெனாம் குடுக்கிறோமென்றும் விளம்பரம் பண்ணினார்கள். யென் சமுசாரத்தையும் சிருதுபேர் பிடித்து குடுத்து விட்டார்கள். அப்பால் யென்வகை பஞ்சம்பட்டி சேர்வ காரன் என்னிடத்தில் அந்தரங்கமாய் ஓடிவந்து இப்படிக்கு விளம்பரம் பண்ணியிருக்குது. உன் சமுசாறமும் அகப்பட்டுக் காவல்படுத்தியிருக்கிறார்கள். தேசமெல்லாம் கும்பினியார் றாச்சியமாய் போச்சுது. இனிமேல் யெப்படியும் உன்தலையைக் கொண்டு போய்விடுவார்கள். ஆகையால் றாத்திரியா ஓடிப் போய் ஆற்டீசு துரையவர்கள் காலிலே விழுந்தாலுத்தமமென்று சொன்னான். அப்படியே பிச்சக்காறன் வேசம் போட்டு கொண்டு றாத்திரியே வந்து, காலமே துரையவர்கள் வளியில் வரப்பார்த்துக்காலிலே விழுந்தபோது ஆறேன்று கேட்டார்கள். கூளப்பநாயக்கன் என்றுசொன்னதில் மிகவும் ஆச்சரியமாய் ஒரு நாளிகை வரைக்கும் மூக்கிலே கையை வைத்து நின்று பார்த்துப் போட்டு, ஆசறிருக்கச் சொல்லி உத்திரவு பண்ணினார்கள். அப்பால் காத்துயிருந்து பத்து நாளைக்குப் பிறகு சாப்பாட்டுக் கில்லையென்று சொல்லிக் கொண்டதில் நான்கச்சை கட்டி மலையில் ஒளித்திருந்த ஆயுதம் கைவித பாவத்தில் 131 பொன்

சொச்சம் அமீரனியிலிருந்ததை குடுக்கச் சொல்லி உத்திரவாச்சிது. அப்பால் அதுவும் சிலவழிந்து போனதின் பிறகு சொல்லிக் கொண்டதில் மாசம் 1க்கு 50 ரூபாய் சம்பளம் பண்ணினார்கள். அப்பாலுங் காத்திருந்ததில் மேஸ்தர் பேரீசுதுரையவர்கள் வந்தார்கள். அப்போது நத்தகோன் யென்பாளையப்பட்டில் செம்மையாய் சாகுவளி செய்து பணம் ஆதீனம் கண்டு குடுத்தப் படியினாலேயும், பேரிசுதுரையவர்கள் என்னை வரவழைத்து ரக்தாக்ஷி வருஷத்தில் தோப்பா பணம் 11750 நிகுதி செய்து 21478 பொன்னும் குடுத்து சீர்மையும் விட்டு அனுப்பினார்கள். அப்பவும் ஷெ 21 கிறாமத்தையும் சப்திசெய்து கொண்டார். தவலையும் சப்தி பண்ணினார்கள். முன் பணம் 5900 பொன் கொடுத்த சீர்மையில் 11750 பொன் தொகை ஒசத்தினதினாலெயும், ரக்தாக்ஷி வருஷ முதல் பிரமாதூத வருஷ வரைக்கும் சீற்மையில் மளை அருந்தலாயிருந்ததுனாலேயும், காச்சலில் சனமிறந்து போனதுனாலேயும் சாகுவழியில்லாமல் இப்படி நாலாவிதத்திலும் பணங் காணாமல் யிப்படி வருசத்துக்கு வருசம் 4000, 3000 தக்குவிளுந்தபடியினாலே ஷெ பணத்துக்காக கும்பினியார்க்குடுத்த பணத்தில் வருஷா வருஷம் குடுத்து வந்ததில் பணம் செல்லாமல் பிரமாதூதா வருஷத்தில் ஷெ ஒரு பணம் பாக்கி நின்றுது. அந்தப் பணத்துக்காக கும்பினியார் அமீனாநேமிச்சார்கள். துரைத்தனம் வருஷம் 27.

17 கூளப்பநாயக்கர் குறோதி வருஷம் முதல் பிறமாதூத வருஷம் வரை 27. சாலிவாகன சகாப்தம் வருஷம் 1288.

கலியபுதம் 4467 ருத்திறோக்காரி வருஷம் சாலிவாகனம் 1722.

கலியபுதம் 4911 பிறமோதூத வருஷம் 444 பட்டம்.
17—விவரம்.

1. மாக்களனாகற்- ருத்திறோத்காரி வருஷம் முதல் பவ வருஷம் வரை 12
2. கூளப்பநாயக்கர்- பவ வருஷம் முதல் விளம்பி வருஷம் வரை 25
3. பெரிய சிந்தமனாக்கற் - விளம்பி ஷ முதல் துந்துபி ஷ வரை 25

4. கூளப்பனாகற் துந்துபி ஹூ முதல் கர ஹூவரை 30

5. பெரியனாகமனாயகற் கர ஹூ முதல் றவுத்திரி ஹூ வரை 30

6. கூளப்ப னாகற் ரவுத்தி ஹூ முதல் தாரண ஹூவரை 25

7. சிந்தம னாகற் தாரண ஹூ முதல் விரோதிகிருது, பிரமாதீச வருஷம் வரை 30

8. னாகம னாகற் பிறமாதீச்சா ஹூ முதல் யீசுவர ஹூ வரை 25

9. பெரியமாக்கள னாகற் யீசுவர ஹூ முதல் விரோதிகிருது ஹூ வரை 35

10. கூளப்ப நாயக்கர் விரோதிக்கிருது ஹூ முதல் யுவ ஹூ வரை 25

11. பிட்டு கூளப்ப நாயக்கர் யுவ ஹூ முதல் விரோதி ஹூ வரை 30

12. தண்டு கூளப்ப நாயக்கர் குறோதி ஹூ முதல் விபவ ஹூ வரை 25

13. னாகம னாயக்கர் விபவ ஹூ முதல் யேற்விளம்பி ஹூ வரை 30

14. கூளப்ப நாயக்கர் யேற்விளம்பி ஹூ முதல் துன்மதி ஹூ வரை 25

15. சிந்தம னாயக்கர் துற்மதி ஹூ முதல் விக்குறுதி ஹூ வரை 30

16. கூளப்ப நாயக்கர் விக்கிருதி ஹூ முதல் குரோதன ஹூ வரை 15

17. கூளப்பநாயக்கர் குறோதி ஹூ முதல் பிரமாதூத ஹூ வரை 27

17 444

திண்டுக்கல் வகைறா விருபாக்ஷி சீர்மை மலை, தலை, குத்து முதலான வரலாறு எழுதினது.

அண்டனாடு

கடுதாசி 5. பக்கம் 17.

# சுக்காம்பட்டி பாளையப்பட்டு ஜமீன்தார் வமிசாவளியும், பட்டையமும்.

## D. 3011

*திண்டுக்கல் வகைறா மதுரை ஜில்லாவைச் சேற்ந்த சுக்காம் பட்டி பாளையப்பட்டு ஜமீன்தாரி வமுசாவழியும் மேற்படியாரி டத்தில் உள்ள பட்டையங்கள் நக்கல்களுங் கூடினது:*

*திண்டுக்கல் வகைறா சுக்காம்பட்டி ஜமின்தார் பாலமுக் குண்டு முத்தய னாயக்கறிடத்தில் உள்ள பட்டையங்களுக்கு னக்கல். 1816ம் வருஷம், சூலாயிமாதம், 23ந்தேதி, தரியாபத்து நீட்டலனாயன்னய்யன்.*

*ஸ்ரீமன் மகாமண்டலேசுவற அகண்ட மண்டலாதி உத் தண்ட கோத்தண்ட மண்டலீகள் கண்டஜண்டா பிறசண்ட மணிமகுட மார்த்தாண்ட கீற்த்திப் பிறதாப சபசாலம் அமோக கிலமுகஞ் தனுஞ்சயாகில கண்டனாடு கொண்டு கொண்டனாடு குடதான்...இவர்கள் பிருத்திவி ராச்சியம் பண்ணி அருளா நின்ற சுவஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1257ம் வருஷம், தாரண வரு ஷம், தை மாதம் 17,-திறுமலை ராய னாமதேய நவ மன்மதாகாற யோதனுயோத அஸகாயசூற கவிதா சாதுதுரிய கீர்த்தி பிற தாப மகுட மண்டலீசுவர ... திறுமலை தேவராயற் அவற்கள் சமூகம் முன்னதலிக்குப் பட்டையங் குடுத்து. புச பல பராக்கிறம சாளுவக் கட்டாரியாகிய பாலால் முத்தி னாயக்கற் அவற்களுக்கு னாங்களருசாதி யெழுவத்தினாலா சுணமும் சம்மதிவிற்றி மேலே தாம்புறசாசனம் யெழுதிக் குடுத்தோம். தாம் பிறசாசனமாவது பெனுகொண்ட யேளுசேரி மாக்கனாயக்கன், பல்லக்கவாணன் சீமையிலே மனையனூரில் யெங்கள் பெண், அஞ்சு வயதுப்பெண் ஆத்தங்கரையில் விளையாடிக் கொண்டிறுக்கிறபோது, இரத் தினகிறி யென்றொரு தூற்க்கம் உண்டு. அந்த தூற்க்கமாளப் பெற்றவன் வல்லகான் யெங்குற பட்டாணி, அவடத்துக்கு வேட் டைக்கி வந்து இந்தக் கம்மாழச்சியைக் கண்டு யெடுத்துக்*

கொண்டு போய் ரத்தினகிரி துற்க்த்தின் மீதில் வையித்துக் கொண்டான். இந்த சமாச்சாறம் அஞ்சுசாதி பேரும் அரிந்து நாம் சும்மா இருந்தால் நம்மிடம் பட்டானி தீறப்போறதில்லை என்று யேசிறது. கொல்லுவேலை, தச்சுவேலை, தட்டார்வேலை கன்னாற்வேலை, ராயர் தேவற் சமூகமத்துக்காரர் வேலை யெல் லாம் நிறுத்தினபடியிலே ஆறுமாய்ப் பதிக்கி மேல் ராயற் தேவற்க்கு அரிக்கை யாச்சுது.

ராயற்தேவற் னம்மிட சமூகத்தில் காத்திறுக்கப்பட்ட சோமசுந்தர ஆசாரில் குட்டகா அரிசந்திர சேகர ஆசாரி, குறுவ சாரி, வல்லப்பனாசாரி, யிவற்கள் அஞ்சு பேரையும் வறவமைத்து காறுகானா வேலை முதல் மற்ற வேலை எல்லாம் னிறுத்த வேண்டிதென்னவென்று கேழ்க்குமிடத்தில் னாங்கள் சொன்னது. பெண்ஞ்சேறி மாக்கய னாக்கயன் சீமையில் யெங்கள் சிரை...... றத்தினகிரி துற்க்கமாளப்பட்ட வல்லயம்கான் எடுத்துக் கொண்டு போயிருக்கிறபடியினாலே அஞ்சு சிரையை திறுப்பித் துலுக்கன் தலையும் யெங்கள் இடத்துக்கு வந்து சேந்தால் னாங்கள் உங்கள் சமஸ்தானத்தில் வருவோம். அஞ்சு சாதி வேளையும் நடப்பி வைப்போம். இல்லாதிறுந்தால்... காறுக்கன் வேலை முதல் ஒன்றும் நடக்க மாட்டாது. மானுபொயி உயிர் காவலர் யென்று சொன்னவிடத்தில் அப்படியா என்று மகா கோபத்துடனே கெணஞ்சேறி மாக்கய னாயக்கர் வரை வறவ ளைத்து அடெ!மாக்கய னாயக்கர் சீர்மையில் சும்மாழச்சிரையை ரத்தினகிரி...... வலகான் எடுத்து போயி யிதுனேற வரைக்கும் அதே கானமிடத்தில் சொல்லாமல் போனதென்னவென்று மிகுதியும் கோபம் பண்ணி மாக்க னாயக்கனைப் பார்த்து னீ யிந்த ரத்தினகிரி துற்கத்தை கைவசப்படுத்தி வலசலகான் தலையை யிங்கே கொண்டு வந்து னம்மிட சமூகத்தில் முன்னே வைத்து நல்லாஇருந்தால் உனக்கு... சித்த மண்டருக்கும்... மிகுதியும் தாக்கிது ஆனவிடத்தில் அந்த னாயக்கரும் மிகவும் பயந்து சுவாமி ரத்தினகிரி பேரில போயி தன்னை யிந்த பாளை யக்காரறும் தன்னுடைய தளங்களும் தானும் ரத்தினகிறி துற்க் கத்தின் பேறில் பாளைய மிறங்கி, துலுக்கனோடே மல்ப் பொறுதி மாக்கய னாயக்கன் னிறுவாகம் பண்ண மாட்டாமல் யேழுதறம் முறிஞ்சி அவன் ஊருக்கு ஓடி வந்து ராயறவற் கேட்டு அறமணை முத்தின் டனுஷன் குருவன்னாரையும்

அறமணைக்கி ஆசிரமாயி அவர்களையும்... ஒமுது வீரமும்... உத்திரவு வாங்கி அது பிரகாரம் செய்து... இவர்கள் சொல்லி யது என்ற கீர்த்தியும்... அனுப்பிச்சார்கள். அவர் மனுஷாளை யும் அனுப்பிவிச்சி கொண்டிருக்கையில்... வேணுமென்று மகா நாயக்கர் அரமணைக்கி என்னாலே வருகை அனுப்பிச்சி நாயக்கர் ஸ்தலத்தில் இருக்கிறதைப் பார்த்து அவ்விடத்தில் வந்து இப்படிக்கி...... வென்று கேழ்க்குரபோது ராயறவற்கள் யிருபத்தோறாயிரம் பொன் வாங்கி வரச்சொன்னார்கள் என்று கேட்க்கிறேன் என்று...... சந்தோஷமாய்ச் சொல்ல பாலமுத்தி னாயகருக்கு கோபம் வந்து அறமண மனுஷாளை ஆயுதம் வுருவி ரெண்டு துண்டமாய்ப் போட்டு மகாநாயக்கன் முதலின கைவலும் முள்ளும் கயில் கிட்டி வாங்கி வைத்து மாக்க னாயக் கன் அறமணைக்குள்ளே போன அவன் பெண் சாதியும் புத்திர னும் திறத்துடனே வர, அரமணை வேலைக்காரிச்சியை அடி தண்டமாயடித்து வெளியைத் தொறத்தி மகாநாயக்கனை மிகுதியும் கோபம் செயிதுக் கொண்டு அப்படியிருந்தாப் போலே தன் சீமைக்கிப் போயி தன்னோடே சேந்தவர்களை காற்று தன்னுடைய ராணுவும் தானுமாயி போயி ரத்தினகிறி துற்கத்தின் பேறில் பாளைய மெறங்கி சமறம் னடத்திக் கொண் டிருக்கையில் கோமளாச்சி மகன் கருப்பாண்டி, காமன், யிவாள் ரெண்டு பேரும் காலாடிகளையும் ரத்தினகிரி துற்கைப் பட் டணம் துலுக்கனூர் பாளையம் யிதுவெல்லாம்...த்தியம்பாத்து சோதிக்கயில் யிப்படி ஒண்ணரை வருஷம் தன்னிடத்தில் சோதிக்குறபோது ஒருனாள் துற்க்கத்தின் பேறில் துலுக்கன் நித்திரையில் சோதிச்சி கருப்பாண்டி மகன் கோமளிச்சிக்கனும் யேறி விழுந்து துலுக்கன் தலையை அறுத்து நாலுச்சுத்து முன் னுக்கு வைச்சாற். கண் அப்பா துலுக்கன் பாளையத்தை அடிச்சி தின்கிற துறகமும் னித்திரை திறிம்பிக் கொண்டு கம் மாளச் சிரையையும் கைவசப்படுத்தி துலுக்கனுடைய குல பிறுது சகல பிறுதும் (சகல பிறுதும்) டால்மான் முப்பத்துரெண்டு வகையிருந்துதுகளையும் பிடிங்கிக் கொண்டாற். யாதோ வசத்துக்கு வருகையில் அஞ்சு சாதி எழுவத்தினாலு கணமும் பல்லாலுத்து பொன் வெளை 4.1 கொண்டுபோயி கண்டயிடத் தில் பல்லாலு சித்த னாயக்கனும் எங்கள் திரையும் துலுக்கன் தலையும் துலுக்கனுடைய குல பிறுது முப்பது வகையும் ராய

தேவற் முன்னுக்கு வைச்சதில் ராயதேவற்க்கு மகத்தான சந்தோஷம் வந்தது. அந்த துலுக்கனுடைய குல பிறுதான சகல பிறுதும் முப்பத்துரெண்டு வகையிருந்து குடுத்து யிதுவல்லாமல் ராயற் குடுத்தது: பச்ச பல்லாக்கு, தங்கக் கலசம், முன்னணிசி பின்னணிசி, குதிரைக்கி அண்டஜல்லி, துண்டஜல்லி, சத்தாரம், சாமறம், வெட்டுப் பாவாடை, தாளிப்பதக்கம், பின்பதம், பச்சலைக் கண்டயம், யிது வெல்லாம் குடுத்து பின்னும் றாயற் பல்லாலு சித்து னாயக்கரை பாத்து அந்த கம்மாளச் சிரையை எழு வயசு கொழந்தையான படியினாலே அதை னல்லது செய்து பாலுபாலெண்பதாயி யெடுத்துக் கொள்ள வேணுமென்று சொல்ல அந்த மேரைக்கு னல்லாச்சிது. கன்னாற் சித்தன் மகனுக்கு அச்சோபனம் முடிச்ச படியினாலே றாயற் தேவற் யெங்கள் சனத்தினரையும் பாத்து பல்லாலு சித்து னாயக்கற் மானமும், பெத்து மகுக்கறத்தாற் சனங்கள் அவனுக்கு என்ன குடுக்கறீறோ யென்று கேழ்க்க, யிம்மிடத்தில் யெங்கள் பிதா வாகைனாலே அஞ்சு சாதி பட்டயம் குடுக்கிறோமென்று சம்மதித்தோம்.

ஸ்ரீமன் மகாபறமேசுவரர் நெத்தி கண்ணிலுதித்த தெவ்வாங்குடி தூமயிற் மேகவாகன தேவர் மகாவரபிரசாத முத்தாகிய சுவேதமேவர்கள்...... சைவக்களம் சோத்திர மகாபுச பல பறாக்கிரம குட்டத்தாகிய திருனீலமேக வாகன்னான லோக கிஷ்ட்டினி ஹம்மிதாகார்க்கற் மேகவாகனனார்கள். கன்னாரன் காளிக்கு இஷ்ட்ட தெயிவ வீபூதி பஞ்சாட்சர ருத்திராட்ச அஞ்சு சாதிய தெய்வத்தினால் குள்பிட்ட...... திலிருக்கப்பட்ட சோம சுந்தர நாயக்கர்...... குட்டாச்சாறி சந்திரசேகற...... வாங்கி மல்ல நாயக்கர் இவர்கள் சம்மதித்து ..... காப்பில் பருவத்திலுதித்த வீராதிவீரன் விக்கிரம கண்டிரவன் புசபல பறாக்கி கிறமராகிய கடாரிச் சாளுவராயன் பாலாலு சித்து நாயக்கரவர்களுக்கு வந்து நாலேதலேயம் செயிதுகுடுத்து, அனுமக்கோடியிருந்துங் குடுத்து சயிபும் கத்தியுங்குடுத்து, கும்மனாத்தானெங்குர குதிரையுங் குடுத்து, பிள்ளை யெங்குர கிலாங் குடுத்து யுரோஜிதாயாய் வளண் தொயிருக்கப்பட்டதாயி கல்லுங் கவேரியும் புல்லும், பூமியுமுள்ள வரைக்கும் டில்லியர் கரைக்குள்பட்ட அஞ்சுசாதிபேரும் எழுவத்தினாலாகனம் கலியாணத்துக்கு பத்துப் பணமும் வருஷத்தில் தலை கட்டுக்கு அஞ்சு பணமும்

பிள்ளைக்குட்டி பள்ளன் கொசங்கி தலை கட்டுக்கு ஒரு பணமும் பாலாலுசித்தி நாயக்கரவர்களுக்கு சாதனங்குடுத்தோம். ஆகாச காணி பூ மாதேவியாகிய காளிகாதேவியாகிய னாங்கள் செயித காரியத்தில் அஞ்சு சாதி எழுவந்தி னாலா கணமும் டில்லி வாக ரைக்குள்பட்ட பெயர் தாமொருத்தனாகின் ஆடச்செயிணக்கால் கங்கை கரையில் பசுவதை செய்த பாவத்தையும், கெற்பினிவதை செய்தவன் போன பாவத்திலேயும், சிசுவதை செய்தவன் போன தோஷத்திலேயும், பிராம்மணன், சந்நியாசியை வதைச் செய்த வன் போன தோஷத்திலேயுமாகும். மாதுரு துறோகம், பிதுருது றோகம், குருத்துறோகம், சிவத்துரோகம் செயிதவன் போற தோஷத்திலேயும் போவான். இந்த அஞ்சு சாதி எழுவத்தி லாகணம் புத்திர பவுத்திர வங்கிஷாபாறம் பரியமுள்ள வரைக் கும் பாலாலு சித்தி னாயக்கறுக்கு அடுமைச் சாசனம் யெழுதிக் குடுத்தோம்.

ஆகையால் இந்த பட்டையத்திலுள்ள மேரைக்கி குடுத்து வறவும். இதுக்கு சாட்சி பெனுகொண்ட அளகர் னாயக்கர்கோல் கொண்டா திவிசாபுரார் மினாயக்கர் ராய சமஸ்த்தானம் செல்ல கோனார் தற்க்குரி அநந்தனாத பிள்ளை.

மேற்படியாற் வமுசாவழி வறலாறு.

பூற்வம் யெங்கள் பெறியோர்கள் பாலமுக்கொண்டு முத்திய னாயக்கர் மகா ராச மானிய ஸ்ரீ றாயர் அவர்கள் சமஸ்தானத்தில் கொட்டியம் னாகம னாயக்கரிடத்தில் சேவுகம் சேவிச்சு கொண் டிருந்தார்கள். அப்போது வடக்கேயிருந்து ராயர் சமஸ் தானத்தையெடுபடுத்திப் போடுகுரதாயிருக்க வுத்திராதி பாட்சா பாளையமும் வந்து எடுப்படுத்தி போகுர தாயிறுக்குர முன்னுக்கு விஸ்வநாத நாயக்கர் படை வெட்டப்போற முன் னுக்கு, எங்கள் பெரியோர்களையும் கண்டறைக் கோட்டை துற்க்கத்தாரையும் கூடா கூட்டி படைவெட்டுக் கனுப்புவிச் சார்களப்போது பாதுஷா வகையிறா அஸனல்லீகான், வலவல கான் ரெண்டு பேற் வஜீரகள் பேறில் னாங்களனேக பேற் தழத்துடனே போயி சண்டை பண்ணினதில் யெங்களிலனேக செனத்தை சேதம் பண்ணி போட்டார்கள். அப்போது யெங் களவாளுக்கு னிறுவாகயில்லாமல் இந்த சமாசாரம் விஸ்வனாத

னாயக்கறுக்கு யெழுதிக் கொண்டதில் யெங்கள் பேறில் மிகவும் கோபம் செய்து ராயர் சமஸ்தானத்துக்கு வரச்சொல்லி யெழுதி னாற்கள். அப்போது யெங்களவர் வந்ததின் பிறகு பாலமுக் கொண்டு முத்திய னாயக்கரை னாக... ட்டதில் வையித்துப் போட்டு விசுவநாத னாயக்கர் மறுபடியும் தழசகிதமாய் நடைக் கிப் போனாற்களப்போது, னாகம னாயக்கர் கோவித்துக் கொண்டு விசுவனாத னாயக்கற் வாலிபமான படியினாலே அவற் கோவிச்சுக் கொண்டு போனால் னீ யிறுக்கலாமென்று பால கொண்டு முத்திய நாயக்கனையும் கூட்டி அனுப்பிவிச்சார் கள். அப்போது சண்டையாகுர முன்னுக்கு, விசுவனாத னாயக் கறுக்கு காயபட்டு,யிறுக்குர தறணத்தில் பாலமுக் கொண்டு முத் திய னாயக்கற் யெதிற்த்து அனேகம் சண்டை செயிது விசுவ னாத னாயக்கரை அளைத்துக் கொண்டு ஒரு னாளிகை வளிக் கப்பறம் வந்து விட்டார்கள். அந்த தறணத்தில் பாட்சா வகைறா அவாளும் பின்னுக்குப் போயி பாளைய மிறங்கி யிறுந் தார்கள். அப்போது மறுபடியும் பாலமுத்திய னாயக்கற் கெண் டறக் கோட்டை சின்னதிம்ம னாயக்கர் சகிதமாய் சண்டைக்கி போனதறிஞ்சி யெதிற்த்து சண்டை செய்து நிறுவாகமில்லாமல் பின்வாங்கி போனார்கள். இவ்வளவுக்கு சிக்கின சாமான் சிறிதும் ஆனைகள், குதிரைகள், ஆயுதங்கள், குடைகள், சிக்கினதெல் லாம் கொண்டு வந்து விசுவநாத னாயக்கறிடத்தில் வைத்தார் கள். பின் னாயக்கற் மிகச் சந்தோஷபட்டு பாலமுத்திய னாயக் கறுக்கு கெண்டரைக் கோட்டை, சின்னத்திம்மி னாயக்கறுக்கு அனேக பூஷணங்கள் குடுத்து வெகுமதியாயி பாலமுத்திய னாயக்கனைப் பார்த்து னீ னமக்கு குமாரவற்க்க மென்பதால் சொல்லி அந்நாட்டுக்கு விசுவனாத னாயக்கருடனே பாலமுத்திய னாயக்கரும் ராயர் சமஸ்தானத்துக்கு வந்து யிறுக்கும் போது னாகம னாயக்கறவற்களைப் பார்த்து சந்தோஷபட்டு...நாங் கள் உத்தரசித்திக்கு போறபோது......சாக்கிரதையாய்க் கூட வந்து...இந்த தான்னியம் வந்து வெகு சாகவும் யிது னம்மிட குமாறனாகிய விசுவனாத னாயக்கறவர்களை காப்பாத்திக் கொண்டு வந்தாய் யென்று சொல்லி அவனும் அனேக வெகுமதி செயிதார். இப்படி யிறுக்கையில் மதுரையில் சந்திர சேகற பாண்டிய... எழுதிக் குடுத்தோம் .. சொன்ன துறத்துகிறதற்கு கொட்டியம் னாகம னாயக்கர் வந்தாற். அப்போது உத்திரவு

படிக்கி னாகமனாயக்கற் மதுரை சீர்மைக்கி கொண்டு தானாக துரைத்தனம் செய்து கொண்டு இருக்கிறது. ராயறவற்கள் கேட்டு கோபம் செயிது சபையில் யிருக்கிறவர்களைப் பார்த்து னாகம னாயக்கர் தலைக்கே கொண்டு வரப்பட்ட பேற் யாரென்று கேளும் போது, யெல்லோரும் சும்மாயிருக்கையில் விசுவனாத னாயக்கன் னான் கொண்டு வரேனென்று சொல்லி ராயரவர்கள் உத்திரவும் செயிதார். அப்போது விசுவனாத னாயக்கர் பாலமுத்திய நாயக்கரையும் கூட்டிக் கொண்டு மது ரைக்கி வந்து வெகு சண்டை செய்து னாகம னாயக்கரை கையிப் பிடியாய் பிடுத்துக் கொண்டு யோயி றாயர் சமுஸ்தானத்தில் விட்டு, ராயற் வுத்திரவு மேரைக்கி விசுவனாத னாயக்கற் கற்த்தா வாகிய னாகம னாயக்கனை தலைக்கோட்டைக்கு ராயற்வாளைப் பார்த்து விசுவனாத னாயக்கர் பேறில் வெகு சந்தோஷமாக னாகம னாயக்கரை விடுவித்து விசுவனாத னாய்கறுக்கு மதுரை சீற்மைக்கி பட்டம் கட்டி மதுரைக்கி அனுப்பினாற்கள். அப் போது விசுவனாத னாயக்கர் மதுரைக்கு வந்து ராச்சிய பறி பாலனம் செயிகுர முன்னுக்கு, பாலமுத்திய னாயக்கறுக்கு அநேக வெகுமதி குடுத்து திண்டுக்கல்லுக்கு வடகிளக்கு மலையி லிருக்கப்பட்ட தொங்கராயன் கோட்டைக் கிராமத்துக்குச் சேர்ந்த னாயக்கர் முத்துணாக் கோட்டை, தாமிரைப்பாடி, கோயிலூற், கன்னிப்பாடி, சித்துவார் பட்டி, பெரியோடு, யாக னத்தம், தென்னபட்டி யிந்த கிராமங்கள் குடுத்து முத்துனா கோட்டை ராசதானியாயி கோட்டை போட்டுக் கொள்ளச் சொல்லி வுத்திரவு செயிதார்கள். விசுவனாத னாயக்கற் நல மாக மதுரைக் கோட்டை யெழுவத்திரண்டு கொத்தளத்துடனே கட்டி வையித்து, யெழுவத்திரண்டு பாளையக்காரரை கொத்த ளங் காற்க்கச்சொல்லி வுத்திரவு குடுத்து அவாளவாளுக்கு இந்த படிக்கி கிராம, பூமிகள் குடுத்து வெகுமதி செய்தார்கள். திரு மஞ்சன வாசல் முதலிய பிறதட்சனமாக மதுரை குடுத்தார்கள்... சொல்லி வுத்திரவு செய்தார்கள். அந்த முன்னுக்கு விட்ட கிரா மங்கள்... கொம்பெனுபாடி, பெறும்பள்ளி, பாடிதலூற், கொளத் தூர். இந்த கிறாமங்கள் சாசுவதமாயி அனுபவித்துக் கொண்டி றுக்கச் சொல்லியும் அரண்மணைக்கி காணிக்கை ராசசோபாலி 1500 பணம் தீற்ப்பு கட்டளையிட்டார்கள். அதின் பிறகு கயித் தாருக்கு கோனிய பாகத்தில் அருணகிறி யேங்குர மலெச்சாரு

வில் பன்னியன் வேயன்பாடி மகன் ஒரு செனங்களை கட்டிப் போட்டு...கலாயம் செய்து கொண்டிருந்தான். அப்போது விசுவனாத னாயக்கர் கேட்டு அவன் மலைகளண்டை வில்வேடம் பண்ணிக் கொண்டு வேறு சனங்களை... கொண்டு சீர்மை வாட்டி பண்ணிக் கொண்டு இருக்கிறவர்களையும் அவன்... பிடித்து வரச் சொல்லி வுத்திரவு செய்ய பாளையங் கூட்டிக் கொண்டு பால முத்திய நாயக்கர் போய் வசனங்களை செயித்து வெகு பிறயாசைப்பட்டு அங்கே தானே மறணமடைந்தார். அவற் வயசு...க்கி பட்டம் வருஷம் 80. ரெண்டாவது அவற் குமாறன் பாலமுத்திய னாயக்கர் அந்த சீற்மையை கைவசப்படுத்திக் கொண்டதில் வெகு சந்தோஷப்பட்டு வெகுமதி செய்து சுகமேயிறுக்கச் சொன்னாற். அவற் பட்டம் வருஷம் 50.

அவற் குமாரன் பாலமுத்திய முத்தய னாயக்கற் னாளையில் காடுவெட்டி சுக்காம்பட்டி என்பதாயி பேரும் பாவித்து ரெண்டு குளங்களும் வுண்டு பண்ணி .. .. கோவிலுகளும் கட்டி விச்சார். அதுக்கு ராஜதானியாய் செயிது கொண்டு மதுரைக்கோட்டை கொளங்காவல் கார்த்துக் கொண்டு அவர் பட்டம் வருஷம் 45.

மேற்படியான் குமாரனாகிய பாலமுக்கொண்டு முத்திய னாயக்கன் பட்டம் வருஷம் 37. கற்தாக்கள் உத்திரவு பிறகாரம் நடந்துக்கொண்டு மேற்படி காணிக்கையும் குடுத்துக் கொண்டு இருந்தது. அவர் குமாரனாகிய பாலமுக்கொண்டு முத்திய னாயக்கற் சிறிது காலம் துரைத்தனம் செய்துக் கொண்டு கற்த்தாக்கள் உத்திரவு படிக்கி கொத்தளம் காத்துக் கொண்டிறுந்தார். அவர் பட்டம் வருஷம் 50. அவற் குமாரனாகிய பாலமுக்கொண்டு முத்திய னாயக்கற் (பிதுரார்ச்சித) பூமியை ஆண்டு அனுபவித்துகொண்டு கற்த்தாக்கள் உத்திரவு படிக்கி கொத்தளம் காத்துக் கொண்டிருந்தார். அவர் பட்டம் வருஷம் எண்பது. அவர் குமாரன் பாலமுக் கொண்டு முத்திய னாயக்கற் கற்த்தாக்கள் உத்திரவு படிக்கி கொத்தளம் காத்துக் கொண்டியிறுந்தார். அவற் பட்டம் வருஷம் 38.

அவற் குமாரனாகிய பாலமுக் கொண்டு முத்திய னாயக்கற் வெகு சூறனாய்ச் சேத்தவராயி ராமப்பய்யற் சேதுபதியின் பேரில் சண்டைக்கிப் போயி பாலமுத்திய னாயக்கரை சகாயமா

கூட்டிக் கொண்டு போனதில் வெகு சண்டையாயி அதில் மரண மடைந்தார். அவர் பட்டம் வருஷம் 42.

அவற் குமாரனாகிய பாலமுக் கொண்டு நாயக்கர் சிறு பிள்ளையாகச்சே யிவற் தகப்பனார் சுவாமி காரியத்தில் மரண மானதுனாலே கற்த்தாக்களிடத்தில் உத்திரவும் பெத்து ராமப் பய்யற் சிறிது கிறாமங்கள் சித்தூர், னாறுனீத்தம், மாறம்பாடி, மல்லுவாற்பட்டி, ஆலக்கவாரப்பட்டி, தொட்டசைபட்டி, வேலா யுதம் பாளையம், சிங்காறக்கோட்டை, ஆலூறு, புத்தூரு, கொல்லப்பட்டி, பஞ்சந்தாங்கி, கொம்பை, ரேழியகோட்டை, கம்பிளியம்பட்டி யிந்த 15 கிராமமும் விட்டுக் குடுத்து சந்தோஷப்படுத்தி அனுப்பிவிச்சார். அவர் பட்டம் வருஷம் 49.

அவர் குமாரன் பாலமுத்திய நாயக்கன் துரைத்தனம் செயித வருஷம் 27.

அவற் குமாரன் பாலமுத்திய னாயக்கன் கற்த்தாக்கள் உத் தரவு படிக்கி துரைத்தனம் வருஷம் 30.

அவற் குமாரன் பாலமுத்திய னாயக்கன். உத்திரவு படிக்கி கொத்தளம் காத்துக் கொண்டு துரைத்தனம் செய்த வருஷம் 25.

அவற் குமாரன் பாலமுத்திய னாயக்கர் துரைத்தனம் வருஷம் 35.

அவற் குமாரன் பாலமுத்திய னாயக்கர் கற்த்தாக்களாகிய சொக்கனாத னாயக்கர் தஞ்சாவூர் விசையரங்க னாயக்கர் பேறில் சண்டைக்கி போயிருக்கும்போது பாளையபட்டாரை யெல்லாம் வறவளைத்து வெகுமதி செயிகுறபோது பாலமுத்திய நாயக்க றுக்கு சிகப்பு வஸ்திரங்களும் முன் ஜல்லி, பின் ஜல்லி, கன்னச் ஜல்லி, துரைக்கு அண்டத்து மணி, பஞ்சவற்ன்ன விறுதும் குடுத்து முன்னாக னடக்கச் சொல்லி தஞ்சாவூற் கோவில் கைவசமான வுடனே கண்டாமணி விருது குடுத்து அனுப்பினாற்கள். அவற் பட்டம் வருஷம் முப்பத்தேழு.

அவர் குமாரன் பாலமுத்திய நாயக்கர் துரைத்தனம் சீர்மை துறைத்தனம் பண்ணிக் கொண்டுயிருந்தார். அவர் பட்டம் வருஷம் முப்பத்தேழு.

அவற் குமாரனாகிய பாலமுத்திய நாயக்கர் துரைத்தனம் வருஷம் 35.

அவற் குமாறனாகிய பாலமுத்தைய்ய னாயக்கர் சிறுது தான தற்மங்களை செய்து கொண்டு துரைத்தனம் செயித வருஷம்35.

அவற் குமாரனாகிய பாலமுக்கொண்டு முத்திய னாயக்கர் நாளையில் கற்நாடகம் யெடுப்பட்டு போயிவிட்டுது. அவர் பட்டம் வருஷம் 23.

அவற் குமாறனாகிய பாலமுத்திய னாயக்கர் னாளையில் கும்பினியார் சீற்மையைக் கட்டிக் கொண்டு வுஞ்சி துரை அவற்கள், ஆறடீசு துரையவர்கள்... குடுத்துக் கொண்டு அவர் பட்டம் வருஷம் 33.

அவற்குமாரனாகிய பாலமுத்திய னாயக்கன் கம்பெனி யார் சீர்மைக் கட்டி துரையவர்களிருக்கிற வரைக்கும் குடுத்துக் கொண்டு வருகிறோம் துரையவர்கள்... செயிது... இவ்விடத்தில் காணிக்கை செலுத்திவிச்சுக் கொண்டு வந்தார்கள். அவர் பட்டம் வருஷம் முப்பத்தொன்பது.

அவர் தம்பியாகிய பாலமுக்கொண்டு முத்தய்ய நாயக்க துரையவர்கள் உத்தரவு படிக்கி சர்க்காருக்கு துரைத்தனம் செலுத்திக் கொண்டு வந்தார்கள். மேற்படி சுக்காம்பட்டி பாளையபட்டு ஆண்டு வறப்பட்ட பாளைகாற வமுச பறம்பரை யாயி பட்டகள் வறிசையும் ஆண்ட வருஷங்களுடைய நிற்ணயங் கள் வறலாற்.

| | | | | |
|---|---|---|---|---|
| பாலமுக்குண்டு முத்தய னாயக்கன் | | | ...வருஷம் 54 | |
| மேற்படியான் | மகன் | —— | வருஷம் | ஒன்பது |
| ,, | ,, | —— | ,, | பதின்மூன்று |
| ,, | ,, | —— | ,, | ஏழு |
| ,, | ,, | —— | ,, | இருபத்திரண்டு |
| ,, | ,, | —— | ,, | ஐந்து |
| ,, | ,, | —— | ,, | பத்து |
| ,, | ,, | —— | ,, | பதினேழு |

| | | | | |
|---|---|---|---|---|
| ,, | ,, | ——— | ,, | ஒன்பது |
| ,, | ,, | ——— | ,, | ஐந்து |
| ,, | ,, | ——— | ,, | பதிமூணு |
| ,, | ,, | ——— | ,, | பதினேழு |
| ,, | ,, | ——— | ,, | நாலு |
| ,, | ,, | ——— | ,, | ஒன்பது |
| ,, | ,, | ——— | ,, | மூன்று |
| ,, | ,, | ——— | ,, | ஏழு |
| ,, | ,, | ——— | ,, | நாலு |
| ,, | ,, | ——— | ,, | பத்து |
| ,, | ,, | ——— | ,, | ஆறு |
| ,, | ,, | ——— | ,, | பதினொன்று |

**21.** மேற்படி தம்பியாகிய எனக்கு சுக்கில வருஷம் பங்குனி மாசத்தில் மேஸ்தற் பாறிசு சாயபு கலக்கட்டர் துறை அவற்கள் பட்டம் கட்டி வைத்து பாலமுக்குண்டு முத்தைய நாயக்கன் என் குற பேறோடே ஜமீன்தாரியாக னாளது வரைக்கும் வருஷம் 7, மாதம் 5.

மூணாம் பட்டக்காறனாகிய பாலமுக்குண்டு முத்தய னாயக்கர் னாளையில் மேற்படி தம்பியாகிய பாலமுக்குண்டு வல்லக் கொண்டம நாயக்கர் பிறதியேகமாக கிறாமங்கள் பொதுகாற மாக கட்டிக் கொண்டு அயிலூர் றாஜதானியாக செயிதுக் கொண்டு வல்லக்கொண்டம நாயக்கர் பாளைய பட்டெண்று. நிறிவாகம் உண்டாச்சுதென்று சொல்லப்படுகிறது.

சுக்காம்பட்டி றாஜதானியாக மேற்படி பாலமுக்குண்டு முத்தய நாயக்கர் சுக்கான் பட்டி பாளையபட்டு ஆண்டு வந்தாற்கள். மேற்படி என் சுக்காம்பட்டி பாளையபட்டு மவுசே கிறாமம் **8...38.** யிந்த முப்பத்தெட்டு கிறாமும் கூடினது பாளையபட்டு.

# சுக்காம்பட்டி ஜமீன்தாருடைய வம்முஷாவழிக் கணக்கு

D. 3845.

இந்த சுக்காம்பட்டி வம்முசாவழிக் கணக்கும் ஓலைப் பட்டயத்திலிருந்து எழுதினது.

பூறுவ சங்கதியளுடைய வற்தமானம் வம்முஷாவழிகளுடைய விபரம். பாலலுக்கொண்டு முத்தய்யனாய்க்கனூர் பாளையப்பட்டுக்கு சுப வருஷம் சாலிவாகன சகாற்தம் வருஷம் 1350 ...கலியாப்பிதம் வருஷம் 4536 இதற்கு மேல் செல்லானென்ற நள வருஷம் சிறாவணசுத்தம் பஞ்சமி சுக்கிற வார முதல் அனுஷ நட்சேத்திரமும் பாலவா கறணமும் கூடிய சுபயோக தினத்தில் பூருவம் எங்கள் பெரியோர்கள் பாலமுக கொண்டு முத்தய்யனாய்க்கர் மகாராச மானிய ஸ்ரீ றாயரவர்கள் சமுகத்தில் கொட்டியம் னாகம னாய்க்கரிடத்தில் சேவுகஞ்சேவிச்சுக்கொண்டு யிருந்தார்கள். அப்போது வடக்கேயிருந்து ராயர் சமஸ்தானத்திலே யெடுபடுத்திப் போடுகிறதற்காக உத்திறாதி பாச்சா பாளையக்காரர்களும் ராசாக்களும் சோமதளமும் வந்து றாயர்சமஸ்தானத்தை யெடுபடுத்தப்போற முன்னுக்குக் கற்தாக்களாகிய விசுவனாதனாய்க்கர் படைவெட்டப்போற முன்னுக்கு யெங்கள் பெரியவர்களையுங் கண்டறகோட்டை துற்க்கத்தாரையும் கூடக் கூட்டிப்படை வெட்டுக்கு அனுப்பிவிச்சார்கள். அப்போது அசனல்லிகான் வல்வல்கான் சற்தார் ரெண்டு பேர் மேலையும் னாங்கள் சண்டைக்கிபோய் அவனவன் அனேகஞ் சூரதத்துவமாயிருந்து யெங்கள் சனத்தில் அனேகஞ்சனத்தை சேதம் பண்ணிப் போட்டான். அப்போது யெங்களுக்கு நிறுபாக மில்லாமல் யிந்த சாமாச்சாரங் கற்தாக்களாகிய விசுவனாதனாய்க்கருக்கு யெழுதிக் கொண்டதில் எங்கள் பேரில் ரெம்பவுங் கோபப்பட்டுத் திரும்பி ராயர்சமஸ்தானத்துக்கு வரச்சொல்லி எழுதினார்கள். அப்போது பாலமுக்கொண்டு முத்தைய்யனாயக்கரை னாகம னாக கொண்டையில் வைத்துக் போட்டு

தன்சனமுங் குதிரை சயிதமாயிச் சண்டைக்கிப் போனார்கள். அப்போது னாய்க்கர் விசுவனாதனாய்க்கர் வறவிம்பமான தினாலே அவர் கோவிச்சுக் கொண்டு போனார்கள். அவர் கோவிச்சுக் கொண்டு போனாலும் நீ வந்துவிடலாமா வென்று பாலமுக்கொண்டு முத்தைய்யனாய்க்கரையும் சிறுது சனத்தை யுங்கூட்டி அனுப்பிவிச்சார்கள். அப்போது னாங்கள் போறத் துக்கு முன்னாலே கற்தாக்களாகிய விசுவனாத னாய்க்கருக்குக் காயம் பட்டு ரெம்பவும் ஆயாசமாயிருக்குற தருணத்திலே பாலமுக்கொண்டு முத்தைய்ய னாய்க்கர் போய் யெதிர்த்து அனேகஞ்சண்டை பண்ணி கற்தாக்களை அளைத்துக் துக் கொண்டு போய் ரெண்டுனாழிகை வழிக்கி அப்பாலே போய் சரஞ்சாமானெல்லாம் யிறக்கிவிட்டுப் போட்டு சமையல் சாப்பாடு செய்துக் கொண்டுயிருக்கிற தருணத்திலே யிந்த சமாச்சாரம் பாலமுககொண்டு முத்தைய்யனாய்க்கர் கண்டு கண்டறக்கோட்டை துற்கத்துக் கம்மவாற சினதிம்மனாய்க் கனும் ரெண்டுபேருமாகக் கூடி ரெண்டாணையின் பேரில் அவுதா வைத்து பெரியக் கற்தாக்களாகிய விசுவனாத னாயக்கரண்டை யில் சிறுது சனத்தை வைத்துப் போட்டு ரெண்டுப்பேரும் இந்த எதரியண்டைக்கிப் போனார்கள். அப்போது யெதிரியள் அடுப் பிலே உலை வைத்துயிருக்குறபேரும், உலையில் அரிசி போட்டு வைத்து யிருக்கிறபேரும் இப்படிக்கிப் பலவிதமாக யிருக்கிற தருணத்தில் ஆனைக்காதிலே சாலுவையளைச்சுருட்டி வைத்து ஆனைக்காலுக்கு விலங்குப்போட்டு கண்டைக் குடுத்தார்கள். அப்போது யெதிரியாயிருக்குறவன் பட்டுப்போன பேரும், சொத் துக்களை விட்டுப்போட்டு ஓடிப்போன பேரும் இப்படியாயிருக் கையில் துடந்து போய்ச் சண்டை செய்து யெதிரியுட ஆனை குதிரை சாமான் ஆடை ஆபரணங்கள் சகலமான விருதுகளும் பறித்துக்கொண்டு வந்து விசுவனாதனாய்க்கரிடத்தில் கொண்டு போய் வைத்தார்கள். அப்போது கற்தாக்களாகிய விசுவனாத னாய்க்கர் ரொம்பவுஞ் சந்தோஷப்பட்டு பாலமுககொண்டு முத்தைய்ய னாய்க்கருக்கு அனேக வஸ்திர பூஷனாதி யளும் கொடுத்து நீ நமக்கு குமார வற்க்கமென்பதாய் யெண்ணுகிறோமென்றி சொல்ல அந்தப் படியே நாங்களும் விசுவாசமாயிருந்து கொண்டு விசுவனாத னாய்க்கர் கூட ராயர் சமஸ்தானத்துக்கு வந்தோம். அப்போது னாகம

னாய்க்கரவர்கள் பார்த்து ரொம்பவுஞ் சந்தோசப்பட்டு, உங்கள் தகப்பனாரும் நம்முடை குமார வற்க்கம் போல நாம் காசிக்குப் போறபோது சாக்கிறதையாய் கூடவந்து காத்துக் கொண்டிருந்தார். ஆகையால் நீரும் நமக்கு குமார வற்கந்தானென்று அநேக வெகுமதியளும் செய்து நம்முடைய பாளையம் எங்கே பிறப்பட்டாலும் உன்னுடைய கூடாரம் முன்னே வரவேணுமென்று உத்தரவு செய்தார்கள். அதே மேரைக்கி கருத்தாக்களவர்களைக் காத்துக்கொண்டு யிருந் தார்கள். சிறுது னாளைக்குப் பிறகு கற்தாக்களாகிய நாமெ னாய்க்கரவர்கள் சந்திரசேகர பாண்டியன், வீரசேகர சோள னையும் அடித்து சந்திரசேகர பாண்டியனுக்கு பட்டங் கட்டுகுறதுக்கு ஆக மதுராபுரியில் நாகம னாய்க்கரவர்கள் வந்தார்கள். அதின் பிறகு கொஞ்ச னாளைப் பிற்பாடு நாகம னாய்க்கர் பேரில் றாயருக்குக் கோபம் வந்து ரெம்பவுங் கோவிச்சு நாகம னாய்க்கன் தலையை கொண்டு வருகிறவர் யாரென்று றாயர் சபையிலே கேழ்குற போது ஒருதரும் எங்கள் கையில் ஆகாதென்று சொல்லிப் போட்டதில் அப்போது மேல்படியான் குமாரன் விசுவனாத நாயக்கர் சொன்னது: யென் தகப்பன் தலையை நான்தான் கொண்டு வருகிறேனென்று அனுப்பிவிச்சுக் கொண்டு போற முன்னுக்கு இந்த படைக்கெல்லாம் பாலமுககொண்டு முத்தைய்ய னாய்க்கருக்கு பெரியதனமுங் குடுத்து பாண்டியன் றாச்சியத் துக்கு வந்தார்கள். அப்போது நாகம னாய்க்கரவர்களுக்கும் சண்டையாகுற முன்னுக்கு விசுவனாத னாய்க்கர் பாலமுக கொண்டு முத்தைய்யனாய்க்கரை அளைத்து னாகம னாய்க்கர் பேரில் சண்டைக்குப்போகச் சொன்னதில், அப்போது பாலமுக கொண்டு முத்தைய்யனாய்க்கர் கேட்டுக்கொண்டது: யிது வரையும் நாகம னாய்க்கரவர்களுடைய உப்பு அன்னஞ் சாப் பிட்டுக் கொண்டிருந்தோம். யிப்போ அவர்கள் பேரில் கத்தி யெடுத்து சண்டை செய்குறது யுக்தம் மல்லவென்று சொன்ன தில் அதற்கு விசுவனாதனாய்க்கர் சொன்னது. நாம்கூட தகப்பன் பேரில் சண்டை செய்குறபோது உனக்கு யென்னவென்று ரொம்பவும் கோபப்பட்டார்கள். திரும்பவும் விசுவனாத னாய்க்கரை கேட்டுக்கொண்டது: நாகமனாய்க்கரை கைப்பிடி யாகக் கொண்டு வருகிறேன், அவர் சரீரத்தில் அபாயமில்லாத

படிக்கி மனுக்குடுக்க வேணுமென்று கேட்டுக்கொண்டார். அப்போது விசுவனாத னாய்க்கரும் அப்படியே செய்விக்கிறோம் யென்று உத்திரவு கொடுத்தார். அப்படியே சண்டைக்கிப் போய் நாகம னாய்க்கரைக் காயப்படாமல் பிடித்துக்கொண்டு வந்ததில் காயப்படாமல் கொண்டு வந்ததினாலே, விசுவனாத னாய்க்கருக்கு ரொம்பவும் சந்தோஷம் வந்து, இந்தப் பாண்டிய றாச்சியத்தில் உனக்குப் பாளையப்பட்டு உண்டு பண்ணிக் குடுக்கவேணுமென்று உத்திரவு குடுத்தார்கள். அதின் பிறகு தகப்பனாகிய னாகம னாய்க்கருக்கு விலங்கு தைத்து ராயர் சமஸ்தானத்துக்குக் கொண்டுபோய் ராயரவர்கள் சமூகத்தில் என் தகப்பனார் தலையை நானே வெட்டுகிறேன் என்று விசுவனாத னாய்க்கர் கத்தியை உருவினதில் பாலமுககொண்டு முத்தைய்ய னாய்க்கர் போய்.........முன்னாலே அவருடைய சீவனுக்கு அபாயஞ் செய்குற தில்லையென்று எனக்கு உறுதிசெய்து கொடுத்ததிலிருந்து யிப்ப வெட்டப்போறதினாலே அவர் தலையை வெட்டுகுறதற்கு யென்னுடைய தலையை வெட்டுங் களென்று தலையைக் குடுத்தார். அப்போது ராயவர்கள்பார்த்து விசுவனாத னாய்க்கருக்குச் சொன்னது: உன் தகப்பனார் செய்த குற்றம் உன்னுடைய விசுவாசத்தினாலேயும் பாலமுககொண்டு முத்தய்யனாய்க்கர் பக்தியிலேயும் விட்டுவிட்டோம். வெட்ட வேண்டாமென்று உத்திரவு கொடுத்தார்கள். அப்போது... பாண்டிய ராச்சியத்தை கற்காக்களாகிய விசுவனானாதய்க் கருக்கு பட்டாபிஷேகஞ் சூட்டினார்கள். பாண்டிய ராச்சிய மாகிய மதுராபுரிக்கி விசுவனாதனாய்க்கர் வந்த பிற்பாடு மதுரா புரிக்கு வடமேற்கு மூலையில் திண்டுக்கல் சீமையில் முத்தின கோட்டை தாமரைப் பாக்கங்கோவிலூர், கானப்பாடி, ராம னாதபுரம், கொங்கராயன் கோட்டை, சித்துவார்பட்டி, யெறியோடு, பாகநத்தம், தென்னம் பட்டியிந்த கிறா மங்களும் பாலமுககொண்டு முத்தய்ய னாய்க்கருக்கு விட்டுக்குடுத்து, முத்தினா கோட்டை ராசதானியென் பதாய் கோட்டைப்போட்டுக் கொள்ளச்சொல்லிக் கட்டளை யிட்டார்கள். அப்பால் அரியனாயக முதலியாரும் விசுவனாத னாய்க்கரும் மதுராபுரியில் பாண்டியன் கோட்டைக்கி வெளிப் பக்கம் கோட்டையும் போட்டு, 72 கொத்தளம் போட்டு 72 கொத்தளத்துக்கு 72 பாளையக்காறரையும் 72

கொத்தளங்காறக்கச் சொல்லி, உத்திரவு கொடுத்தபோது திருமஞ்சனவாசல் முதல்க்கொண்டு... தெட்சணமாக ... கார்க்க சொல்லி உத்திரவு குடுத்து, அப்போது... கிறாமங்களும் விட்டு கொடுக்கிறேமென்று பிலாறு, கொம்பே ... டிபெரும்புள்ளி பாடியூர், குளத்தூர் யிந்த அஞ்சு கிறாமம் விடுத்து ஜாகூதமாக அனுபவித்துக்கொண்டு கொத்தளமுங்காணியாட்சி யாகக் காத்துக்கொண்டிருக்கச் சொல்லியும் அரமனைக்கிக் காவலாக ஆயித்தஞ்னூறு பணம் சக்கரம் பொன் கட்டளை யிட்டார்கள். இதல்லாமல் அரியனாயக முதலியாரும் கற்தாக் களாகிய விசுவனாதனாய்க்கரும் கயத்தாத்து மேல் சண்டைக்கி போறமுன்னுக்கு றாதானி ... யீசானிய மூலையில் காதவளிக்கு மேற்கு காதவளிக்குத் தெற்கு வடக்குக் கீழு சுத்துக் கோட்டைப் போட்டது போலே மலையும், இதற்குத் தெற்கு வாசலும் வடக்கு வாசலும் மேற்குப்புறம் மலையில்லாம, ... நதியென்று ஒரு நதியும் அந்த மலைக்கிப் பேர்க்கு கருணை நதியென்கிற பேரும், கிரியென்கிற பேரும் கருணை கிரி வாசனென்கிறதாய் ஒரு பேரும் கோவிலும் உண்டு. யிப்படிப்பட்ட கெடித்தலம். யிதுவல்லாமல் இதற்குள்ளாக வெள்ளாண்மை விளைச்சலுண்டு. இந்த கெடித்தலத்தில் பாண்டியன் வைப்பாட்டிபிள்ளை ஒரு(த்)தன்யிருந்து கொண்டு அந்தச் சதிரத்துக்குள்ளாக அனேகந்தோப்பு துறவுகளும் சிங்காரத் தோட்டங்களும் வைச்சுக்கொண்டு, அய்யாயிரஞ் சனத்தோடே இந்தத் தெற்குவாசலும் வடக்குவாசலும் பிலன் செய்துகொண்டுஒருத்தரும் வரவொட்டாதபடிக்கி யிருக்கிறதும், ரெண்டாயிரம், மூவாயிரஞ் சனத்தோடே வெளியே வந்து ஊர்களில் கொள்ளையிட்டுக்கொண்டுப் போய் வைத்துக் கொள்ளுகிறதும், யிந்தப்படியாக யிருந்தான். தெற்கு வாசலி லேயும் வடக்கு வாசலிலேயும் பத்து சனமிருந்தால் வீட்டு... கதவும் போட்டாப்பிலே யிருக்குமே யல்லாது யெப்படிக் கொத்தமனுஷனும் உள்ளே பொறதும் பிறையாசம். அப்படிப் பட்ட கெடித்தலத்தைப் பாலமுககொண்டு முத்தைய்யனாய்க் கரை சாதினம் பண்ணச்சொல்லிக் கற்தாக்கள் கட்டளையிட்டு அனுப்பிவிட்டார்கள். அப்போது அரண்மனைப்படையும் தன் சொந்த சனமும் ஒட்டுக்குப்போய் அவன் கோட்டை மேல் யெறங்கி சுத்தி முட்டடிப்போட்டு, ஆறுமாசம் கோட்டைக்குள்

சாமான் போகாதபடியிருந்தால் அவனுக்குச் சகல பாக்கியமும் உள்ளுள் தானே விளைந்து அனுபவித்துக்கொண்டு யிருக்கிறதேயல்லாது அவன் வெளியே போகுறதில்லை. அதில் உள்ளே யிருக்குற சனத்துக்கு (உப்பு) மாத்திரம் யில்லாதே போச்சுது. அந்தப் பாண்டியன் தன்னுடைய செனத்தை அளைத்து கிளக்கு முகமாந்தமாக விட்டுக்கொண்டுபோய் உப்புக்கொண்டுவரச்சொல்லி அனுப்பிவித்தார்கள். அந்தக் தருணம் பாலமுககொண்டு முத்தைய்யனாய்க்கர் பார்த்துக் கொண்டுயிருந்த அந்த வழியைக் கண்டுபிடித்து, தன் படையை யெல்லாம் அனுப்பிவித்து கத்தி உருவிக்கொண்டு போய் அனேகம் உயிர்த்தியம் பண்ணி, பாண்டியனையும் பிடித்துக் கற்தாக்களிடத்துக்கு அனுப்பிவிச்சு அந்தப் பாண்டியனையுங் கைவசப் படுத்திகொண்டு பாலமுககொண்டு முத்தைய்யனாய்க் கருக்குச் சண்டையில் காயப்பட்டதினாலே அவடத்தில் மரண மடைந்துபோனார். அவர் வயது 80.

ரெண்டாம்பட்டம் அவர் குமாரன் பாலமுககொண்டு முத்தைய்யநாய்க்கன் வெகுசூரவற்கனானதினாலேயும் தகப்பனுடைய சடங்கு முடித்துப்போட்டு அந்தப் பூமியுந்தன் கைவசப் படுத்திக்கொண்டு யிந்த சமாச்சாரமெல்லாம் கற்தாக்களுக்கு வந்து தெரியப்படுத்தினான். அப்பால் கற்தாக்கள் சொன்னது: உங்கள் தகப்பன் மிகவும் கெட்டிக்காறனானதிலேயும் நீயும் அப்படித்தானே கெட்டிக்காறனென்று சந்தோஷத்துடனே சிறுது கிறாமங்களும் விட்டுக்குடுத்து ஊருக்கு அனுப்பினார்கள். அப்பால் ஊருக்கு வந்து கடலூருக்குத் தெற்கு, கோவிலூருக்கு வடக்கு, யிவ்வளவு பூமியும் அனுபவித்துக்கொண்டு கற்தாக்கள் சொன்னபடியும் கேட்டு கொஞ்சனாளிருந்து மரணமடைந்துபோனார். அவர் வயது.........

மூணாம் பட்டம் அவர் குமாரனகிய பாலமுககொண்டு முத்தைய்யனாய்க்கர் பட்டமாளுகிற னாளையில் சுக்காம்பட்டிக் காடு வெட்டி ஒரு கிண(று)ம் உண்டாக்கி, ரெண்டு குளங்களும் உண்டாக்கி, மாலைக் கோவிலுங் கட்டி சுக்காம்பட்டி கிறாமமும் உண்டுபண்ணினார். அவர் பட்டம் வருஷம் ........... நாலாம் பட்டம் அவர் குமாரன் பாலமுககொண்டு முத்தைய்யனாயக்கன் சிறுதுனாள் வரைக்கும் கற்தாக்கள்

உத்திரவு படிக்கி மேல்படியான் கொத்திளமுங்காத்துக் கொண்டிருந்து இறந்துபோனார். அவர் பட்டம் வருஷம்... ......5ம் பட்டம் அவர் குமாரனாகிய பாலமுகக்கொண்டு முத்தைய்யனாய்க்கர் சிறுதுனாள் துரைத்தனம் பண்ணிக்கொண்டிருந்த கற்தாக்கள் உத்தரவுபடிக்கு கொத்தளமுங்காத்துக் கொண்டிருந்து யிறந்து போனார். அவர் பட்டம் வருஷம் .........ஆறாம் பட்டம் அவர் குமாரன் பாலமுகக்கொண்டு முத்தைய்யனாயக்கர் ...ஆண்டுக்கொண்டு கற்தாக்கள் உத்திரவு படிக்கி கொத்தளமுங்காத்து கொண்டிருந்தார். அவர் வருஷம்.........யேழாம் பட்டம் அவர் குமாரன் ஆகிய முத்தைய்ய னாய்க்கர் சிறுது நாள் பட்டம் ஆண்டு கொண்டு கற்தாக்கள் உத்திரவு படிக்கி கொத்தளமுங் காத்திருந்து இறந்து போனார். அவர் பட்டம் .........

எட்டாம் பட்டம் அவர் குமாரன் பாலமுகக்கொண்டு முத்தைய்ய னாய்க்கர் வெகு கெட்டிக்காரனாகச்சே கற்தாள் திருமலைனாய்க்கர், தளவாய் றாமப்பய்யர் சேதுபதி பேரில் சண்டைக்கிப் போறமுன்னுக்கு பாலமுகக்கொண்டு முத்தய்ய னாய்க்கறுங் கூட சண்டைக்கு போனபோது வெகு உயித்தியம் பண்ணி அவடத்தில் மரணமடைந்தார். அவர் பட்டம் வருஷம் .........9ம்பட்டம் அவர் குமாரன் பாலமுக கொண்டு முத்தைய்ய னாய்க்கர் பட்டமாளுகுற னாளையில் அவர் சிறுபிள்ளையாச்சே அவர் தகப்பன் சண்டையினால் மரணமடைந்தபடியினாலே, கற்தாக்களுக்கு றாமப்பய்யர் தெரியபடச் சொல்லி, தயவாய் நடப்பிவித்துக் கொண்டு வந்தார். அவர் காணியாட்சி கொத்தளமுங் காத்துக்கொண்டு கற்தாக்கள் உத்திரவுபடிக்கு நடந்து கொண்டிருந்து கொஞ்ச னாளைக்கு பிறகு இறந்து போனார். அவர் பட்டம் வருஷம் ......... பத்தாம் பட்டம் அவர் குமாரனாகிய பாலமுக கொண்டு முத்தைய்ய னாய்க்கர் பட்டமாண்டுக் கொண்டு தகப்பனார் சம்பாதிச்ச கொத்தளமுங் காத்துக் கொண்டு கொஞ்சனாளிலிருந்து மரணமடைந்தார். அவர் பட்டம் வருஷம்......பதினோறாம் பட்டம் அவர் குமாரனாகிய பாலமுகக்கொண்டு முத்தைய்யனாய்க்கர் துரைதினமுஞ் செய்துக்கொண்டு கொத்தளமுங் காத்துக் கொண்டிருந்தார். அவர் பட்டம் வருஷம்......12ஆம் பட்டம் அவர் குமாரனாகிய பாலமுத்தைய்யனாய்க்கர் பட்டமாளுகையில் கற்தாக்களாகிய

சொக்க னாதனாய்க்கருடைய உத்திரவுப் படிக்கி நடந்துக் கொண்டு கொத்தளமுங் காத்துக்கொண்டிருந்தார். அவர் பட்டம் வருஷம்...... 13-ம் பட்டம் அவர் குமாரனாகிய பாலமுககொண்டு முத்தைய்யனாய்க்கர் பட்டமாண்டுக் கொண்டு முன்னோர்கள் சம்பாதிச்சக் கொத்தளமுங் காத் திருந்தார். அவர் பட்டம் வருஷம்......

14வது பட்டம் ஆண்டுக்கொண்டு முத்தைய்ய னாய்க்கர் பட்டம் வருஷம்......15வது பாலமுககொண்டு முத்தைய்ய னாயக்கர் பட்டமாளுகையில் கற்தாக்களாகிய சொக்கனாத னாய்க்கருக்கும் தஞ்சு நகரம் விசைய னாகமனாய்க்கருக்குஞ் சண்டைக்கிப் போறபோது பாலமுககொண்டு முத்தைய்ய னாய்க்கரை வரவளைத்து செகப்பு வஸ்திரமும், முன்சல்லி, பின் சல்லி, கன்னசல்லி, குதிரை அண்டத்துமணி,......வற்னவிரு துங்குடுத்து முன்னுக்கு நடக்கச்சே ......... அப்படியே போய் தஞ்சாவூர் கோட்டையில் ரெம்பவும் உயித்தியமாகிக் கோட்டையுங் கைவசமாச்சுது. அப்பால் பின்னும் இவருக்கு காலுக்கு வீரகெண்டாமணியும் வெகுமதிசெய்து அனுப்பினார் கள். அப்படியே ஊர் வந்து சேர்ந்தார். அவர் பட்டம் வருஷம்.........16-ம் பட்டம் பாலமுககொண்டு முத்தைய்ய னாய்க்கர் பட்டமு மாண்டுக்கொண்டு பெரியவாள் சம்பா திச்சக் கொத்தளமுங் காத்திருந்தான். அவர் பட்டம் வருஷம் ......17-வது பாலமுககொண்டு முத்தைய்யனாய்க்கர் ஷை...... ஷ......18வது பாலமுககொண்டு முத்தைய்யனாய்க்கர் பட்ட த்திலே சுற்னாடகம் யெடுப்பட்டு போச்சுது. அவர் பட்டம் வருஷம்......19வது பாலமுககொண்டு முத்தைய்யனாய்க்கர் பட்டத்தில் மய்சூரை துலுக்காணத்தார் கட்டிக்கொண்டார்கள். அவர்களுக்கு தோப்பாச்சக்கரம் பணம் 1500 குடுத்து வந்தார். அவர் பட்டம் வருஷம்......20-ம் பட்டம் பாலமுக கொண்டு முத்தைய்யனாய்க்கர் பட்டத்தில் கும்பினியாருக்குச் சீமையாச்சு. அவர்களுக்குத் தோப்பாபணம் 1500 கட்டிக் கொண்டு வந்ததில் கொஞ்சனாள் பணஞ்செல்லாமல் சப்தி பண்ணிப்போட்டார்கள். அப்பாலுந் தயவுசெய்து விட்டுக் குடுத்தார்கள். அதுமுதல் கும்பினியாருக்கு பணம் 2509 பணம் குடுத்துக்கொண்டு கட்டளையிட்டபடிக்கி நடந்துக் கொள்ளுகிறேன்.

# தொட்டயங்கோட்டை சமீன்தார் வமுசாவழி கணக்கு

D: 3842

இந்த தொட்டயங் கோட்டை வம்ஷாவழி கணக்கு ஓலைப் பட்டயத்திலிருந்து எழுதினது.

றாயர் சமஸ்தானமீதில் பாலிசா தண்டெடுத்து வந்த போது சமஸ்தானம் யெடுபட்டுப் போற முன்னுக்கு சீவேத சிகப்பு வஸ்திரங்களாய்க் கொண்டு வந்து வைச்சு இதில் சமுசாரத்தின் பேரில் ஆசையில்லாமல், பின்னாசைக்கில்லாமல் முன்னுக்கு நடக்குறவன் ஆரோ அவர்களெல்லாம் வஸ் திரங்கள் எடுத்துக்கொண்டு, தாம்பூலமெடுத்துக்கொண்டு ரணகளத்துக்குப் போகச்சொல்லி உத்திரவு கொடுத்தார்கள். அப்போது எங்கள் முன்னோர்கள் ஆதியில் பெஞ்சை வல்லக்க கோத்திரத்தில் முதல்ப்பட்டகார மாக்கள னாய்க்கரவர் களுடைய கோத்திரத்தாரை கூடக்கூட்டிக்கொண்டு போய் பாளையத்திலிருந்து அநேகஞ்சனத்தையெல்லாம் மடியக் கொடுத்து, எதிரியுந் தோக்கடிச்சுப்போட்டு றாயர் சமஸ் தானத்துக்கு வந்தார்கள். அப்போது றாயரவர்கள் றொம் பவுஞ் சந்தோஷப்பட்டு இப்படிக் கொத்தத்திறாணிவானுக்கு சகலவெகுமதியுங் கொடுக்கவேணு மென்பதாக யோசித்து வெகுமதி கொடுத்தது; வெள்ளைக்குதிரை, வெள்ளைசுருட்டி வெள்ளைக்குடை, வெள்ளைடால், வெள்ளை வெண்சாமறம், சகல வெகுமதியும் இன்னம் அனேக வஸ்திர பூஷணங்களும் கொடுத்து......யில் மதுறாபுரிக்கி நேற் மேற்கு முக்காத வழியில் யெண்ணைக்கும் சாஸ்வீதமாயிருக்கிறதாகக் கோட் டைப்போட்டுக் கொள்ளச் சொன்னார்கள். அப்போது போட்டக் கோட்டைப் பேர் யெழுதிக் கொள்ளுகிறது. நாமமே தென்ன தொட்டயங்கோட்டை யென்பதாய்ப் பேருண்டாக்கிக் கோட்டைப் போட்டது. மண்கோட்டைப் போட்டுக்கொண்டுயிருந்தார்கள். அதின் பிறகு சிறுது பூமி

யினாமாக விட்டுக்குடுத்து அந்தப் பட்டக்காரருக்கு ஸ்திரீ சாதிக்குமாரர் ரெண்டு. அந்தக் குமாரர் பேர் மூத்தவர் பேர் பொம்மணனாய்க்கர். இளையவர் பெத்தழுனாய்க்கர். மேல்ப்படியார் துரைத்தினம் 12 வருஷம். 2வது பட்டம் பெத்தழுனாய்க்கர். சிறிது காடுவெட்டிப் பூமியுண்டாக்கினார்கள். ஷெ பெத்தழுனாய்க்கர் சிறுபிள்ளையானதிலே யிவடம் கள்ளர் பூமியானதினாலே இவருக்கு வசவிற்தி வாறாமல் படிக்கி இருக்கிற தருணத்தில், இந்தப் பாண்டிய தேசத்துக்கு அதிபதி சந்திரசேகர பாண்டியன். அவரைப் போய் அனவரத சந்திரசேகரன் பாண்டியன் மேல் வீரசேகர சோழன் தண்டெடுத்தபோது, சந்திரசேகர பாண்டியன் நிறுபாயிக்க முடியாமல் றாயர் சமஸ்தானத்துக்குப்போற போது அவர்களுக்குச் சீர்மை வந்தால், நமக்குச் சீர்மை வருகுது யென்பதாய்க் கூடவே போய்விட்டார்கள். அப்படியிருக்கையில் சந்திரசேகர பாண்டியனுக்குப்பட்டங் கட்டச் சொல்லி றாயர் கற்தாக்கள் வகையில் கொட்டியம் னாகம னாய்க்கரை அனுப்பிவிச்சார்கள். அப்போது சந்திர சேகர பாண்டியன் இந்தப் பூமியில் வைப்பாட்டி பிள்ளையள் பஞ்சபாண்டியரும் முஸ்தக்க-த்துயிருக்குற படியினாலே நமக்கு றாச்சியம் சுவாதீனத்துக்கு வருவராதென்று கற்னாடகம் வகையறா விசுவனாத னாய்க்கரிடத்தில் யெழுதிக்கொடுத்திருந் தார்கள். அப்போது சந்திரசேகர பாண்டியனை கார்த்ததுக்குக் காரியமில்லாமல் போச்சுது. பின்னுஞ் சிறிது னாளைக்குப் பிற்பாடு னாகம னாயகர் பிள்ளை விசுவனாத னாய்க்கருக்குப் பட்டம் வந்தது. அப்போது காத்திருந்து எங்களுடைய கஷ்டத்தைச் சொல்லிக் கொண்டதற்கு தங்களண்டையில் ஆசீராகக் காத்திருக்கச்சொல்லி உத்தரவு கொடுத்தார்கள். அந்தப்படிக்கி சிறுதுனாள் காத்திருந்ததில், விசுவனாத னாய்க்கரும் அரியனாயக முதலியாரும் மதுறாபுரியில் கோட்டைப் போட்டு எளுபத்திரண்டு கொத்தளமும் போட்டுவிச்சு,எழுபத்தி ரண்டு கொத்தளத்துக்கும் எழுபத்திரண்டு பாளையக்காறர் காக்கிறது. அப்போது யெங்களுக்க விசுவனாத னாய்க்கர் உனக்கு என்ன வேணுமென்று கேட்டார்கள். அதுக்கு எங்களுக்குப் பிதுரு சாசுதமான பூமி, தோட்டங், கோட்டையும் அத்தோடே சேர்ந்த கிறாமங்கள் உபகிறாமங்களும் விட்டுக்

குடுத்து தங்கள் பாதத்தண்டையில் காத்திருக்கச் சொல்லி உத்தரவானதால், அதே மேரைக்கி காத்திருக்கிறேனென்பதாய்ச் சொன்னதற்கு, அதே மேரைக்கி கற்தாக்களாகிய விசுவனாத னாய்க்கரும் அரியனாயக முதலியாரும் தயவு செய்து மதுறாபுரி கோட்டை மேல்த் தலவாசல் காவலுங்குடுத்து யெங்கள் சொந்தமான தொட்டையங்கோட்டையும் அதோடே சேந்த கிறாமங்களும் உபக்கிறாமங்களும் விட்டுக்குடுத்தார்கள். அதே மேரைக்கிக் காவலுங்காத்துக் கொண்டு கற்தாக்களுக்குக் குமார வற்கமாய் நடந்து கொண்டு வந்தோம். அப்படியிருக்குங் காலத்தில், கற்தாக்கள் கயற்றாற்றுக்கோட்டை மேல் சண்டைக் கிப் போற முன்னுக்கு......பட்டம் பெத்தளுனாய்க்கரை கூடாரக் காவலாக வரச்சொல்லி உத்திரவு குடுத்தார்கள். அதே மேரைக்கி அவருங்கூடப்போய் அநேகம் உத்திரவாதம் பண்ணிக் கற்தாக் கள் கூடவே மதுறாபுரிக்கி வந்தார்கள். அப்போது சிறுது வெகுமதியுங் குடுத்து நீ ரொம்பவும்.........றகமாயிரு வென்ப தாய் உத்திரவு கொடுத்தார்கள். அதின்பிறகு சிறுது கா...... மத்தழைகெங்கை என்குற ஆத்திலேயும், வஞ்சியாரென்குற ஆத்திலேயும், நாலு அணையுங்கட்டி, மூணு குளமுண்டாக்கி சிறுது நிலம் புலமும் திருத்தி வைத்தார்கள். அப்படியிருக்க கற்தாக்களுக்கும், அரியனாய்க்க முதலியாரவர்களுக்கும், மேற்குச் சீர்மைப் பார்க்க வேணுமென்பதாய் வந்த போது யெங்க ளூரின் பேரில் வந்தார்கள். அப்போது எங்களுடைய குளங்களையும் அணைகளையும் பார்த்து நீ அர மனைக்கித் தோப்பாப்பணம் சக்கரம் வருஷம் 1க்கு 100 பணம் குடுத்துவாவென்று கட்டளையிட்டார்கள். அதே மேரைக்கி ஒப்புக்கொண்டு அவர்கள் பட்டம் ஆண்டது ௵ **35.** அவருக்கு ஸ்திரீசாதிக்குமாரர் ரெண்டுபேர். மூத்தவர் பேர் பொம்மளுனாய்க்கர். இளையவர் பேர் சிந்துமனாய்க்கர். **3-**வது பட்டம் பொம்மளுனாய்க்கர். ஸ்திரீசாதி **2.** குமாரர் ரெண்டு பேர். அதில் பட்டக்காரர் பேர் பெத்தளுனாய்க்கர். இளையவர் மாக்களுனாய்க்கர். அவர் னாளையில் பட்டம் ஆண்டது ௵ 22 வருஷம் ............ சற்க்காருக்கு தோப்பா சக்கரம் வருஷம் 1க்கு 100 பணம். 4-வது பட்டம் பெத்தளு னாய்க்கர். ஸ்திரீசாதி குமாரர் மூணு பேர். அதில் பட்டக் காரர் பேர் பொம்மளுனாய்க்கர், சிந்தும னாய்க்கர், மாக்கய

னாய்க்கர். அவர் னாளையில் பட்ட(ம்) 18. ஷூ (1க்கு) சற்காருக்குக் குடுக்கிறது தோப்பாசக்கரம் (ஷூ 1க்கு) 150 பணம். 5வது பட்டம் பொம்மளுனாய்க்கர். அவருக்கு ஸ்திரீ சாதி. குமாரர்கள் ரெண்டு பேர். அதில் பட்டக்காரர் பேர் பெத்தளுனாய்க்கர். இளையவர் சிந்துமனாய்க்கர். அவர் நாளையில் பட்டம் ஆண்டது ஷூ 20. (ஷூ 1க்கு) சற்காருக்கு தோப்பாசக்கரம் ஷூ 1க்கு 150 பணம் (6வது)பட்டம் பெத்தளு னாய்க்கர். அவருக்கு ஸ்திரீசாதிக் குமாரர் நாலு பேர். அதில் பட்டக்காரர் பேர் மாக்களுனாய்க்கர். இளையவர் சிந்தும னாய்க்கர், பொம்மனாய்க்கர், சின்னுனாய்க்கர். அவர்கள் நாளையில் பட்டம் ஆண்டது வருஷம் 27. ஷூ 1க்கு தோப் பாச்சக்கரம் (ஷூ 1க்கு) 150 பணம். 7-வது பட்டம் மாக்களு னாய்க்கர். அவருக்கு ஸ்திரீசாதி குமாரர் ரெண்டு பேர். அதில் பட்டக்காரர் பேர் சிந்துமனாய்க்கர். இளையவர் பொம்மளு னாய்க்கர். அவர் பட்டம் ஆண்டது ஷூ 26. ஷூ 1க்கு தோப்பாசக்கரம் (ஷூ 1க்கு) 200 பணம். 8-வது பட்டம் சிந்துமனாய்க்கர். அவருக்கு ஸ்திரீசாதி குமாரர் ரெண்டு. அதில் பட்டக்காரர் பேர் பெத்தளுனாய்க்கர். இளையவர் பொம்மளுனாய்க்கர். அவர் பட்டம் வருஷம் 17. ஷூ 1க்கு தோப்பாசக்கரம் (ஷூ 1க்கு) 200 பணம். 9-வது பட்டம் பெத்தளுனாய்க்கர். அவருக்கு ஸ்திரீசாதி 1. குமாரர் பூச்சியம். அவர் பட்டத்தில் தளவாய் ராமப்பய்யன் கற்தாக்களாகிய திரு மலைனாய்க்கர் துரைத்தனத்தில் சேதுபதிபேரில் தண்டெடுத்து எழுபத்திரெண்டு பாளையக்காரரையும் வரவளைக்கிற முன் னிலைக்கு மேற்குக் கோட்டை வாசல் காவலாகிய பெத்தளு னாய்க்கரையும் வரவளைத்து பாம்(ம்)பனாத்து அணைக்கட்டு கிறதுக்காக உன்னுடைய சொந்தமான தொட்டையங்கோட் டைக்கு சேர்ந்த கிறாம வளிச்சனங்களெல்லாம் வரவளைத்து அணைக்கட்டுகிற காரியத்தில் ஜாக்கிரதையாயிருக்கச் சொல்லி உத்திரவு குடுத்தார்கள். அதே மேரைக்கி தொட்டையங் கோட்டை வகையறா கிறாம வளிச்சனங்களெல்லாம் வர வளைத்து அணைக்காரியத்தில் வெகுப்பிரயாசைப்பட்டு அந்த அணையின்பேரில்ப் பாளையமுஞ் சவாரியாகிக் காசி றாமே சுரமென்குறப்பட்டணத்துக்குப் போயி, சேதுபதியுடனே அனேக உயித்தம் பண்ணி சேதுபதியை செயித்ததின் பேரில்,

மேற்குக் கோட்டை வாசல் காவலாகிய பெத்தளுனாய்க்கரைப் பார்த்து ரெம்பவும் சந்தோஷப்பட்டு நீ ரெம்பவும் செயிச்சுப் பாடுபட்டாயென்று ஷெ தளவாய் றாமய்யனவர்கள், குதிரை முதலாகிய அனேக வெகுமதியுங் குடுத்து அனுப்பிவிச்சார்கள். அவர் பட்டம் ஷ 50. ஷ 1க்கு தோப்பாசக்கரம் (ஷ 1க்கு) 200 பணம். 10வது பட்டம் ஷெயார் தம்பி பொம்மளுனாய்க்கர். அவருக்கு ஸ்திரீசாதி-1. குமாரர் நாலுபேர். அதில் பட்டக்காரர் பேர் மாக்களுனாய்க்கர். இளையவர் சிந்துமனாய்க்கர். சின்னம...ளுனாய்க்கர். அவர் பட்டம் ஷ30. ஷ1க்கு தோப்பாசக்கரம் (ஷ 1க்கு) 300 பணம். 11-வது பட்டம் மாக்களுனாய்க்கர். ஸ்திரீசாதி-1 குமாரர் மூணுபேர். அதில் பட்டக்காரர் பேர் பெத்தளுனாய்க்கர். இளையவர் பேர் பொம்மளுனாய்க்கர். சிந்துமனாய்க்கர். அவர் பட்டத்தில் கர்னாடகம் வகையறா சொக்கப்ப னாய்க்கரவர்கள் திரிசுரபுரத்திலிருந்து விசையறாகுவ னாய்க்கர் பேரில் தண்டெடுத்துப்போற முன்னுக்கு, பாளையக்காரர் சகலத்திராளையும் குமுக்காகக்கூட்டிக் கொண்டு போறபோது, எங்களுடைய பதினோறாவது பட்டம் மாக்களுனாய்க்கர் கூடப்போய் திரிசுரபுரத்தின் பேரில் உயித்தமாகிற முன்னிலைக்கி மாக்களுனாய்க்கர் உயித்தத்தில் தானாகத்தானே உயித்தம் பண்ணி, முன்காயமும் வாங்கி கற்னாடகம் வகையறா சொக்கப்பனாய்க்கரவர்களுக்கு வெகு சந்தோஷம் வரும்படியாய் நடந்துகொண்டதினாலே, அவர் கையினாலே அனேகம் உடுவரையும் வாங்கி ஊர் வந்து சேர்ந்தார்கள். அவர் பட்டம் ஆண்டது ஷ 25. ஷ 1க்கு தோப்பாசக்கரம் (ஷ 1க்கு) 3(0 பணம். 12-வது பட்டம் பெத்தளுனாய்க்கர். ஸ்திரீசாதி 2. குமாரர் 1. அவர் பேர் பொம்மளுனாய்க்கர். அவர் பட்டம் ஆண்டது வருஷம் ஷ 24. ஷ 1க்கு தோப்பாசக்கரம் (ஷ 1க்கு) 300 பணம்.

13-வது பட்டம் பொம்மளுநாய்க்கர். ஸ்திரீசாதி - 1. குமாரர் ரெண்டு. அதில் பட்டக்காரர் பேர் பெத்தளுனாய்க்கர். இளையவர் பொம்மளுனாய்க்கர். அவர் பட்டம் வருஷம் 27. ஷ 1க்கு தோப்பாசக்கரம் (ஷ 1க்கு) 500 பணம்.

14-வது பட்டம் பெத்தளுனாய்க்கர் ஸ்திரீசாதி 1. குமாரர் ரெண்டு. பட்டக்காரர் பேர் பெத்தளுனாய்க்கர். இளையவர் பேர் பொம்மளுனாய்க்கர். அவர் பட்டம் ஷ 13. ஷ 1க்கு

தோப்பாசக்கரம் (ஷு 1க்கு) 500 பணம்.

திண்டிக்கல் மீறு சாயபு துரைத்தனத்தில் குடுத்தது. 15-வது பட்டம் பெத்தளுனாய்க்கர். ஸ்திரீசாதி 1. குமாரர் பூச்சியம். அவர் பட்டம் ஷு 5. ஷு 1க்கு தோப்பாசக்கரம் (ஷு 1க்கு)... 16-வது பட்டம் மேற்படியார் தம்பி பொம்மளுனாய்க்கர். ஸ்திரீசாதி 2. குமாரர் ... பட்டக்காரர் பேர் தொட்டைய சின்னமனாய்க்கர். இளையவர் பெத்தளுனாய்க்கர். திண்டிக்கல் துரைத்தனம் சைய்யது சாயபு அவர்கள் னாளையில் வருஷம் 1க்கு, தோப்பாசக்கரம் (ஷு 1க்கு) 700 பணம். சாதாருண வருஷம் திண்டிக்கல் ரங்கன்துரை மக்களூட்டு னாளையில் வருஷம் 1க்கு 100 பணம் கூடக் கூட்டி வருஷம் 1க்கு 800 பணம் வீதம் குடுத்து வரும்படிக்கி வகையிருப்பு தீத்து சன்னது குடுத்துவிட்டார்கள். உன்சி துரையவர்களும் அதே மேரைக்கி வருஷம் 1க்கு தோப்பாசக்கரம் ஷு 1க்கு 800 பணம் வீதம் குடுக்கச்சொல்லி சன்னது குடுத்தார்கள். நள வருஷம் முதல் துற்மதி வருஷம் வரைக்கும் மகாறாசமானிய றாசஸ்ரீ ஆற்டீசு துரையவர்களும் அதே மேரைக்கி வருஷம் 1 க்கு தோப்பா சக்கரம் 800 பணம் குடுக்சச்சொல்லி வகையிருப்பு தீத்து சன்னது குடுத்துவிட்டார்கள். அதின்பிறகு துந்துபி வருஷம் என்னுடைய சீர்மை, திட்டு திடல், அனாதித்தருசு யெப்பேர்ப் பட்டதும் 25 பாக சங்கிலியால் அழந்து பையிசல் தீர்ப்பாகி ஷு 1க்கு சக்கரம் 1256 பணம், இந்தப் பணங்குடுக்கும் படிக்கு வகையிருப்பு சன்னது குடுத்தார்கள். அதேமேரைக்கி வருஷா வருஷம் பணம் செலுத்தி விக்குறதுக்கு என்சீர்மையில் மெத்தவுந் தக்கு விழுந்து கடனுடன்பட்டு என் சொந்தமான ஆஸ்திகளையும் வித்து மதுரைத் திண்டிக்கல் வகையறாவுக்கு கலகட்டறாகிய மகாறாசமானிய றாசஸ்ரீ சாற்சு பாரீசு துரையவர்கள் கச்சேரியில் சேர்த்து யிருக்குது. அவர் பட்டம் ஆண்டது ஷு 47. 17-வது பட்டம் தொட்டயசின்னம னாய்க்கர். பவவருஷம் முதல் ஷெ சீர்மை ஜமீன்தாரிக்கு உள்பட்ட மதுரை திண்டிக்கல் வகையறாவுக்கு கலகட்ட றாகிய மகாஸ்ரீஸ்ரீ ரோசுபீத்தர் துரையவர்கள் கசானா கச்சேரியில் செலுத்திவிச்சுக்கொண்டு மகாஸ்ரீஸ்ரீ ஆன்ரேபில் கும்பினியாரவர்கள் கட்டளையிட்டருளிய திட்டப்படியே நடந்துக்கொள்கிறேன்.

# தாறாபுரம் துக்குடி புள்ளாச்சி தாலூகா பாளையகாற் தேவனாயக்கற் கைபீது

## D. 3041

தாறாபுரம் துக்குடி புள்ளாச்சி தாலுகா நிகமு பாளையகாற் தேவை னாயக்கற் யெண்ணபட்ட பாளையக்காற் வமிசாவளி முதலான கைபீது யென்னவென்றால்

வாரக்கனாடு பூற்வத்தில் கோபால வ்ம்சமான கம்பள குலம் யாதவ கோத்திரம் உண்டானவற்களில் ஆதியில் உண்டானது. முல்லை நிலம், முல்லை மாலை, வசவசங்கறடால், ஒத்தைக் கொம்பு, கூடாரம், ஆயகுளல், யிது முதலான பிறுது கள் உண்டு.

அதின் பிற்காலம் துவாரகாபுறி பட்டிணத்தில் சேந்த ஆயபாடி பட்டணத்தில் கம்பளகுலம் அனவறும் பேற்பிற சுத்திப் பட்டவற்களாயி இறுக்கும் நாளையில் பூற்வத்தில் ஸ்ரீ கிஷ்ணஸ்வாமி வளற்ந்த வீடுகள் ஆனபடியனாலேயும் போத்து கலற்ந்தபடியனாலேயும் சுவாமினுடைய பிறுது கெறுட கொடி, அனும கொடி, சந்திற வட்ட கொடை, தவள சக்கரம் இது முதலான பிறுதுகள் உண்டாச்சிது.

இப்படி கம்பள சாதியில் பேற்பிறசுத்திப் பட்டவற் களாஇ யிறுக்கும் நாளையில் ஆயபாடி பட்டணத்துக்குச் சேந்த கிறஷ்ண மதுரை. யெண்ணப்பட்ட பட்டணத்துக்கு துரை தேவனாயக்கற் அவற் குமாரன் செகதேவ னாய்க்கற் யிப்படிக்குப் பறம்பறையாஇ பிறசுத்தி பட்டவற்களாஇ சீற்மைக்கு துரைத்தனம் பண்ணிக் கொண்டு யிறுந்தார்கள்.

அக்காலத்தில் அஸ்தினாபுரம் ஆளப்பட்ட றாஜாதி றாசாக்கள் பிறபுக்குளாஇ யிறுந்தாற்கள்.

அதின் பிற்க்காலம் அஸ்தினாபுறம் டில்லி யென்று பேற்ப் பட்டு துலுக்காரண்ணியமாஇ பாதுஷ்ஷா றாசாதிகாரம்

பண்ணிக் கொண்டு வரும் நாளையில் அக்காலத்தில் கிறஷ்ட் டணமதுரை துரைதனம் ஆளப்பட்ட பாலமவாறில் துரை தேவன்னாயக்கற் வம்சத்தில் பாலம சித்தம னாயக்கற் நாளையில் டில்லி ஆளப்பட்ட பாதுஷஹா கம்பள சாதியாரை அனைவரையும் தறிவிச்சு பெண் குடுக்கச் சொல்லி கேளுக்கும் யிடத்தில் துலுக்கனுக்கு பெண் குடுக்குரது இல்லையென்று சொல்லி டில்லி றாச்சியம் விட்டு யேக கூட்டமாஇ பிறப்பட்டு வறுகையில் டில்லி பாதுஷஹா சனம், துடற்ந்து வந்து யுத்தம் பண்ணுகையில், டில்லி பாதுஷஹா சனத்துடனே யுத்த சன்னாகத்துடனே ஆணைகுந்தி பிறதேசத்தை னோக்கி வறுகுறபோது கெண்டகி னதி தீரத்தில் வந்த சமயத்தில் ஆறு பெறிகி பூரண பிறவாகமாக இறுந்தது.

கம்பள சாதியாற் அனவறும் டில்லி பாதுஷஹா ஒடனே விரோதமாக வந்த சமயத்தில், ஆரு, பூற்ன்ன பிறவாஹ மாச்சுதென்று தங்கள் குல தெயிவமான ஸ்ரீ கிறஷ்ண சுவாமிய்யெயும் தங்களுடைய பொம்ம தேவதைய்யை னினச்சு, பிறாத்தனை செயித படியனாலே இறுபிறத்திலேயும் யிறுந்த விறுஷ்சங்கள் ஒன்றுக்கூடின படியனாலே அந்தசமயத்தில் கமளசாதி அனவறும், அந்த வளியாஇ யிக்கரை வந்து சேர்ந் தாற்கள்.

கம்பள சாதி அனவறும் யிக்கரை சேந்த ஒடனே விறுட்சங் கள் வெலகியிறுந்த படியனாலே பாதுஷஹாசனம் அக்கரையிலே நிண்ணு போச்சுது.

கம்பள சாதி அனவறும் ஆனைகுந்தி பிறதேசத்தில் வந்து யிறுக்கும் நாளையில், அக்காலத்தில், றாய சமுஸ்தானாதிபதி யான, விசயனகறம் ஆளப்பட்ட, றாயற் அவற்கள், கம்பள சாதி கூட்டம் வந்து சேந்த சமாசாரம் கேள்விப்பட்டு, பேட்டிக்கு வறும்படியாக உத்தரவு சேஇதாற்கள். அக்காலத் தில் றாய சிம்ஹாசனாபதியான றாயற் அவர்கள் சமஷ்சமத் தில் பாலால சித்தமனாய்க்கறும், சல்லிகுச்சு பொம்ம னாயக்க றும் இறுவறும் பேட்டி பண்ணி கொண்ட சமயத்தில் கம்பள சாதியாற் அனைவரையும் தங்கள் றாசியத்தில் குடி னிலைக்கும் படியாக கட்டு செயிதாற்கள்,

அதின் பிற்க்காலம் றாய சமுஷ்தானத்துக்குச் சேந்த றாசியத்தில் கெடிஸ்தலம்ங்களுலே யிறுக்கப்பட்ட சில்லரை றாசாக்கள் சமுஸ்தானத்துக்கு அடங்காமல் யிறுந்து அந்த சமயத்தில் பாலால சித்தம னாயக்கரையும் அவற் மச்சுனன் சல்லிகுச்சு பொம்ம னாயக்கரையும் தறிவிச்சு நம்முடய சமஸ்தானத்துக்கு அடங்கி வறாத சில்லரைக்காரரையும் மட்டக்கி வந்தால், ஒங்களை யிந்த சமுஸ்தானத்துக்கு குமார வற்க்கமாஇ நடப்பிவிக்குரோமென்று கட்டு செயிதாற்கள்.

பாலால சித்தமனாய்க்கறும், குச்சுலபொம்மனாயக்கறும் முதலான கம்பளசாதி அனைவறும் யேககூட்டமாஇ, பிறப்பட்டு றாய சமுஸ்தானத்துக்கு சில்லரைப் பண்ணப்பட்ட மறு மன்னற்களையெல்லாம் மட்டக்கி இச்சமுஸ்தானத்துக்கு பகுதி குடுக்கும்படியாக நெமுகம் செயிவிச்சு மறுமன்னற்களை யெல்லாம் மட்டக்கின சேதிளையெல்லாம் றாயற் சன்னிய தானத்துலே அரிக்கை செயிது கொண்டபடியனாலே றாயற் அவற்கள் ரொம்பவும் சந்தோஷப்பட்டு, குமார வற்க்க மென்று பேற் குடுத்து வச்சு கொண்டு யிறுந்தாற்கள்.

றாயற் சமுஸ்தானத்துலே குமார வற்க்கமென்று பேற் பிறசித்திப் பட்டவர்களாஇ யிறுக்கும் நாளையில், றாயற் சமுஸ்தானத்தின் பேறிலே டில்லீ பாதுஷஹா தண்டு யெடுத்து யுத்த சன்னாஹமாக வந்த சமயத்தில், அப்போ பாதுஷஹா சனத்தின் பேறிலே யுத்தம் செயிது தண்டுமுறிய பண்ணி நாற்கள்.

ரெண்டாவது பாதுஷஹா தண்டுயெடுத்து றாயசமுஸ்தானத்தின் பேறிலே யுத்தத்துக்கு வந்த சமயத்தில்...கம்பள சாதியில் பாலால சிதம னாயக்கற் பாதுஷஹா பேறிலே யுத்தம் செயிது தண்டு முறிய பண்ணி, பாதுஷஹா குதிரைக்கு போட்டு இறுக்கப்பட்ட முன்சல்லி, பின்சல்லி, முகசல்லி, யாவதும், அவற் கைய்யில் பிடித்த வரையில் கட்டினமணியும் தன்னுடைய குதிரை அண்டத்தில் கட்டிக்கொண்டு கைய்யிலே பிடித்த கட்டாறியுடனே றாயற் சமஷ்சமத்துக்கு வந்து குதிரை மேலே னின்று ஒரு கைய்யிலே பிடித்த கட்டாறியுடனே றாயறுக்கு சலாம் செயிதாற். அப்போ றாயர்

அவர்கள் சந்தோஷபட்டு அவுறா பாலமகட்டாறி யென்று பேறும் குடுத்து றாய றாவுத்த கண்டரென்று கிதாபும் குடுத்து, ரணக்களம், ரண பாஷிச்கிம், கலி கிதுறாயி, முத்து துறாயி, சந்திர வளையம், சாமது ரோஹா, வெண்டயம், நிகளம், வீரகட்டாமணி, சிம் மல்லாடம், பல்லக்கு, உபயசாமறம், குஞ்சம், காளாஞ்சி, விசிறி, சவுறி, சல்லி, விதவிதமான வெட்டுபாவாடை, பூசக்கிற கொடை, சிங்கடால், மீனடால், புலிகொடி, சற்ப்பக்கொடி, பஞ்சவற்ணடால், வெள்ளைபக்கறடால், செகசம்ப்புக்கொடை, சங்குசக்கிற சுறுட்டி, சூறியபான், ஆனைமே லம்பாரி, ஆனை மேல்பேறிகை, ஒட்டகைமேல் நகாறு, குதிரை மேல் டக்கா, யெறுத்து மேல் தம்பட்டம், ரவுலத்து சங்கீத வாத்தியம், சிக்கு மேளம், பட்டு கட்டியம், யிது முதலான பிறுதுகள் வாத்தியங்களும் குடுத்து முத்துசறம், தும்பிபதக்கம், கெண்ட பேறுண்ட பதக்கம், சிங்கமுகபதக்கம், முங்கைமுதாறி., அம்பீரதாயத்து, முத்தொண்டி, பச்சொண்டி இது முதலான ஆபரநங்களுங் குடுத்து கெனகனகபீதாம்பற வஸ்திரங் களும் குடுத்து, பட்டண பிறவேசம் பண்ணிவிச்சு, றாயர் சமுஸ்தானத்துக்கு குமாற வற்க்கமாக இறுமென்று உத்திரவு செயிதாற்கள்.

சகல பிறுதுகள், வாத்தியங்களுடனே, சமுஸ்தானத்துக்கு குமாரவற்க்கமென்று, பேற் பெற சுத்திப்பட்டவறாயி, விசயன கற பட்டணத்துலே யிறுக்கு நாளையில், பாலால சித்தம னாயக்கறுக்கு, யேளுபேற் மக்களுடனே சஹகுட கும்ப சமேதமாஇ சமுஸ்தானத்துக்கு, குமாரவற்க்கமாஇ, பிறசுத்திப் பட்டுயிறுக்கும் நாளையிலே தட்சிண றாச்சியத்தில் மதுரை சமஸ்தானாதிபதியான அக்காலத்தில்...

அவற்கள் நாளையில், தட்சண றாச்சியமெல்லாம், காடு தொண்டு கள்ளற், துஷ்ட்டமுறுகங்கள், யிதுகளுடய வுபத்திர வங்கள் நாலே, தன்னறசனுடா யிருக்குறது யென்று, றாயற் அவற்கள் சன்னிதானத்துலே, அறிக்கை பண்ணி கொண்ட படியனாலே, றாயற் அவற்கள் கம்பள சாதி அனவரையும் தறிவிச்சு அவறவற்களுக்கு, கனுவாஇக்கு கீள்ப்பட்ட சீற்மை யில், அந்தந்த யிடத்துலே மேகனது செய்யப்பட்டவற்களுக்கு

அந்தந்த யிடம் அவறவற்களுக்கே, சூறிய சந்திறாதிகள் உள்ள வரைக்கும் வம்ச பறம்பரையாஇ பாளையப்பட்டு ஆண்டுவறும் படியாக, நெமுகம் செயிது வறும் நாளையில் யென் வம்சஸ்த நான, பாலம சித்தம னாயக்கற் மூத்த மகன், பள்ளி கொண்டம னாயக்கற் அவற் குமாரன் றாயகொண்டமனாயக்கற் றாயற் அவற்கள், சன்னிதானத்துலே சகல பிறுதுகளும் பெத்தவனாயி, றாயக் கொண்டம னாயக்கற் யென்று பேற் பெற்றவறாயி பிறசுத்திப்பட்டு தெற்கு னோக்கி வந்து கணுவாஇக்கு, கீள்ப் பட்ட தாறாபுரத்துக்குக் கீள்பிறம், ஆம்பிறாவதிக்கரை ஓரத்தில் பிறமயமென்று ஊறும் கட்டி, அவடத்தில், துஷ்டதினம் செயி குற பேரை யெல்லாம் அடக்கி, அரமனைக்கு, கீள்படிந்து நடக்கும்படி செயிவித்து, அதுக்குமேல், தாறாபுரத்துக்கு மேற்க்கே வந்து...

மங்கலும் பல்லா கோயில் சீற்மையும் உண்டுபண்ணி, மங்கலத்தில், யெங்கள் யிஷ்ட தெய்வமாகிய வல்ல கொண்ட சுவாமிய்யை பிறதிஷ்டை செயிது, அதுக்கு மேற்க்கு ஆனை மலைக்கு சேந்த, மேமங்கலம், பறதலம் உண்டாக்கி, மங்க லத்துக்கு மேற்க்காக, நிகமு, வகுத்தன் பாளையம் மென்று உண்டு செயிது, இந்த முகத்தில் பிறிதீறத்தில் யிறுக்குற, கள்ளர்களையும், மிற்கசாதிகளையும் மட்டக்கி வனாந்தி ரத்தை வெளி செயிது, குடியேத்து வயித்து, அறம்மனைக்கு கீள்படிந்து நடக்கத் தக்கதாக செயிது கொண்டு வறும் நாளையில்...

றாயற் அவர்கள் யிந்த சமாசாரங்கள் எல்லாம் கேட்டு ரொம்பவும் சந்தோஷமாஇ, றாயக் கொண்டம னாய்க்கறுக்கு, தேவனாயக்கரென்றும், பல்லனாயக்கற் யென்றும், ரெண்டு புள்ளையள் யிறுந்தார்கள். மங்கலம் சீற்மைக்கு ரெண்டான் புள்ளைக்கு, மங்கலம் பல்லான கோவில், பாளையகாற் யென்று பட்டமும்கட்டி, பல்லனாயக்க ரென்று பேற்பிறசுத்தி யாஇ வெளங்க பண்ணினாற்கள்.

மூத்த புள்ளை தேவனாயக்கறுக்கு, நிகமும் பாளையக் காரரென்று பட்டம் கட்டி, றாயற் அவற்கள் கடாஷ்சயத்து னாலே, நிகமும் வகத்தன் பாளையம், பிறமயம், இதுகளுக்குச் சேந்த சீற்மைக்கு னீயே பாளையக்கறாயி இறுமென்று

றாயற் அவற்கள் உத்திரவு குடுத்த படியனாலே றாய சமுஸ் தானத்துக்கு குமாரவற்க்கமாக நடந்து கொண்டு நிகழும் பாளையகற் யென்று பேற்பிறசுத்திப் பட்டவற்களாஇ பாளையகற் ஆண்டு கொண்டு வந்தாற்கள்.

அந்த னாள் முதல், சாலீவாகன சாபுதம், 1268 முதல் 1716 வரைக்கும், வறுஷகளும் 448க்கு பட்டம்ங்களுடைய வரிசைகளும் அவாளாவளுடைய நடத்தைகளும் யிதின் கீழே யெளுதி வருகிறது.

1. றாயக் கொண்டமனாய்க்கன் மூத்த மகன்
தேவனாயக்கற் பட்டம் ஆண்ட வருஷம் 66

2. யிவற் குமாரன் அபரஞ்சி கொண்டமனாயக்கற்
பட்டம் ஆண்ட வருஷம் 40

4. யிவற் குமாரன் குமாரவல்ல கொண்டம னாயக்கற்
பட்டம் ஆண்ட வருஷம் 29

4. யிவற் குமாரன் தேவனாய்க்கற்
பட்டம் ஆண்ட வருஷம் 32

5. யிவற் குமாரன் விசயவல்ல கொண்டம னாயக்கர்
பட்டம் ஆண்ட வருஷம் 16

6. யிவற் குமாரன் வெங்கிடாத்திரி னாயக்கற்
பட்டம் ஆண்ட வருஷம் 30

7. யிவற் குமாரன் சிகுறாமவல்ல கொண்டம னாயக்கற்
பட்டம் ஆண்ட வருஷம் 29

8. யிவற் குமாரன் சிகுறாம வல்ல கொண்டம னாயக்கற்
பட்டம் ஆண்ட வருஷம் 21

9. யிவற் குமாரன் தேவே னாய்க்கற்
பட்டம் ஆண்ட வருஷம் 26

10. யிவற் குமாரன் - வல்ல கொண்டம னாயக்கற்
பட்டம் ஆண்ட வருஷம் 14

11. யிவற் குமாரன் அபறஞ்சி கொண்டம னாய்க்கற்
பட்டம் ஆண்ட வருஷம் 22

12. யிவற் குமாரன் சொடுகு பல்ல னாயகற்
பட்டம் ஆண்ட வருஷம் 25

13. யிவற் குமாரன் தேவை னாயக்கற்
பட்டம் ஆண்ட வருஷம் 40
14. யிவற் குமாரன் ரங்கப்ப னாயகற்
பட்டம் ஆண்ட வருஷம் 30
15. யிவற் குமாரன் முத்து குமார வேலாயித னாயக்கற்
பட்டம் ஆண்ட வருஷம் 10

| | |
|---|---|
| 15 | 448 |

யிப்படிக்கு வம்ச பறம்பறையாஇ நிகழும் பாளையகாற் யென்று பேற் பிறசுத்திப் பெற்றவர்களாஇ, பிறுதுகள்ளுடனே பாளையப்பட்டு ஆண்டு வறும் நாளையில் அந்தந்த காலத்தில் றாசியதிகாரம் பண்ணப்பட்ட றாசாக்கள், கடாட்சத்துக்குப் பாத்திரனாயி, அறமணையிலே கட்டளையிட்ட படிக்கு சாகுறுதுயாஇ நடந்து கொண்டு வந்தாற்கள். றாயற் சமுஸ் தானத்து வரைக்கும், பாளையப்பட்டு சுத்த சாறியாஇ நடந்து வந்தது.

பாண்டிய தேசாதிபதியான, மதுரை, திருமலை நாயக்கற் ரவற்கள், நாள் முதல், அந்தந்த காலத்தில், றாச்சியம் பிறபுத் துவம் பண்ணப் பட்டவற்கள், கடாஷ்சத்துக்குப் பாத்திரற் களாஇ நடந்துக் கொண்டு அறமனையாற் கட்டளையிட்ட நிகுதிபடிக்கு, பாளையப்பட்டு ஆண்டு கொண்டு வந்தார்கள்.

அதின் பிற்க்காலம், மயிசூறு ஸமுஸ்தானத்துக்கு கற்த்த றாகிய கற்த்தாக்கள் நாளையிலே, பெறமயம் கிறாமமும், அறமனைக்கு சேத்திக் கொண்டு நிகமத்தில் சேந்த கிறாமங் களுக்கு, னிகுதி செயித படியனாலே னிகுதிபடிக்கு, நடந்து கொண்டு வறும் நாளையில், மறுபடியும், பிற்காலம் கற்த் தாக்கள், வகுத்தன் பாளையம், அரமனைக்கு சேத்திக் கொண்டு, னிகமத்தில் சேந்த கிறாமத்துக்கு நிகதி செயித படியனாலே, அந்த நிகுதி படிக்கு பணம் செலுத்தி கொண்டு பாளையப்பட்டு ஆண்டு அனுபவித்துக் கொண்டு வந்தாற்கள்.

அதின் பிற்க்காலம், மஹாறாச றாச ஸ்ரீ கும்பினியாற் அவற் கள், சென்னல் மேடோசு துரையவற்கள், கோயமுத்தூறுக்கு

வந்து, முகாம் பண்ணி இறுந்த விடத்தில், பதனஞ்சாம் பட்டம் முத்துக்குமார வேலாயுத னாயக்கற் பேட்டி பண்ணிக் கொண்ட சமயத்தில் யென் தமயனான முத்துக்குமார வேலாயுத னாயக்கற் பேறிலே கடாட்சம் செயிது, னிகமத்துக்குச் சேந்த நகுத்தன் பாளையமும் சேத்தி னிகுதி செயிது குடுத்த படியனாலே, சவும்மிய சாதாறுண ரெண்டு வறுஷமு னிகுதிபடிக்கு நடந்து கொண்டு பாளையப்பட்டு அனுபவிச்சுக் கொண்டு வந்தாற்.

யெனக்கு நள வறுஷம் தை மீ 15-ந்தேதி சுபதினத்தில் யெனக்கு பட்டமாஇ, சுப்பறாய தேவெனாயக்கன் னென்று பேற்வெளங்கி கொண்டவனாயி, மஹாறாச றாச ஸ்ரீ கும்பிணி துரையவற்கள் கட்டாஷ்சயத்துக்கும் பாத்திரனாயி ஹாசறுலே காத்துக் கொண்டு யிறுந்து, துரைகள் கட்டு பண்ணினபடிக்கு அந்தந்த சமயங்களுலே நடந்து கொண்டு காத்து யிறுந்து துரைகள் கடாட்சம் செயிது னிகமும் சின்னனிகமும் வுபகிறாமும்4ஆக யிந்த ஆறுகிறாமமும் யென்வசம் பண்ணி; சாதலவாறு, சிபந்தி, தேவதாயம், பிறம்மதாயம் னீங்கலாக வருஷ பிறிதியும் கண்டு முதலான பெறீசுலே பத்தில்மூணு யெனக்கு சாறி செய்து யிறுக்குறபடியனாலே, கிறாமங்கள் நான் அனுபவிச்சு கொண்டு வறுஷப் பிறிதியும், கண்டு முதலுலே பத்தில்யேளு, அறமனைக்கு பணம் செலுத்திவிச்சு கொண்டு, யென் குஞ்சு குளந்தையள் சயிதமாஇ யென்னை சேந்த சனங்கள், னூறு சனத்துடனே நிகமத்து குடிஇறுப்புக்காரனாயி, துரையள் தயவு செயித சாறிஇலே, னூறு சனத்தையும் சம்ரட்சணை பண்ணி கொண்டு, மஹாறாச றாசஸ்ரீ கும்பிணி துரையள் கடாட்சயத்துக்குப் பாத்திரனாயி ஆசறுலே காத்து கொண்டு இருக்குரேன்.

மேல் யெழுதப்பட்ட கலங்களுக்குத் தகவலா யிறுக்கப் பட்ட ஆதறவுகள், காலாந்திரங்களிலே, றாசீகங்களிலே கைதப்பிபோனபடியனாலே பறம்பரையிலே கேள்வினாலேயும் அனுபவுத்துனாலேயும் தெறியப் படுத்தலாச்சுது.

சுப்பறாய தேவைய னாயக்கன் ருசுவு.

# பல்லியப்ப நாயக்கனூர் ஜமீன்தார் வம்முசாவழி கணக்கு

D: 3844

இந்த பல்லியப்ப நாய்க்கனூர் வமிஷாவளி கணக்கும் ஓலை பட்டயத்தில் இருந்து எழுதினது.

சுபஸ்தஸ்ரீ சாலிவாகன சகார்த்தம்வருஷம் 1357 கலியாப் புதம் வருஷம் 4536 மேல் செல்லாநின்ற நள வருஷம் சிறாவண சுத்தம பஞ்சமி சுக்கிறவாரமும் அனுஷ நட்சேத்திரமும் பாலவா கரணமுங் கூடிய சுபயோக சுபதினத்தில் விசைய நகர பட்டணத் தில் மகா ஸ்ரீஸ்ரீ றாயர் அவர்கள் ஊைளையில் றாயரவர்கள் சமஸ்தானத்தின் பேரில் டில்லி பாச்சா மனிதன் வாலுசாய்பு அவன் படையெடுத்து றாயர் சமஸ்தானத்துக்கு யெதிர் சமரம் செய்ய வந்தபோது நம்முடைய வம்முஷம் ஆதியில் உண்டானது. பெஞ்சை நகரம் ... கக்கவார் கோத்திரம் ஞாத் தொருபேரில் வல்லாள மாக்கி னாயக்கர் அவனுடனே சேர்ந்த ஒன்பது குடைகாரர் ஒன்பது பேரையுங் கூட்டிக் கொண்டு போய் வல்லாள மாக்கி னாய்க்கன் வாலுசாயபு பாளையத்திலே போய் புகுந்து அனேக சனங்களை வெட்டிக் குத்தி பாளையம் பின்வாங்கி போகத் தக்கதாக செய்விச்சி றாயர்சமஸ்தானத் துக்கு வந்து சேர்ந்தார். அப்போது றாயரவர்களுக்கு சந்தோஷ மாகி வல்லாள மாக்கினாய்கருக்கு ஆயிரம் சனத்துக்குத் தளகற் தனாக நேமிச்சி அநேக வஸ்திரமும் பல்லக்கும் அதற்குச் சேர்ந்த சிங்கமுக அணிசும், சிரசுப்பட்டையும், ரெணகங்கண...ரண வாசியும் சாமத்துறோகாவெண்டயமும், நெகிளமும், வீரமணி, வெள்ளைடால், பச்சைடால், வெள்ளைக்குடை, பச்சைகுடை, வெள்ளை சுருட்டி, பச்சை சுருட்டி, கெருடடால், சிங்கக்கொடி, சின்னக்கொடி, மும்முரசு, வீரதண்டை, வெள்ளைக்குதிரை, அதற்குச் சேர்ந்த சல்லியம், பகல் தீவட்டியும் குடுத்து நிகளங்க மல்லனென்றும் வல்லக்கறாயனென்றும் பேரும் குடுத்து, பின்னும் அனேக பூஷணாதிகளும் குடுத்து மதுறாபுரிக்கி

வடமேற்கு திண்டிக்கல்ச் சீர்மைக்கிச் சேர்ந்த அல்லினகரம் வெல்லம்பட்டி, நத்தம்பட்டி, கூத்தம்பாரை கிறாமம்........... வக்காப்பட்டி, உசிலம்பட்டி, சிறாமனத்தம், மல்லப்பட்டி, குளந்தைப்பட்டி, சாதிலியப்பட்டி, பெறெனப்பட்டி இதற்குச் சேர்ந்த பட்டிகளும் அதற்குசேர்ந்த பூமியும் விட்டு பரிபாலனஞ் செய்துகொண்டிருக்கச் சொல்லி உத்திரவு செய்தார்கள். அப்போது இந்த சீர்மையில் வேடருங் கள்ளரும் அந்த வனத்தில் அடித்துப் பறித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களையும் வதைசெய்து சாகுவளியாகும்படிக்கு செயவிச்சுக் கொண்டிருக் கையில் ஆதியில் பெஞ்சையில் யிருந்த வல்லாள மாக்கி னாயக்கன் பட்டம் வருஷம் 33.

மேல்ப்படி மகன் லக்கம னாய்க்கர் பட்டம் வருஷம் 42.

மேல்படி பெண்சாதி காமள் அம்மாள் மேல்ப்படி மகன் வல்லாள மாக்கி னாய்கன் பட்டம் வருஷம் 15.

மேல்படி பெண்சாதி முத்தம்மாள் மேல்ப்படி வல்லாள மாக்கி னாய்கர் பட்டத்தில் மதுறாபுரிக்கிப் போய் சந்திர சேகரப்பாண்டியனையும் கண்டு பேசி வஸ்திரபூஷணாதிகளும் வாங்கிக்கொண்டு அப்பொது வகையிருப்பு சக்கரம் நூறு பொன் குடுத்து வந்தது. அவர் பட்டம் வருஷம் 19.

அதின் பிறகு மேல்படி மகன் காமனாய்க்கன் பட்டத்துக்கு வந்ததால் மேல்படி பெண்சாதி எரசின்னம்மாள். மேல்படி மகன் பேர் எட்டம்ம னாய்க்கர். மேல்படி காமனாய்க்கர் வகை யிருப்பு செய்த சக்கரம் குடுத்து அவர் ஆண்டது பட்டம் வருஷம் 23.

அதின் பிறகு மேல்ப்படி புல்லியப்ப னாய்க்கர் பட்டத்துக்கு வந்தார். மேல்படி பெண்சாதி பேர் வங்காறம்மாள். மேல்படி மகன் பேர் கனகல னாய்க்கர். மேல்ப்படி பில்லியப்ப னாய்க்கர் வகையிறுப்பு சக்கரம் குடுத்து அவர் ஆண்டது பட்டம் வருஷம் 41.

அப்போது நடந்தது: புருஷமா னதிக்கி வடபுரம் மண் கோட்டையும் போட்டு, வறதறாசப் பெருமாள் விஷ்ட்டுணு கோவில் வுண்டுபண்ணி வைச்சி கல்மண்டமுங் கட்சிவைச்சு

தினசறி வறதறாசப்பெருமாளுக்கு தீவாற்தனை செய்விச்சார். சிறஸ்தலம் வினாயருக்குக் காரை ... மண்டபங் கட்டிவிச்சு தினசறி பூசை நடக்கத் தக்கதாக செய்விச்சார். மேல்ப்படி மகன் கனகல னாய்க்கர் பட்டத்துக்கு வந்தார். அவர் பெண் சாதி வங்காறம்மாள், றாமம்மாள், மேல்ப்படி மகன் பேற் காட்டம னாய்க்கர். மேல்ப்படி மகன் கனகல னாய்க்கர் பட்டத்தில் நடப்பிவிச்சது: அல்லிநகரம். வெல்லம்பட்டியில் வங்காறம்மாள் றாமம்மாள் சேர்ந்த பண்ணையத்தில் அல்லி நகரத்தில் வெல்லம்பட்டி ஆத்தில் கல்லினாலே அணைகட்டி வைத்து நஞ்சை வெள்ளாண்மையும் பயிரிட்டு நடப்பிவிச்சார். வகையறுப்பு சக்கரம் 300 குடுத்து ஆண்டது. அவர் பட்டம் வருஷம் 38.

மேல்ப்படி மகன் காட்டம னாய்க்கர் பட்டத்துக்கு வந்தார். மேல்ப்படி பெண்சாதி மேல்ப்படிகுமாரன் பல்லியப்ப னாய்க்கர். மேல்ப்படி காட்டம னாய்க்கர் பட்டத்தில் அப்போது நடந்த வயணம் மதுறாபுரியிலே கொட்டியம் நாகம னாய்க்கர் மகன் விசுவனாத னாய்க்கர் பாண்டிய தேசத்துக்கு அதிபதியாக வந்தார். அப்போது காட்டம னாய்க்கர் மதுறாபுரிக்குப் போய் விசுவனாத னாய்க்கர் சமூகத்துக்குப் போய் அவர்களையும் கண்டு பேட்டி செய்விச்சுக்கொண்டு வகையருப்பு சக்கரம் இரனூறு பொன்னாகப் பேசி வஸ்திரம் மற்றது வாங்கிக் கொண்டு அல்லி நகரம் வந்து சேர்ந்தார். அவர் பட்டம் ஆண்ட வருஷம் 38.

மேல்ப்படி மகன் பல்லியப்பனாய்க்கர் பட்டத்துக்கு வந்தார். மேல்ப்படி பெண்சாதி காமக்கம்மாள். மேல்ப்படி குமாரன் சக்கண னாய்க்கர். அவர் பட்டத்தில் நடப்பிவிச்சது: உசிலம் பட்டியில் விஷ்ட்டுணுஸ்தலம் நரசிங்கப்பெருமாள் கோயி லுண்டு பண்ணிவித்து சலக்கம்பமும் நாட்டிவிச்சார்கள். அவர் னாளையில் மல்லபட்டியும் குழந்தைப்பட்டியும் சிறிது பூமியும் அம்மெய னாயக்கர் வெடசந்தையூருடனே கட்டிக் கொண்டார். இது அல்லாமலும் வல்லகொண்டம னாய்க்கர் சிறாமனத்நத்துக்நச் சேர்ந்த பூருவீகம் செட்டியப்பட்டி வந்து யெறியோடு தண்ணிக்கிணத்து மேல்புறம் கல்ச்சிலை யாணையும் இதுக்நச் சேர்ந்த பூமியும் கட்டிக்கொண்டார்கள்.

அவர் வகையறுப்பு ஷ 200 சக்கரம் குடுத்து ஆண்டது அவர் பட்டம் ஷ 41.

இதின் பிறகு சக்களனாய்க்கர் பட்டத்துக்கு வந்தார். மேல்ப்படி பெண்சாதி வாங்காரு சின்னம்மாள். மேல்ப்படி குமாரன் பொம்மஞனாய்க்கர். மேல்ப்படி சக்களனாய்க்கர் பட்டத்தில் நடந்த விபரம்: கூத்தம்பாறையும் சாதிலியப் பட்டியும் பெற்றடட்டி இதுக்குச் சேர்ந்த பூமி குடகந்தி வனம் விருபாட்சியார் கட்டிக் கொண்டார்கள். அப்போ க்ஷாமம் வந்தது. இவடம் விட்டு விருபாக்ஷிக்கி வலசைப் போயிருந்தார்கள். அப்போது சாப்பாட்டுக்கு ரொம்பவும் நிருபாகமில்லாமல் அல்லிநகரம் அடமானம் வைத்து விருபாச்சினாய்க்கர் கிட்ட அறுபதிங்கலங் கேப்பை வாங்கிக் கொண்டார்கள். சிறுது னாளைக்கு பின்பு நாங்கள் வாங்கின அறுபதிங்கலக் கேப்பையும் தருகிறோம். எங்கள் சீர்மையை விட்டுவிடுங்களென்று கேட்டதற்கு உங்கள் சீர்மையை விடுகிற தில்லையென்று கட்டிக்கொண்டார்கள். அப்போது வகையறுப்புச் சக்கரம் ஷெ 200 குடுத்து அவர் பட்டம் ஆண்டது வருஷம் 21.

இதுக்கு மேல் அனவரனாய்க்கர் பட்டத்துக்கு வந்தார். அவர் பெண்சாதி பாப்பக்கம்மாள். குமாரன் போடினாய்க்கர். மேல்ப்படி அனவரனாய்க்கர் பட்டத்தில் புருஷமா னதியில் கல்லணைக்கட்டி செங்கல்க் காரை பூசி காலப்பாவுந்த பூசை வுண்டுபண்ணிவிச்சார். வகையிறுப்புச் சக்கரம் ஷெ 200 குடுத்து அவர் பட்டம் ஆண்டது வருஷம் 27.

இதுக்குமேல் போடினாய்க்கர் பட்டத்துக்கு வந்தார். மேல்ப்படி பெண்சாதி காமக்கம்மாள், குமரம்மாள், ஷெ குமாரன் பொள்ளனாய்க்கர். ஷெ னாய்க்கர் பட்டத்தில் குளமும் வெட்டிவைத்துப் புருஸமா னதியில் அணையுங் கட்டி வாய்க்காலும் வெட்டி வைத்தார். அப்போது திண்டுக்கல் கோட்டைக்கி அமுலாக வந்தவரிக்கி வெங்கிறாயர் நாளையில் அவரைப் போய் கண்டு பேசி உடுவரை மற்றதும் வாங்கிக் கொண்டு சாம......சத்திரத்துக்கு சக்கரம் ஷெ 300 குடுத்துச்சொல்லி தீர்த்துவிட்டார்கள். அவர் பட்டம் ஆண்டது வருஷம் 45.

இதுக்குமேல் பொம்மனு னாய்க்கர் பட்டத்துக்கு வந்தார். மேல்படி பெண்சாதி காமக்கம்மாள், பெரியக்கம்மாள், குமாரர் வருதனாய்க்கர். ஷை பொம்மனனாய்க்கர் பட்டத்தில் சத்திரத்துக்கு ஷை 300 குடுத்துக் கொண்டு அவர் பட்டம் ஆண்டது ஷ 41.

இதின்பிறகு கஞ்சிவறத னாய்க்கர் பட்டத்துக்குவந்தார். மேல்படி பெண்சாதி தாதக்கம்யாள். குமாரன் எசக்கள னாய்க்கர். மகள் முத்துவறதம்மாள். ஷை கஞ்சிவறதனாய்க்கர் சத்திரத்திற்கு குடுத்துவரச் சொன்ன சக்கரம் ஷை 300 குடுத்துக்கொண்டு பட்டம் ஆண்டது ஷ 41.

இதின்பிறகு சக்கள னாய்க்கர் பட்டத்துக்கு வந்தார். மேற்படி பெண்சாதி பொன்னகைம்மாள், காமக்கம்மாள், சின்னக்கம்மாள். ஷை மகன் மூக்கள பல்லியப்பனாயக்கர். அவர்கள் ஷை சக்களனாய்க்கர் நாளையில் திண்டிக்கல்லுக்கு அமுலாகவந்த மீறுசாய்பு நாளையில் வகையறுப்பு கூலி ஷை 700. இதின்பிறகு சையதுசாய்பு நாளையில் வகையறுப்பு கூலி ஷை 1000. அவர் பட்டம் ஆண்டது வருஷம் :9.

இதின்பிறகு பல்லியப்ப னாய்க்கர் பட்டத்துக்கு வந்தார். ஷை பெண்சாதி முத்துரங்கம்மாள், குஞ்சம்மாள், கண்ணம்மாள். ஷை பல்லியப்பனாயக்கர் துரைத்தனத்தில் வகையிறுப்பு கூலி ஷை 1000 குடுத்து அவர் பட்டம் ஆண்டது வருஷம் 25.

றாசமானிய ஸ்ரீ கும்பினியார் அவர்கள் திண்டுக்கல்லுக்கு அமுலாகவந்த மேஸ்தர் மக்களுட்டு ரெங்கத்துரை, உஞ்சித்துரை இவர்கள் நாளையிலே வகையிறுப்பு கூலி 1000. இதுக்கு மேல் மகாஸ்ரீஸ்ரீ ஆற்டீசி சாய்பு அவர்கள் துரைத்தனத்தில் ஷ 1000 குடுத்து வந்ததில் நள வருஷம் வகையிறுப்பு ஷை 1000 குடுக்க வேண்டியதுக்கு ஷை 700 செலுத்திவிச்சேன். ஷை 300 செலுத்திவிக்கிறதற்கு விபறமில்லாததினாலே சீர்மை சப்தி செய்து கும்பினியாரவர்கள் தயவு செய்து மாசம் 65 எனக்குக் கொடுத்து அபிமானித்து காப்பாத்தினார்கள். சீர்மையை மகாறாசயாலி ஸ்ரீ ஆற்டீசுசாயபு

அவர்கள் பைமேஷ் 25 பாகஞ் சங்கிலியால் அளந்து தீர்ப்புச் செய்து பணமும் வாங்கிக்கொண்டு யிருந்தார்கள். பின்னேயும் மகாறாசமானிய கமிட்டி துரையானவர்கள் தயவுசெய்து சீர்மையை மகாறாசறாசமானிய ஸ்ரீ பாரீஷ்துரையாரவர்கள் முன் பாரஸமாக விட்டு அதுக்கு தீர்ப்புச்செய்து கொடுத்தது கூலி பணம் 56 இந்தபடிக்கி நிகுதிசெய்விச்சார்கள். குடுத் தார்கள். இந்த உத்தரவுபடிக்கி அதிசாக்குறதையாக நடந்துக் கொள்கிறேன். மேல்ப்படி குமாரன் சக்களனாய்க்கருடைய பெண்சாதி விசுவம்மாள். மேல்ப்படி அம்மாளுடைய குமாரன் பெரியதம்பி பல்லியப்ப னாய்க்கர் பட்டத்துக்கு வந்தேன், 1221 பசலி முதல்.

# ரெட்டயம்பாடி பாளையக்காரர் கைபீது

**D: 3256**

கோயம்புத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த திண்டுக்கல் வகைறா ரெட்டியம்பாடி மிட்டாவில் ரெட்டயம்பாடி பாளையகாரன் வமுசாவழி மகரு கற்நல் காலன் மக்கிஞ்சி சாயபு சறவியற்சன நால்ஆ புலி.

(தரி)யாபத்து நிட்டில நாயன் னய்யற்

ரெட்டியம்பாடி றாமசுவாமி னாயக்கன் மிகவுவடக்கத் துடனே எங்கள் வமுசாவழி வறலாற் தெரியப்படுத்துகுற தென்னவென்றால் என்னுடைய பிதுறுபிதாக்கள் முன்னுள்ள பெரியவர்கள் டில்லி பாக்ஷாவினிடத்தில் சகுயாதிக செனாபதி யள் தளதந்திரங்களில் சகசிறசன் சறுதாறாயிஇருந்து கொண்டு மகாராசமாணிய றாசீய டில்லி பாகவாயி கட்டளை யிட்டருளிய ஆக்கினா வுத்திரவுபடிக்கி செலுத்தி சாக்கிரைதை யாயி னடந்துகொண்டு யிருக்கும் காலங்களில் அதின் வட பால் சூள்ந்த தொப்பா சென்று வருவதில் மராட்டியன் வகை சின்னபந்து பெரியபந்து யென்குறவற்கள் சிறிது னாள் சமஸ் தானத்துக்குள்ளடங்காமல் தொப்பாக் கட்டாமல் யிருந்துதில் அப்பொது ராஜராஜ பாக்ஷாயி அவர்கள் யெங்கள் வகை பெரியோர்களை அழைத்து நீங்கள் மூன்று சரிதார்மாரும் சிறிது தளதந்திரத்துடனே பொயி அந்த சின்ன பந்து பெரிய பந்து என்கிறபேர் யிருவரையும் யெத்தினிப் பிரெசு தினத்தின் பேரிலாகிலும் அவர்கள்கைவசம் பண்ணிக்கொண்டு வரவேணுமென்று ஆக்கினாமிச்ச பிறகாறலும் இவற்களும் சிறிது தளதந்திரத்துடனே போயி அவர்கள் செரிதன பெலங் களையெல்லாஞ் சூளவளைந்து மகாரளதாரிசஞ்செய்துயிரு பாலு மெத்தாணசேதங்களாயும் பின்னிடாமல் முன்வைத்த காலைப் பின்னிடாமல் துணிகரஞ்செய்து கைவாள்படை யுடனே யிவ்வகைமூன்றுபேறும் அந்த சின்னபந்து பெரிய பந்து யென்கிறபெரை கைப்பிடிப்பாயி பிடித்துக்கொண்டு

வந்து மகாறாச ஸ்ரீபாச்சாவின் சதுரதேவடியில் விட்டார் களப்போது பாச்சா அவர்கள் பார்த்து மகாசந்தோஷப் பட்டு யிவ்வகை மூன்று பேறுக்கும் அனெக விருதுவகை—யா பானாந்தூளி வாகனசேகரகங்களு மெடுத்துப்பின்னும் பறி காசம் ரெட்டியாற்களாய்க் கொடுக்க செய்துமது சேனாபத்தி யிவர்களாயி நேமித்து வைத்து அப்பால் சின்னபந்து பெரிய பந்து என்கிற பேறுக்கும் நடக்கத்தக்கப் புத்திமதிகளையிட் டருளி யிருக்கின்ற நாளையில், ஒருநாள்ப் போது மகாறாய பாச்சா அவர்கள் யெங்கள் வகையார்யிருக்கின்ற பட்டன செறி பார்க்கவேணுமென்று தளபெல கெசவாரூடறாய் யெழுந்தருளி யெங்கள் வகையார் யிருக்கின்ற பட்டண வீதி விலாசம் வருகிற பொது ஒரு வீதிக்கரையில் மதிட்புரங்களில் மரபு செகரமாயிச் சிறுது பெண் சிறுசுகள் நின்றுப்பார்ப்பதில் மகாறாச மகாறாசமானிய றாச ஸ்ரீ பாச்சா மிகவும் கண்டு மனப்பிரீதியாய் தம்முடைய அரமனைப் பொய்ச் சேர்ந்து யெங்கள் வகை சரிதார்மார்களை அளைத்து நீங்கள் நமக்கு மெத்தவும் உத்திரவாதிகளான படியினாலே நீங்கள் நமக்கு சுயபந்து களாக வேணும். யிப்பொது நீங்கள் ஒரு பெண் கொடுக்க வேணுமென்று கேட்டார். அப்பொழுது எங்கள் பெரியவர் களான மூன்று பேரும் நீங்கள் படி கெள்க்கப்படாது. யெங்கள் சாதிகத்தின் மட்டுமெரை மரியாதி மானசமெத்தவும் தெரியவந்த மகாராசாக்களா யிருந்தும் யிப்படிக்கெட்டால் னாங்களிரந்து போவமேதவிர பெண் கொடுக்க ஞாதிவலை யென்று சொன்னார்கள். அப்பொழுது நீங்கள் கொடுக்க மாட்டோமென்றால் வலைவத்தமாகிலும் கட்டிப்போடுவோம். அப்படிவரப்பண்ணிக் கொள்ளாதியளென்று சொல்லி யிவர் களும் னல்லதென்று யொவ்வி யொவ்வாச்சங்கதி காட்டி பேசிக் கொண்டு வந்து யிவர்கள் சாய்கைசேர்ந்து அந்த புத்திரியெ இவர்கள் மூன்று பெறும் அவரவர்கள் பந்துக்கள் சேகரமாயி அனெக தவ கட்டுடனே வெளிப்பிரபட்டு தென்பாரி சம் சிறுது தூரம் பிறபட்டு சீக்கிரப்பயணகெதியாய் வருகிற போதுஅவடத்தில் ஆரு சலப்பிரபாகமெத்தவும் மொக்கமாய் ஒருக்கிட்டு வருவதில் கண்டு யிவர்கள் தங்கள் குலதெய்வத்தை நோக்கி ஏத்தவும் கிறாதனஞ்செய்து கிலெசித்துக் கொண்டுயி ருக்கச்செ அந்தப்பிரபாகத்தின் யிருபாலிருக்கின்ற கரைப் புங்க

மரம் ஒன்றுக்கொன்று கூடி சாய்ந்துவிழ அதின் துடர்ச்சியாய் இவர்கள் வகையாவதும் கடந்துயிப்பால் வந்து விடப்பின் னாலெ துடந்து வருகிற தலடெலங்கள் அந்த பிரபாக கரை யருகே வரச்செ யிந்தப் புங்கமரங்களெப்பொதும் பொருவ மிர்ந்து கொண்டுது. அதுகண்டாச்சரியப்பட்டு யிவர்கள் மெத்த வும் சத்தியமான ஷத்தாளென்று யென்னிப்போயிட்டார்கள். யிவர்கள் யெங்கள் வகையார் மூன்று பெறும் றாயர் சமஷ் தானம் வந்து சேந்து றாயற்பேட்டியுஞ் செய்து தங்களுடைய விருத்தாந்ததில் வறுத்தமானஞ் சொல்லச்செ, அப்பொது றாயர் ஆகட்டும் நீங்கள் யினிமெல் ஒன்றுக்கும் சிந்தை செய்ய வேண்டியதில்லை; உங்கள் யெதாஷ்த்தான ஆதிக யிவடமே யிருக்கு தென்று சிறிது பூமிசாய்கை பதவிபடமுயற்ச்சி கொடுத்து யிவர்கள் மூன்றுபேறையும் சமசதுரமரியாதை கொடுத்து சிறிது விறுது வெகுமானங்களும் கொடுத்து வைத்து கொண்டிருக்குற போது, சோளராசாவுக்தும் பாண்டிய ராசா வுக்கும் ஒன்றுக் கொண்டு விகாதங்களாகி பாண்டியறாசா யேற் பட்டு வந்து சொளமண்டலயாவதும் நிபாதம் செய்து சொளறா சாவை யெடுத்துத் போடுவதாய் றாசகாரியநெட்டுர் செய்தார். அப்பொது சொளறாசா றாயற் சமஸ்தானம் செய்ய அதற்கு றாயர் ஆகட்டும் அதற்குத்தக்க பிறயெத்தினஞ் செய்து வுமக்கு யிவற்கூரிய விவரம் பண்ணிவைக்கலாம் மென்று யெங்கள்வழி யிந்த மூன்றுபேறையும் அழைத்து, பாண்டியறாசா மெத்தவும் துறாகிதங் செய்கிறான்; அத்தை மட்டுப்படுத்துவதாய் நீங்கள் மூன்று பேறும் கொட்டியம் னாகம னாயக்கனுக்கு சிறுதுகளை சேகரத்துடனெ நீங்கள் னாலுபேறுமாய் போய் அதசு பாண் டியனாட்டுக்குத் துறாக்கிதங்களெல்லாமடக்கி அந்தப் பாண் டிய றாசாவை நீங்கச்செய்து அதுவகை சமாச்சாரம் சுபலி ரிதியாய் நம்பளண்டைவந்து சொல்லிச் செய்யுங்களென்று வுத் திரவு செய்தனுப்பிவைத்தார்கள். அப்பொது யிவர்கள் னாலு பெறும் தளபெலசேகரத்துடனே போய் பாண்டியநாட்டை சூளவளைந்து மெத்தவும் றாசகாரியந்தொடுத்து யிருபாலு மரணசேதங்களாகிப்பின்னும் மங்களப்பட்டுக்கொட்டையான் கைவசப்படுத்தி றாசகாரிய சல்லியங்களையும் அடக்கிப் பாண் டிய றாசாவையும் நீங்கல்செய்து அப்பால் இதுவகை சமாச் சாரங்கள் நம்முடைய யெசமான்களிடத்தில் போய் அறியச்

செய்து கொள்வோமென்று திரும்பிவரச்செ கொட்டியம்னாகம னாடுள்வர நாம்பளவ்வடத்திக்கு வரவேண்டிய காரியமில்லை. நம்பள் மனுஷனாய் நீங்கள் வந்துயள். நாமளிவடம் ஆகவேண் டியது றாசகாரியங்களெல்லாம் ஆகபண்ணி யிவடம் துரைகட் டளையாயிருந்துக் கொண்டே நீங்கள் வெணுமென்றால் போய் சொல்லிக்கொள்ளுங்களென்று சொல்லிப் பொட்டு மதுரைதள தாய் பந்தொபஷ்த்து பண்ணிக்கொண்டார். யிதுவகைசங் கதியை யெங்கள் மூன்று பெறும் றாயற் சமஸ்தானம் போய் சேர்ந்து றாயரவர்களிடத்தில் அறிக்கைசெய்தார்கள். அப் போது றாயரவர்கள் பார்த்து யிதுவகைப்பிரெத்தினங்கள் முழுதும் விசாரித்து யெங்கள் வகை மூன்றுபேருகள் பேரிலு மெத்தவும் சந்தோஷித்து அனேக விருது வெகுமானங்களுஞ் செய்து அந்தக்கொட்டியம் னாகமனாய்கன் பேரில் மெத்தவும் அகோரகோபமாகி யிச்சணமெ அவனை கைபிடியாய் கொண்டு வந்தவனுக்கு வெண்டியபடி பூமிசாதகஞ் செய்துவைக்கலா மென்று சொல்லச்செ அப்பொது அந்தக் கொட்டியம் னாகம னாயக்கன் மகன் விசுவனாதனாயக்கனானவன், நானேபோய் தகப்பனை கொண்டுவருகிறேனென்று றாயரிடத்தில் வுத்திரவு வாங்கிக்கொண்டு போய் மதுரைப்பட்டணம் போய்புகுந்து நிறுது சம்தாரி சங்கறாம் பண்ணி அந்த னாகமனாயக்கனை யும் கைப்பிடியாய் பிடித்துக்கொண்டுவந்து றாயரவர்கள் சதுரில் விட்டான். அப்பொது றாயரவர்கள் பார்த்து யிவனை ஒரெவீச்சுலெ தலை விளும்படி ஆராகிலும் வீசிப் போடுங்க ளென்று சொல்ல அப்பொது விசுவனாத னாயக்கனானவன் காத்த துறோகியை னானெ வீசிப்பொடுவெனென்று கத்தியை யுருவி முன்னெவந்து நின்று ஓங்கினான். அப்பொது றாய ரவர்கள் பார்த்து மெபிறவும் தயாளமுண்டாகி யாகட்டும் வெட்டவெண்டாம் இனிமெலாகிலும் புத்தி கொண்டு பிளைக்கட்டுமென்று னாகம னாயக்கனை யெதாப்பிரகாரம் கொட்டியம் பாறக்குபடி செய்துயிந்தவி ... னாம னாயக்க னுக்கு மதுரைக்கி பட்டம்க் கொடுத்து சிறுது வுடு கரை வுச்சாகமுங்கொடுத்து அனுப்பிவித்தார். அனுப்பச்செ விச்சுவனாக்கனைப் பார்த்து றாயரவர்கள் உத்திறாதி வெடக்கம்பளம் துரைமக்கள் யிவர்கள் மூன்று பேறும் மகா சமத்தாள். தொடுத்தகாரியம் சாதிக்கிர பேரெயெல்லாமல்

பின்விடுகிற பெற்களல்ல. மெத்த மட்டுமரியாதை முண்டான பேர். இவர்கள் மூன்று பேரையும் கையுடனெயளைத்துக் கொண்டுபோய் இவர்களுக்கு வேண்டிய பூமிசாதனங்கள் மென்றைக்கும் மிறைவரி தொப்பா நீங்கலாச்சு. யாதீனஷ் சுதாளாய் ஆசந்திராக்கமாய் அனுபவித்துக் கொள்ளும் படியிவர்கள் யெங்கெ பூமிசாதனங் கேட்டார்களோ கேட்ட விடத்தில் இவர் மூன்று பேருக்கு பூமிசாதனம் பண்ணிவைத்து, ரொம்பவும் மரியாதைக்குடுத்து, நடப்பித்துக்கொள்ளென்று இவர்களுக்கு பட்டமுற்சியும் குடுத்து அனுப்பிவைத்தார்கள். அந்தப்படியெ விசுவனாத னாயக்கன் கையுடனெ அளைத்துக் கொண்டு மதுரைவந்து சேர்ந்து இவர்கள் மூன்று பேறையும் பார்த்துவுங்களுக்கு வேண்டியதான பாரிச மெங்கேவேணு மென்று விசுவனாத னாய்க்கர் கேட்க அப்பொது இவர்கள் சொல்லிக் கொண்டது: னாங்கள் டில்லிப்பட்டணம் விட்டு இப்பால் தெஷ்சணபாரிசப் பிரவேசமாகச்செ யெங்கள் குல தெய்வமாகிய விசையாசல சப்பமென ஒரு றாப்போதில் தெரிசனத்தில் வந்த-கமாயிருந்த தவந்தாபரம் விட்டுப் மெய் யென்று நீங்கள் கிலெசப்படவேண்டியதில்லை. நாம்பூருவமிட மிருந்தாப்போலெ பெறக்கெ பழனிமலைவாச மாயிருக்கிறோம். வுங்களுக்கும் ஆகவெண்டிய சுயாதன பூமிசாதனங்கள் அவ்வடமெ பண்ணிக்கொள்ளலாமென்று கடாச்சந்செய்து இருப்பதாய் யெங்களுக்கு பழனிமலையருகாண்மையாய்ப் பூமி சாதனமாகவெணுமென்று சொல்ல அந்தபடியே விசுவனாதனா யக்கனும் பழனிப்பிரவேசமாய் வந்து யெங்கள் மூன்று பேருக்கும் பூமிசாதனம் பண்ணிவைத்துகுடுத்து மெற்கெ ஆம்பிறாபதி தீரம் முதல் கிளக்கெ நல்லமங்கையோடைவரைக்கும் தென்வடல் பொய்கை தெற்கெ வளுக்கிரி முதல் வடக்கெ நீலம்பூருவரைக்கும் தென்வடல் முகாதம் கிளமெல் முக்காதமாயி திறசூலந்த யெல்கை பூமியிவர்கள் பாரிசம் பண்ணிவைச்சு திவ அப்பா யிவர்கள் மூன்றுபேறுக்கும் அவரவருக்குதக்க பூமி பிரிவுகண்டு கொண்டதில் என் முன்னொர் கொசவத் தொப்பனாய்க்கருக்கு பூமி சாதனமானது. மெற்கெ சக்கிலிச்சி மலைக்கிமெல்புரம் அருகாண்மையில் னாமாவோடை தொடுத்து அதின் நேற் வடக்கு உத்திறா பாளையத்துறைக்கி மெற்கடுக்கொம்மய்ய கவுண்டன் துரைக்கும் கிளக்கெ ஆம்பிறாபதியெல்லை கைத்துரை

தொடுத்து கிளக்கெ ஒரு கரைச்சார்பாய் கொளுமம் வடக்கு தள்ளிப்பாரியும் அதின்வடக்கு கண்ணாடிபுத்தூர் துரை அதிஙேர் சரிகிளக்கு லட்சணைப்பட்டி, குனகுங்கல்பாரை அதின் கிளக்கு அரை நாளிகைவளி மூலே தொடுத்து தெற்கே அய்வர்மலே அதினெற்கொண்ட தெற்கு ஆட்டு மலேச் சார்பாக கிளமேற்காதம் தென்வடல்காதம் யிதற்குள்ளாகிய பூமிகள் முளரெட்டையாரிருக்குது. யிரந்துபட்டுபொய் அவர்களிருந்தவூரை செரியும் காளியாய் நூரு வருஷத்துக்கு மேலே பின்பட்டு, அந்த வூரிடம் ஆரணிமாயிருந்ததில் அவடம் தரெளசெடி சிரைவெட்டி வெளி விலாசம்பண்ணி, அவ்விடமெ ரெட்டையம்பாடி யெம்பதாயூரும்கட்டி, யெங்கள் கொசவ தொப்பனுயக்கற் அவ்விடம் குடிவாசமாயிருந்து கொண்டு புருதனங் கொஞ்சமிருந்த கரவழியை பின்னுமுண்டுவைத்து, அவ்விடத்தில் அழகுனுச்சியம்மனென்று ஒரு பத்திரகாளியம்மனேயும் பிரதிஷ்டைபண்ணிவைத்து, மெலாரம் ஆம்பிருபதி அருகில் பூ மூன்ருசாவைத்து பூசைபண்ணி அம்பலவாண சுவாமி எங்கள் முன்ஞேருக்கு சொற்பணம் தெரிசனேசாதித்தால் அந்தப்படியெ ஆம்பிருபதி சலவாசமாயிருக்கின்ற அம்பலவாண சாமியை யெடுத்து முன்னுள்ள யெதாப்பிரகாறம் பளேய ஆலேயத்திலெ வைத்து பிரதிஷ்டைபண்ணி, அஷ்ட மந்திரங் கும்பாபிஷேகங்கள் செய்து, சகஷ்த்திர பிருமணபோசனம் பண்ணி வைத்து அர்த்தசன்னிதிக்கி தேவஸ்தானம் வெச்சி மிபுரங்குப் பம்பிளையும் சங்கிரமதனல்லூரு மடத்தூரு லட்சணபட்டி யிதினுட்பட்ட நஞ்சை புஞ்சை கிருமதேவஸ்தான வுபையம் பண்ணிவைத்து, பழனியில் மடமுங் கட்டிவைத்து, மடத்துக்கு ஒரு மானியமும் விட்டு, அறுபத்தாறு வருஷம் வரைக்கும் விசாரணை கற்த்தனாயிருந்து, அப்பாலிறந்து போனார்.

அதன்பின் அவரவற்படம் 29.

2. அவர் மகன் பொடித்தொப்ப னாய்க்கனுக்கு பட்டமாச்சுது. அவர் னாளையில் அயிவர் மலைச்சார்பில் கிளமெலாய் நடக்கின்ற ரஷ்சுகமார்க்கத்தில் உளாணி செய்துகொண்டு பட்டங்கட்டிவச்சுது. அத்தமார்கத்தில் வருகின்ற பேருக்கு நீர்மொர் அன்னோதங்கள் கொடுத்து வரும்படியாயி அதின் மெல் வாயுவுமூலையில் அய்யம்பாளையமென்று ஒரு கிறாம

முங்கட்டிவைத்து அயவாய் மலைமேலே பஞ்சபாண்டவர்களை பிரதிஷ்டைசெய்து பூசித்த வுச்சிப்பிள்ளையாரென்று ஒரு விக்கினேசுரர் சன்னிதியிருந்தது. அதற்கு தீவார்த்தனை நடந்துவரும்படியாய் அஞ்சுக்கயற்று காடுங்குளத்துக் காவ ளியில் அரைமாநிலமுஞ்சொல்லி வைத்து தானும் முப்பத்தி ரண்டு வருசம் விசாரணை கர்த்தனாயிருந்து யிறந்து போனார்.

அதின்பின் அவர் பட்டமும் 32.

3. அவர் மகன் அகொளத்தொப்பனாய்க்கறுக்கு பட்ட மாகி சம்பைக்கு...மென்று ஒருவுளாணிசெய்து அதற்கு யிரு வதாம் ... ஞ்சையில் அச்சுத்திருத்தி நீறொடி சாகுட்டியாகு பட்டிசெய்து, அவறதற்கு வடபுரம் வேலைச்சமுத்திரமென்று ஒருவூரும் கட்டி வைத்து, அதற்கு மெல்புரம் ஒரு பத்திரகாளி பிரதிஷ்டை பண்ணி அதற்கு அந்தக் கரை வழியில் அரமானி அந்த கோவிலுக்கு தியுக்குதிளையாதும்படியாய் செய்து வைத்து, தானும் முப்பத்தியெட்டு வருஷம் விசாரணை கற்த்த றாயிருந்து அப்பால் யிறந்து போனார்.

அதின்பின் அவர் மகன் அவர் பட்டம் வருஷம் 38.

4. அவர் மகன் வெலத்தொப்பனாய்க்கருக்கு பட்டமாகி அவர் நாளையில் ரெட்டையம்பாடிக்கு கீழ்ப்புரம் பாம்பனை பட்டி ஒரு வூரும்கட்டி யெங்களதில் தெய்வமாகிய அகோபளே சப்பெருமாளுக்கு வூருக்குத்தென்புரம் கொவிலுங்கட்டி வைத்து அதில் பெருமாள் பிரதிஷ்டை செய்துவித்து அந்த சன்னிதிக்கு தீவார்த்தனை நடந்து வரும்படியாய் அஞ்சுக் கயற்றுக்காடும் நஞ்சைபுஞ்சையிற் குளமும் செய்து வைத்து தானும் முப்பத்தினாலு வருஷம் வூரு விசாரணை கர்த்தனாய் யிருந்து யிறந்து போனார்.

அதின்பின் அவர் பட்டம் வருஷம் 34.

5. அவர் மகன் பொன்னபலத் தொப்பனாய்க்கருக்கு பட்ட மாச்சுது. அவர் னாளையில் பூருவமாகிய் குடியிருக்கின்ற வூருக்கு தென்பாரிசம் புதுரெட்டையம்பாடியென்று கரைவழி அனைத்

துரைக்கும் கிழக்கே ஒரு வூருகட்டிவைத்து அவடமெ கட்டமனை யாய் வாசம்பண்ணிக் கொண்டு, அங்காளம்மையென்று வூறோரம் ஒரு சன்னிதிவுண்டாக்கி, அந்த சான்னிதிக்கி தெய்வதாய் மகுழமகம் விளக்குவுண்டுபண்ணி பம்பைனாத மானியம் ஒரு மானிவம் ணடந்து வரச்செய்து, இருபத்தெட்டு வருஷமும் மிருந்து அப்பாலிரந்து போனார்.

அதின்பின் அவர் அவர் பட்டம் வருஷம் 28.

6. அவர் மகன் சின்னொபளத் தொப்பனாய்க்கருக்கு பட்ட மாச்சுது. அவர் னாளையில் தம்பட்டக்காடென்று ஒருமலை யுண்டு. அந்த மலையின் பேரில் ஒரு பெருமாள் சன்னிதி உண் டாகும்படியாய்த் தெரிசனங்கண்டு, அந்த படிக்கே அந்த மலை யின் பேரில் வெங்கிடெசுவரப் பெருமாளென்று பிரதிஷ்டை பண்ணி வைத்து, அதற்குப்பூசனை நடந்து வரும்படியாயி அரை மானிலம் விட்டு நஞ்சபுஞ்சையில்த் தெவதாய் குளமகமயில் னாவுண்டுபண்ணி, தானும் முப்பத்தினாலு வருஷம் விசாரணைக் கற்த்தனாயிருந்து யிறந்து பொனார்.

அதின்பின் அவர் பட்டம் வருஷம் 34.

7. அவர் மகன் பூசலத்தொப்பனாய்க்கருக்கு பட்ட மாச்சுது. அவர் னாளையில் வூருக்கு மெல்புரம் தென்வடலாய் வருகின்ற குதிரை ஆற்றின் மெல்புரம் பிறண்டைக்காற்றின் கீழ்புரத்தின் செடிசிரைவெட்டி வெளியாக்கி; அவடத்தில் பட்டி யென்று ஒருவூர்கட்டி வைத்து, தானும் இருவத்திதெழு வருஷம் விசாரனை கற்த்தினாயிருந்து இரந்து போனார்.

அதின் பின் அவர் பட்டம். 27.

8. அவர் மகன் சடலுப தொப்பநாய்க்கருக்கு பட்ட மாச்சுது. அவர் நாளையில் வூருக்கும் கிளக்கு சிறுநாய்க்கர் பட்டியென்று வூரு கட்டி, அதற்கு குடியெற்றி வைத்து அதற்கு தென்புரம் வேணுகோபர் சன்னதி என்று ஒரு கோவிலுண் டாக்கி, அதில் வெணுதாமர் பிரதிஷ்டை செய்து அந்தக்கோவி லுக்கு தினசரி திபூசை தீவாறாத்தினை நடந்து வெரும்படியாயி ரெண்டுமானிலம் பண்ணிவைத்து, தானும் இருவத்தொருவருஷம் மிருந்து அப்பால் இறந்து போனார்.

அதின்பின் அவர் பட்டம் வருஷம் 21.

9. அவர் மகன் நீலகிரிடத் தொப்பநாயக்கருக்கு பட்ட மாச்சுது. அவர் னாளையில் பிரண்டை காட்டுக்கு மெற்கெ சக்கிலிச்சிமலைக்கும் கிளக்கெ செட்டிபிருண்ணிய வெட்டி வெளிபண்ணி, அவடத்தில் ஆண்டிபட்டியென்று வூருகட்டி குடி ஏற்றிவைத்து தானும் இருவத்திமூனு வருஷமிருந்து இறந்து போனார்.

அதின்பின் (அவர் பட்ட வருஷம் 23.)

10. அவற் மகன் கட்டாரித்தொப்ப னாயக்கருக்கு பட்ட மாச்சுது. அவர் னானையில் பிறண்டை காட்டுக்கு மேற்கே சக்கி லிச்சி மலைக்கும் கிளக்கெ செடிப்பிருண்ணிய வெட்டி வெளி பண்ணிய அவ்விடத்தில் ஆண்டிப்பட்டியென்று வூருகட்டி, குடி ஏற்றிவைத்து தானும் இருவத்திமூன்று வருஷமிருந்து யிரந்து போனார்.

அதின் பின்னவர் அவர் பட்டம் வருஷம் 23.

11. அவர் மகன் கட்டாரிதொப்பனாயக்கருக்கு பட்ட மாச்சுது. அவர்னாளையில் முன்னுண்டாக்கிய தேவாலை யங்கள் மடவாலையங்கள் விளக்கம் பண்ணிக்கொண்டு தாமும் பத்தொன்பது வருஷமிருந்து இறந்து போனார்.

அதின்பின் அவர் மகன் அவர் பட்டம் வருஷம் 19.

12. அவர் மகன் குமாரதொப்ப னாய்க்கருக்கு பட்டமாச்சுது. அவரும் 20 வருஷம் விசாரணை கற்த்தனாயிருந்து இறந்து போனார்.

அதின்பின் அவர் பட்டம் வருஷம் 20.

13. அவர் மகன் அகொபளத்தொப்ப னாய்க்கருக்கு பட்ட மாச்சுது. அவரு முப்பத்தியொரு வருஷம் விசாரணை கற்த்தறா யிருந்து அப்பாலிறந்து போனார்.

அதின்பின் அவர் பட்டம் வருஷம் 31.

14. அவர் மகன் முக்கண்டகிரித்தொப்ப னாய்க்கருக்கு பட்டமாச்சிது. அவர் னாளையில் பழனிமலை அடிவாரத்தில் ஒரு மடங் கட்டி வைத்து, ஒருநந்தவானம் பொடிவைத்து, அந்த மடவாலையத்தில் வருகிற அன்னிய பரதேசிகளுக்கு நீறாகார அன்னோதகம் குடுத்து வரும்படியாய் ஒரு மானிலமும் அஞ்சு கயற்றுக்காடும் உண்டுபண்ணி வைத்து தானும், முப்பதுவருஷம் விசாரணை கற்த்றனாயிருந்து அப்பால் யிறந்து போனார்.

அவர் பட்டம் வருஷம் 30.

15. அவர் மகன் வேலத்தொப்ப நாய்க்கருக்கு பட்டமாச்சுது. அவர் னாளையில் மலையடிவாரத்தில் சுவாமியாற் ...வில் எழுந்தருளியிருந்தபடியால் பெரிய கல்மண்டபமுங் கட்டி வைத்து (அ)டித்தலத்தில் பஞ்சந்தாங்கியென்று காவளி அச்சுப்பொடிவைத்து, அதற்கு சிறுது தோப்புநந்தவானங்கள் ளுண்டுபண்ணி முக்கண்டப யிராமடமென்று ஒருமடமுங் கட்டி வைத்து; சரஸ்வதி மதுராம்பாள் அம்மனென்று கோயில் பிரதிஷ்டை செய்து அதற்கு தீவார்த்தினை நடந்துவரும்படி யாயிக் கட்டுக்குளகமுண்டாக்கிவைத்து தானும் பதினெட்டு வருஷம் விசாரணை கற்த்தனாயிருந்து அப்பாலிரந்து போனார்.

அதின் பின் அவர் பட்டம் வருஷம் 18

16. அவர் மகன் பொடித்தொப்பனாய்க்கருக்கு பட்டமாச்சிது. அவரும் பதினெட்டு வருஷம் இருந்து இரந்து போனார்.

அதின்பின் அவர் பட்ட வருஷம் 18.

17. அவர் மகன் வேலாயுத தொப்ப னாய்க்கருக்கு பட்டமாச்சிது. அவர் இருவத்திரெண்டு வருஷமிருந்து றாச்சியம் பாரம் பண்ணியிருந்து இரந்துபோனார்.

யென்பாட்டன் பிறகு என்தொகப்பன் பொடி தொப்ப னாய்க்கருக்கு பட்டமாகி அவரும் பதினெட்டு வருஷம் இருந்து யிறந்து போனார்.

அதின்பின் அவர் பட்டம் 18.

18. என் தமையன் முத்துக்காடி தொப்பனாய்க்கருக்கு பட்டமாகி ஏழு வருஷமிருந்து அப்பால் இரந்து போனார்.

அவர் யிரந்து போமுன்னுக்கு னான் தூரவாசமாயி யாத்திரை போயிருந்தேன். அந்த சமையத்தில் மகாறாசமானியஸ்ரீ ஆரீடிசு சாயபுதுரை அவர்கள் விசாரணை செய்து அவரவர் பாளையபட்டடு சமீன்தாரி நிஷ்சையிக்கிர முன்னுக்கு, என்னுடைய ரெட்டையம்பாடிக்கி சமீன்தாரிகளை ரெண்டுதுரையவர்கள் விசாரணை செய்யுர முன்னுக்கு, னானிருக்கிற சமாச்சாரம் துரையவர்களுக்கு தெரியப்படாமலும் துரைகள் விசாரணைசெய்குரது யெனக்குத்தெரியாமலும் னான்றாமேசுவர யாத்திரை போயிருக்கிர சமையத்தில், யென்பாளைப்பட்டான ரெட்டையம்பாடி சபுத்திலெசேர்ந்து சர்க்காரிலே மிட்டாவாகி முட்டா சமீன்தாரியாக ஆயக்குடி சமீன்தாருக்கு நிஷெயித்துப் போயிட்டார்கள். அந்த னாள் முதல் னான் பிரெத்தினம் பண்ணிக்கொள்ளுகிறதுக்கு சத்தியில்லாமலும், அசுபரியமில்லாமலும், யென் ரெட்டையம்பாடிக்கி சேர்ந்த குப்பம்பாளையத்தில் குடியிருப்புக்காரனாய் ரொம்பவும் நொந்து மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு னானும் என்னைச்சேர்ந்த ஆண்களு 3, பெண்களு 6, யென் வேலைக்காராள் 4, ஆகசெனம் 13 சீவனத்துக்கு மார்க்கங்களில்லாமல் மிகவும் இளப்பத்துடனெ மகாறாசஸ்ரீகும்பினியாரவர்கள் கிடாச்சத்துக்கு பாத்திரவானாகயிருக்கிரேன். இப்படிக்கி ரெட்டையம்பாடி சபுத்தி சமீன்தாரி றாமசுவாமி தொப்பனாய்யக்கற் வரலாறு. 1816 ௵ யேப்ரல் ௴ 30 ௳

**ராமஸாமி தொப்பய்யனாய்கன் கையொப்பிதம்.**

# வேணுஒடயாக் கவுண்டன் வம்சாவளி

**D. 3036**

தாறாபுரம் துக்குடி கசுபா தாறாபுரத்துக்குச் சேர்ந்த தெங்கரை நாட்டு பட்டக்காறன் யிறுவத்தினாலு நாட்டுக்கும் பெறிவீட்டுக்காரனான பட்டக்கார குமார ரற்றின வேணு ஒடயாக் கவுண்டன் வம்சாவளி கைபீது புக்கு.

தாறாபுரம் துக்குடி கசுபா தாறாபுரம் தாலுகாவுக்கு சேந்த தெங்கரை நாடு வேணஒடயாக் கவுண்டன் யெண்ணப் பட்ட பட்டக்காறுடைய வம்சாவளி முதலான கைபீது யென்ன வென்றால்:

பூற்வத்தில் குலோதுங்க சோளறாசா றாச்சிய பிரபுத்துவம் பண்ணிக் கொண்டு வறும் நாளையிலே, அக்காலத்தில் சோள றாசியத்திற் சேந்த காவேறிபூம்பட்டணம் வணிகேசற் பிறபலமாஇ சோளறாசவுக்கு அடங்காதே நடந்து கொண்டு பட்டம் வயிறமுடிப்பட்டம், சேனாதிப்பட்டம் யிவற்கள் பிறபல மாயிறுக்கும் நாளில், சங்குனாறாயண செட்டி மகன் சாதினிலைகுலைந்தான் யென்று அவனை குலை செயித படியனாலே, சங்குனாறாயண செட்டி குளோத்துங்க சோள றாசாயிடத்தில் வந்து பிள்ளை பளி தீத்து குடுக்கச் சொல்லி முறை செயிதபடியனாலே, அப்போது கலியுக சகாபுதம் வருஷம் 800 க்கு மேல்.

அப்போ மந்திறி தலைமையாகிய அர்த்தனாறி, வேணு ஒடயானுக்கு அறமனை பசுவும் குடுத்துக் காவேறிப் பூம்பட்டணம் திரை கொண்டு வறச்சொல்லி வுத்திரவு கொடுத்தபடியனாலே, அற்தனாறி வேணு ஒடயாக் கவுண் டன் தளமும் கூட்டிக்கொண்டு போஇ காவேறி பூம்பட்டண மும் வெட்டி திரை கொண்டு அயினூறு குலவணிகரையும் கைவசம் பண்ணிக்கொண்டு வந்து குலோத்துங்க சோளறாசா

யிடத்தில் வந்து அறிக்கை செய்யும்போது சோளராசாவும் மிகுதியும் சந்தோஷப்பட்டு, காவேறி பூம்பட்டணத்துக்கு செட்டி வேணு ஒடையான் யென்று பட்டாபிசேகமும் செயிது முடிசூட்டி, நாற்பத்தி யெண்ணாயிரம் கோத்திரத் துக்கு பெறிய கோத்திரம் தொண்டமண்டலம் யெளுவத்தி ஒன்பது வளநாடு, யிறுவத்தினாலு கோட்டத்துக்கும் பெறிய வீடு ரற்றிணகிரி, சிவாயம் யிந்த ரெண்டு காணி னிலைமை யாக தந்து புஷ்ப்பக விமானத்தின் பேறில் பட்டண பிற வேசம் செயிது விறுது சிங்ககொடி, யன்னக்கொடி, றிசபக் கொடி, குயிலுக்கொடி, பஞ்சவற்ன்னடால், வெள்ளைக் கொடை, வுபயவிண்சாமரம், வெட்டுப்பாவாடை, திமுறுதப்பு, வீரகண்டாமணி, வீரவெண்டயம் இது முதலான விறுது களும் குடுத்து, னாற்பத்தி யெண்ணாயிறம் குடியும் வற வளைத்து கட்டின யேறுக்கு ஒரு பணம் வறி குடுக்கும்படி வுத்திரவு செயிது அயினூறு குல வணிகறும் தலைக்கட்டு வறி சூறியகுல பணம் வீடு 1க்கு ஆறு பணம் மேரைக்கு குடுத்து வறச்சொல்லி வுத்திரவு செயிதாற்கள்.

அதே மேரைக்கு பட்டம் கட்டிகொண்டு செட்டி வேணு ஒடையான் யென்று பேற்பிறசுத்திப்பட்டவறாயி காணியும் அனுபவிச்சு கொண்டு தலைகட்டு வறியும் வாங்கி கொண்டு பட்டமும் அனுபவிச்சு கொண்டு வந்தார்கள்.

அதின் பிற்க்காலம், கலியுக சகாதம் 1100க்கு மேல் றிஷபகிறி சோளன் மகளை சேறுமான் பெறுமாள் பாணிகிறஹணம் பண்ணிக் கொண்டபடியனாலே, சோளறாசாவின் மகள் தனக்கு சீதனம் தன் தோப்பனாரை கேட்டது யென்னவென்றால், யெனக்கு சிறுது வேளாளற்குடி வேணுமென்று கேள்க்க னாற்பத்தியெண்ணாயிறம் குடியில் யெண்ணாயிறம் குடி சீதனம் குடுத்தபடியனாலே . சேறுமான் பெறுமாள் கொங்கு மண்டலத் துக்கு கொங்குவேளாளரென்று பேறும் குடுத்து, பிடாரன் வேண ஒடயானுக்கு பட்டாபிஷேகமும் சூட்டி, யெண்ணாயிரம் கோத்தி ரத்துக்கு பெரிய கோத்திரம், யெண்ணாயிரம் வீட்டுக்கும் பெறிய வீடுயென்று கொங்கு மண்டலத்துக்கு அழைத்து வந்த தின் பேரில், இந்த யெண்ணாயிரம் குடியும் கொங்கு மண்டலம் இறுளுரைந்த காண்டாவனமெல்லாம் வெட்டி இறுவத்தி

னாலு கோட்டத்துக்கு யிறுவத்திநாலு நாடு இதுக்கு வுப கிறாமமும் வுண்டுபண்ணி யெண்ணாயிரம் குலம் வேளாள ருக்கும் அயினூறு குல வணிகறுக்கும் காணி னிலைமை உண்டு பண்ணி குடுத்து யிருக்கும் நாளில் இந்த கொங்கு மண்டலம் பாற்க்கவேண்டிய னிமித்தியம் சேறன், சோளன், பாண்டியன் மூன்று றாசாக்களும் தென்கரை நாட்டில் நாடு காண் மேடைக்கு வறுகும்போது யிந்த யிறுவத்தினாலு னாட்டுக்குள் வுள்ள யெண்ணாயிரம் குல வேளாளறும் ஆயினூறு குல வணிகறும் சந்திப்பு செயும் வேளையில் திட்டிக்கிடாயி நேற்படாதபடியனாலே,

பூந்துரையில் பட்டம் ஆண்ட புடாரன் வேணு ஒடயான் பேறன் வேணு ஒடயான் தன் புள்ளையை வெட்டி பின்பு கிடாயும் வெட்டி திட்டி சுத்தினபடியனாலே, மூன்று றாசாக் களும் பிள்ளைய்யை வெட்டினான் யென்று மிகவும் சந்தோஷப் பட்டு, ஆருகால் பீடத்தில் வைத்து பட்டாபிஷேகமும் செயிது இறுவத்தினாலு நாட்டுக்கும் பெறிய னாடு யெண்ணாயிறம் குலவேளாளறுக்கும் பெறிய குலம் புள்ளை வேணு ஒடயான் யென்று பேறும் குடுத்து, பட்டாபிஷேகமும் பண்ணி புஷ்பக விமானமும் மேல் பட்டண பிறவேசம் பண்ணி பொன்வூஞ்சலும் தந்து தென்ங்கரை நாடு யெல்லை, தலையனாட்டுக்கு மேற்க்கு, நறயனூற் நாட்டுக்கு வடக்கு, புங்கலூற் நாட்டுக்கு கிளக்கு, காங்கய நாட்டுக்கு தெற்கு, இந்த நால் சதிறத்தில் கிளமேல் முக்காதம், தென்வடல் இறு காதம், யிதுக்குள்ப்பட்ட கிராமமும், 12ல் கொற்றனூறுக்கு சேந்த சங்கறண்டான் பாளையம் கிறாம அஞ்சா நல்லூற் கிராமமும் இந்த ரெண்டு கிறாமமும், கிளமேல் ஆறுனாளிகை வளி, தென்வடல் னாலு நாளிகை வளிக்குள்பட்ட ரெண்டு கிறாமமும், நறயனூற் நாட்டுக்கு சேந்த சோளமா தேவி கிறாமமும் இந்த மூணு கிராமமும்-உம்பிளிகையாக் குடுத்து தென்ங்கரை நாட்டு மகமையும் தயவு செயிது, தென்ங் கரை நாட்டுக்கு சேர்ந்த மத்த கிராமமும் அறமனைக்கு னிகுதிக்கு வுண்டான பகுதியும் குடுத்து கொண்டு தெங்கரை நாட்டு பட்டக் காறரெண்டு பேறும் குடுத்தாற்கள்.

அந்த நாள் முதல் தென்கரைநாடு பட்டக்காற்ரெண்டு பேற் பிறசுத்திப்பட்டவர்களாஇ, சங்கரண்டான் பாளையம்

கிறாமம், - 1ம் அஞ்சா நல்லூற் கிறாமமும்-1, நறயனூற் நாட்டில் சோளமாதேவி கிறாமமும்-1, இந்த மூணு கிறாமமும் தெங்கரை நாட்டு மகமையும், எதாச்சாறியாகஇ அனுபவிச்சுக்கொண்டு - தென்கரை நாட்டுக்கு சேந்த மத்த கிறாமங்களுக்கு அறமனையாற்கட்கு பண்ணின ஙிகுதிபடிக்கு, மிகுதியும் குடுத்து கொண்டு சகல பிறுதுகள் ஆயுதங்களுடனே, தெங்கரை நாட்டு பட்டக்காற வேணு ஒடயாக் கவுண்டற் யென்று பேற் பிறசுத்தி பட்டவராயி, ஷெ மானியமும் மயிசூறு சமுஸ்தானம் கிறஷ்ணறாச ஒடயாற் அதிகாரத்து வரைக்கு அனுப்பிவிச்சு வந்தாற்கள்.

அதின் பிற்க்காலம், அதுக்கு மயிசூறு சமுஸ்தானத்துக்கு கற்த்தறாகிய கற்த்தாக்கள் நாளையில் ஷெ வும்பள கிறாமமும், மூணும் சபுத்தி பண்ணி யெங்களுக்கு குத்தகை நிகுதி செயிவிச்சு குடுத்து, யெங்கள் பெறியோற்களுக்கு மானியம் தெங்கரை நாடு சங்கறண்டான் பாளையத்தில் புஞ்சை வம் 50 - குறுச்சி கிறாமத்தில் வம் 50 ஆக யிந்த ரெண்டு கிறாமத்திலும் ஹுறு வள்ளக்காடும் ஷெ நாட்டு மகமையும் வும்பிளிக்கையாக தயவு செயிது மத்த கிராமத்தில் ஙிகுதி செய்விச்சு குடுத்தாற்கள். அந்தநாள் முதல் யெங்கள் வம்ச பறம்பரையாஇ ஷெ மானியம் ஹுறு வள்ளக்காடும் மானியமாஇ அனுபவிவிச்சு கொண்டு மகமையும் அனுபவிச்சுக் கொண்டு கிறாமங்களுக்கு அந்தந்த காரியத்துக்கு அந்தந்ததுரைகள் கட்டு பண்ணின மேரைக்கு நிகிதியும் செலுத்தி விச்சு, தென்ங்கரை நாட்டு பட்டக்காரர் வேணு ஒடயாக் கவுண்டன் யென்று பேற் பிறசுத்திப் பட்டவற்களாஇ சகல பிறுதுகளுடனேயும் துரைகள் வுத்திரவுபடிக்கும் நடந்து கொண்டு ஷெ மானியமும் அனுபவிட்ச்சுக் கொண்டுமஹாராசஸ்ரீ கும்பிணியாறுக்கு சீற்மை சேந்ததின் பிறகு மஹாறாச றாச ஆறடீசு சாயபு அவற்கள் துறத்தனத்து வரைக்கும் மானியமும் மகமையும் அனுபவிச்சு கொண்டு வந்தாற்கள்.

கொங்கு தேசத்தில் இறுவத்தினாலு நாட்டுக்கு பேற்களாண்ட விபறம்.

1. தென்ங்கரை நாடு
2. பூந்துரை நாடு

3. ஆர நாடு
4. தலைய நாடு
5. காங்கய னாடு
6. வெங்கல நாடு
7. தட்டய னாடு
8. அண்டனாடு
9. வய்யாபுறி நாடு
10. வாரக்க நாடு
11. ஆனைமலை னாடு
12. சோறக்கா வடிக்க னாடு
13. நல்லுறுக்க னாடு
14. பொங்கலூற் நாடு
15. நறயனூற் னாடு
16. வடகரை நாடு
17. உடுவங்க னாடு
18. காஞ்சி கோவில் னாடு
19. குறுப்ப னாடு
20. பூவாணி நாடு
21. றாசிபுர னாடு
22. அரைய னாடு
23. மண னாடு
24. வாளவந்தி னாடு

யிந்த யிறுவத்தி னாலு நாட்டிலேயும் முன்னூத்தி யெண்பது சிவாலாயமும் கொங்கேளு தேவற் சபைக்கு விபறமும்...

1. கரூறு - பசுபதீஸ்வற சுவாமி
2. வெஞ்சமா கூடல்—விகுறுதீஸ்வர சுவாமி
3. கொடுமுடி—மகுடீஸ்வற சுவாமி
4. அவனாசி —அவனாசி லிங்கற்
5. பவானீகூடல்—ஊன்னா ஒடயாற் சுவாமி
6. பேறுரு—பட்டீஸ்வற சுவாமி
7. திறுமுறுகன்பூண்டி—முறுகனாத சுவாமி.

ஷெ கொங்கு தேசத்துக்கு யெல்லை விபறம்.

மறம் கௌக்கைலை—மதுக்கரைக்கு மேற்க்கு, வராஹ கிறிக்கு வடக்கு, வெள்ளி மலைக்கு கிளக்கு, பால மலைக்கு தெறுக்கு இந்த சதிறத்தில் கொங்குனாடு 24.

கொங்கு யிறுவத்தி நாலு நாட்டுக்கும் பெறிய வீட்டுக் காறனான தெங்கறனாட்டு பட்டக்காரனான வமிசாவளிப் பட்டங்களுடைய விபறமும் யிதின் கீள்யெளுதி வறுகுரது.

1. செட்டி வேணு ஓடயான் பட்டம் ஆண்ட
2. யிவற் குமாரன் பெறிய வேணு ஓடயான்.
3. யிவற் குமாரன் அற்த்தனாறி வேணு ஓடயான்.
4. செல்ல வேணு ஓடயான்.
5. தீற்த்தான் வேணு ஓடயான்.
6. ரற்றின வேணு ஓடயான்.
7. அவினாசி வேணு ஓடயான்.
8. பெறியண வேணு ஓடயான்.
9. அற்த்தனாறி தீத்தான் வேணு ஓடயான்.
10. பெறிய னாயக வேணு ஓடயான்.
11. பிடாரன் வேணு ஓடயான்.
12. புள்ளை வேணு ஓடயான்.
13. காங்கயன் வேணு ஓடயான்.
14. செட்டி வேணு ஓடயான்.
15. தீத்தான் வேணு ஓடயான்.
16. செல்ல வேணு ஓடயான்.
17. பிடாரன் வேணு ஓடயான்.
18. கொர்க்கோட்டி வேணு ஓடயான்.
19. செட்டி வேணு ஓடயான்.
20. வேணு ஓடயான்.
21. பெரியண வேணு ஓடயான்.
22. செட்டி வேணு ஓடயான்.
23. குமார வேணு ஓடயான்.
24. குமார ரற்றின வேணு ஓடயான்,

25. முத்து ரற்றின வேணு ஒடயான்.
26. குமார ரற்றின வேணு ஒடயான்.
27. முத்து ரற்றின வேணு ஒடயான்.

---

27

---

போகுகாலமான படியனாலே பட்டம்ங்களுடைய வரிசை களுக்கு ஒளுகு முதலான ஆதறவுகள் கலாந்திரங்களிலே றாசீகங்களிலே கை சோற்ந்து போயிவிட்ட படியனாலே பெறியவாள் சொல்லப்பட்ட கேள்வினாலேயும் பெறியவாள் பேறில் சொல்லப்பட்ட வித்துவாம்சாள் கிறந்தங்கள்னாலேயும் தெறியப்படுத்த லாச்சுது.

யிறவத்தியேளான் பட்டக்காரனான முத்து றற்றின வேணு ஒடயான் குமாரன் யெனக்கு சாலீ வாகன சகாபுதம் 1718க்கு பட்டமாஇ குமார ரற்றின வேணு ஒடயான் யெண்ணப் பட்ட பேற் வெளங்க பண்ணின படியனாலே, குமார ரற்றின வேணு ஒடயான் யென்று பேர் வுள்ளவனாயி, மிகவும் யேளை யாகி கொத்தனூறுக்கு சேந்த செங்கறண்டான் பாளையம் குடியிறுப்புக்காரனாஇ மகாராசறாச-ஸ்ரீ கும்பிணி துரைக ளுடைய தயவுக்கு பாத்திரனாயி ஆசறுலே காத்து யிறுக்குறேன்.

1808 வருஷம் சனவரி மீ 28வ

**குமார ரற்றின வேணு வுடையான் ருசுவு.**

# நிமிந்தபட்டி நீலியப்பக் கவுண்டன் வமிசாவளி

## D : 3074

தாறாபுரம் துக்குடி அறவக்குறுச்சி தாலுகாவுக்கு சேற்ந்த னிமிந்தபட்டி கிறாமத்துலே யிறுக்கும் பட்டக்காரர் னீலியப்ப கவுண்டன் எண்ணப்பட்ட பூற்வத்து பாளையகாறன் கைபீது.

தாறாபுரம் துக்குடி அறவகுறுச்சி தாலுகாவுக்கு சேற்ந்த நிமிந்தபட்டியிலே யிருக்கும் னீலியப்ப கவுண்டன் யென்னப் பட்ட வெங்கல் நாடுனுடைய பட்டக்காரனுடைய வம்சாவளி முதலான கையிபீது யென்னவென்றால்:

பூற்வத்தில் காளஅஸ்த்தி பிறதேசத்துலே முத்துராச சாதி யென்று பேற் பிறசுத்தி பட்டவற்களாயி அந்த ராச்சியத்தில் பாளைப்பட்டுக்காற்களாஇ யிறுக்கும் நாளையில், அக்காலத்தில் கொங்கனுட றாச்சியந்துக்கு பாண்டிய றாசா துறைதனமாயிருக் கும் போது, செட்டி சிவ பிறாமணன் குடித்தனக்கார றாயி இறுக் கும் நாளையில், ஒட்டிய ராசா வென்ங்குறவன் ஷெடி செட்டி சிவ பிறாமணாளை கஷ்டபடுத்தி கொண்டுயிறுந்தத்திநாலே அந்த செட்டி சிவபிறாமணாள் திருகாளஅஷ்தி பிறதேசத்துக்கு வந்து முத்துறாசாக்களுக்கு காறிய கர்த்தறாகிய சக்குறபாணி றாசா யென்ங்குறவற் யிடத்துக்கு வந்து காத்து யிறுந்து ஒட்டிய றாசா தங்களுக்கு மிகவும் உபத்திரபடுத்தினபடியனாலே...பிறாத்தி... தங்களுடைய ஆசறுவில் வந்துயிறுக்குராமென்றும் ஒட்டிய றாசா உபத்திரம் னிவாரணம் பண்ணிவிக்க வேணுமென்றும் சொல்லித் கொண்டாற்கள். அப்போ செட்டி சிவ பிராமணாளெ பாத்து ஒங்கள் தேசத்தில் றாச்சிய பிறபுத்துவ கற்த்தறாகிய கூன் பாண்டிய ராசா அவற்கள் னிறுபம் வந்ததானால் யெங்க ளுடளிலே சிபாயியாயி யிறுக்கப்பட்டவாளை அனுப்பிவிச்சு ஒட்டிய றாசாவை அடிச்சு துரைத்தி விடுகுரோமென்று சொன்னார்கள்,

செட்டி சிவபிறாமணாள் பிறப்பட்டு கூன் பாண்டிய றாசா அவற்கள் சமட்சமத்துக்கு வந்து காளஅஸ்தி பிறதேசத்துலே யிறுக்கப்பட்ட முத்து ராசாக்களுக்கு தாங்கள் வீறுபம் குடுத்தால் அவாளைக் கொண்டு ஒட்டிய ராசாவை செயிச்சு நாங்கள் குடினிலை பண்ணி கொண்டு யிறுக்குரோமென்று சொல்லிக் கொண்டாற்கள். அப்படியே ஒட்டிய றாசாவை செயிச்ச பெற்களுக்கு ஆதீனம் வுண்டு பண்ணி கொடுத்து சகல பொகுமதிகளும் பண்ணுகுரோமென்று உத்திரவு பண்ணிநாற்கள்.

செட்டி சிவபிறாமண்ணாள் மறுபடியும் காளஅஸ்தி பிறித்தியத்துக்குப் போஇ அவடத்தில்ச் செக்கிறபாணி றாசா யிடத்தில் பாண்டிய றாசா உத்திரவு செயித சேதிகளை அறிக்கை பண்ணினாற்கள். அப்பொச் சக்கிறபாணி றாசா அவற்கள் முத்து றாசாக்கள் கூட்டத்துலே நல்ல சிபாயியா யிறுக்கப் பட்டவனை சிறிது தளமும் கூட்டி அனுப்பிக்கச் சொல்லி உத்திறவு செய்தாற்கள்.

அந்த சமயத்தில் — கோத்திரத்தில் வீலியப்பனெண்ணப் பட்டவனுக்கு, சிறிது பலமுங் கூட்டி ஒட்டிய றாசாவை செய்யம்பண்ணிவறச் சொல்லி உத்தரவு செய்தாற்கள்.

காளஅஷ்தி பிறதேசம் ஆளப்பட்டச் செக்கிறபாணிறாசா அவற்கள் யிடத்தில் உத்திரவு வாங்கிக் கொண்டு, யெளுவது தண்டிகைக் காரறும் சிறுது பலத்தொடனே கூடாதிறுபதி, திறுணாமலை மாற்க்கமாஇ பிறப்பட்டு வந்து யெறங்கி யிறுக்கும் வேளையில் காவேரி ஆரு வரைக்கும் ஒட்டிய றாசா உபத்திரமென்றுக் கேள்விப்பட்டு, காவேறியாறும் தாண்டி வந்து ஒட்டிய ராசா ஒடனே சண்டைபண்ணி, ஒட்டிய றாசா சனங்களை பொகுபேறை வெட்டின படியனாலே அந்த ஒட்டியா றாசா திண்டுக்கல்லுக்குச் சேந்த அமட்டறை வரைக்கும் தொரத்திக் கொண்டு போனார்கள். ஒட்டிய றாசா தன் சீவனை தப்பவிச்சு கொண்டு ஓடிபோயி விட்டான். ஒட்டிய றாசாவை செயம் பண்ணிக் கொண்டவனாயி பாண்டிய தேசாதிபதியான கூன் பாண்டிய றாசா அவற்கள் சமட்சமத்துக்கு போஇ ஒட்டிய றாசாவை செயம் பண்ணின சேதிய்யை அறிக்கை பண்ணிக் கொண்டார்கள்.

அப்போ பாண்டிய றாசா மிகவும் சந்தோஷப்பட்டு பல்லாக்கு, உபய சாமரம், சூரிபான், கொடை, நகாறு, நலபத்து, பூரிசை, தித்தி பில்லாகொவி, சங்கீத வாத்தியம், யிது முதலான வாத்தியங்களும், கல்கிதுராஇ, ஸ்ரீபொசு முதலான பிறுதுகளும் குடுத்து, வெங்கல நாடு, அம்பறாவதி வடகரைக்கி வடக்கு, காவேறியாத்துக்கு தெற்கு, மணநாட்டு யெல்லைக்கு கிளக்கு, கரூறுக்கு மெற்க்கு, அறய நாட்டுக்கு மேற்க்கு,யிந்த நாங் கெல்லைக்கு உள்ப்பட்ட வெங்கல நாட்டுக்கு ஆதீனமும் குடுத்து, பட்டமும் கட்டி வெங்கல நாட்டுப் பட்டக்காரர் னீலியப்பக் கவுண்டற் யெண்ணப்பட்ட பேறும் குடுத்து, புள்ளை புள்ளை வம்சபறம்பறையாஇ யிந்த நாட்டுக்குப் பட்டம் ஆண்டுக் கொண்டு வாவென்று கட்டளையிட்டாற்கள்.

அந்த நாளில் பாண்டிய றாசா அவற்கள் தயவுனாலே வெங்கல நாட்டு பட்டக்கார னீலியப்பக் கவுண்டற் யென்ன பேற் பெறசுத்திப்பட்டவராயி வெங்கல நாட்டுக்கு வந்து நிமிந்தபட்டி கிராமத்தில் குடியிறுப்புக் காரறாயி இறுந்துக் கொண்டு, நாடு முளுமையும் சுத்த சாரியாஇ அனுபவிச்சுக் கொண்டு, அறமனையிலே கட்டு பண்ணின ஊளியத்தில் ஆசீராயி இறுந்து கொண்டு பட்டமாண்ட வருஷம் 32.

கொங்கு தேசத்தில் வெங்கல நாட்டு பட்டக்காரர் னீலியப்பக் கவுண்டற் யெண்ணப்பட்ட பேற் பிறசுத்திப் பட்டவறாயி வம்ச பறம்பறையிலே யிந்த ஆதீனத்துக்கு கற்த்தறான புள்ளைகளுக்கு னீலியப்ப கவுண்டன் யெண்ணப் பட்ட பேறை வெளங்கப் பண்ணிக் கொண்டு பட்டம் ஆண்டுக் கொண்டு வறுகிறது.

சாலீவாகன சகாபுதம் 1301 முதல் நாளது வரைக்கும் பட்டம் ஆண்டு வந்தவர்கள் தலைமுறை 20க்கு அவாளவாள் ளுடய நடத்தைகள் முதலானதுகளும் பட்டமாண்ட வருஷங் களும் இதின் கீள் யெளுதி வறுகுரது.

| | | |
|---|---|---|
| 1. | னீலியப்பக் கவுண்டற் பட்டம் ஆண்ட வருஷம் | 67 |
| 2. | யிவற் குமாரன் பட்டம் ஆண்ட வருஷம் | 40 |
| 3. | யிவற் குமாரன் பட்டம் ஆண்ட வருஷம் | 6 |
| 4. | யிவற் குமாரன் பட்டம் ஆண்ட வருஷம் | 12 |
| 5. | யிவற் குமாரன் பட்டம் ஆண்ட வருஷம் | 8 |
| 6. | யிவற் குமாரன் பட்டம் ஆண்ட வருஷம் | 19 |
| 7. | யிவற் குமாரன் பட்டம் ஆண்ட வருஷம் | 24 |
| 8. | யிவற் குமாரன் பட்டம் ஆண்ட வருஷம் | 11 |
| 9. | யிவற் குமாரன் பட்டம் ஆண்ட வருஷம் | 9 |
| 10. | யிவற் குமாரன் பட்டம் ஆண்ட வருஷம் | 16 |
| 11. | யிவற் குமாரன் பட்டம் ஆண்ட வருஷம் | 30 |
| 12. | யிவற் குமாரன் பட்டம் ஆண்ட வருஷம் | 7 |
| 13. | யிவற் குமாரன் பட்டம் ஆண்ட வருஷம் | 21 |
| 14. | யிவற் குமாரன் பட்டம் ஆண்ட வருஷம் | 14 |
| 15. | யிவற் குமாரன் பட்டம் ஆண்ட வருஷம் | 23 |
| 16. | யிவற் குமாரன் பட்டம் ஆண்ட வருஷம் | 17 |
| 17. | யிவற் குமாரன் பட்டம் ஆண்ட வருஷம் | 26 |
| 18. | யிவற் குமாரன் பட்டம் ஆண்ட வருஷம் | 15 |
| 19. | யிவற் குமாரன் பட்டம் ஆண்ட வருஷம் | 41 |
| 20. | யிவற் குமாரன் பட்டம் ஆண்ட வருஷம் | 25 |
| 20 | | 411 |

வெங்கல நாட்டு பட்டக்காரர் ஆதீனம் உண்டான நாள் முதல் வம்சபறம்பறையிலே நீலியப்பக் கவுண்டற் யெண்ணப் பட்ட பேற் வுண்டானவற்களாயி பட்டம் ஆண்டு கொண்டு வந்தவற்களில் பூற்வத்து முதல் தலைமுறைகள் தெரியவில்லை. சாலிவாகன சகாபுதம் - 1301 முதல் 1712 சாதாறுண வறுஷம் வரைக்கும் பட்டம் ஆண்டு வந்த தலைமுறை யிறுவதுக்கு வருஷம் 411 ஆச்சுது.

சகாபுத்தம் 1301-க்கு மேல் பட்டம் ஆண்ட முதல் தலை முறை நீலியப்பக் கவுண்டற் நாளையில், அவாளுடைய தயவு சம்பாதிச்சுக் கொண்டு வெங்கல நாட்டு கிறாமங்கள் சாறியாஇ

அனுபவிச்சு கொண்டு, சறுகாறுலே கட்டு பண்ணினபடிக்கு பணம் செலுத்திவிச்சுக் கொண்டு பாண்டிய றாசா நாளையில், வுண்டான பிறுதுகள் வாத்தியங்கள் முதலானத்துடனே பொகு சூரனாயி யிறுக்கும் காலத்தில், அக்காலத்து சில்லரைகள் பண்ணின கள்ளற் முதலான வேற்களை யெல்லாம் (க)ட்டி குத்தினபோது ஒறு தம்புறானானவனை வெட்டிநாற்கள். அப்போது தம்புறாணென்று அறிஞ்சு தலையெயை கண்டு மகத்தாஇய தோஷம்வந்துது யென்று அனேக திறிவியங்களை தானம்பண்ணி, முடிகண்ட தம்புறான் தலை வெட்டினயிடத்தில் முடிகொண்ட சோளபுரம் யென்று வூற் கட்டி வைச்சு, முடிகொண்ட சோள புரம் யென்று வூறு பேற்விளங்க பண்ணிநாற்கள்.

அதின் பிற்காலம் னிமிந்தபட்டி னீலியப்பக் கவுண்டற் யென்று பேற்ப்பட்ட வம்ச பறம்பறை பட்டகாரற்களும் பொகு சூறற்களாயி யிறுந்துகொண்டு தம்முடய பெரியவாள் சம்பாதிச்ச ஆதீனத்தை பறிபாலனம் பண்ணிக்கொண்டு அந்தந்த காலத்தில் ராசியம் பிறபுத்துவம் பண்ணப் பட்டவற்களுடைய தயவு பாத்திரர்களாய் நடந்துக்கொண்டு யிருந்தாற்கள்.

அதின் பிற்க்காலம் பதினாலாம் தலைமுறை னீலியப்பக் கவுண்டற் நாளையில், அக்காலத்தில் றாஞ்சியாதிபதியான மயிசூரு கற்த்தாக்கள் நாளையில், அக்காலத்தில் சாமய னாயக்கன் பாளையகாரன் சிறுது சில்லறை உபத்திரவம் பண்ணின படியநாலே, அப்போ சாமெநாயக்கனுடனே சண்டைபண்ணி அவனை அடக்கினபடியனாலே, மயிசூறு கற்த்தாக்கள் பொகுமதிகளும் பண்ணி ஆண்டா கோவில் பள்ள பாளையத்தில் செய்யி 6, தளவாயி பாளையத்தில் செய்யி 6, வாங்கல்லுலே செய்யி 6, னெறுவூருலே செய்யி 8, கள்ள குறுச்சி நஞ்சை சுத்தசாறியாஇ......சேந்த மாவிடை மறுவிடை முதலானதுகளும். ..............பாதிகாவல் உண்டுபண்ணி குடுத்தாற்கள். அந்த நாள் முதல் வெங்கல நாட்டில் முன் பெறியவாள் உண்டுபண்ணிகொண்ட பட்டக்காரர் ஆதீனமும் பாதிகாவல் முதலானதுகளும் ஆண்டு அனுபவிச்சுக் கொண்டு வந்தாற்கள்.

அதின் பிற்க்காலம் 20 தலைமுறை பட்டக்காரறான தோப்பனாற் நாளையில் அக்காலத்தில் நபாபு மவுதல்லி கான் துறையவற்கள் நாளையில், அப்போ வெங்கல நாடு வடகரை ஆம்பிறாவதிக்கு வடக்கு, காவேறி ஆத்துக்கு தெற்கு, மணனாட்டு யெல்லைக்கு கிளக்கு. இந்த நான்கெல் லைக்கு வுள்பட்ட கிராமங்களுக்கு யிறாசார் நெமுகம் செயிது வருஷம் 1க்கு ரூபாயி 60000. யிது அறமனைக்கு செலுத்திக்கொண்டு வந்தாற்கள்.

நாளது ஆசறுலேயிறுக்கப்பட்ட னீலியப்பக் கவுண்டன் யென்னப்பட்ட பேற் உண்டானவனுக்கு சாலிவாகன சகா புதம் 1698 யேற்விளம்பி வருஷம், ஆனி மாதம், 4 தேதி புதன் கிளமை, யிந்த சுப்தினத்தில் அக்காலத்தில் றாச்சியம் பிறபுத்துவம் பண்ணப்பட்ட நவாபு அயிதரல்லிகான் நாளை யில், தாலூகா அதிகாரம் பண்ணப்பட்டவனுடைய உத் திரவுபடிக்கு நாடனவறும் கூடி பட்டம் கட்டிநாற்கள். அந்த நாள் முதல் வெங்கல நாட்டிலே குடித்தனம் பண்ணப்பட்ட நிலங்களுக்கு கால் தீறுவை சறுக்காறுக்கு குடுத்துக் கொண்டு வறும்படியாஇ நெமுகம் பண்ணிநாற்கள்.

மகாறாச றாசஸ்ரீ கும்பினியாறுடைய தயவுக்கு பாத் திரனாயி நிமிந்தபட்டி கிராமத்திலே குடியிறுப்புக்காரனாயி மிகவும் வணக்கத்துடனே காத்துக்கொண்டுயிருக்கிறேன்.

**நீலியப்பன் கவுண்டன ஒப்புதம்**

# மாம்பறை பாளையப்பட்டுப் பாளையகாரர் வமிசாவளி

D. *3004*

*1816-ம் வருஷம் மே மாதம் தறியா பத்து நிட்டல னாயன்னயற் மாம்பறை பாளையபட்டு வம்மிசாவளி பூற்வீகம் சகறந்தம்மையனாயக்கரவர்கள் றாயற்சமஷ்த்தானத்தில் கொட்டியம் னாகமனாயக்கர் றாயற் சமஸ்த்தானத்தில் யிருக்குர நாளையில், சகரந்தம்மைய னாயக்கரவர்களண்டையிலே சேவுகம் யிருந்தார்கள். சிறிது னாள் சேவுகமிருந்து அவர்களுக்கு பிள்ளை இல்லையென்று கெங்காசலத்துக்கு போரபோது சகரந்தம்மைய னாயக்கரை வரவளைத்து நாம் கங்கா ஷ்தானத்துக்குப் போரோம்; நீ சாஞ்சாமாமுஷ்தீப்பு பின்னாலே நீ காவல்க் கட்டு சாக்குருதியாயிருக்கறப்படிக்கு கட்டளை யிட்டார்கள். அந்தப் படிக்கு நாங்களும் கூடவே போயி சாக்குருதியாயி காத்திருந்து காசியிலே அவர்கள் பிள்ளை இல்லை யென்று தவசு செய்து கொண்டிருக்குர நாளையிலே, வெகு விசுவாசமாக காத்துக் கொண்டிருந்ததில் கிட்ட ஒரு றாத்திரியில் விசுவநாத சுவாமி வந்து சொப்பனத்தில் வந்து நீங்கள் விசாரப்பட வேண்டாம். புத்திர சந்தானம் உண்டாகுமென்றுக் கட்டளை கண்டார்கள். அப்போது கிட்ட சகரந்தம்மையனாயக்கரை அளைத்து புத்திர சம்பத்துண்டாமென்று சுவாமி கட்டளை இட்டார்கள் யென்று வெகு சந்தோஷமாக யிருக்குர வேளையில், சகறந்தம்மையனாயக்கர் சொல்லிக் கொண்டது; புத்திர சம்பத்துண்டானால் அவர்க சமுகத்துலே நானே காத்திருக்கும்படியாக வேடிக்கையாயி சொல்லிக் கொண்டார்கள். நம்மை பரிவாசகமாயி சொல்லிக் கொள்ளுகுறாயா யென்று ரொம்பவும் வேதனைபட்டு கொண்டார்கள். சுவாமி அபோ பெரக்கப் போகுது, நாங்கள் தானே காத்துக் கொண்டிருக்கப் போறோம் யென்று சொன்னார்கள். உடனே ஸ்தானம் பண்ணுகுரபோது விசுவனாத*

சுவாமி மரகதலிங்கமாக் கிடைச்சது. அதை பஸாரிலே வைய்த்துக் கொண்டு றாச்சியத்துக்கு வருகுரபோது சுவாமி பல்லக்கு அண்டையில் யெங்களை காவலாக வைத்தாற்கள். அந்த படிக்கி காவலாக வச்சுக் கொண்டு அவர்கள் கூட விசெயநகரம் வந்து சேற்ந்தார்கள். பின்னை ஒரு வருஷத்துக்கு பிற்ப்பாடு குளந்தை பிரந்துது. விசுவனாத னாயக்கர் யென்று பேரு வைச்சார்கள். அப்போது மறுபடியும் சகறந்தம்மைய னாயக்கர் சொல்லிக் கொண்டது; சுவாமி னாங்கள் புத்திர சம்பத்துவுண்டா குரதாக்குமுடனே தானே யெங்களுக்கு சமூகத்துலே காவல் குடுக்கவேணும் யென்று சொல்லிக் கொண்டோம். அதுவல்லாமல் சுவாமியை பல்லாக்குலே வைத்துக் கொண்டு வருகுற போது நாங்களே காவலாக வந்தோம். யெங்கள் பாக்கியத்துனாலே நாங்கள் நினைத்தபடிக்கு நிசமாங்களும் பிறந்தார்கள். தாங்கள் காசியிலே றாம வாக்குண்டபோது கட்டளையிட வேணுமென்று சொல்லிக் கொண்டார்கள். அப்போது விசுவனாத னாயக்கர் அண்டையிலே காத்து கொண்டிறுக்கும்படிக்கு கட்டளையிட்டு, மாதம் 1-க்கு ஆயிரம் ரூபாய் விளக்காடு வருஷத்தினிலே பன்னீறாயிரம் ரூபாயி வீதங்களுக்கு நிலங்களும் விட்டுக் குடுத்தார்கள். அந்தப்படிக்கு ஆசீறாயிக் கட்டு காற்த்துக் கொண்டிருந்தோம். விசுவனாத னாயக்கரவர்களுக்கு பதினாறு வயசு ஆனதின்பிறகு றாய சமஸ்தானம் யெடுத்து போடுகுரதுக்கு ஆக வடக்கேயிருந்து அனேகம் றாசாக்களும் வந்த போது, அப்போது விசுவனாதனாயக்கர் படைவேட்டுக்குப் போறபோது, சகறந்தம்மையனாயக்கர் கூட போயி அனேக யுத்தம் பண்ணினதில் க ற்தாக்களுக்கு வெகு காயங்களாச்சுது. அப்போது காரியம் படைவேட்டு செயமாச்சுது. செயமானதின் பிறகு கற்த்தாக்களாகிய விசுவனாத னாயக்கரவர்கள் சகறந்தம்மைய னாயக்கரை அளைத்து நம்மிட காரியம் செயமாச்சுது யென்று சந்தோஷப்பட்டு அவர்களுடைபாளையம் யெல்லா யெடுத்துப்போட்டு கோட்டைகளிலே நம்மிட பாளைய போடத்தக்க பட்டுக்கு சிறுது செனங்களை கூட்டி சகரம்ந்தம்மைய னாயக்கரை தளத்துக்கு தணியாக அனுப்பிவிச்சதில் சிறுது செனத்துடனே போயி அவர்கள் பாளையம் யெல்லாத்தையும் யெடுபடுத்திப் போட்டு நம்மிட பாளையத்தை போட்டு றாச்சியம் யெல்லாம் தனது வசப்படுத்துக் கொண்டு

விசுவனாத னாயக்கர் சமூகத்துக்கு வந்தார்களிப்போது கற்த் தாக்களாகிய விசுவனாத னாயக்கரவர்கள் ரொம்பவும் சந்தோஷ பட்டு அனேக வெகுமதியள் செய்து அவர்களை அடித்துப் பிடுங்கிக் கொண்டு வந்த பிறுமுஸ்தோதிகளெல்லாம் நீதானே யெடுத்துக் கொள்ளென்று சொல்லி வுத்திரவு கட்டளையிட் டார்களப்படி சிருது நாள் காத்து யிறுக்கப்பட்ட அவர்களுக்கு அடமானமாக யிறுக்கப்பட்ட தெட்சண றாச்சியத்தில்,வீரசேகற, சோளனுக்கும் சந்தரசேகற பாண்டியனுக்கும் சண்டையாகி சந்திரசேகற பாண்டியனையே யெடுபடுத்திப் போட்டு வீரசேகற சோளன் சீமையைக் கட்டினதர்க்காக அப்போதுஷெ செந்தறசேகற பாண்டியனுக்கு பட்டம் கட்டி வைக்கச் சொல்லி மகாராச ராச ஸ்ரீ றாயரவர்கள் கற்த்தாக்களாகிய கொட்டியம் நாகம னாயக்கரவர்களை அனுப்பி விட்சதில் னாகம னாயக்கர் தலையைக் கொண்டு வர த்தக்கதாக மனுஷாள் வுண்டாவென்று பெறஸ்தாபம் பண்ணினதில் அங்கேயிறுக்குர பேற்கள் நாகம நாயக்கரவர்கள் தலையைக் கொண்டுவர மனுஷாள் யில்லை; யுத்திரவு குடுத்தால் அவர் பேரில் படைவெட்டுக்கு போயி அவறோடே யுத்தம் பண்ணி செத்துப் போறதே அல்லாமல் அவர் தலையை கொண்டு வர த்தக்கனை மனுஷாள் யில்லை யென்று சொன்னார்கள். நாகம நாயக்கர் குமாரனாகிய விசுவனாத நாயக்கரவர்கள் சமுகத்துலே சொன்னது; யென் னுடைய தகப்பனார் சாமத்தொறொகம் செயிதபடியினாலே அவர் தலையை நாம் தானே போயி கொண்டு வறுகுரேனென்று சொன்னார். அப்போது சகறம்ந்தம்மைய நாயக்கரை தம்முடைய தனத்துக்கு வந்து புரமாயிறுருக்க வேணுமென்று சொல்லிக் கூட்டிக் கொண்டு போனார்க ளப்போதுபாண்டிய றாச்சிய மாகிய......... சமீபமாக வந்து கறுத்தாக்களாகிய விசுவனாத நாயக்கரவர்களும் சகறமந்தம்மைய நாயக்கருக்கு வந்தெரங்கி கறுத்தாக்களாகிய விசுவனாத நாயக்கரவர்கள் சொன்னது யென்ன வென்றால், நம் றாயரவர்கள் ஸ்மஸ்தானத்துலே யிருந்து அனேக போக பாக்கியங்கள் எல்லாம் அனுப்பிவிட்சு யிருந்து றாயரவர்கள் ஆக்கினைக்கு தப்பி நடந்தால் சாமிதுறு றோகமே அல்லாது வேறல்லவே றாயரவர்கள் ஸ்தமுகத்துலே நாகம நாயக்கர் தலையை கொண்டு வறுகுறோமென்று சொல்லிப் போட்டு வந்திருக்குறோம். ஆகையாலே செந்தர

சேகற பாண்டியனுக்கு பட்டத்தை கட்டிவச்சுப் போட்டு நம்மோடே கூட பெறப்பட்டு வந்தால் வுயிர்ச் சேதமில்லா மலிறுக்கும். அதையல்லாத பேருக்கு வேரனினைப்பு நினைத்தால் றாயரவர்கள் ஸ்தமுகத்தில் நடந்த சமாசாரம் தெரிய வறுமே? தெரிஞ்சும் தெரியாமலிறுக்கிர தர்க்கு சகற மந்தம்மைய நாயக்கர் சொல்ல தோவரும் யிந்த றாசா வட்டத்துக்கு சகறமந்தம்மைய னாயக்கரை அனுப்பி விட்சிரார்கள். அப்போது ஒத்திரவுப் படிக்கு நாகம னாயக்கரவர்களிடத்தில் சமாசாரம் சொன்ன தர்கு நாகமனாயக்கர் மறுபடி சொன்னது யென்னவென்றால், பாண்டியன் ஸ்தமுஸ்தானம் நாம் அணியாமாயி கட்டவிலை. அவனமக்கு யெளுதிக் குடுத்திருக்குறான். பிரதையல்லாமல் யிந்த ஸ்தமஸ்தானத்துக்கு அனேக திரவியத்தைக் சிலவு செயி திருக்குரோம். அந்த திரவியத்தை குடுத்து விட்டால் நாம் பிற பட்டுப் போயி விடுவோம். யித்தினை கஸ்திப்பட்டு சம்பார்த்தனை செயிததும் தனக்காக சம்பார்த்தனை செயி குறோம். தான் நம்முடைய் பேரிலே தானே படையெடுத்து சண்டைக்கு வந்தது, சாமுத்துரோக மல்லாவாயிது... தவசு செய்து பிள்ளயைப் பெத்தேனென்று ரொம்பவே தனமாக செய்தி சொல்லி அனுப்பி விச்சாற். இந்த சமாசாரம் வந்து விசுவனாத னாயக்கரவர்களிடத்துலே வந்து சொன்னதுக்கு தம்மய னாயக்கரவர்கள் பேரில் வெகு கோபப்பட்டு இந்த னாளிகைக்கி யெளுந்திரிந்து பயணம் பிறபட்டு வந்தலாச்சிது. யில்லதே போனால் தலையை வெட்டி கொண்டு போவோமென்று சொல்லச் சொல்லி சகறம்ந்தம்மய னாயக்கரை அனுப்பி விச்சார்கள். யிந்த சமாசாரம்போயி னாகம னாயக்கரர்களிடத்தில் சொன்னதுக்கு நாகமனாயக்கர்வர்கள் ரொம்பவும் கோபப்பட்டு தவசு பண்ணி பிள்ளைப் பெற்றதும் அவனிடத்தில் வுன்னை காவலுக்கு வச்சதும் தலையை வெட்டிக் கொண்டு போகவா வந்தீர்கள் யென்று பிடித்து விலங்குலே அடைச்சுப் போட்டார்கள். அப்பால் நாகம்ம ன்ாயக்கரைப் பார்த்து சகறமாந்தம்மைய ன்ாயக்கர் சொல்லிக்கொண்டது. சுவாமியென்னாலே குற்றமிலை. தாங்கள் குமாறரிடத்துலே காத்திருக்க சொல்லி கட்டளையிட்டார்கள். அந்தபடியே காத்திருந்தோம். அவாள் வுத்தரவுப்படிக்கு தங்களிடத்தில் சமாசாரம் சொல்ல வந்த

துக்கு யென்னை பிடித்து விலங்குலே அடித்துக்கொண்டீர்கள். தகப்பனாகயிருக்கப்பட்டவர்களுக்கு விதினம் வந்தால் பிள்ளையள் யென்னசெய்யப்போரோம் யென்று ரெம்ப விதனப்பட்டு செய்தி சொல்லிக்கொண்டதர்க்கு சாமித்துறோகள் சவட்டத்துக்கு வந்ததுக்கு பதினஞ்சு னாள் வரைக்கும் விலங்குலே கிடக்கவேணுமென்று கட்டளையிட்டார்கள். பத்து நாளையிலே கயிலாசம் போயி சேர்ந்தார்கள். யிந்த சமாசாரம் கற்த்தாக்களாகிய நாகம்ம னாயக்கரவர்கள் கேட்டு யிதுவரையில் வதைத்து விலங்குலே போட்டு கொன்று போட்டோமென்று அப்பிறதிஷ்ட்டைக்கி யிடம் வந்துதென்று ரெம்ப விசாரப்பட்டுக்கொண்டார்கள். யிந்த சமாசாரம் விசுவனாத னாயக்கரவர்கள் கேட்டு ரெண்டு நாள் வரைக்கும் அன்ன ஆகாரமில்லாமல் யிப்படியாக் கொத்த மனுஷனை எங்கே சம்பாரிக்கப் போறோமென்று ரெம்ப விசாரப்பட்டுக் கொண்டு சகரந்தம்மையனாயக்கர்வகை பிள்ளைகுட்டி யாறாகிலும் யிறுக்குறார்களாவென்று விசாரிக்கும் யிடத்தில் தம்மைய னாயக்கர் மகன் தொப்பள னாயக்கன் யிருக்குறான். அவனுக்கு வயசு இரவது உண்டு யென்று சொல்லியிவன் வெகுசூரவான் தகப்பனைப் பார்க்க கெட்டிக்காரன் னென்று சொன்னார்கள். அப்போது வுடனே அவனைக் கூட்டி வரச் சொல்லி அவன் போனான். தகப்பன் துக்கத்தை ஆத்தி தகப்பனாயிருந்த ஸ்தானத்துக்கு நெமகம் வருஷத்துக்குப் பன்னீறாயிரம் ரூபாய் வீதம் கிறாமங்கள் விட்டு மாமூல்ப் பெறகாரத்துக்கு சேவுகம் பண்ணிக் கொண்டு வரச் சொல்லி கட்டளையிட்டு மறுபடி நாகமனாயக்கரவர்கள் பேரில் படையெடுக்கச் சொல்லி கட்டளையிட்டார்கள். அதுவே மேரைக்கி யிவாள் படையெடுத்து யுத்தம் செய்து அனேகம் பேற் மடிந்தார்கள். அப்பால் னாமே னாயக்கரை விசுவனாத னாயக்கர் வந்தறைந்து பிடித்து விலங்குலே அடித்து றாயரவர்கள் ஸ்தமுகத்தில் கொண்டு போயி விட்டார்கள். அதின் பிறகு றாயரவர்கள் வெகு சந்தோஷப்பட்டு விசுவனாத னாயக்கரவர்களுக்கு பாண்டிய தேசம் பட்டம் கட்டி பாண்டிய தேசமாகிய மதுறாபுரிக்கு வறுகுரபோது தொப்புளனாய்க்கர் வந்து ஆஜறா காத்துக் கொண்டுயிருந்துதுனாலே தொப்புள னாயக்கரும் கற்த்தாக்களாகிய விசுவனாத னாயக்கரவர்களும்,

ஆம்பராவதியில் ஸ்தானம் செய்ததில் இந்த ஆத்தங்கரை தண்ணீர் விறுதாயுலே சமுத்தாகாமியாக போகுரது; நிலங்களுக்கு உபயோகமில்லாமல்ப் போகுதென்று கற்த்தாக்கள் சொன்னதுக்கு, தொப்புள னாயக்கன் சொன்னது; இந்த ஆம்பறாவதி நதிக்கு அணை கட்டி மேடுகாடு யிருக்குரதெல்லாம் பள்ளமாக்கி பயிரிடத்தக்கதாக செய்விட்டுரோமென்று தொப்புள னாயக்கர் சொன்னதற்கு அந்தபடிக்கு தானே கற்த்தாக்கள் வுத்திரவு குடுத்தார்கள். இப்போது இந்த ராஜ்ஜியமெல்லாம் காடுகளும் புலிகளும் மிருகங்களாயிருக்கும். அப்படி கொத்த காடு கரையெல்லாம் வெட்டி மேட்டுப்பத்துகளெல்லாம் தண்ணீர் வந்து பாயும் யென்று கறுத்தாக்களாகிய விசுவனாத நாயக்கரவர்களுக்கும் தளவாயி அரிய நாயக முதலியாரவர்களுக்கும் யெளுதிக் கொண்டார். அப்போது கற்த்தாக்களாகிய விசுவனாத நாயக்காரவர்களுடைய அரிய நாயக முதலியாரை அனுப்பிவித்து பாத்து வரச் சொல்லி அனுப்பி விட்சார்கள். அரியநாயக முதலியார் வந்து இவர்கள் செயிதிருக்குர காரியம் பார்த்து தொப்புள நாயக்கர் பேரில் வெகு சந்தோஷப்பட்டுக் கொண்டு இப்படி கொத்த புத்திவான் யென்று அறிந்துமிறுப்பதில்லை யென்று சந்தோஷப்பட்டுக் கொண்டதர்க்கு தொப்புள நாயக்கர் சொன்ன விபரம். யென்னுடைய பறாக்கிரமத்தைப் பார்த்திருப்பதில்லையே, பறாக்குரமத்தைப் பார்க்க வேணு மென்று சொல்லி மாம்பாரை மலையின் பேரில் யேரச் சொல்லி இந்த காட்டுக்கும் பளநிமலைக்கும் இறு காதவளியாகச்சே ஆனைகள் மிகுதியாக திருஞ்சி கொண்டு இறுக்கும். ஒரு ஆனையை தொப்புள் மேலே ஒதைச்சி கீளே தள்ளிப் போட்டார்கள். அப்போது தொப்புள் நாயக்கர் என்று பேர் வந்தது. அரிய நாயக முதலியார் பார்த்து இப்படிக் கொத்த பறாக்கிறமசாலி (நா)ன் கண்டிருப்பது இல்லை, என்று கற்த்தாக்க(ளாகி)ய விசுவநாத நாயக்கரவர்களுக்கு யெளுதிக் கொண்டார்கள். அப்போது விசுவனாத நாயக்கரவர்கள் பளநி தெண்டாயுதபாணி சுவாமி தெரிசனைக்கி வந்து இந்த காடுகளும், செடிகளும் பார்த்து இந்த இடத்திலே நாமிறுக்க வேணுமென்று ரெம்ப சந்தோஷப்பட்டு கறுர், காங்கயம் இந்த சீமைகளுக்கு வுபரிப் பணம் ஆகுபடிக்கு ரொம்ப சந்தோஷம் வந்தது.

குமாரவர்க்கமென்று பேற்குடுத்தார்கள். அதின் பிற்பாடு பாண்டியன் கோட்டைக்கு வெளியாக யெளுவத்திரண்டு கொத்தளமும் கோட்டையும் வுண்டுபண்ணி யெளுவத்திரண்டு பாளையப்பட்டு நெமகம் செயிகுரபோது தொப்புள நாயக்கனை தருவித்து நீ வந்து குமாரவர்க்கமானதுனாலே திரு மஞ்சனக் கோட்டை வாசல் பெற தெட்சணமாக நாற்ப்பதாம் கொத்தளத்துலே காத்துக்கொண்டிருக்கச் சொல்லியும் நீயே படத்தியிருக்க வேண்டுமென்று தொப்பள நாயக்கரை கேட்ட தற்கு பளனிக்கு கிளக்கு, முக்காதவளிக்குக் கிளக்கு, ஆம்பறா வதிக்கு தெற்க்கு, மாம்பரை மலைக்கிட்ட யிருந்தால் பழனி சுப்பிரமணியற் தெரிசனமாகும். யெனக்கு இவடத்தில் தானே யிருக்க வேணுமென்று கோரிக்கொண்டார்கள். அதுவே பிர காரத்துக்கு பன்னீராயிரம் ரூபாயி சீர்மை விட்டுக் குடுத்து ஆம்பறாவதி தீரமும் இவடத்தில் பழநிக்த இப்பரம் கொரவர் பயமில்லாமல் படிக்கு கற்த்தாக்களுக்கு சொன்னபடி கேட்டுக் கொண்டு குமார வற்க்கமாக யிருந்தார்கள். இப்படி யிருக் குர தருணத்தில் பாண்டியன் வைப்பாட்டி மக்கள், நாங்கள் தான் பாண்டியர் யென்று பேரிட்டுக்கொண்டு கற்த்தாக்களை தெட்சண றாச்சியத்துக்கு வராதபடிக்கு யிருக்குர தருணத்தில் அப்போது தளவாயி விசனபாகம் கேசப்ப நாயக்கரையும் கையத்தாத்து கோட்டையின் பேரிலே படை வெட்டுக்கு அனுப்பிவித்தார்கள். அப்போது தொப்பள னாயக்கரைக் கூட அனுப்பிவித்தார்கள். அப்போது கைத்தாணையத்துக்கு தொப்பள னாயக்கரை அனுப்பிவிச்சதில் அனேகம் சண்டை பண்ணினதில் அந்த பாண்டியன் வைப்பாட்டிப் பிள்ளை ஆனையின் பேரிலே அவுதா வைத்து அதின் பேரில்கொண்டு பெரு யுத்தம் பண்ணி கொண்டிருக்குரபோது அப்போது கேசவப்ப னாயக்கருக்கு காயப்பட்டு தொப்பள னாயக்கர் பெரு விக்கிறுடனே போயி அனேகம் பேரை வெட்டி ஆனையின் கீளே புகுந்து மேலே அம்பாரிக்கயரை அருத்து போட்டார்கள். அம்பாரி கீளே விளுந்து போயிவிட்டுது. அப்போது அவர் களுடைய பாளையமெல்லாம் ஒதிங்கி போயிவிட்டது. அப்போ அனேக திரவியங்கள் யெல்லாம் பரித்துக் கொண்டு வந்து கேசப்ப னாயக்கருக்கு குடுத்தார்கள். கேசப்பனாயக்கரவர்கள் வெகு சந்தோஷத்துடனே தொப்பள னாயக்கருக்கு அநேக

வெகுமதி பண்ணி ஒன்திராணி மட்டுக்கு நான் பாத்திருப்ப தில்லை யென்று ரொம்பவும் சந்தோஷப்பட்டார்கள். சிறுது னாளைக்கு பிரகு கைலாசம் அடைந்து போனர்கள். அவர் துரைத் தனம் பனிரெண்டு வருஷம். அவர்கள் குமாரன் பொம்மள னாயக்கரவர்கள் கற்த்தாக்கள் சொன்னபடி கேட்டுக் கொண்டு காணியாச்சியில் யிருக்கப்பட்ட கொத்தளங்கள் காத்துக் கொண்டு அனேக கற்ம்மங்கள் பண்ணிக் கொண்டு ஆம்பராவதி முகத்துக்கு கால்வாயி களத்தாட்சி வறாதபடிக்குப் பார்த்துக் கொண்டு கற்த்தாக்களுக்கு பெற்ற பிள்ளையாயிருந்து காத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தொரைத்தனம் வருஷம்......... அதின் பிறகு அவர்கள் குமாரன் பெருமாள் நாயக்கர் னாளை யில் அனேகம் காடு கரையள் செடிகள் எல்லாம் வெட்டிப் பட்டி யளும் கட்டி 20,000 ரூபாய் வரைக்கும் சீர்ம்மை வுண்டு பண்ணி வைத்தார்கள். இந்தப் பெருமாள் னாய்க்கர் வெகு சிவபூசை பண்ணினவர்கள் வெகு தான தற்மம் பண்ணிக் கொண்டிருந் தார்கள். அவர்களும் கையிலாசம் அடைந்தார்கள். அவர்கள் துரைத்தனம் வருஷம் 60. அவர்கள் குமாரன் பொம்மள னாயகர் னாளையின் அனேகம் காடுகள் செடியை யெல்லாம் வெட்டிப் பட்டியளுங்கட்டி யிருவதினாயிரம் ரூபாயி வரைக்கும் சீர்ம்மை உண்டு பண்ணி விட்சார்கள். இந்த பொம்மள னாயக்கர் வந்து வெகு சிவ பூசை பண்ணினவர்கள் வெகு தான தற்ம்மம்பண்ணிக் கொண்டிருந்தார்கள். அவர்களும் கையிலாசமடைந்து போனார்கள். அவர்கள் தொரைத்தனம் 75. அவர்கள் குமாரன் போர்க் கருது னாயக்கர் னாளையில் அனேக காடுகள் செடிகள் யெல்லம் வெட்டி பட்டியளும் கட்டி யிருவதினாயிரம் ரூபாய் வரைக்கும் சீர்மை உண்டு பண்ணி வைத்தார்கள். இந்தக்குமாரக் கருது னாயக்கர் வந்து வெகு சிவபூசை பண்ணினவர்கள் வெகு தான தற்மம்ங்கள் செய்து கொண்டு வந்தார்கள். அவர் களும் கைலாசம்மடைந்து போனார்கள். அவர்கள் தொரைத் தனம் வருஷம் 65.

அவர்கள் குமாரன் மலையப்பொம்முனாயக்கர் னாளையில் அனேக காடு செடிகள் யெல்லாம் வெட்டிவைய்துப் பட்டியளுங் கட்டி யிருவதினாயிரம் ரூபாயி வரைக்கும் சீர்ம்மையில் உண்டு பண்ணி வைத்தார்கள். இந்த மலையா பொம்மு னாய்க்கர் வந்து அனேகம் தான தற்மம்கள் செய்து கொண்டு யிருந்தார்கள்.

அவர்கள்னாளையில் கற்த்தாக்களாகிய திருமலை னாயக்கர வர்கள், தளவாயி றாமப்பய்யறவர்கள், மரவன் சேதுபதி பேரில் படையெடுத்து சண்டைக்குப் போரபோது யெளுவத்தி ரெண்டு, பாளையகாரரை தண்டுக்கு வரச்சொல்லி மலையப் பொம்மு னாயக்கரை அளைத்து நீ வந்து குமார வற்க்கமான துனாலே கற்த்தாக்களுக்கு வலது புரத்து மார்க்கமாக நீ வந்து யிருக்குரவனான படியினாலே இந்த யெளுவத்திரண்டு பாளை யப்பட்டுக்கு முன்னுதாக நடக்கச் சொல்லி உத்திரவு குடுத் தார்கள். அந்தபடிக்கு சேதுபதி பேரில் தண்டுயெடுத்து அப்போது அனேக யுத்தமாட்சுது. சூரப்பய்யனவர்களும் விழுந்து போனார்கள். அதின் பிர்ப்பாடு சேதுபதி பாம்ப னாரைக் கழித்து ராமேசுரத்துக்குப் போயி ஒழிந்து கொண் டான். அப்போது றாமப்பய்யனவர்கள் தாமுன்ந்தானே நின்று அணைக்கட்டுகுரபோது அதற்கு வேண்டிய சாமான் முஷ்தீ புகள் யெல்லாம் கூடயிருந்து வரவளைத்துக் குடுத்துக்கொண்டு அணைக்கட்டுகுர மட்டுக்கும் கூடயிருந்து அணைகட்டி அந்த அணையின் பேரில் தண்டை நடப்பி விடுரதில் வலதுபுரமாக மல்லைய பொம்முனாயக்கர் போயி அனேகம் சேதுபதி பேரில் சண்டையர்ச்சுது. அபோது சேதுபதி பேரில் சண்டையாச்சுது, அப்போது சேதுபதி மருமகன் வள்ளியனாயகரும் அம்மை வெளையாடி யிருக்குரது. அது கூடப்பராமல் அவன் குதிரையின் மேலேயேறி ஆயி முஷ்தீப்புடனே அனேக சண்டைகளாச்சுது. அப்போது அநேக செனங்கள் சேதமாயி போயிவிட்டது. அந்த யுத்தத்தில் தானே வன்ணியத்தேவன் விளுந்து போனார். அப்போது மல்லைய பொம்முநாயக்கரு கைலாசமடைந்தும் போனார்கள். அவர்கள் தொரைத்தனம் வருஷம் 75. அவர்கள் குமாரன்க் குமார கருது னாயக்கர் தகப்பனாற் விளுந்து போர மட்டுக்கு யிருந்து தானம் தற்ம்மங்கள் பண்ணின பிறகு அப்போது றாமப்பய்யரவற்கள் பார்த்துக் குமாரக் கருது னாயக்கனைப் பார்த்துச் சொன்னது. ஒன் தகப்பனைப் போறாலே சேவுகத்திராணிப் போலே மற்று ஒருவரையும் பார்த்திருப்பதில்லை. வன்னியத்தேவனை யுத்தம் செய்து கொண்ணு போட்டதுக்கு சேதுபதியைப் பிடித்து அவனு டைய சீர்ம்மையை கட்டினதுக்கு ஒங்கள் தகப்பனாற் யிருந்தார். வெகுமதியும் சந்தோஷமாயிருக்கும் அவர்கு

போயிவிட்டது சந்தோஷமில்லை. நிய்யாகிலும் யிருந்தியே அதுவே சந்தோஷமென்று சொல்லி, வஸ்திரமும் பாக்கு வெத்திலையும் குடுத்து, அந்தப்பட்டத்துக்குந் தானே நிசமா ணென்று றாமப்பய்யரவர்கள் பட்டம் கட்டி வச்சார்கள். அவர்களுடைய கூடவே றாமேசுவரத்திலிருந்து மதுறா புரிக்கு வந்து கற்த்தாக்களாகிய திருமலைனாயக்கரவர்களி டத்துக்கு வந்து அவர்களிடத்திலேயும் உத்திரவு வாங்கிக் கொண்டு மாம்பரை வந்து சேந்தார்கள். அவர் துரைத் தனம் வருஷம் 90.

அவர்கள் குமாரன் வெங்கிடறாம னாயக்கர் நாளை யில் அனேக காடுசெடிகளெல்லாம் வெட்டி பட்டியளும் கட்டிவைத்து இருவத்துனாலாயிரம் ரூபாயி வரைக்கும் சீர்மையி வுண்டு பண்ணி வச்சார்கள். இந்த வெங்கிட றாமி னாயக்கர் வந்து வெகு பூசை பண்ணினவர்கள் வெகுதான தர்மங்கள் பண்ணிக் கொண்டிருந்தார்கள். அப்பால் அவர்களும் கையிலாசம் அடைந்து போனார்கள். அவர்கள் துரைத்தனம் வருஷம் 60. அவர் குமாரன் பரசுறாம னாயக்கர் னாளையில் அனேகம் காடு கள், செடிகளெல்லாம் வெட்டி பட்டி கட்டி சீர்மையில் யிரவது னாயிரம் ரூபாயி வரைக்கும் வுண்டு பண்ணி வச்சார்கள். இந்த பரசுறாம னாயக்கர் வந்து வெகு சிவ பூஜை அன்னதான வஸ்த் திராதானம் சகலமும் பண்ணிக் கொண்டிருந்தார். யிவர்கள் தகப்பனார் னாளையிலே சிறுது நிலம் தாறாபுரத்தார் கட்டிக் கொண்டார்கள். சிறுது நிலம் விசைய மங்கலத்தார் கட்டிக் கொண்டார்கள். பூமி வந்து கொஞ்சப் பூமியிலே யிருந்தார்கள். அப்போது கற்த்தாக்கள் சமாபந்தி ஆயிர ரூபாயிந் திரை வாங்கிக் கொண்டார்கள். மறு வருஷாந்திர மெல்லாம் போயி சமாபந்தி தானே தொளாயிரம் ரூபாயி வரைக்கும் வாங்கிக் கொண்டார்கள். வெங்கிடறாம னாய்க்கர் குமாறர் பரசுமறா னாயக்கர் அதுலே மேரைக்கு தானே தர்மம் செயிது கொண்டு யிறுக்குறார். திருமஞ்சண வாசலுலே பெறதட்சணமாக கோத்த ரத்துனார்ப்பிதான் கோத்திரத்து வெங்கிட்ட றாமனாயக்கர் னாளையில் மையிசூறார் கட்டிக் கொண்டார்கள். அவறுடைய குமாரன் பரசுறாம னாயக்கர் னாளையில் கும்பினியார் சீர்மையை கட்டிக் கொண்டார்கள்.

மேல் எழிதிய என் வமுசா வழியினாலே விவறங்கள் தெரிய வருமே பூற்வா பூற்வமாக என் முன்னோர்கள் பிறயாசப்பட்டு மதிரை சமுஸ்தானத்தாரை கட்டளைபடிக்கி மாம்பாரை என்குற மாண்புரை பாளையப்பட்டு ஆதீனம் பரிபாலனம் பண்ணிக் கொண்டு வந்தாளும் னாள் எங்களுக்குள்ள பிறுதுகள் வகைறா பேற்கள் விவறம்.

(1). றணவா சிங்கம், (2). ஒண்டி முத்து துறாயி, (3). காலுக்கு போடுகுற நிகளம், (4). தங்க முஞ்சி, (5). சாமுத்தி றோகற்வண்டயம், (6) வெள்ளப் பக்கறடால், (7). பகல் திவிட்டி (8) சுறிட்டி (9) சூறியபான், (10). வுபயசாமறம் (11) வெட்டுபாவாடை (12) விசிறி (13). பிடி செம்பு (14). காளாஞ்சி, (15). பூசக்கிற கொடை, (16) அஞ்சி முகம் ஏழுமுகம்திவிட்டி, (17). குதிரைக்கி முன் ஜல்லி பின்ஜல்லி அண்ட மணிகால், அந்தை (18). கலிகிதுராயி யிப்பதினெட்டு பிறுதுகளும், எங்களுக்கு உண்டு. யிப்போதும் எங்களுக்கு கலியாணம் ஆகும் னாள் பகல்திவிட்டி போடுகிற வழக்கமா கன்டு வருகிறது.

எங்கள் வமுசத்தின் வழக்கம் என் பாளையபட்டுக்கு பட்டக்காறன் தெயிவ கெதியாறபோது பெறிய புள்ளை கையில் பட்டத்து, ஆயுதமும் பாக்கு, வெத்திலே கையில் குடுக்குறது. அதின் பிறகு சகலறும் வந்து (நட)னாடக சாலையில் கொலு திறந்துயிருந்து னாட்டு குடிகளெல்லாறும் கண்டு கொள்ளுகுறது. எங்கள் கம்பள ஜாதி வகையில் னாங்கள் வெங்கிலிய கம்பளத்தாரெண்று சொல்லப்படுகுறது.

எங்கள் பாளையபட்டு எல்லேயாவது கிழக்கு தலையனாடு சேந்த மங்கலத்து எல்லைக்கு மேற்கு, மேற்கு தலயனாட்டு பொருளூற் எல்லை னாகன் கறுடுக்கு கிழக்கு, செம்மடை உள்பட கீழ்மேல் வுத்தேசம் வழி னாழிகை 3, தெற்கு எடைய கோட்டையார் எல்லைக்கி மேற்க்கு எல்லை கிணறுக்கு வடக்கு, வடக்கே தலைய நாட்டு எல்லைக்கி தெற்கு, பாலை குட்டை உள்பட தென் வடலம் உத்தேசம் னாழிகை வழி 3 கிழமேல் தென்வடல் சமசதுறம் மூணு னாழிகை வழியுள்ளதில் கிறாம விபறம்:

ககபா மாகம் பட்டி-1
சாமினாதன் பலசை-1
யெல்லைபட்டி... ஆக2.
பாறப்பட்டி-1... கதிறியாபாளையம்
அய்யம்பாளையம்-1 ஆக...2.
அத்தப்பம்பட்டி-1... வடுகப்பட்டி-1
கணவாயிபட்டி-1... நநாக்கியாகவுண்டன்
பலசை-1... ஆக-4.
ஆஹசலிகிறாமம்-3... தாகலிகிறாமம்.
சா-6...ஆஹசலிதாகலி உள்பட கிறாமம் 9...
பாழ்கிறாமம் பழயகோட்டை-1. ரங்க விளாசம் கோட்டை-1

ஆகபாழ் கிறாமம்-2... பாழ் கிறாமம் உள்பட கிறாமம்-11 மலை மூணு உள்பட மாண்புரை பாளைய பட்டு ஆயக்கட்டு ...து... 12634... மேற்கு எல்லை பெறன்...துது 200 ஆக 12834......அயன் கண்டுமுதல் பூமி புஞ்சை கம்புச்சோளம், சாமை, மொச்சை, தட்டபயறு, காணம், ராகி வெளயுற பூமி 5035ம் பேறிசு கலிபணம் 1503 ப.வ.ரு ஜமின்தாறி என்னுடைய மிறாசிக்கி தயவு செயித 100 ரு. 30 வீதம் தள்ளிட என் பாளையபட்டுக்கு வருஷம் 1 க்கு கலிபணம் 1052 ...புக்க சற்க்காறுக்கு வருஷா வருஷம் செலிதி கொள்ளும்படி னான் மகாறாசஸ்ரீ கலக்கடற் ஆறடிசு தொரை அவர்கள் னாளையில் துந்துபி ஷூத்திலே ஷூ தீற்து கொண்ட படிக்கி றக்தாக்ஷி வருஷத்தில் வருஷம் 1-க்கு 10-4 சாவணு ஆக கலிபணம் வருஷம் 1-க்கு 1062 பு. ..வருஷா வருஷமும் சற்க்காறுக்கு னான் செலுதி கொண்டு னம்முட பாளையபட்டில் ஜாறிஜமிந்தாறி என்று யிருக்குரேன்.

என் முன்னோற்கள் பாறம்பறிய மாயி மான்புரை பாளைகாறனாக யிருக்குமளவில் கொஞ்சம் பூமியாயினாங்களும் பாளைகாறரென்று பேற் பெத்து யிருந்தாற்கள்.

யிப்போ னான் மிகுந்த பெறிசு எத்தீகொண்டு வருஷா வருஷம் ப்ணம் கட்டளை படிக்கி செலுத்த மிகவும் பிரயாசத்துனாலே கட்டளை படிக்கி சற்காற் பணம் செலுதி கொண்டு கட்டளையிட்ட சற்காற் காறியத்தில் ஜாக்கிரதையாயி னடந்து

கொண்டு ஆஜரிலே என் பாளையம்பட்டு சேந்த அத்தப்பன் பட்டி கிறாமத்தில் குடியிருக்கிரேன். னான் மிகவும் கும்பினி யாற் தயவுக்கும் கடாக்ஷம் வந்து என்னை அபிமானிச்சி மானம் நடத்த வேண்டி காத்திருக்குறேன்.

1816 வருஷம் மே மாதம் 14-ந் தேதி.

(1) சகறந்தம்மய னாயக்கர்.
(2) பரசுறாம நாயக்கர்.

# நடுவுக்குறிச்சிப் பாளையக்காரன் வமிசாவளி கைபீது

**D. 3886**

ஆதியார்ப்பியம் யெங்கள் முன்னோர்கள் குத்தாலத் தேவரும், மருதப்பதேவரும் கீளுவைக் குண்டையங் கோட்டை யிலிருக்குறபோது மேல்னாடு திறச்சுளீகை பழனிமடஞ்சீற்மை கள்ளர் குண்டையங்கோட்டை னாட்டுக்கு வந்து சவ்விறியஞ் செய்தார்கள். அப்போது யெங்கள் முன்னோர்கள் குத்தால தேவரும் மருதப்ப தேவரும் அந்த மேல்னாட்டுக் கள்ளரை அதம் பண்ணி திறச்சுளீகைப் பழனிமடம் மேல்னாடு வரைக்கும் போய் அதிலிருந்த கள்ளரை இல்லையெனச் செய்விக்கிறவரையில், இது செய்தி அப்போதிருந்த பாண்டியறாஜா கேட்டு குத்தாலத் தேவரையும் மருதப்பதேவரையும் வரவளைத்து, திருச்சுளீபழனி மடஞ்சீற்மை கள்ளறாகிறபேரை நீர்ச் சின்னாபின்னஞ்செய்து அது நிமித்தியம் உம்முடப் பாசவற்கத்திலும் சிறுது செனம் சேதமாய்ப் போனபடியினாலே குத்தாலதேவர் மருதப்பதேவர் நீங்களிருபேரும் திருச்சு பளனி மடசீர்மையை பாளையப் பட்டாக பேர்பாதியாகப் பகுந்துகொள்ளச் சொல்லி உத்திர வாயி வரகுணராம குத்தாலதேவரென்று பேருங்குடுத்து அஷ்ட கோண பல்லாக்கும் உபயசாமரமும் மகர கொடியுடன் குடுத்து மருதப்பதேவருக்கும் வேணவெகுமதியுங் குடுத்து பாளை யப்பட்டாக கோட்டையும் போட்டு பேர்பாதியாக ஆண்டு அனு பவித்துக் கொண்டியிருந்தார்கள். வரகுணராம குத்தாலதேவர் குமாரன் விசையரங்க பாண்டிய குற்றாலதேவர் னாளையில் பாண்டிய றாசா ஒருனாள் வேட்டைக்கி யெளுந்தளுளினதில் ஒரு புதையல் புலி புறப்பட்டு வெகுசனத்தையுஞ் சேதப்படுத்தி ஒருவராலெயுஞ் செயம்பண்ணப்படாமல் மிஞ்சிப்போனபோது, விசயரங்க பாண்டிய குற்றாலதேவர் புலியை மறத்துக்குத்திப் போட்டார். உடனே றசா வெகுசந்தோஷப்பட்டு மகா துஷ்டமிறுகமாகிய புலியைக் குத்தினபடியினாலே விசியரங்க பாண்டியபுலி குத்தாலதேவர்யென்று பேருங்குடுத்து புலித்

தோல் கல்லணைவைத்த குதிரையுங் குடுத்து, பச்சவற்ணக்குடையும் புலிகொடியுங் குடுத்தார்கள். அவர் குமாரன் சயிதுங்க குற்றால தேவர், அவர் குமாரன் விசியரங்கபாண்டியபுலி குத்தால தேவர், அவர் குமாரன் செயதுங்க குற்றாலதேவர், குமாரன் சதாசிவ குற்றால தேவர், அவர் குமாரன் செயதுங்க குற்றால தேவர், அவர் குமாரன் பாண்டியபுலிக் குத்தாலதேவர், அவர் குமாரன் சதாசிவ குத்தாலதேவர் ஆக இந்தப்படி ஒன்பது தலைமுறை பேர்பாதியாகப் பாளையப்பட்டு பண்ணிக் கொண்டு யிருக்கிற னாளையில் எங்கள் வமுசத்தில் பாண்டிய றாசா பொண் கேட்டார். அதற்கு மறாங்குலத்திலே யிருக்குற பொண்ணை சந்திறகுல வங்கிஷத்தில் குடுக்கிற தில்லையென்று சொன்னதற்கு பாண்டிய றாசா விதனமாய்ப் படைசேகரித்து சமாமுயற்சைக்கு யெத்தினஞ்செய்விக்கிற சமாச்சாரங்கேட்டு சதாசிவ குத்தாலதேவரும் செயப்பிறதாப மருதப்பதேவரும் றாசாவினுடனே நாம் யெளுந்தருளி......... கசமாமுயற்சை செய்யிறது நியாயமல்லவென்று புறப்பட்டு சுந்தரபாண்டிபுரத்துக்கு வந்துயிருந்தார்கள். இருக்கிறபோது கொடகைனாட்டு கள்ளர்கள் ஒன்றுக்கொண்டு சவரியங்கள் செய்து சுந்திரபாண்டியபுரத்திலும் வந்து சவரியஞ்செய்தார்கள். அவர்களையெல்லாம் சமாமுயற்சியில் வெட்டிஒடுக்கி நிக்கிறகஞ் செய்து போட்டார். அது சமாச்சாரம் இறாயர் சமஸ்தானத்துலே அறிந்து சதாசிவ குத்தாலதேவரையும் செயப்பிறதாபமருதப்பதேவரையும் வரவளைத்துக் கொடகைனாட்டுக் கள்ளரை நீங்களான படியினாலே ஒடுக்கினீர்கள்யென்று நிறம்பவுஞ் சந்தோஷப்பட்டு வேண வெகுமதியுங் குடுத்து வரகுண றாய பெரும்புலி குத்தாலதேவரென்று பேருங்குடுத்து சந்திர றாசபுறத்தில் இருந்தபாளையப்பட்டு பேர்பாதியாக ஆண்டு அனுபவித்துக் கொண்டுயிருந்தார்கள். வரகுணராயப் பாயும் புலிக்குத்தாலதேவர், குமாரன் அதிவீரறாம குத்தாலதேவர், அவர்குமாரன் வரகுணறாம குத்தாலதேவர், அவர் குமாரன் இறாஜகுல றாம குத்தாலதேவர், அவர் குமாரன் வரகுணறாம குத்தால தேவர், அவர்குமாரன் இராசகுலறாம குத்தாலதேவர், அவர் குமாரன் பரசுறாம குத்தால தேவர், அவர் குமாரன் ஸ்ரீவல்லம்பை குத்தாலதேவர் ஆக இந்தப்படி யேளுதலைமுறையாக பாளையப்பட்டு ஆண்டனுபவித்துக் கொண்டுயிருந்தோம்.

அந்த ளாளையில் பாதுஷாப்பாளையூரை (பாளையூரை) மிகுந்த வந்த நிமித்தியம் சுந்தரறாசபுரம் விட்டு புறப்பட்டு ஸ்ரீவல்லபறாய குத்தாலதேவரும் கிஷ்ணறாய மருதப்ப தேவரும் தெட்சணம் சீமைக்கி வருகிறபோது வீரசிங்கனாட்டுக் கள்ளர் வந்து மறித்தார்கள். அதில் வெகு உயித்தியமாயி அனேக சேதம் வந்து கள்ளரையும் அதம்பண்ணிப் போட்டு வீரசிங்கனாட்டிலிருக்குறபோது பாண்டியர்களில் காசிகண்டப்ப விக்கிறம றாசா தென்காசியிலிருந்து வீரசிங்கனாட்டை ஒடுக்கின, சமாசாரங்கேட்டு ஸ்ரீவல்லவறாம குத்தாலதேவரை வரச்சொல்லி உத்திரவு அனுப்பிவிச்சார். உடனே தென்காசிக்கு வந்து காசிகண்டப றாக்கிறம பாண்டிய றாசா கண்டு பேட்டியானதின் பிறகு உம்முடைய சமாச்சாரம் யெல்லாம் கேட்டுயிருக்கிறோம். இவ்வடத்துக் கல்லக்கேட்டுக்கள்ளர் அனேகம் பேர் சவரியஞ் செய்கிற அவர்களை ஒடுக்கினான். இந்தப் பூமியைப் பாளையப்பட்டாகத் தருகிறோமென்று சொன்னார்கள். இராசா உத்திரவுபடிக்கி கள்ளர் பேரில் உயித்தியம் பண்ணினத்தில் தனது ஜெனங்கள் அனேகம் சேதப்பட்டு குறும்பாக்களை ஒடுக்கி யில்லையென செய்வித்தபடியினாலே ராசா நீரும் வெகு சந்தோஷமாயி அனேக மரியாதைகள் செய்து கல்லனாட்டில் நடுவக்குறிச்சியும் அதினுடனே சேந்தக் கிறாம பூமியும்விட்டு தண்டிகையும், அனுமக்கொடி, கெறுடக்கொடி, மகரகொடி, யுடை, பச்சவற்னக்கொடியும் உபயசாமரங் கொடுத்து பறாக்கிறமபாண்டிய குத்தாலதேவர் யென்று பேருங்குடுத்து பாளையப்பட்டாக ஆண்டனுபவித்துக் கொண்டிருக்கச் சொல்லி உத்திரவுபடிக்கி கோட்டையும் போட்டு வணமாக இருந்தத்தே கிறாமங்கள் கிறாமங்களுக்கும் நஞ்சை புஞ்சை யுடை உண்டு ஆண்டனுபவித்துக் கொண்டுயிருந்தார். கிஷ்ணறாய மருதப்பதேவரை உக்கிறபாண்டிராசா வரவளைத்து நெச்சூற் குறுமரைனாட்டுக் கள்ளரை ஒடுக்கச் சொல்லி அந்த னாட்டையும் அவர்களுக்கு பாளையப்பட்டாக விட்டுக் குடுத்தார்கள். பறாக்கிறம பாண்டிய குத்தாலதேவர் குமாரர் சிதம்பரனாத குத்தாலதேவர், அவர் குமாரன் பாயுண்டபுலி குத்தாலதேவர் னாளையில் கயத்தாத்து வேட்டுமாற றாசாவுடைய தென்காசிக்குலசேகர றாசாவுக்கு ஒன்றுக்கொன்று விறோதமாய் சமர்வெகீமை நடந்தத்தில் குலசேகரறாசா

கிறாமம் ஆயப்பிள்ளையார்குறிச்சி, ஆயங்குடி, குறுங்காவனம் இந்த வகையிலுள்ள ஆயிரம் இடையர், வணிகர், ஆடுமாடும் நின்றுப் பிடித்து, சீரையூரை பிடித்து கையிலாசத்திற்கு கொண்டு போகுறபோது பாயுண்டபுலி குத்தாலதேவரும் சேர்ந்த சனமும் போய் குத்தி வெட்டி, சண்டையாய் நீரையூரை திறப்பி சீரையூரை திருப்பிக் கொண்டபடியினாலே, இராசா வெகு சந்தோஷப்பட்டு ஆயீர்சீரையை மீட்டபடியினாலே ஆயிற்குலங் காத்த பாயுண்டபுலி குத்தாலதேவரென்று பேருங்குடுத்து குலசேகர நெறிறெட்டைக்குளமும் அதினுடனே சேர்ந்த கிறாமமும் விட்டுக்குடுத்து வேண வெகும்மதியுங் குடுத்து ஆண்டனுபவித்துக் கொண்டுயிருந்தார். ஆயிற இடையரும் வணிகரும் யெங்கள் மானத்துக்கு அவலங்களும் வராமல் காப்பாத்தினபடியினாலே யெங்கள் குலம் யெல்லோரையும் யென்றென்றைக்கும் பாதுகாவலாக காத்துவரவேணும் யென்று கேட்டபடிக்கி பாதுகாவலாக செய்விச்சுக் குடுத்திருப்ப தால் அவர்களும் வளிபாடாக நடந்து வருகிறார்கள். ஆயற் குலகாத்தப் பாயும்புலி குத்தாலதேவர் குமாரர் குலசேகர குத்தாலதேவர், அவர் குமாரர் பாயும்புலி குத்தால தேவர், அவர் குமாரர் சேகர குத்தாலதேவர் னாளையில் கற்த் தாக்கள் மதுரைக்கோட்டையில் பாளையக்காறறெ யெல்லாம் வரவளைக்கிறபோது இருவரும் போய்க் காத்துயிருந்து கோட் டைக்கும் இவர் வகை மனுஷரும் நேமித்து ஊருக்கு வருகிற போது சிறுது திசைக்காவலாக கிறாமங்களும் சொந்த கிறா மங்களும் விட்டு மருநப்பதேவரும் நீரும் பேர்பாதியாய் ஆண்டனுபவித்துக் கொள்ளச் சொல்லி உத்திரவுபடிக்கி ஆண்டனுபவித்து யிருந்தார். அவர் குமாரர் ஆயகுலகாத்த பாயும்புலி குத்தாலதேவர் னாளையில் கற்தாக்கள் சொந்த கிறாமமாக விட்டுக்குடுத்ததில் சுந்திரபாண்டியபுரத்தே மரு தப்ப குத்தால பூபாலசமுத்திரம் யென்று அக்கிறகாற பிறதிஷ் டையுஞ்செய்து இராசாகோபால கோவிலும், புள்ளையார் கோவிலுங்கட்டி அக்கிறாகாறத்துக்கு நஞ்சைபுஞ்சைக்குந் தான சாசனம் பட்டயங்கள், இவர்கள்பேரும் யெளுதிக்கொடுத் தார்கள். அக்கிறாறம் பிறதிஷ்டை செய்விச்சுக் குடுத்த ஆயர் குலங்காத்த பாயும்புலி குத்தாலதேவர், அவர் குமாரர் ஸ்ரீவல்ல பறாம குத்தாலதேவர், அவர் குமாரர் குலசேகரறாம குத்தால

தேவர், அவர் குமாரர் பாயும்புலி குத்தாலதேவர், அவர் குமாரர் பறாக்கிறமபாண்டிய குத்தாலதேவர் னாளையில் திறநெல் வேலிச் சீர்மை ஆறாச்சிகட்டடப்பட்டு அசறத் கிபிலே நபாபுசாயபு அவர்கள் மகம்மது இசுமுக்கானவர்களை அனுப்பிவிச்சு, அவர் கள் வந்து றாசீயகம் உண்டாக வேண்டியதற்கு பாளைக்கா றரில் அனேகம் பேரையுஞ் சேகரித்துக்கொண்டு, நெல்கட்டுஞ் செவ்வல்பேரில் சமற்வெகீமை செய்ததில் ஒருனாள் சண்டை யில் பறாக்கிறம பாண்டிய குத்தாலதேவர் வெகுமுஸ்திப்பு செய்து நெல்கட்டுஞ் செவ்வல்சனத்தை அநேக சேவைகளைகு ...ளடையுண்ட முங் கீட்ட நெருங்க ளீதுகண்டு மகம்மது இசுமுக்கான் அவர்களுஞ் சந்தோஷமாய் புலித்தோல் கல்லணை வைத்த குதிரையும் ரெண்டு பல்லாக்கு களையுங் குடுத்து வேண வெகுமதியும் செய்து இராச சந்தராவு அதுனுடனே சேர்ந்த கிறாமமும் உம்பளமாக விட்டுக்குடுத்து ஆண்டனுபவித்துக்கொண்டு யிருந்தார். அவர் குமாரன் சங்கறகுத்தாலதேவர் னாளையில் திருநெல்வேலி சீர்மை றாசிகத்தப்புவணத்தீல வடகரைச்சின்னணைஞ்சாத தேவர் அடாசதவர்க் குலசேகரநேர் ரெட்டைக்குளம் இச்சந்தரவு சேகர சுந்தரப்பாண்டியபுரம்,கொடிக்குறிச்சு,சிவறாம பேட்டை, இவளவு கிறாமங்களும் அதினுடனே சேர்ந்த கிறாமம் ஆக இவளவு கிறாமமும் உத்துமலை மருதப்பதேவர் அடாசுத லாக கூட்டிக் கொண்டார். சங்கற குத்தாலதேவர் குமாரர் ஸ்ரீவல்லப றாமகுத்தாலதேவர் ஆண்ட பட்டம் 28, 29 பட்டம் என்னாளையில் ஸ்ரீ ஸ்ரீ கற்ணல் மற்க்கீசுவேல்துரையவர்கள் தெட்சண சீமைக்கி வந்தார்கள். அவர்கள் தீர்த்தபடிக்கி காணிக்கை உள்ளது குடுத்து அப்பால் ஸ்ரீ ஸ்ரீ லண்டன் துரை யவர்கள் னாளையில் குடுத்து னான் தலத்துக்கு வறுகிறபோது சாலுவையும் பச்சைக்குடையும் வெகுமதியுஞ் செய்து அனுப்பி விச்சார்கள். ஸ்ரீஸ்ரீ றசிங்டன் துரையவர்கள் னாளையில் கிஸ்து செலுத்திவிக்குறதற்கு நிறுவாகம் யில்லாமல் சித்தாதற்தி றொத்திறி இந்த ரெண்டு வருஷமும் கும்பனி மனுஷளை நெமுகஞ்செய்து காணுந்துகம் பாற்கிலும் ரெண்டு வருஷத் துப்பணத்தைக் காணாமல் காணுந்துகத்தை பாறத்துக் கொண்டுப் பளையப்படி காணிக்கை குடுத்து வரச்சொல்லி மகாராச மானியராசஸ்ரீ றசீங்க்டன் துரையவர்கள் உத்திரவு

குடுத்து சாலுவையும் வெகுமதியுஞ் செய்து ஸ்தளத்துக்கு அனுப்பிவிச்சார்கள். றாசமானிய ராசஸ்ரீ பாலீசு துரையவர்கள் னாளையில் கிஸ்தி வகைக்குப் பட்டயமுங் கட்டவில்லை. யிட்டு சாலுவை வெகுமதியுங் கட்டளையிட்டார்கள். மகாராசா மானிறாச ஸ்ரீ(ம)ம்பினியாரவர்கள் உத்திரவு பிறகாரம் கும்பினி காரியத்தில் மிகவும் கீழ்பணிந்து நடந்துகொண்டு யிருக்குறேன்.

# சமத்தூர் வாணவறாயக் கவுண்டன் வமுசாவளி

## D. 3040

தாறாபுரம் துக்குடி புள்ளாச்சி தாலுக்கா சாமதூற் பாளையக்காரன் வாணவராயக் கவுண்டன் என்னப்பட்டவருடைய வம்சாவளி முதலான கைபீது யென்னவென்றால்:

பூற்வத்தில் சோள தேசத்தில் தொண்ட மண்டலத்து வேளாளறென்று பேற் பிறசுத்திப்பட்ட நற்குடி னாற்பத்தி யெண்ணாயிறம் பசும்குடி, பன்னீறாயிரம் ஆக அறவதுனாயிற கோத்திரக் காற்களில் பிற்காலம், ரிஷிபகிறி சோளறாஜா மகளை மொரைச் சரிந்த சேறறாசா பாணிகிறஹணம் பண்ணிக் கொண்டபடியனாலே சோள றாசாவின் மகள் தனக்கு சீதனம் தன் தோப்பனாரை கேட்டுக் கொண்டபடியனாலே அந்த சமயத்தில் நற்குடி னாற்பத்தி யெண்ணாயிரம் குடியில் யெண்ணாயிறம் குடி, சீதனம் கொடுத்தபடியனாலே அப்போ வறப்பட்ட வேளாளறுக்கு தென்திசை னோக்கி வந்த படியனாலே தென்திசை வேளாளரென்று பேற் வறப்பட்டது.

சேறதேசத்துக்கு வறப்பட்ட வேளாளறுக்கு சேறனுக்கு கொங்கணரெண்ணும் பேற்யிறுக்குறபடியனாலே கொங்கு வேளாளரென்றும், கொங்கு யிறுவத்திநாலு நாடுயென்றும் யேற்ப்படுத்தி யிறுக்கும் நாளையில் அகாலத்தில் யென் வம்ச ஸ்தனான வாணக் கவுண்டன் யென்ங்குறவன் கீறனூற் காணியாளானாயி இறுந்து நறையனூற் நாடு நாட்டு ஆதிபத்தியம் செயிதுக் கொண்டு யிறுந்தான்.

வாணக்கவுண்டன் யென்ங்குறவன் வம்ச பறம்பறையாயி நறயனூற் நாட்டாண்மை ஆண்டுக்கொண்டு வறும் நாளையில் ஆக்காலத்தில் வய்யாபுறி நாட்டுலே பாலசந்திர மென்ங்குற பட்டணத்துலே பாலறாசா யென்குறவன் பிறப

விச்சு செனசேகறம் செயிதுக்கொண்டு யெல்லை மாறாட்ட மாஇ நறயனூற் நாட்டையும் தான் கட்டிக்கொள்ள வேணு மெங்குறதாக னெனச்சு கீறனூரன் பேறிலே, செனசேகறத் துடனே வந்தபடியனாலே அந்த சமயத்தில் யென் வம்சத் துலே அக்காலத்துக்குள்ள பிறமய வாண கவுண்டன் யென்ங் குறவன், வாலறாசாவுடனே சண்டை பண்ணி நிறுவாகமில் லாமல் கீறனூற் விட்டு யெடுபட்டு, தன் குடிசனங்களுடனே நறயனூற் நாட்டுக்கு மேற்க்கு னாற்க்காத வளிஇல் வறாக மலை சாறலிலே, காடாரண்ணியமாஇ யிறுக்குற நல்லுறுக்க னாட்டுக்கு சேந்த வனத்துலே வந்து யிறுந்தான்.

நல்லுறுக்க நாட்டுக்கு சேந்து யிறுக்கப்பட்ட வனத் துலே வந்து இறுக்கப்பட்ட பிறவிய வாணக்கவுண்டன் யென்ங்குறவன் தன் யெதிராளியான பாலறாசா இறுக்கப் பட்ட பாலசமுந்திரத்துக்கு பகறமாக, ஊரு வுண்டு பண்ண வேணுமென்று னினைச்சு, தன்னுடைடய குடிசனங்களாலே காட்டை வெட்டிவிச்சு புஞ்சை னிலங்களையும் உண்டு பண்ணி, அந்தயிடத்தில் குடியேத்தி வீடுகள் கட்டி வச்சு அந்த ஊருக்கு சமுதிரம் யென்று கிறாமனாமதேயம் வச்சு கொண்டு ஷெயூறில் வாசம் பண்ணிக் கொண்டு இறுந்தான்.

காடுலே சமுதிரம் யென்று ஊறு கட்டிக்கொண்டு வாசம் பண்ணிக் கொண்டு இறுக்கப்பட்ட பிறவிய வாணக்கவுண்டன் யென்ங்குறவன் நாம் பாலறாசாவுக்கு சமானமாக யிறுக்க வேணுமென்று னினைச்சு அக்காலத்தில், றாச்சியாதிபதி களான நறபதி, சிம்மாசனாதிபதியான பெனுகொண்ட றாசி யம் ஆளப்பட்ட றாயற்சமஷ்சானம்இ போயிக் காத்து யிறுந் தான்.

றாயற் சமுஸ்தானத்தில் காத்துயிறுக்கும் னாளையில் பொகு நாள் பேட்டியில்லாதவனாயியிருக்கும் நாளையில் ஒரு நாள் சமயத்தில் றாயற் அவர்கள் காசா கொலுவுக்கு முன்பாக போறுக்கு விட்டு காளகம் பாற்க்கப்பட்ட தகற்கிடாஇ.விதறி, பட்டணத்துக்குள்ளாக திறிஞ்சிக் கொண்டியிருக்கிர சமயத்தில், யென் வம்சஸ்தனான, பிறவியவாணக் கவுண்டன் யென்குறவன், றாய சமுகத்துதகர்கிடாஇயென்று அறிஞ்சிக் கொண்டவனாயி

அந்த கிடாய்யைப் பிடிச்சு, காது ரெண்டு, வால், கொம்பு ரெண்டு, இதுகளை அறுத்து போட்டு அந்த கிடாய்யை றாய சமுகத்துக்கு ஓட்டி விட்டான்.

றாயற் அவற்கள், சமுகத்து காளம் வேடிக்கைக்காக யிறுக்கப்பட்ட கிடா, மூளியாக, ரகுத்தத் தொடனே, வறப்பட்டத்தை பாத்து, யிந்த சமுகத்து, கிடாயென்று, அறிஞ்சி, இப்படிக்கு செய்யப்பட்டவன், நம்முடய றாச்சியத்துக்குள்ளாக, இல்லையென்று னினைச்சு, ஆலொசனையின் பேறிலே பறாயி தேசத்துலே யிறுக்கப்பட்டவன் ஒரு காறியாற்த்தமாக யிவடத்துக்கு வந்து யிறுக்கப்பட்டவன் செயிது யிறுக்கப்பட்ட வேலையென்று னிச்சயம் செயிது கொண்டு அந்த நபரை கண்டுபிடிச்சு, தறிவிக்க வேணுமென்று காறிய கற்த்தாக்கள், முதலான பேற்களுக்கு வுத்திரவு செயிதார்கள்.

றாயரவற்கள் வுத்திரவு படிக்கி காறியகாற்கள் முதலான பேற்கள் பிறவிய வாணக் கவுண்டன் யென்ங்குறவன், அந்த கிடாய்யை காது அறுத்த பக்கத்துலே, னின்றுகொண்டு யிறுக்கப்பட்டவனை கண்டுபிடிச்சு, றாய சமுகத்துலே கூட்டிப் போஇ யெதிரை விட்டாற்கள்.

றாயற் அவற்கள், தகற்கிடாவை, மூளி பண்ணினவனை பாத்து, னீ வந்து இறுக்கப்பட்ட காறிய மென்ன வென்று வுத்திரவு செயித படியனாலே யென் வம்சஸ்தனான, பிறவிய வாணக்கவுண்டன் தன் யோகட்சேமங்கள் யெல்லாம் சோள தேசத்துலே யிறுந்து கொங்கு தேசத்துக்கு வந்தனாள் வரைக்கும், பின்னையும் தகற் கிடாவை காது அறுத்தனாள் வரைக்கும் சவிஸ்தாரமாக, சமாசாரம் அறிய பண்ணிக் கொண்டு, வணங்காமல் பறாக்கிறம சாலியாக னின்று யிறுக்கப்பட்டதை பாத்து, சந்தோஷப்பட்டு ஒனக்கு யென்ன வேணுமென்று கேட்டபடியனாலே, யென்காணியாட்சியான நறயனூற் நாட்டு கிறாமங்களையெல்லாம் பால சமுதிரத்து பட்டணத்து, பால றாசா கட்டிக் கொண்டு நான் யெடுபட்டு, வறாஹமலை சறுவிலே வனாந்திரத்திலே வந்து சேந்து கஷ்ட்டப்பட்டு வனத்தையெல்லாம் வேவெச்சு, யென் யெதிறாளிக்கு பிறிதியாக

சமுந்திரமென்று, உண்டு பண்ணின கிறாமத்தை, யெனக்கு உப்பளிக்கையாக தயவு செய்ய வேணுமென்று கேட்டு கொண்டான்.

அந்த சமயத்தில், றாயற் அவற்கள் சந்தோஷப்பட்டு ஒன்னுடைய பேற்யென்னவென்று கேட்டு அறிஞ்சிக்கொண்டு, நம்முடய சமூகத்தில் வணங்காமல் யிருந்தபடியனாலே வணங்கா முடி வாணராயனென்று பேறும் குடுத்து, பல்லாக்கு, வுபய சாமறம், சுறுட்டி, சூறியபான், வெள்ளைகோடை, பச்சகோடை பூசக்கிறவாளகொடை, பஞ்சவற்னகொடை, அனுமடால் கெறுடடால், மகறடால், வசவசங்கறடால், வெட்டுப்பாவாடை, ஆனைமேல் பேறிகை, ஒட்டகைமேல்நகாறு, குதிரை மேல் டக்கா, யெறுத்துமேல் தம்மட்டம், வெங்கலமடி துடும்பு, தாரை, பூறி, சின்னம், மலாறி, யெங்காளம், சிக்கு மேளம், சாமதுரோ அறவெண்டயம், வீரகண்டாமணி தங்கனிகளம், தங்கமிஞ்சு, றணபாஷிக்கம் முத்துதுறாயி, ஒண்டிரேக்கு, நாகாக்கணம், வயிக்கல்புறி, கறடிமயிற், புலி செறம்ம், முத்தொண்டி, பச்சொண்டி, குதிரைக்கு மொகசல்லி, பக்க சல்லி, அண்டசல்லி, கால்தண்டை, இது முதலான பிறுது களும் குடுத்து பட்டாபிஷேகம் பண்ணி, பட்டத்து ஆயுதமும் குடுத்து, நல்லுறுக்க நாட்டுலே சம்பாதி மலைக்கு மேற்கு வறாஹமலைக்கும் வடக்கு, நகறம் கரைப்பாடிக்கும் தெற்கு, ஒத்தப்பனை பாடிகுளத்துக்கும் கிளக்கு, யிந்தனாற்ப்பாங்கு சதிரத்தில், கீள் மேல் னாற்காதவளி, தென்வடல் யிறுகாத வளி, இந்த பூமிக்கு னீயே பாளையக்காறனாக யிறுந்து ஒன் வம்சபறம்பரையாய், சந்திறாதித்தற்வரைக்கும் பாளையப் பட்டு ஆண்டு அனுபவிச்சுக் கொண்டு வரச் சொல்லி பட்டா பிஷேகமும்பண்ணி, துறுகு யீட்டிகள், பச்ச யீட்டிகள், வெள்ளி முலாம் பூச்சு ஈட்டிகள், தங்கமுலாம் பூச்சுஈட்டிகள், தங்க முலாம்போட்ட பட்டா கத்தி, தங்கமுலாம் போட்ட சமுதாடு, தங்கமுலாம் போட்ட வங்கி, தங்கமுலாம் போட்ட துபாக்கி, இது முதலான ஆயுதங்களும் குடுத்து அறவத்தி னாலு பேற் அமற்காரையும் குடுத்தாற்கள். றாய சமுஸ் தானத்துலே சமுத்திரமென்குற புரத்துக்கு பாளையக்காரர் யென்று பட்டம் கட்டிக் கொண்டு றாய சமுஸ்தானத்துலே சகல பிறுதுகள், ஆயுதங்கள், உண்டு பண்ணி கொண்டவறாயி

பிறவிய வாணறாயக் கவுண்டன் யென்று பேற்பிறசுத்திப் பட்டவறாயி, ஆனைகுந்திபட்டணம் விட்டு தெற்குனோக்கி வந்து, சிறிது வேடசனங்களை குமுக்கு கூட்டிக் கொண்டு வந்து பாலசமுதிர பட்டணத்து, பால றாசா ஒடனே யுத்தம் செயிது, பாலறாசாவை செயிச்சு மட்டடக்கி போட்டு பால சமுதிர பட்டணத்தில் வேடசாதியில் விசயகிறி சின்னோப னாயக்கனுக்கு பட்டமும் கட்டி போட்டு, தம்முடைய ஊறான, சமுத்திரம் பிற தேசத்துக்கு வந்து சேந்து, தம்முடைய பாளையப்பட்டான றாயர் உத்திரவு பண்ணின அத்துக்களிலே காடுகளையெல்லாம் வெட்டி, அந்தந்த இடங்களிலே கிறாமங்கள் உண்டு பண்ணிக் கொண்டு பாளையகாற் பிறபுத்துவம் பண்ணிக் கொண்டுயிறுந்தாற்.

அக்காலத்தில், றாச சமுஸ்தானாதிபதியானஅரிஹர றாயற் அவர்கள் தயவு செயிது, பிறுதுகள் ஆயுதங்களுடனே சமத்துாறு வாணறாயக் கவுண்டற் யெண்ணப்பட்ட பேற் பிறசுத்திப் பட்டவர்களாஇ யிறுந்தாற். அந்த னாளுக்கு சாலீவாகன சகாபுதம் 1000 முதல் சாலீவாகன சகாபுதம் 1706 வரைக்கும் வருஷம் 706க்கு பட்டம்ங்களுடைய வறிசைகளும் அவாளவாளுடைய நடத்தையளும், இதின் கீளே யெளுதி விருகுறது.

பிறவிய வாணறாயக் கவுண்டற் நாள் முதல் பறம்பரையிலே கிறாமங்கள் பூமிகள் உண்டு பண்ணி, சமுதிரப் பாளையகாற்யென்று பேற் பிரசுத்திப்பட்டவர்களாஇ, றாயற் சமுஸ்தானத்தில் ரொம்பவும் கட்டு பண்ணின படிக்கு நடந்துக் கொண்டு பாளையப் பட்டு ஆண்டுக் கொண்டு வந்த குஞ்சுவாணறாயக் கவுண்டற் நாள் வரைக்கும் பொகு காலமான படியனாலே பட்டம்ங்களுடைய வறிசையள்விபறம் தெரியவில்லை.

### சாலீவாகனசகம் 1110க்கு மேல்

1. குஞ்சண வாணறாயக் கவுண்டற்
   பட்டம் ஆண்ட வருஷம் 33
2. யிவற் குமாரன் பிறமண வாணறாயக்கவுண்டற்
   பட்டம் ஆண்ட வருஷம் 27

3. யிவற் குமாரன் வாணறாயக்கவுண்டற்
பட்டம் ஆண்ட வருஷம் 32

4. யிவற் குமாரன் நஞ்சய வாணறாயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட வருஷம் 19

5. யிவற் குமாரன் வாணறாயக்கவுண்டற்
பட்டம் ஆண்ட வருஷம் 13

6. யிவற் குமாரன் பிறமணவாணறாயக் கவுண்டற்
பட்டம் ஆண்ட வருஷம் 28

7. யிவற் குமாரன் குஞ்சணவாணறாயக் கவுண்டற்
பட்டம் ஆண்ட வருஷம் 31

8. யிவற் குமாரன் நஞ்சயவாணறாயக் கவுண்டற்
பட்டம் ஆண்ட வருஷம் 22

9. யிவற் குமாரன் அடக்கிலன் காத்தவாணறாயக் கவுண்டற்
பட்டம் ஆண்ட வருஷம் 25

10. யிவற் குமாரன் பிறமணவாணறாயக் கவுண்டற்
பட்டம் ஆண்ட வருஷம் 21

11. யிவற் குமாரன் வாணறாயக் கவுண்டற்
பட்டம் ஆண்ட வருஷம் 12

12. யிவற் குமாரன் பிறமணவாணறாயக் கவுண்டற்
பட்டம் ஆண்ட வருஷம் 15

13. யிவற் குமாரன் அடக்கிலன் காத்தவாணறாயக்கவுண்டற்
பட்டம் ஆண்ட வருஷம் 28

14. யிவற் குமாரன் நஞ்சய வாணறாயக் கவுண்டற்
பட்டம் ஆண்ட வருஷம் 20

15. யிவற் குமாரன் வாணறாயக் கவுண்டற்
பட்டம் ஆண்ட வருஷம் 30

16. யிவற் குமாரன் குஞ்சணவாணறாயக்கவுண்டர்
பட்டம் ஆண்ட வருஷம் 10

17. யிவற் குமாரன் வாணறாயக் கவுண்டற்
பட்டம் ஆண்ட வருஷம் 21

18. யிவற் குமாரன் பிறமணவாணறாயக் கவுண்டற்
பட்டம் ஆண்ட வருஷம் 22

19. யிவற் குமாரன் பிறமண வாணறாயக்கவுண்டற்
பட்டம் ஆண்ட வருஷம் 53
20. யிவற் குமாரன் நஞ்சய வாணறாயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட வருஷம் 25
21. யிவற் குமாரன் அடக்கிலன் காத்த வாணறாயக்
கவுண்டற் பட்டம் ஆண்ட வருஷம் 42
22. யிவற் குமாரன் பிறமிய வாணறாயக் கவுண்டற்
பட்டம் ஆண்ட வருஷம் 21
23. யிவற் குமாரன் நஞ்சய வாணறாயக் கவுண்டற்
பட்டம் ஆண்ட வருஷம் 26
24. யிவற் குமாரன் பொன்னுமலை யாண்டி
வாணறாயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட வருஷம் 17

24 596

முதல் பட்டக்காரனான குஞ்சண வாணறாய கவுண்டர் நாள் முதல் ஒன்பதான் பட்டக்காரனான, அடக்கலன் காத்த வாணறாயக் கவுண்டற் நாள் வரைக்கும் றாய சமுஸ்தானத்துலே கட்டுசெயித படிக்கு நடந்துக்கொண்டு வம்ச பறம்பரையிலே சமுத்திரத்துக்கு சேந்த பூமிகளில் கிறாமங்கள் பூமிகள் உண்டு பண்ணி, பாளையகாறர்கள் யென்று பேற் பிறசுத்திப்பட்டவற்களாஇ பாளையகற் ஆண்டு கொண்டு வந்தாற்கள்.

பத்தான் பட்டகாறன் பிறமண வாணறாயக் கவுண்டர் நாளையில், றாயச் சமுஸ்தானத்துலே தட்சன பாண்டியம் சிம்மா சேனாதிபதியென்று, மதுரை சமுஸ்தானத்துக்கு, கொட்டிகம் னாகம னாயக்கற் விசுவனாத னாய்க்கறுக்குப் பட்டாபிஷேகமாஇ, கணுவாஇக்கு, கீள்ப்பட்ட கெடிகளுக்கு யெல்லாம் றாசாவாஇ யெளுந்தறுளிஇறுக்கும் நாளையில் அக்காலத்தில் றாயற் அவற்கள், பாளையகறுகளெயெல்லாம் னாயக்கரவற்கள் ஆ(க்கினை)க்கு வுள்ப்பட்டு நடந்து கொண்டு வரும்படியாக உத்திரவு செயித படியனாலே, அந்த நாள் முதல், மதுரை சமுஸ்தானத்து நாயக்கற் அவற்கள் பேட்டி செயிதுக்கொண்டு

நாயக்கறவற்கள் கட்டளை யிட்டபடிக்கு நடந்து வறுகுறதாக நெமுகம் செயிது, யெளுவத்திரெண்டு கொத்தளத்துக்கும், பெளுவத்திரெண்டு பாளையகாற் காவல் காத்து வறும்படியாக நெமுகம் செயித சமயத்தில், யென் வம்சஸ்தரான பிறமணவாணாறாயக் கவுண்டறுக்கு, ஒருக்கொத்தளம் காத்துவறும் படியாக நெமுகம் செயிது கணுவாஇக்கு கீள்ப்பட்ட பாளையப் பட்டுகளுக்கு முந்தின பாளையகாற் யென்று பேறும் குடுத்து, தெசாவதாரத்து சீனுஒடனே இரெட்டவாள் ஆயுதமும் குடுத்து, சகல பொகுமதியும் செயிது ஙிகுதிபடிக்கு கொத்தளம் காவல் காத்துக் கொண்டு, சாமத்தூற் பாளையக்காற் யென்று பேற் பிறசுத்திப் பட்டவற்களாஇ, மதுரை சமுஸ்தானத்துலே அந்தந்த காலத்துக்கு றாச்சியம் பிறபுத்துவம் பண்ணப்பட்ட னாய்க்கறவற்சள் கூட்டத்தில் நிகுதி செயித படிக்கு அறமனையாற் கட்டளையிட்டபடிக்கு நடந்துக் கொண்டு, பாளையப்பட்டு ஆண்டு அனுபவிச்சுக் கொண்டு, யிறுவதாம்பட்டம் நஞ்சவாணறாயக் சவுண்டற் நாளை வரைக்கும் அறமனையாற், ஙிகுதி செயித படிக்கு நடந்து கொண்டு, சமத்தூற் பாளையப்பட்டுக்கு சேந்த கசுபா சமுத்தூற் கிறாமும், 1, சோமன்துரைகிறாமும், 1, கொட்டாம்பட்டி கிறாமும், 1, இந்த மூணு கிராமங்களுக்குச் சேந்த உப கிறாமங்கள் பதனஞ்சு, (ஆக) கிறாமும் 18. பதினெட்டும் ஆண்டு அனுபவிச்சு கொண்டு வம்ச பறம்பறையாஇ தேவாலயம் பெறம்மாலயங்களுக்கு பூமிகள் குடுத்து நடப்பிவிச்சுக் கொண்டு வம்ச பரம்பரையாஇ பாளையப்பட்டு ஆண்டு அனுபவிச்சுக் கொண்டு வந்தாற்கள்.

பத்தொன்பதாம் பட்டக்காரனான, பிறமண வாணறாயக் கவுண்டற் குப்பம்மாள் யென்ங்குற பட்டஸ்ரீயுடனே பாளையகாற் பிறபுத்துவம் பண்ணிக்கொண்டு வரும் நாளையில் வைப்பாக கன்னட சாதியில் ரங்கம் என்ங்குறஸ்ரீ 1 கெட்டு போன பிறாமண சாதியில் ஒலையிடு சாதி குள்ளம் என்றுபேர் உள்ள ஸ்ரீ 1 இந்த ரண்டு ஸ்ரீகளையும் வைய்பாக வச்சுக்கொண்டு, குலஸ்ரீ யுடனே பாளையக்காற் பிறபுத்துவம் பண்ணிக் கொண்டு வரும் னாளையில் வைப்பாக வச்சுக் கொண்டு யிறுக்கப்பட்ட ஸ்ரீகளுக்கு புத்திர சன்த்தானம் உண்டாஇ அந்த புள்ளைகள் கட்டுப் பண்ணின வூளியங்கள் செயிது

கொண்டு யிருந்தார்கள். இப்படிக்கு யிறுக்கும் நாளையில் ஷெ பிறமய வாணறாய கவுண்டற் அந்திய காலத்தில் தன்னுடைய பட்டஸ்ரீ குமாரனான நஞ்சய வாணறாயக் கவுண்டறுக்கு பட்டம் கட்டி, தம்முடைய வயிப்பாட்டி பிள்ளைகளை காப்பாத்தி கொண்டு வறச் சொல்லி, பாளையப்பட்டுக்கு சேந்த கிறாமங்களிலே பணம் காசிகள் யெடுத்து பாளையப்பட்டு செலுத்திவறும் படியாயி, ஊளியங்கள் இட்டு நடந்து வறும் படியாக கட்டளையிட்டார்கள்.

அதின் பிற்காலம் நஞ்சய வாணறாய கவுண்டற் பாளையகாற் பிறபுத்துவம் பண்ணிக் கொண்டு வறுகுர நாளையில், அக்காலத்தில் மயிசூறு சமஸ்தானாதிபதிகளான கற்த்தாக்கள் நாளையில், சமத்தூர் பாளையப்பட்டுக்கு, நிகுதி வருஷம் 1க்கு றாசகோபாலி 600 பொன் னிகுதிசெயிதபடியனாலே னிகுதி படிக்கு வறுஷம் பிறதியும் அறமனைக்கு பணம் செலுத்திக் கொண்டு சமத்தூற் பாளையகாறுக்கு சேந்த தாஇ கிராமமும், மூணு உபகிராமமும் பதினைஞ்சி இந்த பதினெட்டு கிராமமும் பாளையப்பட்டாஇ ஆண்டு அனுபவித்துக் கொண்டு வந்தாற்கள்.

இப்படிக்கு அறமனையாற் கட்டளையிட்ட படிக்கு மஇசூறு சமுஸ்தானத்துக்கு னிகுதி படிக்கு அறமனைக்கு பணம் செலுத்தி விச்சுக் கொண்டு, பாளையகாற் ஆண்டு அனுபவித்துக் கொண்டு வறும் நாளையில், யென் பாட்டனாற் யிறுவத்தி ரெண்டான் பட்டக்காறனான, பிறமியண வாணறாயக் கவுண்டற் நாளையில், அக்காலத்தில் நவாப்பு அயிதறல்லீகான் துரைதனத்தில் அக்காலத்தில் யெனக்கு ஆறான் தலமுறைக்காரனான பத்தொன்பதாம் பட்டக்காரனான, பிறமியண வாணறாயக் கவுண்டற் வயிப்பாட்டி மகன் வம்சஸ்தனான நல்லாண்டி யென்ங்குறவன் கோயமுத்தூற் கெடிஇலே, அறமனை அதிகாரம் பண்ணப்பட்ட மாதே றாசாஅவற்களை அனுசறிச்சு, சமந்தூற் பாளையப்பட்டு னிகுதியாஇ யிறுக்கப்பட்ட அறனூறு பொன் சாஸ்தி வருஷம் ஒண்ணுக்கு, நானூறு பொன் னிகுதி செயிது இறுந்த சமயத்தில் அறமனையிலே விங்கடமாக சோமாதுரை கிறாமத்துக்கு நல்லாண்டி யென்ங்குறவன் பணம் செலுத்துவிச்சு கொண்டு நல்லாண்டி கவுண்டன் யென்ங்குற பேற்ப்பட்டு வந்தான்.

யென் தோப்பனாற் பொன்னுமலையாண்டி வாணறாயக் கவுண்டர் அறமனையாற் விட்ட னிகுதிபடிக்கு நடந்துகொண்டு, பாளையகற் பிரபுத்துவம் பண்ணிக்கொண்டு யிறுந்து யென் தோப்பனாற் காலம் செண்ணுபோஇ, யென் சிறு தோப்பனாற் பிறமியக் கவுண்டற் யெத்துல னாயக்கன் முதலான பாளை யகாற் சில்லரைக்காக திம்மக்கவுண்டற் அறமனைக்கு அறிய பண்ணிக்கொண்ட சங்கதிக்காக, யென் சிறுத்தோப்பனாரை ஸ்ரீரங்கபட்டணத்துக்கு கூட்டிக் கொண்டு போனாற்கள். அந்த சமயத்தில் நான் சிறு புள்ளையாஇ அஞ்சாறு வயிசுள்ள வனாயி இறுக்குற சமயத்தில், யென் வம்சத்தில் பெறியோற் கள் வயிப்பாட்டிப் புள்ளை வம்சஸ்தனான நல்லாண்டிக் கவுண்டன் மகன் முச்சடயாண்டிக் கவுண்டன் யென்ங்குறவன், சிறுது கள்ளற்களை சேத்திக் கொண்டு மஹாறாச ஸ்ரீகும்ப னியாற் அவற்கள் சென்னப்பட்டணம் விட்டு வருகிறார் யென்ங்குற தாவாயிலே பாளையக்காற்களை யெல்லாம் அலாகா இறுக்குற சமயத்தில் தம்பாக்கவுண்டன் என்ங்குற வனுடனே சேந்து குமுகு கூட்டிக்கொண்டு வந்து சீமை களிலே யெல்லாம் தீயிபோட்டு சுட்டு கொள்ளையடிச்சு கொண்டு யிறுக்குர சமயத்தில், யென்னையும் யென்னை சேந்த சனங்களையும் ஊத்துக்குளி பாளையகாற் காளிங்கறாய கவுண்டரையும் அவரை சேந்த சனங்களையும் கைபிடியாக பிடிச்சி முச்சடையாண்டிக் கவுண்டன் சோமந்துரை கிறாமத் துலே கைதுலே வச்சு பந்து பண்ணி இறுந்தான்.

அந்த சமயத்தில் சில்லரை கள்ளதனம் பண்ணிகொண்டு இறுக்கப்பட்ட முச்சடையாண்டி கவுண்டன் யெண்ணப் பட்டவரை கையிலே சிக்கிகொண்ட வேளாளசாதி செனங்கள் சேர சனமான புள்ளாச்சி பிறவியாக் கவுண்டனை வெட்டிப் போட்டான். அவன் பிறவியாக் கவுண்டனை தலையெ வெட்டுகுர சமயத்தில் பிறவியாக் கவுண்டன் யென்ங்குரவன் னீ சமத்தூறு பாளையக்காறுக்குத் தொண்டனா யிறுக்கப்பட்டவன், யென்னை வெட்டினியே றாச்சியத்துலே யுள்ள வேளாளற் ஒன்னை சமத்தூற், பாளை யக்காறுக்கு தொண்டன் யென்று சொல்லுவாற்களே அல்லா மல், வுள்ளத்தே ஒளிக்கமாட்டாற்களே யென்று சொல்லி போட்டு பிறாணத்தை விட்டான்.

நானும் வூத்துகுளி பாளையகாரறும் குஞ்சு குளந்தையள் சகிதமாஇ சோமந்துறையிலே ஙகதுலே யிறுக்குற போது, யென் சிறு தோப்பனாறான பிறமியக் கவுண்டற் ஸ்ரீரங்கப்பட்டினத்துலே டிப்பு சுலுதான் அவற்களுக்கு அறிய பண்ணி அறமனை சனங்களை கூட்டிக் கொண்டு வந்து, முச்சடையாண்டி கவுண்டனையும் அவனுக்கு குமுக்கா இறுக்கப்பட்ட தம்பாக் கவுண்டனையும் கைபிடியாக பிடிக்க வேணுமென்று னினைச்சவிடத்தில் தப்பி விச்சுக்கொண்டு மலையாளம் பிறாந்தியத்துக்கு முச்சடை யாண்டி கவுண்டன் ஓடி போயிவிட்டான்.

னான் யென் சனத்துடனே சமத்தூறுக்கு வந்து சேந்து, சமத்தூற் பாளையப்பட்டுக்குச் சேந்த கொட்டாம் பட்டி சோமந்துறை இந்த மூணுக்கும் சேந்த வுபக்கிறாமங்கள் சயிதமாஇ ௵ ஒண்ணுக்கு ஆயிறம் பொன் னிகுதி செயித படியனாலே னிகுதி படிக்கு அறமணைக்கு பணம் செலுத்திக் கொண்டு கிறாமங்கள் பாளையப்பட்டு அனுபவிச்சுக்கொண்டு வந்தேன்.

நாளது மஹாறாச றாசஸ்ரீ கும்பிணி துறையார் கடாட்சம் செயிது யென் மான மறியாதிகளை விசாரிச்சு யென் பாளையப்பட்டுக்கு சேந்த சமத்தூர் கொட்டம்பட்டிக்கு சேந்த வுபகிறாமும் பத்து ஆக பனிரெண்டு கிறாமத்துக்கும் வறுஷம் பிறிதியும் கண்டு முதலான பேறிசுலே பத்தில் மூணு சாறி செயிது, சிபந்தி சாதலவாறு சயிதமாஇ கூட்டி குடுத்து தயவு செயிது இறுக்குரபடியனாலே சிவந்தி சாதலவாறு தவிர கண்டு முதலான பேறிசுலே பத்தில் யேளு சறுக்காறுக்கு செலுத்திக் கொண்டு வருஷ பிறிதியும் சறுக்காறுலே கட்டளையிட்ட னிகுதி படிக்கு பணம் கட்டிக் கொண்டு மேல் யெளுதப்பட்ட கிறாமங்கள் அனுபவிச்சுக் கொண்டு இறுக்குரேன்.

பூற்வம் முதலாக யென் வம்சாவளி முதலான வறலாறுக்கு காலாந்திரமான படியனாலேயும் தகவலாஇ இருக்கப்பட்ட பட்டயங்கள் முதலானதுகள், றாசீகங்களிலே ஙகசோந்து போஇவிட்டது.

ஹசறுலே இறுக்கப்பட்ட ஆதரவுகளுலேயும் யென் வம்சத்துலே பெறியோறற்கள் பேறிலே சொல்லப்பட்ட கிரந் தங்கள் நாலேயும் அகப்பட்ட பட்டயங்கள் நாலேயும், தெறிய படுத்திக் கொள்ளலாச்சுது.

பூற்வத்தில் றாய சமுஸ்தானத்தில் றாயறவற்கள் கடாட் சயத்துநாலே சகல பிறுதுகள் முதலானதுகள் உண்டாஇ, வாணறாய னென்று றாயபட்டாதிகாறியாஇ யிறுந்த வாணறாய கவுண்டன் யென்று பட்டபேறுலே மஹாறாசஸ்ரீ கும்பிணி துரையள் கடாஷ்சயத்துக்கு பாத்திரனாயி கட்டு பண்ணின படிக்கு ஆசருலே நடந்து கொண்டு சமுத்திரனகற் குடி இருப்புக்காரனாஇ யென் பெரியோர்களை அடுத்து யிறுந்த வம்சத்து சனங்கள் சஇதமாஇ யென் சேர சனத்துடனே னூத்திஅன்பது சனத்துடனே அஹன்னானியாஇ காலட்சேபம் பண்ணிக் கொண்டு வறும்படியாக, நடப்பிவிச்சுக் கொண்டு மஹாறாசஸ்ரீ கும்பிணி துறையவற்கள் கடாஷ்சயத்துக்குப் பாத்திரனாஇ சறுக்காறுக்கு சாறீ பாளையக்கார னென்று பேற்ப்பட்டவனாகி ஆசருலே காத்துக் கொண்டு இருக்குரேன்.

சமத்தூர் வாணறாயக் கவுண்டன் றுசு

# திண்டிக்கல் வகையறாவுக்குச் சேர்ந்த போடினாய்க்கர் பாளையப்பட்டு வமுசாவளி

## D : 3850

பூவுலிங்கம்யெண்ணப்பட்டவன் யெழுதிய போடினாயக்கன் வமுசாவழி வரலாறு.

சீல்லவாற்துலம் போடினாய்க்கனூர் வமுசாவழி கணக்கு. ஆதினாளையில் பாளையப்பட்டு காசலரெவு உண்டாகிய நாள் முதல் யிதுவரைக்கும் நடந்த சரித்திரங்களுக்கு யெழுதிய விபரம்.

சாலிவாகன சகாற்தம் 1258. கலியுக சகாற்தம் 4437. இதன் மேல் செல்லாநின்ற ஈஸ்வர வருஷம், வையாசி மாதம், 27 உ முதல் ஆதினாளையில் எங்களுடைய வம்முசம் குத்திதேசத்துக்கு துரைத்தனமாயிருந்தாற்கள். அப்படியிருக்குற னாளையில் வடக்கேயிருந்து பாட்சாயி முகலாயதார் வந்து உயித்தியஞ் செய்து சீர்மையை அபகரித்துக்கொண்டார்கள். அப்போது சீர்மையிலிருந்த குடிபடையள் சகலத்திறாளும் தெக்ஷணப்பிற தேசம் னோக்கி அவாளவாளுக்குத் தோணின இடங்களிலே சார்புகளுண்டுபண்ணிக் கொண்டிருந்தார்கள். அதின்மேல் நாமும் புறப்பட்டு, கணவாய்க்கிமேல் ஒரு கிறாமத்தில் அஞ்சு வருஷங் குடுத்தனஞ் செய்து கொண்டிருந்து, அப்பாலவடம் விட்டு கணைவாய்க்கிப்பறம் மளசை கிறாமத்தில் வந்திருந்து, அதுவிட்டு தேவளுச்து மரிதியில் வந்திருந்து, அப்புறம் வைகைக்கு அருகாண்மையில் உத்திரபாரிசக்கரையில் நடங்கத்தில் வந்திருந்தோம். அப்போதைக்கி நம்முடைய சீர்மையிலிருந்து கலாபத்துக்காக வந்திருந்த உத்தார் உறவின்முறையார் சார்பு உண்டுபண்ணிக் கொண்டிருந்தபேர்கள் நம்மைக்கண்டு மரியாதை செய்து வைத்திருந்தார்கள். இப்டியிருக்குற னாளையில் இந்த சீர்மைவனசஞ்சாரமாய், வனாந்திரமாய், அவருபமாய்

அதிலே பத்து கிறாமம் வரைக்கும் பூனையாத்து றாசாக்களுக்குள் குடித்தனஞ்செய்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் நம்மை அளைத்துக்கொண்டு போய் ஷ் ராசா அவர்களிடத்தில் பேட்டி செய்து வைக்கிறோமென்று சொன்னார்கள். அதற்குபின் பிறகுப்பாற்துக்கொள்ளலாம் இப்போது நாம் கைமெலிந்து வந்திருக்கிறோமென்று சொல்லி விட்டார். அப்படியிருக்கும் பொது ஷ் றாசா அவர்கள் பூனை ஆறவிட்டுகூடலூரில் வந்திருந்தார்கள். அப்போதைக்கி யிந்தவனத்திலே சஞ்சாரஞ் செய்துக்கொண்டிருக்கின்ற வறாகமானது தர்ந்தரமாய் கும்புகும்பாய் ரெண்டாயிரம் மூவாயிரம் வரைக்கும் பலுகி புறோவதியாயிருந்தது. அதிலே சகல வறாகங்களுக்கெல்லாம் சிரேஷ்டமாய் பூமி தோணியனாள்வரையிலுண்டானது போல் ஷ்த ........... லகாயத்தை உடைத்தான மூன்று சுத்துக்கொம்புடனே யிருந்த வறாகத்தை ஒருதார லுங்கிச வேட்டையில் சங்காரஞ் செய்யமாட்டாமல் மகாவலிய பிலனை உடைத்தாகி சீர்மையில் பயிர்பச்சை சனங்களையும் நிபாதஞ்செய்துக்கொண்டு யிருக்கிற வறாகத்தை ஆர் செயம் பண்ணுகிறார்களோ அவர்களுக்கு நம்முடைய பூமியில் மலைகிக்கீள்பட நம்மிடயெல்லை யெதுமுதல் உண்டோ அது வரைக்குஞ் சிலாதாபிதஞ் செய்து புத்திராபவுத்திர பாறம்பரியந்தரம் வரைக்கும் அனுபவித்துக் கொள்ளத்தக்கதாக கொடுக்கிறோமென்று ராசாஉத்திரவு செய்துயிருந்தார். இந்த சமாச்சாரம் சக்குனாயக்கர் செவியூரலாய்க்கேட்டு அந்த வறாகத்தை வெகுசன சேகரமில்லாமல் ரெண்டு மூன்று பேருடனே மேல்ப்படி வறாகமிருப்பிடம் பாத்து அதையுங்கண்டு கைய்யிலே சமுதாடு வாங்கிக்கொண்டு ஷ் வறாகத்தை நாலுகாயம் அஞ்சுகாயம் படக்குத்தி, உயிருடனேபிடித்துக்கொண்டு வந்து, மேல்ப்படி ராசாவினுடைய சமுகத்தில் பேட்டியாகக்கொண்டு போய் வைத்து, கண்டுகொண்டதில் அப்போ றாசா அவர்களுக்கு மகாசந்தோஷம் வந்து ஆரெவரென்று குத்தி தேசத்தியிருந்து வந்த பூறுவத்திரங்களையும் நன்றாய் விசாரித்து பாண்டியில் நமக்குண்டான பூமி சகலமும் உனக்குக் கொடுத்துவிட்டோம் நீயே நமக்கு முந்தின பிள்ளையென்று சொல்லிப்பட்டும் வளையுங்கொடுத்துக்கூடவே பூனையாத்துக்குக் கூட்டிக் கொண்டு போய், பல்லக்குங் குடுத்து, மணிப்பாறிவிருதுங் குடுத்து,

றாசினாயக்கனென்று பேருங்குடுத்து நம்முடைய வம்முஷமுள்ள வரைக்கும் உன்னுடைய வம்முஷமுள்ளவரைக்கும் லாடவிறை யத்துக்கும் உருத்தும் உடைந்தையுமாக யிருந்து கொண்டு, பாண்டியப் பூமியாகையால் புத்திர தாயாதிப் பட்டமுங் கட்டிக்கொண்டு, பட்டக்காணிக்கை பணம் 100 குடுத்துக் கொண்டு ஆண்டனுபவித்துக் கொண்டிருக்கச் சொல்லி திருக்கைச் சிறப்புஞ்செய்து தம்முடைய சீர்மையில் மலம புரத்தில் மங்கலாதேவி முதல்ப் பாண்டிச் சீர்மைக்குள்ளே தொட்டப்பனாயக்கனூர் கணவாய் னாகமலை சாத்தாவின் கோவில் சன்னிதானத்தில் சிலைக்கல் னாட்டி ஆணைத்துறட்டி முத்திரியும் யெழுதிபோட்டுவிச்சு, அதற்கு வடக்கிழக்கு சுண்டக் காய்க் கணவாய் மத்தியில் பாதைக்கருகாண்மையில் வடபாரி சத்தில் சிலைக்கல் நாட்டி ஆணைத் துறட்டி முத்திரியும் போட்டுவிச்சுக் கொடுத்தார்கள்.

அப்படிக் கொடுத்தவ யாறென்றால் மதுரைப்பாண்டிய றாசாக்களுக்குள் பாண்டியதேசம் விட்டு மலைப்பள்ளத்துக்குச் சமீபமான பூனையாத்துத் தம்பிரான்களில் குலைசேகரப் பாண்டிய பெரிய பொன்னும்பெருமாள் தம்பிரானவர்கள் வாங்கிக்கொண்டவர் யெங்கள் முன்னோர்களில் சக்குனாய்க்கர்.

மேல்ச் சொல்லிய றாசா அவர்கள் திருவெழுத்துக் சாதனஞ்செய்து கொடுத்த பூர்வீகத்தினம் சுவஸ்தஸ்ரீ சாலிவாகன சகார்த்தம் 1258 கலியுக சகார்த்தம் 4437 இதன் மேல் செல்லாநின்ற இஸ்வர வருஷம் வையாசி மாதம் 17 முதல் சக்குனாயக்கர் பட்டமாண்டது வருஷம் 37.

அவர் குமாரன் இரண்டாம் பட்டமாண்டது றாம னாய்க்கர் 41

அவர் குமாரன் மூன்றாம் பட்டம் சக்கணனாயக்கர் பட்டமாண்டது வருஷம் 29.

அவர் குமாரன் நாலாம் பட்டம் முத்துவங்காரு னாயக்கர் துரைத்தன வருஷம் 19

அவர் குமாரன் அஞ்சாம் பட்டம் போடிமுத்துனாயக்கர் துரைத்தன வருஷம் 18.

அவர் குமாரன் ஆறாம் பட்டம் றாகுனாயக்கர் துரைத்தன வருஷம் 11.

அவர்குமாரன் யேழாம் பட்டம் சக்முகுத்துனாயக்கர் துரைத்தன வருஷம் 9.

அவர் குமாரன் யெட்டம் பட்டம் சீலாபாடினாயக்கர் துரைத்தன வருஷம் 14.

அதில் நடந்த வற்தமானம் றாயர் சமஸ்தானத்திலிருந்து திருமலை சவுரி தேவறாயர் பட்டத்தில் விசையநகற் பட்டணத்தில் பாட்சாய் முகலாயதாரிடத்திலிருந்து வெகு விருதுகள் போட்டுக் கொண்டு அனேக சனசேகரத்துடனே மல்லாக்கா றாவுத்தனென்று சொல்லி ஒருவன் வந்து துஷம் போட்டுக் கெருடசாதினைத் தோளிலேயும் நம்மை வெல்லுகிற பேர் ஆளாகிலுமுண்டோவென்று விருது போட்டு வந்து யெதிர்த்தயிடத்தில் சமஸ்தானத்திலுண்டாகிய அமீர்கள் வசீராளாலேயும் ஆகாமல் திக்கு திகாந்திரங்களுக்கும் அகாங்கிஷதம் குமாரவற்கங்களுக்கும் யெழுதி அனுப்பிவிச்சுத் தருவிக்கும் போது சீல போடினாய்க்கர் இந்த சமாச்சாரஞ்செய்வியூரலால்க் கேள்விப்பட்டு நாமும் றாயர் சமஸ்தானம் வரைக்கும் போய் யிந்த அதிசெயம் பாத்துவருவோமென்று எண்ணிக்கொண்டு போய் றாயரவர்களையும் கண்டு நடந்த சமாச்சாரமும் அறிந்து யிருக்கைபில் அப்பால் ஷெ சமஸ்தானத்தில்க் கூடிய அமீர்களாலேயும் செயிக்கமாட்டாமல் மல்லாக்கா றாவுத்தன் கை மேலாகிற தருணத்தில் சீலபோடினாய்க்கர் கையிலே கத்தி கேடையம் வாங்கிக்கொண்டு, சாதினைசிலம்பத்தோளில் மேலாய் அவனையும் வெட்டி செயஞ்செய்தயிடத்தில் றாயரவர்கள் மகாசந்தோஷத்துடனே அழைத்து சமீபத்தில் வைத்துக்கொண்டு, சமஸ்தானத்துக்கு ரொம்பவும் பேர் செய்துக் கொடுத்தியேயென்று சொல்லித் திருமலை போடினாயக்கரென்று பேருங்குடுத்து, மல்லாக்கா றாவுத்தன் கைவசமாகயிருந்த விருதுகள் சகலமுங் கொடுத்து, தாமும் அறிய வெகுமதி செய்து அனுப்பிவிச்சார்கள். ஷெ சீலபோடினாய்க்கர் ளாளையில் நடந்த வற்தமானம் இத்தியாதி காரியங்களும் அவர் குமாரன் ஒன்பதாவது பட்டக்காற திருமலை போடினாய்க்கர் துரைத்தனம் வருஷம் 22.

அவர் குமாரன் பத்தாவது பட்டம் வங்காருனாய்க்கர் துரைத்தனம் ௵ 26.

அவர் குமாரன் பதினோராம் பட்டம் திருமலை போடினாய்க்கர் துரைத்தனம் ௵ 30.

அவர் குமாரன் பனிரெண்டாம் பட்டம் சக்குனாயக்கர் துரைத்தனம் ௵ 52.

அவர் னாளையில் நடந்த வற்தமானம் மதுரை சமஸ்தானம் துரைத்தனமாகயிருந்த முத்துவிரப்ப னாயக்கர் பட்டத்தில் சக்குனாயக்கரை அளைத்து றாயர் சமஸ்தானத்தில் பேர் வாங்கியிருந்து பாளையப்பட்டல்லவா நமக்கு தெட்சணாதிக்கம் நமக்கு உண்டாயிருக்கிறபடியினாலே நீருங்குமாரவற்கமாய் நடந்துகொண்டு வரலாமென்று சொல்லி மேல்ப்படி பாளையப்பட்டுக்கு யெல்கை பெரியகுளம் குழந்தை வேலாயுதசுவாமி சன்னிதானத்தில் கொட்டி மரத்துக்கு அருகாண்மையில் வாகனத்து யெல்லைக் குறித்து அதுவே சிலாதாபிமாகச் செய்வித்து அதற்குத் தெற்கே நெடுகலும் யெல்கைக்குறித்துக் கொடுத்து, வேண்டிய வெகுமதியுங் கொடுத்து காணிக்கை முன்னூறுப் பொன்னாகத்தீற்து அபிமானத்து அனுப்பிவித்தார்கள். மேல்ப்படி சக்குனாயக்கர் னாளையில் நடந்தவற்தமானம், அவர் குமாரன் பதிமூன்றாம் பட்டம் றாசுனாய்க்கர் துரைத்தனம் ௵ 17.

அவர் நாளையில் நடந்த வற்தமானம்யென்னவென்றால்:

# திண்டுக்கல் ஜமீன்தார் வம்சாவளி

## D. 3351

மகாறாஜ றாஜஸ்ரீ கற்னல் காலன் மக்கிஞ்சி சாயபு சற்வேயற் ஜெனறால் ஆபு இண்டியா துரையவற்கள் ஆஜறுக்கு 1816 சப்ட்டம்பற் மாதம், 5 தேதி, தறியாபுத்து நிட்டலனாயன்னய்யற்.

திண்டுக்கல் பட்டணத்துக்கு றாஜாவாகிய வெகுமானப் பட்ட கும்பினியாற் பட்டம் கட்டிவைத்த ஆ...வெங்கிடசாமி னாயக்கறவர்கள் குமாறனாகிய குறுவப்பனாயக்கற் மிகவும் வணக்கத்துடன் எழுதிக் குடுத்த யெங்களுடைய வமுசாவழி வறலாறு யென்னமென்றால்.

சாலீவாகன சகம் 1593 ஙுக்குமேல் ஆனந்த ஙுத்தில் ஆறணியில் யிறுக்கும் யெங்கள் பாட்டனாறுக்கு த........ றாகிய ஆறணி றாமண னாயக்கறவற்கள் சகோதராளுடனே கிறகச்சித்திறப்பட்டு தெற்கு நோக்கி ெ... த்துக் கொண்டு வருமழவில் கசுபா திண்டுக்கல்லுக்கு சேற்ந்த சீலைப்பாடி கிறாமத்தில் வந்து சேர்ந்தாற்.

இப்படியிருக்கும் னாளையில் ஷெ கிறாமத்துக்கு மடூற் சமீன்தாரியும் யெரியோடு ஜமீன்தாரியும்......வர காவலுக்கு நானென்றும் நீயென்றும் விவாதப்பட்டு ஷெ கிறாமத்தில் குடிகளை சேரொட்டாமல் விறோதம் பண்ணிக் கொண்டு வருகயில் யெங்கள் பெறியோறாகிய ஆறணி றாமண னாயக்கற வர்கள் ஷெ யூரில் அறமனையும் கட்டி வாஸஷ்தறாக யிருந்துக் கொண்டு ஷெ விவாதமாயிருக்கப்பட்ட ஜமீன்தாறுகளுடைய சலியத்துக்காக கல்க்கோட்டையும் போட்டு வைத்து குடிகளையும் ஏத்தி பாளையக்காறனுடய சல்லியங்களும் ஒடிக்கி ஷெ கிறாமத்தில் குடியிருப்புக்காறறாயிருந்தார். அக்காலத்தில் திண்டுக்கல்லுக்கு அதிகாரிகளாகிய மதுரை சமஸ்தானத்துக்கு கற்தறாகிய மீனாஷிம்மாள் றாணிப்பட்டத்தில் அக்காறெட்டி,

ரங்காரெட்டி னாளையில் ஷெியாற் பேட்டிக் கண்டுக் கொண்டு யிறுக்கும் னாளையில் கற்ணாடகம் ஜனம் 500 பேறுக்கு சற்தாறாக னேமித்து இறுந்தார்கள்.

இப்படி இறுக்கும் னாளையில் ஷெியூறுக்கு கீள்புறம் அறை நாளிகை வழி தூறத்தில் முள்ளிப்பாடியில் சக்கரம் 4000 பொன் சிலவு செயிது கோவில் கட்டி கோபாலகிறஷ்ண சுவாமியை பிறதிட்டை செயிது வைத்து ஷெி சுவாமிக்கி மடூற் ஜமீன்தாரி திருமல வீரப்பனாயக்கறிடத்தில் பேசி அவனுக்கு வெள்ளைக் கொடையும் 1000பொன் பெறத்தக்க முத்து ஆறமும் குடுத்து, ஜமீன்தாறுக்குச் சேற்ந்த பூமி பாறைப்படிக்கி கீள்புறம் அக்கினி மூலையில் தாளை குழமென்ற குளமும் அதுக்குச் சேற்ந்த நஞ்சையும் இதற்க்கு மேற்க்கு பாரைப்படி புஞ்சையிறுகல விறைப்பறம் விப ஸு தை மீ 15 சக்கரம் ரூ 125 பொன்னுக்கு சுத்தக்கிறய சிலாசாசனமாக வாங்கி ஷெி கோவிலுக்கு பூசைக்காக தத்தம் பண்ணிக் குடுத்து முள்ளிப் பாடியில் புஞ்சை தோட்டம் 1. ஷெி யூற் குளத்தில் நஞ்சை ஒறு செயி நிலமும் வாங்கி தத்தம் பண்ணிக் குடுத்து அதுக்கு முன் பிறபவ ஸு ஆவணி மாதம் 15 தேதி தம்முட குடி யிறுப்பாகிய சீலைப்பாடிக்கி மேல் மாலையடி புஞ்சை கலனெ ஆறுமறக்கா விறைப்பறவு ஷெியூறுலிறுக்கும் கிடாவெட்டி சொக்கலிங்கம் சங்கறிடத்தில் சக்கரம் ரூ. 60 பொன்னுக்கு சுத்தக்கிறய சிலாசாசனமாக வாங்கி ஷெி கோவிலுக்கு தத்தம் பண்ணிக் குடுத்து வாசக்ஷத்தறாயிறுந்தாற்கள்.

இப்படி யிறுக்கும் னாளையில் திண்டுக்கல் அதிகாரி களாகிய அக்கா ரெட்டி ரங்கா ரெட்டியாற் பாளையக்காற் லக்கயனாய்க்கற் புதுவாடி கோட்டையின் பேறில் யெல்க தகறாறாயி சண்டைக்கிப் போற போது ஷெி யெங்கள் பெரி யோறாகிய ஆறணி றாமண னாயக்கர் செனங்களுடனே கூட போயி கோட்டையின் பேரில் லக்கையேறி சண்டையானதில் ஷெி யாறுக்கு நெஞ்சில் அம்பு காயம்ப்பட்டு வீறசுவற்க்க ம[ை]டந்தாற்.

ஷெி ஆறணி றாமண னாயக்கர்.........அக்காலத்துக்கு சாலீவாகன சகம் 1638-க்கு ஆண்டு ஸு விளம்பி (சம்வச்சற) மென்று சொல்லப்படுகுரது.

ஷெயாற் பட்டஸ்திரியாகிய மங்கம்மாள் ஷெ குமாறறாகிய ஆறணி றாம னாயக்கறவற்கள் கேவலம் பால்லியமாயிறுந்த படியினாலே இஷ்துவைகளும் மான மறியாதையும் தம்முட தகப்பனாறுக்கு நடந்த படிக்கி நடப்பிவிச்சுக் கொண்டு சிறுது னாள்க் கிறாமச்சதின் பிறகு சந்தாசாயபு படேசாயபு மதுரைக் கட்டிக்கொண்டு மீனாக்ஷம்மாள் துரைத்தனம் போயி திண்டுக் கல்லில் அக்கா ரெட்டி ரங்கா ரெட்டிக்கி வுதியோகம் போயிட்டுது. அதின் பிறகு மைசூற் கற்தறவற்கள் திண்டுக்கல் சீற்மை கட்டிக்கொண்டு ஷெயாற் வகை மனுஷாள் திண்டுக்கல் வுத்தியோகம் பண்ணிக்கொண்டு வறுகயில் சுபேதாற் வெங்கிடப்பய்யறுக்கு மைசூற்க் கற்த்தற் திண்டுக்கல் வுத்தி யோகம் குடுத்து அனுப்பிவிச்சாற்கள்.

அவற் னாளையில் திண்டுக்கல்லுக்குச் சேற்ந்த பாளைய காற் நிகுதி பணம் செம்மையாயி செலுத்தாமலும் இவற் வச விறுத்திக்கி வறாமல் சல்லியம் செயிகுரதும் பெறாமல் னாட்டுக் கள்ளர் சீற்மை கொள்ளையிட்டு சில்லரை செயிகுரதும் இப்படிக்கு அனேகவித சல்லியங்கள் நடந்துவறும் னாளையில் ஷெ சுபைதாற் வெங்கிடப்பய்யற் திண்டுக்கல் சீமையில் சிபாய் கிறியில் சமற்த்தறாகவும் பாளையப்பட்டு சல்லியங்களும் கள்ளற் சல்லியங்களும் ஒடுக்கத் தக்க புலனாளியான சமற்த்தறா ரென்று விசாறிச்சி யெங்கள் பாட்டனாராகிய ஆறணி றாம னாய்க்கறை வறவழித்து கற்னாடகம் 1000 ஜனம் இவற்க்கு குடுத்து பல்லாக்கும் குடுத்து ஷெ பாளயகாறறுடைய சல்லியங்களெல்லாம் ஒடுக்கச் சொல்லி நெறை வுத்திறவு குடுத்தாற்கள்.

அதே மேறைக்கி பெறமலனாட்டு கள்ளற் பேரிலும் அப்பாஜி கவுண்டனாகிய பாளையகாறன் பேரிலும் சாரிபண்ணி அவற்களை ஒடிக்கி இப்படிக்கி ரெண்டென்று முகாந்திரம் ஜயம் பண்ணி சுவசப்படித்தி வறும்போது மைசூற்க் கற்த்தற் அயிதறல்லீகான் பாதறுக்கு முத்திர மோதிறம் போட்டு ஒட்டு பவுஜுதாறும் குடுத்து அவற் புறப்பட்டு கெச்சலூட்டுக் கணவாயிறங்கி திண்டுக்கல் சேகறம் பழனி பாளையக்காறன் பேரிலே சண்டை செய்து சுவசப்படுத்திக் கொடுத்திக் கொண்டு விறூபாக்ஷி பாளையக்காறனை கண்டு

பேசிக்கொண்டு திண்டுக்கல் வந்து சேர்ந்தாற். ஷெ அயிதரல்லீகான் பாதறை சுபேதாற் வேங்கிடப்பய்யற் வந்து கண்டு சீற்மை வற்த்தமானமெல்லாம் சொல்லி கன்னிவாடி அப்பயி னாயக்கனை பிடிச்சி சீறங்கப்பட்டணம் குடுத்தனுப்பி ஆறணி றாமி னாயக்கறுக்கு ஒட்டு பவுஜுதாரி குடுத்தால் னான் திண்டுக்கல் வுத்தியோகம் பண்ணத்தகும். இப்படிக்கி செய் யாதவறையில் யென்னாலே தகாதென்று சொல்லிக் கொண்ட தில், அயிதரல்லீகான் பாதற் கன்னிவாடி அப்பயனாயக்கறை பேட்டிக்கி வறவளிச்சி அவகடமாயிப் பிடித்து பெங்குளூறுக்கு குடுத்தனுப்பிவிச்சி, யெங்கள் பாட்டனாறாகிய ஆறணி றாமி னாயக்கறுக்கு னாலுபேற் அம்பாரிக்காற சற்தாற்கள் அவர்கள் பேற் யென மென்றால்

பனோஜி கதம்பா — 1
துக்கோஜி நளிகி — 1
கானோஜி கேசறா — 1
றசால்சிங்கு — 1

இவர்கள் னாலு பேறையும் இவற் வசமாகவும் 6000 குதிரை யும், 12000 கற்னாடகமும், 12 பீறங்கியும் இவற் தாபீதா பண்ணி இத...ஒட்டு டவுஜுதாரியும் குடுத்து வெகுவதி பண்ணப்பட்ட விறுதுகள் யென்னமென்றால்

1. உபய வெண்சாமறம் விசுறப்பட்டது.
1. முத்து துறாய் சுவற்ணம் தலைப்பாகுலே (கட்டுகுறது)
1. பச்சக்கல் பதக்கம் — களுதுலே (தரிக்குரது)
1. வஸ்தரங்கள் யுடுகறை (யாய்தரிக்குறது).

மேலெழிதிய பிருதுகளும் வெகுமதியும் சே... திண்டுக்கல் சீற்மை சில்லரை ஒட்டிக்கு சுவசப்படித்தி அதிகாரஸ்தர்க்கு சகாயமாயிறுக்கக் கடவதென்று கட்டளையிட்டாற்கள்.

அப்போ முன் சுபேதார் வெங்கிடப்பய்யறை ஸ்ரீ ரங்கப் பட்டணத்துக்குப் போகச் சொல்லியும் சூறியனாறாயண முதலியாரை திண்டுக்கல் அதிகாரியாக நேமிச்சு வச்சி அயித ரல்லீகான் பாதற் சீரங்கப்பட்டணத்துக்கு பிறயாணப்பட்டுப் போனாற்கள்.

அதின் பிறகு ஆறணி றாமி...வசவிறுத்திக்கு வறாத பாளையக்காறற் பேரிலும் பெரமல னாட்டுக் கள்ளர் பேரிலும் பாளையமெடுத்துப் போயி சண்டை செயிது வசவிறுத்தி பண்ணிக் கொண்டு வறும்புழல்...பாளையக்காறன் யெதுத்து மிகவும் சண்டையானதில் ஆறணி றாமினாயக்கறுக்கு ஒறுனாள் சண்டை முகத்தில் யிவறுடைய ஜனம் கோசங்கி கதிரிவாடன் வெரிவாடன் யெங்குர அணணன் தம்பி யிறுபேரில் வெரிவாடன் யெங்குரவனுக்கு காலில் வுறுண்டை தைத்து கால்முரிஞ்சி கீளே விளுந்து இவனுடைய பாளையம்கள் பிணிட்டு முரிஞ்சி வறுமழ வில், ஷெியாற் தம்முடைய பாளயத்தை திருப்பி யெதுறாளி யின் பேரில் நடத்தி வெரிவாடனை தலையறுக்க வந்த யெதிரியை தன் கைய்யினாலே ப்த்தெட்டுப் பேரை வெட்டி குதிரைமேல் சவாறியாயி முன்னடக்கும் போது சதிசக்கள்ளிக் கட்டாப்பில் யெதிரி ஜன ஒளிஞ்சிறுந்து இவரைப் பார்த்து சுட்டு அதில் இவறுக்கு தாவக்கொட்டையில் அந்த வுறுண்டை பட்டு கொஞ்சம் யெலும்பு சேதமாய் வலது காது கீளாக அறிவிப் போயிட்டுது. சுட்டவனை குதிரைப்போட்டு வெட்டி முன்னடக்கும் போது யெதிரி ஜனம் ஒருவன் வேல்னாலே இவரை குத்தினதில் நெஞ்சில்ப்பட்டு வெலாப்பக்கம் சாய்ந்து காயமாய்ப் போனதால் அந்த காயமும் வாங்கிக் கொண்டு அவனை இவற்ற யினாலே வெட்டும் போது இவற்படாவுக்கு ஆணி தெறிச்சி போப் யெடையிலிறுந்த தேகாகத்தியினாலே அவன் தலையை வெட்டி பாளயம் யெதிரி பேரில் நடத்தி ஜயம் பண்ணி ஷெி பாளையக்காறனுக்கு சேற்ந்த பெரிய கோட்டையும் பிடிச்சு. இவற் தானையும் போட்டு சுவசப் படுத்தினாற்.

சுக்காம்பட்டி பாளையக்காறன் பேரில் சண்டை செய்ததில் இவற் மறுமகன் முத்திய னாயக்கறுக்கு வுறுண்டை தைத்து விளுந்து போய் பின்னும் பாளையம் யெதிரி பேரில் நடத்தி கோட்டையும் வாங்கி ஜயன் பண்ணி தன்னுடைய தாணை யும் போட்டுவிச்சு வசப் படுத்தினாற். திறுசிறபுறத்துக்குச் சேற்ந்த பாளயப்பட்டு றாமகிரி சாமி னாயக்கன் பிள்ளை முளங்கி னாயக்கன் இர்த ரெண்டு பாளையக்காற் பேரில் சண்டை பண்ணி ஜயமாய் அதில் இவறும் தாணையும் போட்டு வச்சி அந்தச் சீமையும் திண்டுக்கல்லிக்குச் சேத்து யிறுக்கு

மழவில் ஷெ பிள்ளை மினாங்கி பாளையகாறனுக்கு வுபறா லாய் மணபா யிலிறுந்த ஒத்தக் குதிரையா னென்று பெயர். யாசீன்கான் சிறிது தளத்துடனே பிள்ளை அதுக்காளெத்தம் பேரில் வந்து யிறங்கின சமறம் ஆறணி றாமி னாயக்கற் அறிஞ்சி இவற் பாளையத்துடனே போயி யெதுத்து சண்டை யாகுமளவில் ஆறணி றாமி னாயக்கறுக்கும் ஷெயாசீன்கானுக்கும் யெதுப்பட்டு யாசீன்கான் படாகுத்து...யும் இவற் ஒண்ணு வாங்கிக் கொண்டு சமாளிச்சி அவனை முகத்தில் காயப்பட வெட்டி பாளயம் முன்னடத்தி ஜயம் பண்ணி தானையும் போட்டு வச்சி திண்டுக்கல் வந்து சேந்தாற்.

அப்பால் கன்னிவாடி பாளையப்பட்டுக்கு பின்னாகப் பட்டத்துக்கு வந்து அப்பயனாயக்கன் பேரில் பாளைய மெடுத்து ஷெ பாளையப்பட்டு சேகறம் அய்யம் பாளையம் கோம்பை யின் பேரில் சண்டையானதின் போது ஆறணி றாமி னாயக்கர் யெதுவகைக் கொண்டாகிலும் மறண மடைப்பிவிக்க வேணு மென்று நினைப்புண்டாய் ஷெ பாளையக்காறன் புலி...மீசை மயிற்வூறப் போட்ட யெண்ணையில் துப்பாக்கி வுறுண்டை களை வூறப் போட்டு வச்சிறுந்து அந்த வுறுண்டையினாலே இவரைப்பார்த்து சுட்டதில் இவற்க்கு வலது கால்லில் வுறுண்டை தைத்து காயமாய் யெடது கைய்யில் படாவாங்கி குதிரை மேல் சாரியாய் பாளையத்தை முன்னபத்தி ஜபம்பண்ணி தானையும் போட்டு சுவசப்படித்தினார். அப்பால்...வழனிதி பாளயகாற் கொண்டப்பனாயக்கன் இவறிடத்தில் வந்து பேட்டியாய் பிள்ளை பூந்து சுவசமானான். போடி னாயக்க னெங்குர பாளயகாறன், விறுபாக்ஷி குப்பளனாயக்கன், யெடைய கோட்டை பாளையகாறனாகிய பண்டாரமெங்குர பேறு டையவன், நிலைக் கோட்டை கூளப்ப னாயக்கன், ஆயிக்குடி பாலியக்காரன், அம்மட்டறை பாளையக்காரன், தேவகற்ம பாளயகாறன், யெற ஜக்கய னாயக்கனூற் பாளையகாரனும், யேமுகுலாபுறம் பாளயகாரனும், தவிசிமடு பாளையகார னும், யெரியோடு வல்லக் கொண்டம் னாயக்கனும், பல்லி யப்ப னாயக்கனும், மாம்பாறை பாளையக்காரனும் இவற்கள் யெல்லோற் பாளையக் காறற்களும் தமக்கு தாமாய் வந்து கண்டு கொண்டு சுவசமானாற்கள்.

இம் மேலெழுதிய வற்தமானங்கள் அதிகாரிகள் னாலேயும் அபேற்கள் னாலையும் ஆறணி றாமினாயக்கர் அவர்களினாலையும் கண்ணாடகம் அயிதறல்லீகான் பாதறவற்களுக்கு தெரியப்பட்டிறுந்தது.

அயிதறல்லீகான் பாதறவர்கள் மிகவும் சந்தோஷிச்சி சீறங்கப் பட்டணத்திலிருந்து பச்சப் பல்லாக்கு, சிங்கமுகம், பிறுது வெட்டுப்பாவாடை விசறப்பட்டது. 2 அலகோஜா சிக்குடுமண பச்சக்கல் பெரிய கடுக்கன் காதுலே போடுகுறது 4, வஸ்திரங்கள் வெகுமதி 5, இதுகளெ எல்லாம் குடுத்து திண்டுக்கல் சீமை அதிகாறமும் பெத்தபறமனாவும் அனுப்பிவித்து வுங்களுக்குள்ள தண்டு சுவை பவுசுதாரி அ......காறதுடனே கூடி சீமை அதிகாரமும் பெத்து யிறுக்கக் கடவதென்று காகித பத்திறங்கள் அனுப்பவிச்சாற்கள். அக்காலத்து சாலிவாகன செகம் 1169 ஷு மென்று சொல்லப் படுகுறது.

இந்த மேரைக்கி அயிதரல்லீகான் பாதறவற்களுடையவெகுமதியும் பெத்து திண்டுக்கல் அதிகாரம் செய்துக்கொண்டுவறும் னாளையில் தச்சின்ன...கத்திபால குறுவப்ப னாயக்கறுக்கு பழனி ஆயிக்குடி அதிகாரமும் குடுத்து சீமை வழியில் தமக்கு வேண்டிய மனுஷாளை சிறுது பேரை அதிகாறஷ்தாளாக நேமிச்சுக் கொண்டு ஆண்டு வறுகயில் அயிதறல்லீகான்பாதறவற்கள் பேட்டிக்காக சீறங்கப்பட்டணத்துக்கு வ(ர) வழிச்ச முன்னுக்கு ஷெ ஆறணி றாமி னாயக்கனுக்கு தேக ஸித்தி அனுகூலமில்லாமலிருந்து சீறங்கப்பட்டணத்தில் தெய்வீகமானாற். அவர் ஆண்ட ஷு 51. ஷெயார் வுண்டு பண்ணினது தெப்பகுளம் 1. சேஷாத்திரி னாயக்கன் கோட்டை சீலைப்பாடி எல்கையில் வுண்டுபண்ணினார். சின்ன சீலைப் பாடியில் புதுக்கொளம்-1. தெப்பகுளம்-1. கிணற்-4. திண்டுக்கல் அக்கிறாகாறத்தில் அலமேலம்மாள் தெப்பக்குளம் 1. பெரிய குளத்தில் மறுமகன் ஷோத்திரி னாயக்கன் பேறால் கோபால கிஷ்ணசுவாமி கோவிலும் மண்டபமும் கட்டி வைத்தாற். ஆறணி றாமி னாயக்கற் பட்ட ஸ்திரீ வேங்கிடகிரியம்மாள் ஷெ குமாரறாகிய ஆறணி விஜய வேங்கிட பதி னாயக்கர் னாளையில் சீரங்க பட்டணத்துக்குப் போய் அயித

றல்லீகான் பாதறவற்களைக் கண்டு பேட்டியாய் ஒன்ம்பது ஞ காத்திருந்த யெடத்திலும் இவறக்கு திண்டுக்கல் அதிகாறமும் கூடாமல் மீறாசாயபை திண்டுக்கல் அதிகாறம் குடுத்து இவற்க்கு வேறொறு ஜீவன குடாதுனாலே நம்முடைய தகப்பனாற் அயிதறல்லீகான்பாதர் சாயபுவுக்கு செயித மெகனத்து நமக்கு பலிதமில்லாமல் போச்சுதுயென்று யோசிச்சி பழனி அதிகாரமாகிய மாமனாற் கத்திபால குறுவப்ப னாயச்கறிடம் வந்து சேந்து இறுக்குமழுவில் ஷெ கத்திபால குறுவப்ப னாயக்கற் தெயிவிகமாய் போட்டார். அவருடைய குமாறன் கத்திரங்கசாமி னாயக்கறும் ஆறணி விஜய வெங்கிட பதினாயக்கறும் இறுவறுமாக யோசிச்சு அயிதறல்லீகான் பாதற் நமக்கு அதிகாறம் குடுக்குரதில்லை. நாம் மகாறாஜ மானிய றாஜ ஸ்ரீ கும்பிணியாரிடம் சேறவேணு மென்று, நினைத்து திறுசிறபுறத்திலிறுக்கு மகா ராசராச மேஸ்நற் ஜன்னல் லிகுசீன் துரையவற்களுக்கு யெழுதி தமக்கு குமுக்காகும் படி செயிதுக்கொண்டு பழனிசீற்மை பாலசமுத் திரக் கோட்டை பந்தோபஷ்து பண்ணிக்கொண்டு அயிதறலீ கான் பாதற் சாயபு தளத்தின் பேரில் ஆறுமாசம் சண்டை செயிது கும்பினியார் நமக்கு ஒத்தாசை ஆகுறதுக்கில்லாம ராசராச ஜன்னல் லிகுசீன் துரையவற்கள் கவில்காதிதம் வறவழித்துக் கொண்டு ஆறணி விஜய வேங்கிடபதி னாயக் கறும் திறுசிறபுறம் வந்து சேந்து மகாராசராச மேஸ்தர் ஜன்னல் லிகுசீன் துரையவற்கள் பேட்டியானாற்கள். அப்போது ஜன்னல் லிகுசீன் துரையவற்கள் சொன்னது கும்பினி துரை மாற்கள் மைசூற் கற்தறுக்கு அவற்றாச்சியம் வாங்கிக்குடுத்து அவறுக்கு பட்டங் கட்டுகுரோமென்று வாக்குத்தத்தம் பண்ணி யிருக்குறார்கள். அந்த சத்துறுவான் அயிதறல்லீகான் பேரில் மகாராசராச அம்பலிஷ்டன் துரை பெரிய பாளயம் நகறத்து மேலே அனுப்பிவிக்குரோம். அந்த பாளயத்துடனே ஜன்னல் ராகலாங்கு துரைபாளையம் போயி சேறவேண்டியிறுக்குது. அதுக்கு வேண்டிய றஷ்து குடுத்து நீங்கள் முன்னுக்கு நடத்த வேணும் மென்று இவற்களௌடத்தில் சொல்ல இவற்கள் நல்லது யென்று சம்மதிச்ச சமாசாரத்துக்கு றாயவேலூறுக்கு ஜன்னல் லாங்கு துரையவற்களுக்கு யெழுதனுப்பிவிச்சதி. அவற் பாளையம் சகிதம் திருசிறபுறம் வந்து சேந்து இவர்க(ளை)

கூடக் கூட்டிக்கொண்டு கறூர் ஆதியாய் கெஜ்ஜலூட்டு கணவாய் வரைக்கு முள்ள கெடிகளை சுவாசப்படுத்துற வரைக்கும் பாளை யத்துக்கு வேண்டிய ரஷ்துகள் குடுத்து ஒத்தாசையால் ஆசறாயி றுந்ததில் கும்பினி துரைகள் சந்தோஷப்பட்டு மேஸ்தர் கற்னல் பார்ப்பசன் துரை சிறிது பாளையத்துடனே இவற்கள் ரெண்டு பேறையும் கூட்டிக் கொண்டு திண்டுக்கல்லுக்கு வந்து யெங்கள் தகப்பனாற் ஆறணி விஜய வேங்கிடபதி னாயக்கறுக்கு திண்டுக்கல்லுக்கு றாஜாவாக பட்டம் கட்டிவித்து பட்டக் காணிக்கை லக்ஷம் ரூபாயும் வாங்கிக் கொண்டு கத்தி ரங்கசாமி னாயக்கறுக்கு பழனி சீற்மைக்கி நெமுகம் செயிது ஹூத்துக்கு ஆறுகாடு றூபாயி 30000 குடுக்கும்படி வுத்தரவு செயிது கியாறட்டு குடுத்து, யெங்கள் தகப்பனாறுக்கு கறூர், அறவ குறிச்சி, தாறாபுறம், கோளம்பம், சக்கிறகிரி, திண்டுக்கல்லுடனே இந்த னாலு தாலுகாவும் சேற்த்து பாளையப்பட்டுகள் சகிதம் திண்டுக்கல்லுக்கு ஆறுகாட்டு ரூபாயி 1,80,000, கறூர் ரூ. 1,000,00, அறவ குறிசி 70,000. தாறாபுரம் குளம்பம் சகிறகிறி 3,000,00 ஆக ஆறுகாடு ரூ 6,50,000 பேஷ்காவுக்கு குடுத்துக் கொண்டு வறச் சொல்லியும் மறியாதை நபாவுகளுக்கு மேரைக்கி நடத்துரோமென்று முன்னுள்ள பிறுதுகளுடனே கூடியும் அமாமொர்ஜல் வெள்ளை குடையாகிய சுவேதச் சத்திரமும் நவுபத்தும் குடுத்து இந்த மேரைக்கி கும்பினி பாவுடா சமுத்திரக் கறையில் யிறுக்குர வரைக்கும் வஞ்சினை செய்யாமல் நடத்துவோமென்று இப்படி யெழுதிருக்குரதில் தப்பினால் பறாபற வஸ்துவுக்கு வஞ்சினி செய்தாப் போலே யென்று கண்டெழிதி கியாறட்டு சாசனமும் எழுதிக் குடுத்து வெகுமானப்பட்ட கும்பினியாற் மகாராசஸ்ரீராச ஜன்னல் லாங்கு துறையவற்கள், வுல்லியம் புலட்டன் துரையவற்கள் சைனுடனே குடுத்து இவரை திண்டுக் கல்லில் றாஜாவாக வச்சிப்போட்டு ஷெ கும்பினி துரைகள் பாளையத்துக்கு போனதின் பின்பு, அதே மேரைக்கி சோப கிறுதி குறோதி ரெண்டு ஹூ வுள்ள பேஷ்க்காவுக்கு ஸ்ரீ கும்பி னியாறுக்கு குடுத்துக் கொண்டிறுக்கயில், கும்பினியாறுக்கும் அயிதறல்லீகான் பாதறுக்கும் 5 ஹூ சல்லாவாகி கணவாய் கீள்ப்பட்ட கெடிகயெல்லாம் அயிதறல்லீகானுக்கு விட்டுக் குடுத்து சல்லாவான சமயத்தில் யெங்கள் தகப்பனாறாகிய

ஆரணி வேங்கிடசாமி னாயக்கரென்று பேறுள்ள விஜய வேங்கிடவதி னாயக்கறவற்களையும், அவற் மச்சினறாகிய யெங்கள் மாமனாகிய ரங்கசாமி னாயக்கரையும் மதுரைக்கிச் சேற்ந்த கட்டப்புளி தேனூறு யெங்குர கிறாமத்தில் இருக்கச் சொல்லிக் கும்பினியாரிட்ட கட்டளை படிக்கி ரெண்டு ௵ அவடத்தில் இறுக்குமழவில், டீபுசுல்தான் வகை திண்டுக்கல்லி லிருந்த செயிது சாயபு இவரை அவகடமாய் பிடித்து சீறங்க பட்டணம் அனுப்பிவிக்க வேணுமென்று அம்மய னாயக்கனூற் தனிச்சியூர் வரைக்கும் குதிரை வந்ததை அறிஞ்சு திறுசிறபுறத் துக்குச் சேற்ந்த லக்கயனாக்கனூற், புத்தானெத்தம் போய்ச் சேர்ந்தாற்கள்.

அவடத்திலிறுக்கும் போது கத்தி ரங்கசாமி னாயக்கர் தெயிவீகமாயிப் போனாற்கள். பின்னும் ரெண்டு ௵த்துக்கு பின்பு மகாராசராச ஜன்னல் மேடோசு துரையவற்கள் ரெண் டாவது சாதாறண ௵ டீபுசுல்தான் பேரில் பாளயம் காக்கர தோப்பு திருசிறபுறத்தில் ஜமா செய்யும்போது யெங்கள் தகப்ப னாறுக்கு ஆறுதலி அனுப்பிவிச்சி வறவழித்து முன் தண்டுக்கு றஷ்து குடுத்து சகாயம் செயிதாப் போலே இப்பவும் றஷ்து குடுத்து சகாயம் செய்ய வேண்டுமென்று உத்திரவு குடுத்ததில், அதே மேரைக்கி கறூர், தாறாபுரம், கொளம்பம், சக்கிற கிரி வரையில் றஷ்து குடுத்து சகாயம் செய்ததில் சந்தோஷப் பட்டு கற்னல் யிஷ்டோட்டு துரையவர்களையும் துறுப்பு மேஜர் கீலி துரையவற்களையும் னாலுபடாலம் பாறும் இவறு டனே கூட்டி இவற் செயித மேகனத்துக்கு கியாறட்டு யெழுதிக் குடுத்து திண்டுக்கல்லுக்கனுப்பிவிச்சதில் ஷெி திண்டுக்கல் வாங்கி யெங்கள் தகப்பனாற்வசம் செயிது கறனல் யிஷ்டோட்டு துரையவற்கள் பாளையம் போயி சேந்தார்கள்.

இப்படி இறுக்கும் னாளையில் மதுரையிலிருந்து மேஸற் மக்குலூரட்டு துரையவர்கள் திண்டுக்கல்லுக்கு கலைகட்டறாக வந்தாற். யெங்கள் தகப்பனாற் கும்பினியாற் நம்மை றாஜா வாக பட்டம் கட்டியிறுக்க கலைக்கட்டற் வறவேண்டிய தென்ன வென்று சென்னபட்டணம் போயி அவரிடத்தில் ஜன்னல் மேடோசு துரையவற்கள் சீமைக்கிப் போயிவிட்ட

தால் அவரைக் கண்டு கொள்ளவில்லை. மகாராச ராசஸ்ரீ கெவுனற்வோகிலி துரையவற்களை கண்டு பேட்டியாகி அவற் ஆஜறுயிறுக்கச் சொன்னதில் இவற்க்கு சரீரம் சீக்காய் ஊற்பு தானெத்தம் சேந்து லகுவானவுடனே மேஸ்தற் மக்குலூடு துரையவற்கள் திண்டுக்கல்லிலிருந்து இவரை வறச்சொல்லி வுத்தறவு அனுப்பி அவர் வந்து பேட்டியானவுடனேயே நம் முட நிமித்தியம் நீற் சென்னபட்டணம் போக வேண்டி தென்ன நாம் பட்டணத்துக்கு எழுதி வும்முட சீமை உமக்கு தறுகுரேனென்று மூணு மாசம் நிறுத்தியிருக்கையில் மகா ராச ராசஸ்ரீ மேஸ்தற் மக்குலூட்டு துரையவற்களை சென்ன பட்டணத்துக்கு வறச்சொல்லியும் மேஸ்தற் ரங்கதுரைக்கு திண்டுக்கல் கலைகட்ட றாச்சுது. அப்போதிக்கி இவற் பட்டணத்துக்கு பிறயாணமாய் சீலைப்பாடிக்கிப் போயிறங்கினாற். அப்போதிக்கி இவற்க்கு விகாதம் யிறுக்கப்பட்ட பேற்கள் சொன்ன வாற்த்தகள் விசாரணை செய்யாமல் கேட்டு இவறை வறச்சொல்லி திண்டுக்கல் மலைமேலே பாறாவுலே யிறுக்கச் சொன்னாற்.

அப்போ, இவற் கோட்டை கமேண்டறாயிறுந்த கற்னல் கேபீஜ் துரையவற்களுக்கு முன் துரைகள் குடுத்த காறைட்டு காம்பிவிச்சி தன்பேரில் நடந்து யிருக்குற துறாகி தமும் தெரியப்படுத்தினதில் மேஸ்தற் ரங்கதுரைக்கி இது ஞியாயமல்ல யென்று சொல்லி மலையிறக்கி பாறாவிட்டுப் போகச் சொன்னாற்கள்.

அப்பறம், கலைகட்டற் ரங்கதுரை இடத்தில் கச்சேறிக்கி வந்து பேசிக்கொண்டு பட்டணத்துக்கு பிறயாணமா யிறுக்குர முன்னுக்கு, இவரிடத்தில் சேவுகமிருந்த வன்னிய சங்கற லிங்க மென்குரவன் சிறிது சாமானுடனே துரைகள் குடுத்திருந்த கியாறெட்டுகளெல்லாம் திருடி யெடுத்துக்கொண்டு ஓடிப்போனதில் அவனை ஏழு ௵ வரைக்கும் காணாமல்த் தேடி விருபாக்ஷி லக்கயங் கோட்டையில் அவனைக் கண்டு பிடிச்சி சாமானும் காகிதங்களும் கேழ்க்கும்போது லக்ஷ்மி னாயக்கன் கலகத்தின்போது ஊற் அக்கினி பாதையில் வெந்து போச்சுது யென்று சொன்னான். அந்தமேரைக்கி ஷெயூற் லக்கம னாயக்கறையும் கணக்கு சிவகுறுனாதப் பிள்ளையும் வச்

சிக்கொண்டு ஷெயானிடத்திலும் அத்தாக்ஷி வாங்கிக்கொண்டு சீலைப்பாடி வந்து சேந்து இதே விசாறமாய் னாலு வருஷமாய் சீக்காயிறுந்து தெயிவீகமானாற். அப்போ சாலீவாகன சகம் 1689 ஷு முதல் சகம் 1731 ஷுக்கு பிறமோதுத ஷு ஆவணி மாதம் வரைக்கும் ஆண்டு ஷு 42.

ஷெயாற் பட்ட ஸ்திரீயாகிய கிறஷ்ணம்மாள் ஷெ(யாற்) குமாறனாகிய ஆறணி குறுவப்ப னாயக்கற் யெங்குற பேறுள்ள சகோதறனாகிய ஆண் 3, பெண் 2. யென் சமுசாறத்தைச் சேந்த ஆண் 5, பெண் 10. இவ்வளவு ஜனத்துடனே மிகவும் மான சம்றக்ஷணைக்கி வேண்டி சீலைப்பாடி கிறாமத்தில் குடித்தனமாக யிறுக்கப்பட்டிறுக்குறது.

மேலெழுதிய வறலாற் கொண்டு யெங்கள் மான மறியாதை அறிந்து மகாறாஜ ஸ்ரீ கும்பினியாறவற்கள் யெங்களை மானமாக சம்றக்ஷணை பண்ணிக்கொள்ளுவாற்களென்று தங்களுடைய கவனத்தை மிகவும் கோருகுறேன்.

தாது ஷு ஆவணி மீ 23-தேதி.

**ஆரணி குருவப்ப நாயக்கன் கையெழுத்து**

# திண்டுக்கல் ஆரணி விஜய வேங்கடபதி சாசனப் பட்டயம்

## D. 3353

அசலுக்கு சறியான னகலென்று சொல்லப்பட்டு நகல் கண்டு யெழுதிய நகல்.

தறியா பத்து நிட்டல னாயண்ணய்யன்.

சுபகிறுது ஹூ காற்திகை மீ 9 உ மகா ராசராச சென்னல் லாங்கு துரையவற்கள் திண்டுக்கல் ஆறணி விஜய வேங்கி டபதி றாஜா பாதறவர்களுக்கு யெழிதி குடுத்த சாசனப் பட்டயம் யென்ன மென்றால்

தாங்கள் கற்ன்னல் லிகுசீன் துரையவற்கள் உத்தறவும் பேரிலே கும்பினியாற் நிமித்தியமாய் பழனிபாலசமு . ரம் கோட்டையிலிறுந்து அயிதறல்லிகான்பேரிலே னாலாறுமீ சண்டை பண்ணி லிகுசீன் துரைக்கு குமக்கு பண்ணாததி னாலே கற்னல் லிகுசீன் துரையினிடத்தியிலிருந்துகவுள் காகீதம் வறவழித்து கொண்டு பிறப்பட்டு திருச்சனாப்பள்ளி வந்து சேற்ந்து கற்னல் லிகுசீன்துரை பேட்டியாகி கலந்து பேசிகுற முன்னுக்கு, கற்னல் லிகுசீன் துரை சொன்னது கும்பினி துரைகள் மைசூறாறுக்கு அவற்கள் ராச்சியம் வாங்கி அவர்களுக்கு பட்டம் கட்டுகுறோமென்று வாக்குத்தத்தம் பண்ணியிறுக்குறாற்கள். அந்த தத்துறுவு அயிதறல்லீகான் பிறபலமாயிறுக்குரறது. கற்னல் அம்பிலிஷ்டண்துரைபெரி...பாளையம் நகறத்து மேலே போயிறுப்பதால் பாளையத்துடனே ஜன்னல் றாசுலாங்கு துரையவற்கள் பாளையம் போயி சேறவேண்டியிறுக்குறது ஆனபடியினாலே இந்த பாளையத்துக்கு றஷ்துயில்லாமல் நின்னு இருக்குது. இதுக்கு றஷ்து குடுக்குறீற்களா யென்று கேட்டு நீங்கள் றஷ்து குடுக்குறோமென்று ஒப்புக்கொண்ட சேதிக்கி நமக்கு கற்னல் லிகுசீன் றாய வேலூருக்கு ... னாற், அந்த காகிதம் கூட்டிக்கொண்டு, கறூற், அறவக்குறுச்சி வாங்கிக்

கொண்டு, திண்டுக்கல்மேல் வந்தெறங்கி வுங்களை ரசீதுகுடுக்கச் சொல்லி வுற்றறவு குடுத்து நீங்களும் அதே மேரைக்கி றஷ்து குடுத்து திண்டுக்கல் வாங்கினதின் மேல் யெனக்கு சந்தோஷம் வந்து வொல்லியம் புலட்டன் வுடனே சமாசாறம் சொல்லி வுங்களையும் பாளையத்துச் சொன்ன மேரைக்கி றஷ்து குடுங்களென்று சொல்லினான். சென்ன பட்டணத்துக்கு வந்தேன்.

அதுக்கு மேல் நீங்கள் கற்னல் புலட்டன் துரை கூட பாஞ்சாலங் குறிச்சி, விறூபாக்ஷி, தாறாபுரம், கொளம்பம் சக்கிறகிரி, காங்கேயம், பாலக்காட்டு வரைக்கும் சொன்ன மேரைக்கி நீங்கள் றஷ்து குடுத்து ஷியார் மனசு வற நடந்து கொண்டதின் மேல் கற்னல் புலட்டன் வுங்களுடைய ஒத்தாசை யெனக்கு ரொம்பவும் யெழுதிக் கொண்டார். அது பார்த்து னான் வுத்தறவு குடுத்த மேரைக்கி கற்னல் பாற்ப்பினசையுங்களுடனே கூட்டி திண்டுக்கல்லுக்கு பட்டம் கட்டி வச்சி வேட்டை சந்தையூற் முதல், கம்பம் கூடலூறு வரைக்கும் திண்டுக்கல் சேகறம் பாளையப்பட்டுகள் வுள்பட ஆறுக்காட்டு ரூபாயி 180000, கறூற் ரூ. 100000, அறவகுறிச்சி 70000, தாறாபுறம் கொளம்பம் சக்கிறகிறி 300000 ஆக ஷுக்கு 650000 ரூபாயி குடுக்கச் சொல்லி நிகுதிப் படுத்தி, வெகுமதி பச்சப் பல்லக்கு, வெள்ளை குடைவும் அமா மோர்ஜல் நவபத்து முதல் குடுத்து நடத்தினது. கற்னல் புலட்டன் யெனக்கு யெழுதினாற். அது பார்த்துக்கொண்டு தீறா......க்கி கற்னல் புலட்டன் சயின்···யென் சயினுடனே கும்பினி பாவுடா சமுத்திர கரையிலிக்குர வரைக்கும் இந்த மேரைக்கி நடப்பிவிப்போமாகவும் யென்று மறியாதை நவாபு தினுசு நடத்திவிக்கிறமென்று யெழுதிக் குடுக்குறதில் தம்மளுக்கு வஞ்சினையாயி நடந்தால் பறாபற வஸ்துவுக்கு வஞ்சினை செயிதாப்போலே போகக்கடவதாகவும், இந்தப்படி யெழுதிக் குடுத்த சாசனபட்டயம்.

# வள்ளற் கவுண்டன் வமிசாவளி

## D: 3039

*வள்ளல் கவுண்டன் யெண்ணப்பட்ட பூற்வத்து பாளைய காரனுடைய, வம்சாவளி முதலான கைபீயிது, புக்கு...*

*தாறாபுரம் துக்குடி அறவகுறுச்சி தாலுகா கசுபாவுக்கு சேற்ந்த மஞ்சறா பூமிதெலத்துலே யிறுக்கும், வள்ளல்க் கவுண்டன் யெண்ணப்பட்ட தலைய நாட்டுப் பட்டக்காரனுடைய வம்சாவளி முதலான கைபீயிது யென்ன வென்றால்:-*

*பூற்வத்தில் ஏறுகுல வம்சமான செத்திரிய சாதியில் ஸ்ரீகாளஹஸ்திபுரத்தில் வாசமாயிறுக்கப்பட்ட உடுப்பூறில் நாகறாசா யென்குறவற் குமாரற் திண்ண நாற் யெங்குறவன் தேவாம்சைய குணாதிசயம்கள் நாலே வனத்தில் வேட்டைக்கு போஇ பட்சிகள் மிறுகங்களைக் கொண்டு வந்து, ஈசுவறனுக்கு அதிபகுத்தி, ஒடேன தன்னுடைய ஆசாரத்துடனே மாமிசங்கள் நாலே பூசை பண்ணிக் கொண்டு வந்தான். தின பிறதியாஇ ஆரு நாள் பூசை பண்ணினதில் ஆறானாள் பூசை பண்ணுகுரதுக்கு வந்த சமயத்தில் ஈசுவறனுக்கு தின காலத்தில் பூசை பண்ணப்பட்ட சிவகோசறி யெண்ணப்பட்ட பிராமணற் மாம்சம் பூசை பண்ணி கொண்டு அனாசாரம் பண்ணுகுரவனை பிடிக்க வேணும்படியாக யோசிச்சு யிறுந்து சுவாமி அவனுடைய சொப்பனத்தில் அந்த அனாசாரம் செயிதவனுடைய பகுத்தியைக் காண்பிச்சு குடுக்குரோமெ(ன்)றும் னீ வனத்தில் ஒளிஞ்சியிறு யென்று சொன்னாற். அப்போ அந்த காரணாற்த்தத்துக்கு ஆக ஈசுவறன் தம்முடைய நேத்திரங்களிலே ஒறு நேத்திரம் ஒளிகும் படியாஇ காண்பித்தாற். அதை பாத்து மாம்சபூசை பண்ணப்பட்ட திண்ண ந(ாற்) யெங்குறவன் சுவாமிக்கு கண்ணு போஇ விட்டது யெண்ணும்படியா யெண்ணி தன்னுடைய கண்ணை ஒண்ணு ஆயுதத்துநாலே யெடுத்து, சுவாமிக்கு வைச்சான். மறுபடி ஈசுவறன் நேத்திரம் ஒளுகும்படியாக பண்ணிநாற். மறுபடி திண்ணனாற் யெங்குறவன் தன்னுடைய ரெண்டான் கண்ணைப்*

பிடிங்கி வைக்க வேணும்படியாக யெண்ணி, சுவாமினுடைய நேத்திரத்தை தன் காலுனாலே மிதிச்சுக் கொண்டு தன் கண்ணை பிடிங்கி வைச்சான். அந்த சமயத்தில் சுவாமி யிவனுடைய பகுத்திக்கு மிகவும் சந்தோஷப்பட்டு விறுஷப வாகனாறுடறாயி பிறதிட்சணமாஇ னீ யென்னுடைய பகுத்தன் யென்று சொல்லி கைலாசத்துக்கு வறவளைச்சு கொண்டாற்.

மேல் யெளுதப்பட்ட திண்ணநாற் யெங்குறவன் மாம்ச பூசை பண்ணி முகுத்தி பெற்று வேட குலனென்றும் கண்ணப்பனென்றும் பேறாச்சுது. அந்த வம்சத்தில் உள்ள வம்ச பரம்பரைக்கு வேட்டுவ சாதியென்று பேற் வுண்டாச்சுது.

வேடகுல சாதியில் காளஅஸ்தி பிறதேசங்களுக்கு றாசாவா இறுக்கப்பட்ட வம்ச பறம்பரையிலே முத்துறாசாக்கள் கூட்டமென்று பேற் பிறசுத்திப்பட்டு யிறுக்கும் நாளையில்......அக் காலத்தில் கொங்கு தேசமான சேறன் றாச்சியத்தில் சிவ பிறாமணாள் செட்டியள் காணியாட்சிக்காறறாயி இறுக்கும் நாளையில் அக்காலத்தில் றாச்சியாதிபதிகளான சோள சேற பாண்டிய மூணு றாசாக்களிடத்திலேயும் வல்லுவக்கானும் அச்சுத களப்பாளன் ஒட்டியன் யிந்த மூன்று பேறும் யிந்த றாச்சியங்களிலே அங்காமி பண்ணிக்கொண்டு யிறுக்கும் நாளையில் சிவபிறாமண செட்டிகள், அங்காமிக்கு பொறுக்க மாட்டாமல், பாண்டிய றாசா அவற்கள் யிடத்தில் போஇ சொல்லி கொண்டாற்கள்.

அப்போ அந்த மூன்று பேரையும் பிடிக்குரதுக்கு அகப்படாமல் போனபடியநாலே அந்தத் திருடனெ பிடிக்கத் தக்க மனுஷாளை யேற்ப்படுத்திக் கொண்டு வந்தால் அவாளுக்கு ஆதீனம் உண்டு பண்ணி குடுக்குரோமென்று பாண்டிய றாசா வுத்திரவு பண்ணிநாற்.

காளஅஸ்தி பிறதேசத்துலே யிறுக்கப்பட்ட முத்து றாசாக்கள் கூட்டத்தில் சிவபிறாமணாள் செட்டியள் போஇ யிந்த அங்காமி சேதிகள் யெல்லாம் சொல்லிக் கொண்டு பாண்டிய றாசா வுத்திரவு செயித சேதி அறிய பண்ணினார்கள். அப்போ புன்னாடி கோத்திரத்தில் தன்ண்டெறி

முத்துறாசா யெங்குற பேறுண்டானவன் சிறுது சனத்துடனே பிறப்பட்டு சிவ பிறாமண செட்டியளையும் கூட்டிக்கொண்டு பாண்டிய றாசாயிடத்து வந்து அந்த சில்லரை பண்ணிண மூன்று பேரையும் பிடிச்சி குடுக்குரோமென்று சொல்லிக்கொண்டு பாண்டிய றாசாயிடத்தில் பாக்கு வெத்திலை வாங்கிக் கொண்டு ஒட்டியன் யெண்ணப்பட்டவனையும், அவனைச் சேற்ந்த சனங்களையும் வெட்டி செயித்து செயம் கொண்டு வந்தபடிநாலே பாண்டிய றாசா மிகவும் சந்தோஷப்பட்டு, வேட்டுவ றாசாக்களென்று பேறும் குடுத்து யிந்த நாட்டில் பாடி பனிரெண்டுமூன்றி முப்பத்தி ஆறுக்கு மேலான காணியாஷ்சியும் உண்டு பண்ணி குடுத்து அக்காலத்தில் பாண்டிய தேசாதிபதியான சவுந்திர பாண்டிய றாசா அவற்கள் ரொம்பவும் தயவுநாலே தம்முடைய பேறான சவுந்திர பாண்டிய தண்டேறி முத்துறாசா யெங்குற பெரையும் குடுத்து முன் முத்து றாசாவுக்கு வுண்டான வசவசெங்கறடால், புலிக்கொடி, வெள்ளைக்கொடை முதலான விறுதுகள் அல்லாமல் பல்லாக்கு, சாமதுரோக ஹரவெண்டயம், குதிரை மேல் டக்கா, ஒட்டகை மேல் நகாறு, ஆனை மேல் நலபத்து, யெறுத்து மேல் தம்மட்டம், சங்கீத மேளம், பூறிகை, காஹள பேறி சின்னம், பக்கா-யிது முதலான பிறுதுகளும் குடுத்து மணலூறுக்கு சேந்த பாடி பனிரெண்டு முப்பத்தி ஆறு கிறாமங்கள், உள்ப்பட்ட சீமைகழு பட்டாதிகாறியாஇ பட்டாபிஷேகம் பண்ணிவிச்சு குடுத்தாற்கள்.

சவுந்திர பாண்டிய றாசா அவற்கள் கடாட்சயத்துநாலே மணலூறுக்கு சேற்ந்த சீமைக்கு பாளைகற் பிறுபுத்துவக்காறாயி சகல பிறுதுகளும் பெற்றவற்களாயி சவுந்திர பாண்டிய முத்து றாசா யென்ங்குற பேற் பிறசுத்தி பட்டவறாயின தலையூறுலே கெடி உண்டு பண்ணி கொண்டு பாளைகற் ஆதிபத்தியம் பண்ணிக் கொண்டு வந்தாற்கள்.

அந்த நாள் முதல் பரம்பறையாஇ மணலூறு சீற்மைக்கு சேற்ந்த பாளையகற் பிறபுத்துவத்துக்கு பட்டதிகாறியானவற்களுக்கு சவுந்தர பாண்டிய னென்ங்குற பேற்பெறசுத்தியாஇ உண்டானவற்களாயி பிறபுத்துவம் பண்ணிக் கொண்டு வந்தாற்கள்.

அதின் பிற்க்காலம் வம்ச பறம்பறையிலெ பட்டாதிகாறியான சவுந்திர பாண்டிய வேட்டுவன் நாளையில், அக்காலத்தில் பாண்டிய தேசாதிபதியானவற்கள் பேரில் சோள றாசா உயுத்தம் பண்ணி கொண்டு யிறுந்த சமயத்தில் சோள சமுஸ்தானத்தின் பேறில் பாண்டிய சமுஸ்தானாதிபதி தண்டு யெடுக்கும் போது தமக்குள்ளாக யிறுக்கப்பட்ட பாளையப் பட்டாற் முதலான பேரையும் வறச்சொல்லி உத்திரவு ஆயி மதுரை சமுஸ்தானத்துக்குப் போயிறுக்கும் போது தண்டு யெடுத்து பாளையம் யெறங்கின சமயத்தில் கூடாரம் அடிக்க வேண்டியதுக்காக கல்லுகளை யெடுத்துக் கொண்டு வரச் சொல்லி மணலாற் சீற்மைக்கு பாளைகறான செனங்களுக்கு உத்திரவு பண்ணினாற்கள். அப்போ அந்த கல்லுயெடுத்துக் கொண்டு வாரவேலை வெட்டி வேலை யென்றும், அப்படிவெட்டி வேலை நாங்கள் செயிகுரதுயில்லை யென்று சொன்னார்கள்.

அது சேதி பாண்டிய றாசா அவற்கள் கேள்விப்பட்டு சவுந்திரபாண்டிய வேட்டுவரை தரிவிச்சு வுன்னுடை சனங்களை கல்லுகள் யெடுத்துக் கொண்டு வறச் சொன்னதுக்கு வெட்டி வேலை செயிகுரதுயில்லை யென்று சொன்னாற்களே, ஒனக்கு அடுப்புக்கு கல்லுவேணுமே அது யெடுத்துக் கொண்டு வாரது யில்லையா வென்று கேட்டாற்கள். அது வெட்டி வேலையானதால் கல்லை யெடுக்குரது யில்லை யென்று சொன்னாற். பாண்டியறாசா அது சேதிகளுக்கு மனசுலே ஆயாசம் தோண்ணி னீ சமயல் யெப்படி பண்ணுவாஇ யென்றுகேட்டாற். நான் அதுக்கு தலையெ வெட்டி அடுப்பு வச்சு சமயல் பண்ணுஓமென்று சொன்னாற்.

அன்னேறத்தில் ரெண்டு மூணு பேரை தலெயெ வெட்டி அடுப்பு கூட்டி சமயல் பண்ண சொல்லி சொன்னயிடத்தில் சமயலும் ஆயி, தலையும் வெடியாமல் யிறுந்த படியனாலே, பாண்டிய றாசா அதைக் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டு, யிவாள் யிடத்தில் சாத்திர தற்மமும் ரொம்பவும் யிறுக்குரது யென்று தோணப்பட்டு யினிமேல் யிப்படிக்கு செய்ய வேண்டாமென்று உத்திரவு செயிது, மணலூறு நாட்டாரென்று உண்டான பாளையகறுக்கு தலையநாடு யென்று பேர் குடுத்தாற்கள். அதுநாலே தலையனாடு யென்றும் தலையூர் நாட்டு

பாளையகற் ஆதீனத்துக்குப் பட்டக்காறு யென்றும் தலைய நாட்டு பாளையகாற் ஆதினத்துக்குப் பட்டக்காறு யென்று வம்ச பறம்பறையிலே சவுந்தறபாண்டிய பாளையகரென்று பிறசுத்திப்பட்டு யிறுந்தாற்கள்.

அதின் பிற்க்காலும் தலைய நாட்டு பாளையகற் ஆதீனத்து வம்ச பறம்பறையிலே கனக சபாபதி பாண்டியன் யென்னப் பட்டபேற் உண்டானவற் நாளையில் திறுஞான சம்பந்த கண்ணுடைய வள்ளலாற் மடத்துக்கு சீஷநான படியனாலே வள்ளல் யென்று பேற் வரப்பட்டது.

அந்த நாள் முதல் சிவ சமயசையில் சிந்தாத்த ஆசாரங் களாஇ நடந்துக் கொண்டு அறமனையாற் குடுத்த கிதாபும் குறுமனையிலே வுண்டான பேறும் கூட்டி கனகசபாபதி பாண்டிய வள்ளல் யென்று பேற் பிறசுத்தி பட்டாற்களாயி யிறுந்தாற்கள்.

மேல் யெளுதப்பட்ட வம்ச பறம்பறைகளுக்கு போகுகால மான படியனாலேயும் தகவலாயிறுக்கப்பட்ட ஆதறவுகள் ராசீகங்களிலே கைதப்பி போனபடியநாலேயும் யித்தினை தலைமுறை யென்று தெறியவில்லை.

சாலீவாகன சகாபுதம் 1315 முதல் நாளது வரை பட்டம்ங்களும் வறிசைகளும் அவாளவாளுடைய நடைதைகளும் யிதின் கீளை யெளுதி வறுகுரது.

1. அலகடம் செயித கையிக்கு ஆளியிடு பாண்டிய வள்ளல்
பட்டம் ஆண்டு ஷை 37
2. யிவற் குமாரன் தண்டெறி முத்தய பாண்டிய வள்ளல்
பட்டம் ஆண்டு ஷை 22
3. யிவற் குமாரன் சவுந்தற பாண்டிய வள்ளல்
பட்டம் ஆண்டு ஷை 23
4. யிவற் குமாரன் அன்னதான பாண்டிய வள்ளல்
பட்டம் ஆண்டு ஷை 34
5. யிவற் குமாரன் வாரணவாசி பாண்டிய வள்ளல்
பட்டம் ஆண்டு ஷை 45

6. யிவற் குமாரன் மெயிப்பொறுள் நாத பாண்டிய வள்ளல்
பட்டம் ஆண்டு ஷ 10
7. யிவற் குமாரன் சொக்கய பாண்டிய வள்ளல்
பட்டம் ஆண்டு ஷ 44
8. யிவற் குமாரன் சவுந்தற பாண்டிய வள்ளல்
பட்டம் ஆண்டு ஷ 53
9. யிவற் குமாரன் கனக சபாபதி பாண்டிய வள்ளல்
பட்டம் ஆண்டு ஷ 35
10. யிவற் குமாரன் சவுந்தற பாண்டிய வள்ளல்
பட்டம் ஆண்டு ஷ 50
11. யிவற் குமாரன் கனக சபாபதி பாண்டிய வள்ளல்
பட்டம் ஆண்டு ஷ 15
12. யிவற் குமாரன் சவுந்தற பாண்டிய வள்ளல்
பட்டம் ஆண்டு ஷ 18

12 391

சாலிவாகன சகாபுதம் 1706 வருஷம் வரைக்கும் தலைமுறை 12-க்கும் ஷ 391க்கு அவாளவாளுடைய னாளையில் நடந்த நடத்தையள் கீளே யெளுதி வறுகுரது.

முதல் தலைமுறை பட்டக்கார் அலகடம் செயித கையிக்கு ஆளியிடு பாண்டிய வள்ளல் நாளையில் சிறுபுள்ளையாஇ யிறுக்குர போது, சிறுது ஆபரணங்கள் அலங்கரிச்சு யிறுக்குர சமயத்தில் கம்மாள சாதியில் ஒறுவன் னோட்டக்க்காரர் உத்தியோகத்திலே யிறுக்கப்பட்டவன். அந்த ஆபறணங்களுக்கு ஆசைப்பட்டு அந்த கொளந்தை பேறில் யிறுக்கப்பட்ட ஆபறணங்களெ யெல்லாம் வாங்கிக் கொண்டு அந்த கொளந்தைய்யை கெணத்துலே தள்ளி போட்டான். அந்த சமயத்தில குளந்தையானவன் கிணத்துக்குள்ளேயிறுந்து விறுஷரத்தின் வேரை ஆதறவு பத்தி கொண்டு கிணத்து வாறியிலே மேடேறி ஒளிஞ்சி கொண்டு யிறுந்தான். அந்த சமயத்தில் தாயாறு தொப்பனாற் சனங்கள் யெல்லாம் குளந்தைய்யெ காணமென்று தேடி கிணத்துலே யிறுந்த குளந்தையெ கண்டு பிடிக்கும் யிடத்தில் அபொ தாயாரை தோப்ப

நாறை தன்னை வதை பண்ண வேணுமென்று னினத்து கிணத்துலே தள்ளின கைக்கு விறுது போடுவிக்க வேணு மென்று மனுவு கேட்டுக் கொண்டு அந்த கம்மாள சாதி னோட்டக்காரனை தரிவிச்சி அவன் கைக்கு பொன்னாளி மோதிரமும் போட்டு அவனுக்குப் பொன்னுளி நோட்டக்கார் னென்று பேறும் குடுத்து யிந்த தலைய நாட்டில் சேற்ந்த முடக்காறு முதலான கிறாமங்களிலே னோட்டக் கார காணியாட்சி உண்டு பண்ணி குடுத்த படியனாலே அலகடம் செயித கையிக்கு ஆளி யிட்ட பாண்டிய வள்ளல் யென்று பேற் பிறசுத்தி பட்டவறாயி பட்டம் ஆண்டு கொண்டு பெறியவாள் சம்பாதிச்ச ஆதினம் பறிபாலனம் பண்ணிக் கொண்டு வந்தாற்கள்.

ரெண்டான் தலைமுறை முதல் னாலான் தலை முறை அன்னதான பாண்டிய வள்ளல் நாள் வரைக்கும் பூற்வத்தில் பெறியவாள் சம்பாதிச்சு யிறுக்கப்பட்ட ஆதீனங்கள் பறிபாலனம் பண்ணிக்கொண்டு பூமிதெலத்தில் கோட்டை கொத்தளம் போட்டுவிச்சு கொண்டு அன்னதானகாற் யென்று பேற் பெறசுத்திப் பட்டவளா யிறுந்தாற்கள்.

அஞ்சான் தலைமுறை வாரணவாசி பாண்டிய வள்ளல் நாளையில் அக்காலத்தில் பாண்டிய தேசாதிபதியான னாயக்கற் அவற்கள் துரைதனம் ஆண்டு வறும் காலத்தில் றாசாக்கள் தயவுக்குப் பாத்திரனாயி காத்துக்கொண்டுயிறுந்து அறமனை யாற் கட்டு(லேயிருந்த) வூளியத்தில் சாகுறுதுயாஇி முன் னிலைக்காரனாயி யிறுந்து......தலைய நாட்டு கிறாமங்களில் சேற்ந்த சீற்மைய்யை சுத்த சாரியாஇி அனுபவிச்சுக் கொண்டு பூமிதெலத்தில் போயி கிணறுகள் உண்டுபண்ணிக்கொண்டு பிறசுத்தி புறுஷனாயி யிறுந்தாற்கள்.

அக்காலத்தில் பூமிதெலம் பாளைகற் கெடியில் ஆனை, குதிரை முதலான சங்கத்துடனே யிறுக்கும் வேளையில் சிலுக்கால் பொம்மய னாயக்கனுக்கு குமாற வற்க்கமென்று பேறும் குடுத்து ஆண்டிபட்டி கிறாமமும் உம்பளிக்கையாக விட்டாற்கள்.

ஆறான் தலைமுறை பட்டக்காரன் முதல் ஒன்பதான் தலைமுறை கனகசபாபதி பாண்டிய வள்ளல் நாள் வரைக்கும் பூற்வத்தில் பெறியவாள் சம்பாதிச்சு யிறுக்கப்பட்ட ஆதீனம் விளங்க பண்ணிக் கொண்டு அவாளுக்கு உண்டான பிறுதுகள் ளொடனே அந்தந்த காலத்தில் பிறபுத்துவம் பண்ணப்பட்ட றாசாக்கள் தயவுக்கு பாத்திறநாயி காத்து கொண்டு அறமனை யாற்கட்கு பண்ணினபடிக்கு பணமும் செலுத்திவிச்சு கொண்டு பிறசுத்தி புருஷாளாயிறுந்தாற்கள்.

பத்தான் தலைமுறை சவுந்திற பாண்டிய வள்ளல் நாளையில் அக்காலத்தில் பாண்டிய தேசாதிபதியான னாயக்கற வற்கள் சமட்சமத்தில் தயவுக்கு பாத்திரனாயி காத்துக்கொண்டு யிறுக்கும் நாளையில் யிந்த தலையநாட்டு சீற்மைக்கு பெஷ்க்கா ஞ 1க்கு முவ்வாயிரம் பொன்னும், அரமணை காரியத் துக்காக வறப்பட்ட மனுஷாள் ளித்திராபங்கம் பண்ணாத யிறுக்கும்படியாஇ நித்திரை வேளைக்கு யெளுப்பாமல் யிறுக்குரதுக்காக ஞ 1க்கு ஆயிறம் பொன்னும் செலுத்திக் கொண்டு கிறாமங்கள் அனுபவிச்சு கொண்டு பிறசிதி புறுஷாளா யிறுந்தாற்கள்.

பதினோறாம் தலைமுறை கனகசபாபதி பாண்டிய வள்ளல் நாளையில் அக்காலத்தில் றாச்சிய பிறபுத்துவம் பண்ணப்பட்ட மயிசூறு சமுஸ்தானம் ஆளப்பட்ட கர்த்தாக்கள் நாளையில் கடைசியில் யிந்த நாட்டுக்குச் சேற்ந்த கிறாமங்களையெல்லாம் அறமனைக்கு சபுத்தி பண்ணிக் கொண்டு தலையனாட்டு கிறாமங்களிலே நஞ்சை காணியில் 12 புஞ்சையில் 500 யிது தண்டிகை மானியமென்று சுத்த சறுவ மானியமாயி விட்டாற்கள். அதுமுதல் மானியம் அனுபவிச்சு கொண்டு பிறசுத்தி புறுஷறாயி இறுந்து கொண்டு யிந்த நாட்டில் மகமை ஆதாயத்தில் ஞ 1க்கு 100 பொன் அனுபவிச்சுக் கொண்டு வந்தாற்கள்.

சாலீவாகன சகாபுத்தம் 170(7)க்கு, விசுவாவசு ஞ காற்த்திகை மீ 23தேதி, சோமவாரம், பச்சமீ யிந்த சுபதினத்தில் சவுந்தற பாண்டிய வள்ளல் கவுண்டன் யென்னப்பட்ட பட்டக்காற் தெயிவகெதி அடஞ்ச நாளையில் அவர் குமாரனான வறுக்கு அக்காலத்தில் றாச்சியம் பிறபுத்துவம் பண்ணப்பட்ட

டிப்புசுலுதான் துரைத்தனத்தில் அறமனை மனுஷாளும் யிறுந்து நாடூறு பாளையபட்டாற் அனவறும் வந்து பட்டமும் கட்டிவச்சு கனகசபாபதி பாண்டிய வள்ளல் யெண்ணப்பட்ட பேற் வெளங்க பண்ணிநாற்கள்.

அந்தனாள் முதல் தலையானாட்டுப் பட்டக்காறனென்று பேற் உண்டானவனாகி மகா றாச றாச ஸ்ரீ கும்பினியாற் தயவுக்கு பாத்திரனாயி காத்துகொண்டு குடித்தினக்காரனாகி யிறுந்து கொண்டு சறுக்காறுலே கட்டுப் பண்ணினபடிக்கு மிகவும் வணக்கத்துடனே காத்து யிறுக்குரேன்.

நாளது ஆசறுலே யிறுக்கப்பட்ட வள்ளல் கவுண்டன் பூமி தெலத்திலே குடியிறுப்புக்காரனாயி முப்பது வயிசு புறுஷனாயி காத்துகொண்டு யிறுக்கிறேன்.

**வள்ளல் கவுண்டன் ருசு.**

# விருபாட்சி பாளையப்பட்டு

## D. 3259

*மகாறாசஸ்ரீ கற்னல் காலின் மக்கிஞ்சி சாயபு சற்வியற் ஜனறால் யிண்டியா துரை அவற்கள் உசூறுக்கு தறியாபத்து நிட்டல னாயன்ன் அய்யற். 1816 வருஷம் சூன் மீ 16.*

கோயம்புத்தூர் ஜில்லாவை சேற்ந்த திண்டிக்கல் வகைறா விருபாக்ஷி பாளையப்பட்டு ஜபுதீ ஜமீன்தாறிதிருமலை பொண்ணப்பனாய்க்கன் மிகவும் வணக்கத்துடனே எழிதிக் குடுத்த யெங்கள் வமுசாவழி விவறம் யென்ன வென்றால்,

பூற்வத்தில் என் வமுசஸ்தனாகிய பேற்கள் உத்திற திக்குலெ அம்பெ விருபாஷிக்கிச் சேற்ந்த யெறசளகத்தில் பறம் பறையாக யிருக்கும் னாளையில் துலுக்கற் கலியாணம் பண்ணி சம்மந்தம் பண்ண நினைத்தப்படியினாலேயும் சுத்தி வளைந்து பலோதுகாறம் பண்ண படியினால் னாங்கள் கம்பளத்தாற் நிறாகறித்து துலுக்கறுடனே செண்டை செயிது நிற்வாக மில்லாமல் யெடுப்பட்டு வரும்போது, ஆறு பிறவாகமாயி வெள்ளம் வந்து மிகவும் விசாறப்பட்டு கொண்டு எங்கள் குலதெயிவமாகிய பெருமாளை ஸ்தோத்திரம் செய்துக்கொண்டு யிருந்ததில் அந்தக் கரையிலும் யிந்தக் கரையிலும் உள்ள புங்கமறங்கள் வளைஞ்சி, ஆறு யிறுகரையிலுள்ள மறங்கள் ஒன்றாய் கூடி அணைபோலே ஆச்சிது. அந்த மறத்தின் வழியாக ஆறு யிக்கரை யெல்லோறும் வந்து சேந்த உடனே மறங்கள் யதாபிறகாறம் நிமற்ந்துக் கொண்டுது. அப்பால் துலுக்கற் துடற்ந்து வறகூடாமல் போயிவிட்டாற்கள். அந்த னாள் முதல் புங்கமறத்தை யிஷ்டதெயிவமாக நினைக்குறதும் கலியாணம் பண்ணும்போது புங்கம் தழை கொண்டு குடிசைபோட்டு அந்தபுங்கத் தழை குடிசையில் கலியாணம் பண்ணுகுறது. யிப்படிக்கி எங்கள் தொட்டிய கம்பள ஜாதி வழக்கமாக யிப்பவும் நடந்து கொண்டு வருகுறது. யிப்படி யிருக்குற னாளையில் யெங்கள் பெரி

யோற்கள் றாயற்சமுஸ்தானத்தில் சேற்ந்து அக்காலம் சாலி வாகன செகாற்பதம் 1303 கலியுகம் 4482.

யிதின்மேல் செல்லாநின்ற துற்மதி வருஷம்முதல் எங்கள் வமுசஸ்தனாகிய வல்லக்கவாற கோத்திரம் னூத்தி ஒருவேறில் என் பெறியோற்களாகிய சின்னப்ப னாய்க்கற் மிகவும் அக் காலத்து றாயற் சிங்காசன கற்தனாகிய மகாறாசஸ்ரீ திருமலை றாயறவர்கள் சன்னிதானத்தில் முக்கியமாகவும் குமாறவற்கமாக யிருந்தபடியினாலெ, அப்போ றாயற் சமுஸ்தானத்தின் பேறில் டில்லிபாதுஷா மனுஷன் பாலுசாயுபு யென்குறவன் பன்ட யெடுத்து வந்தவிடத்தில் றாயறவற்கள் கம்பளத்தாற் யெல் லோரையும் பாலுசாயுபு படையின் பேறில் படையெடுத்து சண்டை பண்ணவேணுமென்றும் போகச்சொல்லி கட்டளை யிட்ட சமையத்தில், என் வமுஸ்ஸ்தறாகிய மேல்பட்டி சின்னப்ப னாயக்கற் தானும் தன்னுடைய றாணுவையும் செனம் ஆயிறத்துடனே பொறப்பட்டு பாலு சாயுபு படையின் பேரில் போயி அனேகவிதமான சண்டை செயிது முன் வைத்த காலைப் பின் வையாமல் சண்டை செயிது பாலுசாயுபுவை முடிக்கி தெரித்திவிட்டு ஜெயம் செயிது கொண்டு வந்ததில் மகா றாசறாசஸ்ரீ றாயறவற்கள் மிகவும் சந்தோஷப்பட்டு அப்போ சின்னப்ப னாயக்கறுக்கு வெகுமதி விறுதுகள் குடுத்ததென்ன வென்றால்,

1 றணவாசிங்கம் பாஷிகம். 1 ஒண்டிரேகு துறாயி. சிற சிலெ வயிகுறது. 1 வீறகாண்டாமணி, கழுத்திலே போடு கிறது. 1 சாமுதுறோக வண்டயம் வலக்காலுலே போடு கிறது. 1 நிகளம் செங்கிலி வலதுகாலுலே போடுகுறது.. 1 தங்கமுஞ்சி. உருட்டு ரெண்டு காலுலும் பெருவெறலுக் கடுத்த வெறலிலே போடுகுறது. யிந்த ஆறு ஆபறணமும் தங்கத்துனாலே உள்ளது யென்று சொல்லப்படுகிறது. சிங்கல்லாடத்துடனே கனகபல்லாக்கு, 1. அம்பாரியுடனே யானை, 1. வெங்கலபேறியுடனே ஒட்டகை, 1. முன்செல்லி பின்செல்லி அண்டத்து மணி, புலிதொல், கறடி தோல் முகப்பட்டா. கலிகிதுறாயி உடனே குதிரை, 1. பகல் திவிட்டி, 1. வெள்ளடால், 1. வெள்ளக்குடை, 1. வறாக கொடி. 1. பச்சுறிட்டி, 1. வெட்டுப் பாவாடை, 1. வெண்

சாமறம் 1 யிந்த பதினோறு வகையும் வெள்ளி தங்கம் கூட்டி யுள்ள பிறுதிகளென்று சொல்லப்படுகுறது. மேல் யெழுதிய பிறுதுகளெல்லாம் குடுத்து, யினியும் வேண்டியது விபறங்கள் நடத்திக் கொள்ளச் சொல்லி உத்திரவு செயிது வல்லக்க றாயனென்றும். நிகளங்க மல்லனென்றும் சொல்லி தங்களுடைய பேற் முன்னிற்க்க திருமல சின்னப்ப னாயக்க ரென்று பேற் குடுத்தாற்கள்.

மகாறாச ஸ்ரீ திருமலை றாயறவற்கள் சன்னிதானத்தில் சகல வெகுமதி பிறுதுகளும் பெத்து, திருமல சின்னப்பனாய்க்க ரென்று பேற்பெத்து றாயறவற்கள் சமுஸ்தானத்தில் முக்கிய மான சறுதாறாக யிருக்கும் வாளையில் சிறுது னாளைக்கி பின் யெங்கள் பெரியோறாகிய திருமலை சின்னப்ப னாய்க்கற் முதல் சமுஸ்தானத்துக்கு சேவுகமாயிறுக்கப்பட்ட கம்பள சறுதாறுகளை எல்லோரையும் வறவளித்து நீங்கள் யெல் லோறும் னம்முடைய ஸ்முஸ்தானத்துக்கு வறப்பட்ட பகை களுக்கு யெல்லாம் வெகுபாடுபட்டு உத்திரவாதம் செயிது சமஸ் தானத்தைக் காத்திருப்பதுனாலே னம்முடைய சமுஸ்தானத்தை சேற்ந்த தெக்ஷணதிக்குலே காடாறண்ணியங்களாக பூமியிருக் குறது அந்த தேசத்தில் நீங்கள் யெல்லோறும் போயி சேற்ந்து காடாறண்ணியங்களை செவை படுத்திக் கொண்டு நீங்கள் அந்த பூமியை ஜாகிறாக அனுபவித்துக் கொண்டு கப்பளத் தொரைகளாக புத்திர பவுத்திர பாறம்பறியமாக பாளையக் காறரென்று அனுபவிச்சுக் கொள்ளக் கடவதென்றும் அவ றவற் சம்மதியான்யிடங்களில் உண்டு பண்ணிக் கொண்ட பாளையப்பட்டுகளுக்கு ஒன்றும் குடுக்க வேண்டியதில்லை யென்றும், வுங்களுக்கு சேவுகத்துக்காக விட்டபூமிகளானது னாலே செந்திர சூரியனுள்ள வரை புத்திரபவுத்திர பாறம் பறியமாக அனுபவிக்கடவதென்று அவ்வாளவாளுக்கு தகுமான பிறுதுகள் வெகுமதிசெயிது அனுப்பினாற்கள்.

அக்காலத்தில் கம்பளத்தாற் யெல்லாறும் றாயறவற்கள் கட்டளைப்படிக்கி தெக்ஷணத்திக்குலே வந்து அவாளவாள் எறங்கி கொண்ட வனவனாந்திரங்களில் என் பெறியோற் திருமலை சின்னப்பனாயக்கற் வலசை கூடை சாகிதமாயி வந்து யிறங்கின குத்து குத்தாயிருக்குற யிலுப்ப மறத்தடியில்

யிறங்கியிருந்து அதின் அதிக வீடுகள் உண்டு பண்ணி ஊரு உண்டானதுனாலே அந்த ஊருக்கு குத்துலுப்பை யென்று பெற்வறப்பட்டுது.

மேற்படி திருமலை சின்னப்பனாய்க்கறுக்கு தம்பிகள் அப்பண னாயக்கனென்றும் ஏற்றணனாய்க்கயென்றும் ரெண்டு பெற்உண்டு. அவர்களுக்கு பூமி விடவேணுமென்றும் வேற குடியாக்க வேணுமென்றும் யோசித்து, குத்துலுப்பைக்கி தெற்க்கு அப்பணனாயக்கனை காடு வெட்டி வீடு கட்டிக்க சொல்லி அனுப்பினதில் அவற் கொத்தப்பள்ளிதாதம் கோட்டை யென்று ஊருகட்டிக் கொண்டு குடியிருந்தாற். எற்றண னாயக் கனுக்கு குத்துலுப்பைக்கு கிழக்கு, ரெங்கமலைசாறலில் ஊற் கட்டி காடுவெட்டி, சீற்மை உண்டுக் கொள்ளச் சொல்லி அனுப் பினதில் அவற் யெடையகோட்டை என்று ஒரு ஊற்கட்டிக் கொண்டு யிருந்தாற். தான் பெறியவநானத்துனாலெ யிவற் களுக்கு மேற்காக யிருக்க வேணுமென்று நினைத்துதான் பெரியவறானபடியினாலெ கோட்டை யோட்டு ஊற்உண்டு பண்ணி அதற்க்கு பெறிய கோட்டையென்று பேறு உண்டாக்கி குடியிருந்தார். அப்போது அந்த ஊருக்கு தெற்க்கே மலையில் ரெண்டு சோளைக்கி னடுவிலே பெருமாள் உல்பவிச்சி நித்தியமும் முதமையாகிய காறாம் பசு போயி தனக்குதானே பால் கறந்து அபிஷேகமாயிக்கொண்டு வரும். யிப்படியிருக் குறதில் கண்ணுக்கு பால்காணாமல் போகுறதை மாட்டுக் காறன் சமுசயப்பட்டு மாட்டுபின் துடந்து போயி ஒரு னாள் பாற்த்ததில் பசுவுபோயி நின்று சுவாமி பேறில் பால் கறந்ததை கண்டு அதுசமாசாறம் என்பெறியோற்களான திருமலை சின்னப்பனாயக்கறவற்களிடத்தில் தெரியப்படுத் தினான். வுடனே அன்னைதினம் றாத்திரி வொரு வயிஷணவ பிறாம்மணன் சொப்பனத்தில் சொன்னது யென்ன வென்றால், னான் உங்களுடனே கூடயேற்ரையிலிருந்து வந்து யிந்த மலையிலே யிருக்குறோமென்றும் றாம கதிறனாதப் பெருமாளை என்றும் யிந்த பூமி மகா புண்ணிய தேசமென்றும் னாம் யிவடத்தில் வாசம் செய்ய வேணுமென்றும் முன்னாலே சேற றாசாவுக்கு சாம்பமூற்தி பிரிசன்னமாயி வறம் குடுத்து சேறமான் வறம் பெத்தும் சேறமான் தவசுபண்ணியும்

றாசறிகம் பெத்த எடம் னாமிறுக்குறதுக்கு தெற்க்கு பிறம்ம யிசுறன் யிருக்குறதுனாலே சேறமான் பூசை செயித யிசுறன் யிந்த மலைக்கி யிசானியத்திலிருக்குறாற் யென்றும் அதுக்கு தெற்கு உன் குலதெயிவமாகிய லெகுவம்மன் நிலைக் கொண்டு யிருக்குறார் என்றும் எங்களுக்கு ஆலயங்கள் உண்டு பண்ணவேணு மென்றும் யிதுக்கு தெற்க்கே வறாககிறிமலையில் நீலமலையென்று யிருக்குறது. அதில் நீலமலை அழகறும் அதின் தெற்க்கு விருபாட்சி யீசுறறும், அதின் கிழக்கு வேணுகோபால றும், அதின் கிழக்குப் பாலசுப்பிறமணியனும் யிப்படி னாலு ஸ்தளமும் னன் காசியென்று மகானதியும், அந்த னதிமூலத்தில் ரெண்டு தடாகமும் உண்டு. கிழத்தலைகுத்து தடாகத்துக்குமேல் தடாகற்துலே கன்னிகைகள் ஜலக்கிறிடையாடி வாசம் செய் குறதுனாலே அவடங்களில் மஞ்சநிறாகவும், ஆனைஅடி, குதிரை யடி, சிறுபுள்ளையடி, தபசிகள் அடிகளும் கல்பாரையில் பதிஞ் சிறுக்கும். மேல் தலைக்குத்து தடாகத்தில் சாலிகிறாமங்கள் சிவ மூற்திகள் காணலாகும் அனேகதேவதைகள் வாசமாயிருக்கு றார்கள் யென்றும் ரிஷிகள் யிருக்குறதுனாலே மனுஷற் சஞ்சா றம் யில்லை யென்றும் றாத்திறிகாலத்தில் பதினெட்டு வாத்தி யமும் உண்டாகுறதொவனி கெட்கலாகுமென்றும் ஆத்திலே பொட்ட யெலும்புகளெல்லாம் கல்லாயிப்போமென்றும் மகா ஸ்தளமான படியினாலெ அதுகளெல்லாம் நீ போயி சுத்திப் பார்த்து காடுசெடி வெட்டி விருபாக்ஷி யிசுறற் உல்பவிச்சி யிருக் குறதுனாலே அவற்பேறாலே ஊற் உண்டு பண்ணி தேவலாய மும் உண்டுபண்ணி பூசைபண்ணும்படி நெமித்ததேயானால் உன் வசமும் பாறம்பறியத்துக்கு புத்திர சந்தானமும் சம்பத்தும் அஷ்ட அயிசுறயிறாம் வுனக்கு உண்டாயி ரெக்ஷிக்கக் கடவாற்களும் என்று சொல்லிப்போட்டு போனது போலெ சுற்ப்பனமாச்சிது. உடனே தூக்கம் தெளிஞ்சி கண்டவுடனே பிறாம்மணனே காணாகவும் வெடிய்யினியும் போது யிருக்குற தாக தோறத்தப்பட்டபடியினாலெ யிதுசுற்ப்பன மென்றும் சுற்ப்பனத்து வறலாரையெல்லாம் நினைத்துக் கொண்டு மனசில் குறிச்சிக் கொண்டு மறு நாள் முதல் காடாறண்ணிய மெல்லாம் சுத்திபாற்க வேணுமென்று நினைத்தாற்.

சுற்ப்பனம் கண்ட மறுனாளுதயம் முதல் காடாறண்ணி யங்கள் யெல்லாம் சுத்திப்பாத்து நீலைமலையில் உள்ள

அதிசயங்களையும் கண்டு னம்முடைய யிஷ்ட தெயிவமாகிய கதுறுனாதப் பெருமாள் னமக்குத் துணையாக வந்திறுக்குறாரென்றும் சுவாமி உத்துரவுன் படி னடந்துக் கொள்ள வேணுமென்று மனதில் உரிதி செயிது மேற்படி திருமலை சின்னப்பனாயக்கற் உண்டுபண்ணின தென்ன வென்றால் தான் உண்டாக்கின பெரியகோட்டை கிறாமமாகிய மொதமையிடத்தில் கதிறனாதறுக்கு கோயிலும் 1. குலதைவமாகிய லெகுவம்மன் கோயில், 1. யிசுறன் கோவில், 1. யிந்த மூணுகோவிலும் கட்டி வைத்து யினி னம்முடை வமுசத்தில் பெறந்த குழைந்தைகளுக்கு காதுகுத்திரதும் தலைமை வாங்குறதும் பேறு வைக்குறதும் தைவம் கும்முடுகிறதும் லெகுவம்மன் சன்னதியிலேயென்றும் மாலை மடங்கள் பெறிய கோட்டை தவிற மத்தியிடங்களில் கூடாதென்று னேமிச்சாற். வறாககிறிமலை சாறிலிலே வீடுகள் உண்டு பண்ணி பெரும்மாகொளமென்று கொளம் வெட்டி வைத்து தலைக்குத்தில் நிலமலை அழகற் கோவிலுங் கட்டி வைத்து விருபாக்ஷி யீசுறன் கோவிலும் கட்டிவைத்து விருபாக்ஷி யீசுறற் பேறாலே விருபாக்ஷிபட்டணமெண்று பேற்வைத்து விருபாக்ஷியில் யீசுறன் பெருமாளுக் கோவில் கட்டி வைத்து விஸ்தவிக்கிறங்களும் பண்ணிவைத்து விசேஷங்கள் நடப்பித்து விருபாக்ஷி யென்றுள்ள பேற்வெளங்கப் பண்ணினார்.

விறூபாக்ஷி பட்டணத்துக்கு கிழக்கு கலக்காறப்பன பாரைமேல் கோவிலு கட்டிவைத்து குளந்த வேலப்பற் சன்னதி கட்டிவைத்து கறிக்கறப்பன் கோவிலென்று பேற்வைத்து விருபாக்ஷி பட்டணத்துக்கு கிழக்கு மூனு னாழிகை வழி தூறத்தில் வறாககிறிசறிவில் குழந்தைவேலற் மலையில் குளந்தை வேலற் சன்னதியும் கட்டிவைத்தாற். கூடிவந்த செவுகறானவாளில் முக்கியமாகிய அவாளவாளை அவறவற்களுக்கு சம்மதம் உள்ளதில் காடுவெட்டி ஊறகள் கட்டிக் கொண்டு குடியும் படையுமாக யிருக்கக்கடவதென்று பாக்கு வெத்திலைகுடுத்து அந்த சேவுகறாணவகையில் கட்டிவைச்சிறுக்குற பேற்கள் யென்னவென்றால் 1. சிக்கமனாயக்கர் கட்டினது பட்டி 1. கள்ளமந்தனாயக்கர் கட்டினது களனிமந்தயம் 1. கறியப்பனாயக்கர் கட்டினது கறியாம்பட்டி 1 புலியப்பனாயக்கர் கட்டினது புலியூறனத்தம் 1. குறிசின்னமனாயக்கர் கட்டினது கீறணூற் 1, கொத்த வேலப்பனாயக்கர்

கட்டினது கொத்தயம் 1. மஞ்சனாயக்கர் கட்டினது மஞ்ச னாயக்கர் பட்டி 1. சிந்தலவாடனாயக்கர் கட்டினது சிந்தல வாடபட்டி 1. பொடப்பனாயக்கர் கட்டினது பொடுவாற் பட்டி 1. பொருளாண்டி கட்டினது பொருனாயக்கறுபட்டி 1. வேலப்ப னாயக்கர் கட்டினது குறுமப்பட்டி 1

மேல் எழிதிய பதிமுன்று வகைக்காறறும் சிறுது பேற் கம்பளத்தாறும் ஒருவன் பொருளாண்டி யென்குறவன் வெள் ளாடினாகவும் வீடுகள் கட்டி அவனவன் வகைக்காறரை குடி படைசேத்திருந்ததினாலே முன்னிலை வீடுகட்டினவன் பேற்லெ ஊருகளுக்கு பேற்கள் வைச்சி அவனவன் ஊருக்கு அவன வனை னாட்டாண்மையும் பதிமூணு அமறமென்றும் அவா ளுக்கு சேற்வக்காறரென்றும் பேற்களை வைத்து அவாளுக் கெல்லோறுக்கும் மிகிழ்ந்த னந்மையாக நடப்பிச்சி கொண்டு விரூபாட்க்ஷி பட்டணத்தில் றாசதானியாக தம்முடய அரை மனை கட்டிவைத்துக் கொண்டு தம்முடைய கிறாமங்களுக்குள் பட்டவர்களுக்கு எழுதிகுற உத்திரவுகளுக்கு கதிறனாதற் துணையென்று தம்முடை கையொப்புமிட்டுக் கொண்டு என் பெறியோறாகிய முதலாவது பட்டம் திருமலை சின்னப்ப னாயக்கற் விருபாக்ஷிபட்டணம் தொரைத்தனம் செயித வருஷம் 45.

மேல் எழிதிய சாலிவாகன செகாற்பதம் 1303 கலியுகாப் பதம் 4481. இதுக்குமேல் செல்லா நின்ற துற்முதி வருஷமுதல் விசுவாவசு வருஷ வரைக்கும் மேற்படி திருமலை சின்னப்ப னாயக்கற் மேற்படி காறியங்களெல்லாம் செட்டதிட்டப் படுத்தி பட்டம் ஆண்டிருக்குறாற்.

அவற்மகன் கதிறதிருமலை சின்னப்ப னாய்க்கற் தன் தொகப்பனாற் உண்டு பண்ணி கோவில் குளம் கிறாமங்கள் பட்டணம் பெலம் பண்ணிக்கொண்டு குடிபடைசேத்து பிற பலிச்சு யிருக்குற னாளையில் வடக்கெ றாயற் சமுஸ்தானத்திலே யிருந்து கொட்டியம் னாகமனாய்க்கற் மகன் விசுவனாத னாய்க்கற் அவற்களும் வந்து அரியனாயக முதலி யாற் மந்திரியாக யிருந்து மதிரையில் எழுவத்தி ரெண்டு கொத்தளத்துடனே கோட்டை போட்டு

பாளையகாறற்களை யெல்லோரையும் வறவளிச்சி அவற வறுக்கு ஒரு கொத்தளம் காத்து ஒப்பிக்கும்படி ரெமுகம் செயித முன்னுக்கு என் பெறியோறாகிய கதிற திருமலை சின்னப்ப னாய்கறுக்கு.

1. தும்பிப் பதக்கம் நீலவற்ணமான தும்பிக்கை யெறகு மேல் ஒரு யிட்டு யிருக்கப்பட்டது.

2. மோகனமாலை - தங்கமுண்டு

3. முத்துசறம் - முத்துகோத்த தங்கசறம்.

4. தகுடி தலைபாகை - சாதிறா.

யிது வெகுமதியும் செயிது உம்மிட தோப்பனாற் றாயசமுஸ் தானத்தில் வெகுமதி பெத்து அவடத்து குமாற வற்கமாக யிருந்து ஜாகிறும் அனுபவிச்சி கொண்டு வந்தானத்துனாலே நிறுமனம்முடை மதிரை சமஸ்தானத்துக்கு குமாறவற்கமாக யிருந்து திருமஞ்சனக் கொத்தளம் காவல்காற்று ஒப்பிக்கச் சொல்லியும் னம்முட சமுஸ்தானத்துக்காக செண்டவந்த தோணுகிற சமயத்தில் படை கூட்டி செயம் பண்ணவேணு மென்றும் உங்கள் சீற்மை ஜாகிற் அனுபவிக்கச் செல்லியும் கட்டளை யிட்டாற். அப்படியே விருபாக்ஷி னகறத்தில் பிறபலமாக சாலிவாகன செகம் 1348 க்கு மேல் செல்லா னின்ற பறாபவ வருஷம் முதல் யுவ வருஷ வரைக்கும் பட்டம் ஆண்ட வருஷம் 30.

அவற் மகன் திருமலைகுப்பள சின்னப்பனாய்க்கற் னாளையில் தங்கள் பெரியோற் உண்டுபண்ணின கிறாமங் களைச் சேற்ந்த சிறுவனங்களான காடு செடிகள் வெட்டி பூமி சமனாக்கி குடியேத்திக்கொண்டு யிருக்கும் காலத்தில் ஒரு னாள் றாத்திரி சுற்ப்பணத்திலே ரெண்டு பிறாம்ம ணாள் போலே வந்து, னாங்கள் யிருவரும் மலை உச்சியில் அன்னமாகாரமில்லாமல் தவைக்கிறோம். நீ றாசாவாயிருந்து எங்களை பட்டினி போட்டு வைக்குறது தறம்மல்லா வென்று சொன்னது போலே கண்டு, மறுனாளுதையத்தில் மலாலஉச்சி யில் யேறி போயி பாற்குமளவில் ஏறயேற தொலையாம

லிருந்து உச்சியிலெ யேறி பாற்குமளவில் அவடத்தில் ஒருவன் பேறில் சன்னதம் வந்துனாம் உனக்கு சுப்பனம் காண்பிச்சது யென்று கடைபடியினாலெ அவடத்தில் மங்களனாதசுவாமி கோவிலும் கட்டி வைத்து பெரியமலையானதுனாலே பெறியூ ரெண்றும் ஊறு உண்டு பண்ணி இதின் மேற்க்கு தண்ணீற் பாச்சலிலே (வுண்டா) யிருக்கற மகாளியீசுறறுக்கு கோவில் அவடத்திலும் பாச்சலூரென்று உண்டு பண்ணி தேவாலை யங்களுக்கு பூசை நயிவேத்தியங்கள் நடந்து வரும்படி திடப் படுத்தி கிழக்குள்ள பேறியூற் யென்றும் னாலு னாழிகை வழியில் மேற்க்குள்ள பாச்சலூரென்றும் இதில் சேற்ந்த வட காடு கண்ணனூரு வெண்ணலையிப்படிக்கி கிறாமங்கள் உண்டு பண்ணி பேற்வைத்து குண்ணுவற் பொலையற் காடு வாழும் ஜாதிகள் வறவளிச்சி, குடியேத்தி, பெலா, ஷெண்புகம், னாற்தை, எலுமிச்சை, கொளுமிச்சை, மாமறம், வாழை, மஞ்சள் யிதுமுதலாகிய மாவடை மறவடை வகைகளை உண்டு பண்ணச் சொல்லி திட்டம் செயிது, அந்த குடிகளுக்கு வெகுமதி செயிது மலைகிறாமங்களென்று உண்டுபண்ணி விருபாஷி பாளையக் காறரென்று பிறபலப்பட்டு கற்தாக்கள் உத்திரவுக்கு கீழ்ப்பணிற்ந்து நடந்துகொண்டு கொத்தளம் காவல் காத்து ஒப்பிச்சிக் கொண்டுயிருந்தது. சாலிவாகன செகாற்பதம் 1378க்கு மேல் செல்லா நின்ற தாது வருஷம் முதல் பிலவ வருஷம் வரைக்கும் பட்டம் ஆண்டிருந்த வருஷம் 26.

அவற்மகன் திருமலை பலபத்திரறாம சின்னப்பனாய்க்க பட்டக்காறனும் அவற்தம்பி ரெகுறாம னாயக்கரென்றும் யிருந்தார். அவாளிருவற் அண்ணன் தம்பிகளுக்கும் ஒருவற் கொருவர் மனுசு ஒத்துவறாமல் கோபித்துக்கொண்டு, தம்பி யான ரெகுனாத னாயக்கற் கிழக்கே ரெங்கமலைக்கிப் போயி னாலஞ்சுனாள் காட்டுல படுத்துக் கொண்டிருந்து சீவன் விட்டு விடுஒமென்று யிருந்ததில் அப்போது ஒரு சுற்ப்பனமாச்சிது. ஒரு ரிஷி செடையும் முடியுமாயி பூன்னூ லுடனே மகாதேஜசோடும் கூடினவாக வந்து, என்ன பட்டினி யிருந்து சங்கடப்படுகுறாயி. யிந்தமலைக்கி கிழக்கு னம்முடை யெடமானதுனாலே காடுசெடிவெட்டி ஊர்கட்டி குடியிருந்து பொழைச்சிக்கோ. னம்முடை பேறு கவுதமா றிஷியென்று

சொல்லி னம்முடபேறாலே ஊற்கட்டி அக்கிறகாறம் பண்ணென்று அடையாளம் காண்பிச்சு, அதோதெரியுது குட்டமடுயென்றும் அதுக்கு வடக்கு கல்லு தெரியுதென்றும், அதுக்கு கிழக்கு புஷ்பம்போலே பூமி தெரியுதென்றும், யிப்படி காண்பிச்சுப் போட்டு னாம் தெற்கேப் போறொம் நி யிந்த யிடத்தில் அன்பதறுவது வருஷம் வரைக்கும் தொரையாக யிறுப்பாயியென்று வறம்குடுத்துப் போனதாக சுற்பனம் கண்டு திடுக்கிட்டு முழிச்சிப்பாற்து னமக்கு சுவாமி சொன்ன உத்திரவு படிக்கி போக வேணுமென்று கெழக்கே வந்து கொடகனாத்தில் தண்ணிகுடிச்சி களைதேறி அப்பால் அந்த ஒறத்தில் மகா ரமணிய்யமான யெடமென்று நினைத்து சொற்ப்பனத்தில் கண்டதுபோலே சுல்லா தேனிசமானதாக அந்த அடியாளங்களையெல்லாம் கண்டபடியினாலே வெகுசந்தொஷமும் தயிரியமும் தோணப்பட்டு காடுவெடுகையும் ஊற்கட்டுகையும் நினைத்து கவுதமபுறமென்று ஊற்கட்டி பிறாம்மனாளுக்கு அக்கிறகாறம் பண்ணி கொடை போட்டுக்கொண்டு யிருந்ததுனாலே கவுதமற் கோட்டையென்றும் குட்டம் கல்வாறப்பட்டி, கூவனூத்து புதுக்கோட்டையென்றும் கிறாமங்கள் உண்டு செயிது அவ்விடத்தில் ஆண்டு கொண்டிருக்கும் னாளையில் மேற்படி ரெகுனாதனாக்கற் கொடகனாத்துக்கு கிழக்கே குத்தம்பாறைபட்டி வரைக்கும் காடுவெட்டி ஊருகட்டி யிருந்தாற். தம்பியானவன் சிறுது சீமை உண்டு பண்ணின சமாசாறம் தமயனார் திருமலை பலபத்திர சின்னப்பனாயக்கற் கேழ்விப்பட்ட படியனாலே தேவதாவறப் பிறசாதனென்று சந்தோஷப்பட்டுக் கொண்டு தங்கள் பெறியோற்கள் ஆதீனமாக விருபாக்ஷி சீமை ஆண்டுக்கொண்டுயிருக்கும் னாளையில் திருமலை பலபத்திர சின்னப்பனாயக்கற் சொற்பனத்தில் ஒரு பாலகனாகவும் பிறாம்மண குழந்தை போலவும் வந்து னமக்கு திருக்கலியாணம் பண்ணி வைக்க சொல்லியும் னாம்தான் கனக்கிறி குழந்தை வேலவரெண்றும் சொன்னதுனாலே திடுக்கிட்டு யெழுந்திருந்து னாலு திக்கும் பாத்து காறணமென்று நினைத்து கொழந்தை வேலப்பறுக்கு மலைகீழே கோவிலு கட்டி னங் காஞ்சி ஆத்தில் அணைகட்டி வைத்து உம்பிலியரை கொண்டு வீடேத்தி வைச்சி சின்னகொளம், பெறிய கொளமென்று ரெண்டு கொளம் வெட்டி வைத்து

உம்பிலியப்பட்டியென்று பேருண்டாக்கி கனக்கிறி கொளந்தை வேலப்பருக்கு உஸ்தவிக்கிறங்கள் உண்டுபண்ணி, ரெதம் உண்டாக்கி, மாலை சுத்தீ தேறோடி வரும்படி திட்டப்படுத்தி தைமாசத்தில் திருவிளா னடப்பிவிச்சி சட்டப்படுத்தி மதிரை கற்தாக்கள் உத்திரவுப்படிக்கி கீழ்படிந்து குமாற வற்க்கமா னடந்து கொண்டு யிருந்தாற். அவற் பட்டமிறுந்தது சாலிவாகன செகாற்பதம் 1404க்கு மேல் செல்லா நின்ற சுபகுதுறு வருஷம் முதல் ஸ்ரீமுக வருஷம் வரைக்கும் வருஷம் 32.

னாலாவது பட்டக்காறனாகிய வறமகண் திருமலை யெற தம்ம சின்னப்ப னாயக்கற் பெரியோற்கள் சம்பாதிச்ச பூமி ஆண்டுக்கொண்டு கற்தாக்கள் உத்திரவுக்கு கிழ்பணிந்து னடந்துக் கொண்டு யிருக்குற னாளையில் செடையன் யென்று ஒரு குடியானவன் சொற்பனத்தில் ஒரு கனிகை போலே பிறாம்மண பெண்ணாக வந்து, னான் யிந்த பெறிய ஆலமறத் தடியிலிருக்குரேன் யெனக்கு தாகம் வசமில்லை, னங்காஞ்சி யாரை திருப்பி என்னிடத்துக்கு கொண்டு வந்தால் எனக்கு தாகம் தீறுமென்றும் கொளம் உண்டுபண்ணினால் அதில் என் எனத் தாற் பத்து பேருக்கு அன்னபானாதிகள் குடுத்துக் கொண்டிருப் பேன் யென்றும் யிதுசமாசாரம் உன்னுடைய தொரைகிட்ட சொல்லச் சொல்லி சொன்னபடிக்கி கண்டு அந்த குடியான சடையன் திருமல யெறதம்ம சின்னப்ப னாய்க்கறுடனே வந்து சொன்னான். அதுசங்கி நிணைத்துக்கொண்டு படுத்ததில் அனுகூலமாக மெண்றும் அப்படிக்கே அவருக்கும் சொற்பணம் கண்டுது. அதிலே மனசின் நிஜமென்று நினைத்து சந்தோஷப் பட்டு அந்த குடியானவனை அழைச்சி வேண்டிய திரவியம் குடுத்து, சடையன் குளமென்றும், சடையன் குளத்தணை யென்றும் அந்த மறுகால் தண்ணி வீண்போகாமல் செங்குளம் கறிங்குளமெண்றும் ரெண்டு குளமும் அணைவயல் தோணி வயல்யெண்று நஞ்சை நிலங்களாக்கி வைத்து, அந்த னஞ்சையை பிறாமனாளுக்கு தாறாத்தம் செயிது மேற்படி செடையன் குளத்து பின் அழகனாச்சியம்மன் கோவிலும் சின்ன கோவிலும் அக்கிறாறமும் கட்டிவைத்து பிறதிஷ்டை பண்ணிவைச்சி தற்ம சிந்தனையாக றாச்சியபறி பாலனம் பண்ணிக்கொண்டு யிருந்தாற். யிப்படியிருக்கும்

னாளையில் முன்னாலே தம்முடைய தொகப்பனாறுடனே சீறாட்டாகபோயி கவுதமங்கோட்டை, குட்டம், கல்வாறப்பட்டி, வுண்டாக்கிக் கொண்டு யிருந்த சிறிய தொகப்பனாராகிய ரெகுனாத னாயக்கறவற்க்கு அறுவது வயசு வரைக்கு பிள்ளை யில்லாத யிருந்து வயசு செண்ணு றொம்பவும் விருத்தாப்பிய காலத்தில் அண்ணன் மகனே னம்முடை மகன் யென்று தோணப்பட்டு திருமல யெறதம்ம சின்னப்ப னாய்க்க நிடத்துக்கு வந்து சேந்து நீ யென்னை யென்றும் னான் உண்டாக்கின கவுதமங்கோட்டை, குட்டம், கல்வாறப்பட்டி பூவெனூத்து, புதுக்கோட்டை யிப்படிக்குள்ள அஞ்சிகிறாமத்தை சேற்ந்த உபக்கிறாமங்களும் நீயே ஆண்டு அனுபவித்துக் கொள்ளகடவதென்றும் னமக்கு வயசு காலமாச்சிதென்றும் சொல்லி இவ்விடத்திலேயே யிருந்து சிறுது னாளைக்கு பிறகு தெயிவகெதியாநாற். அவறுடைய கிரையகளெல்லாம் னடப்பி வித்து குட்டமங் கல்வாறப்பட்டி வகைகு கிறாமங்களை விருபாக்ஷிக்கி சேற்த்துக்கொண்டு ஆண்டு அனுபவித்துக் கொண்டு யிப்பிடிக்கி சாலிவாகன செகாற்பதம் வருஷம் 1436க்கு மேல் செல்லும் பவ வருஷம் முதல் சாதாறண வருஷம் வரைக்கும் வருஷம் 37.

அவற் மகன் திருமல வறாஹகிறி சின்னப்ப னாய்கற் பட்டம் ஆண்டுக் கொண்டு யிருக்கும் னாளையிலே தம்முடைய சீற்மையில் வெகு பூமி காடு கொண்டிருக்குறதென்று நினைத்து குடிகளை அழைப்பிச்சி அவாளுக்கு வேண்டிய முன்னீடுகள் குடுத்து வெகுமதிகள் செயிது நீங்கள் மொதமையாக கட்டிவைத்த அவறவற் ஊருக்கு அவறவற் பேரை வைத்து வெளங்கப் பண்ணுகிறோமென்று சொல்லி குடிகள் நன்மை நினைத்து கட்டின ஊருகள் விவரம் யென்னவென்றால்:- தாசறினாயக்கற் கட்டினது தாசறிப்பட்டி 1. புதுகுடி னாயக்கற் கட்டினது புதுகோட்டை 1. தேவனாயக்கர் கட்டினது தேவத்தூர் 1. வேலப்பனாயக்கற் கட்டினது வேலூற் 1 பொட்டிக் காமனாயக்கற் கட்டினது பொட்டிகாமபட்டி 1. வறாககிறி னாயக்கற் கட்டினது வறாககிறி கோட்டை 1. லக்கமனாயக்கற் கட்டினது லக்கன கோட்டை 1. அத்தப்ப னாயக்கர் கட்டினது அத்திக்கோட்டை 1. கொல்லமனாயக்கற்

கட்டினது கொல்லப்பட்டி 1. சின்னவேலப்பனாயக்கர் கட்டினது சின்னவேலப்பட்டி 1. காளாஞ்சி னாயக்கர் கட்டினது காளாஞ்சிப்பட்டி 1. சிந்தமனாயக்கர் கட்டினது சிந்தல்ப் பட்டி 1. அன்னமனாயக்கர் கட்டினது அன்னமனாயக்கர் பட்டி 1. காப்பிலியலக்கணன் கட்டினது காப்பிலியப்பட்டி 1. அப்பளனாயக்கர் கட்டினது அம்பிளிகை 1. விறப்பனாயக்கர் கட்டினது விறலப்பட்டி 1.

யிந்தபதினாறு பட்டியும் உண்டாக்கி வைத்து கற்தாக்கள் உத்திரவுக்கு கீழ்பணிற்ந்து னடந்துக் கொண்டு தங்களுடைய சீற்மைக்கி யெல்லை அடியாளங்கள் போடுவிச்சி சட்ட திட்டப்படுத்தி சாலிவாகற சகாற்பதம் 1473-க்கு விறோதி வருஷமுதல் விக்றமவருஷம் வரைக்கும் வருஷம் 30.

அவற்மகன் திருமலை நயினாத்தை சின்னப்பனாயக்கற் பட்டமாண்டு கொண்டு யிருக்கும் னாளையில் அவற் ஒருனாள் வேட்டைக்கி போன சமையத்தில் சுவமறங்கள் மீதுழ்ந்து நிலங்கள் சாகுபடியில்லாதுனாலே அவடத்தில் வைகாணி யென்றும் மண்டவாடியென்று ஒரு ஊரும் தங்கச்சியம்மா பட்டி யென்று இப்படி மூணுவூர் கட்டிவைத்து சீமை ஆண்டுக் கொண்டுயிருக்குற னாளையில் முகிலெனென்று ஒரு துலுக்கன் மைசூற் சமுஸ்தானத்திலிருந்து வந்து கணவாயிக்கு கீழ்பட்ட யிடங்களில் வந்து சீமைக்கட்டி திண்டிக்கல்லுக்கு வந்து யிறங்கினதில் கற்தாக்களானவற்கள் பாளையகாறரே எல்லோ ரையும் தறிவிச்சி முகிலனே முடுக்கவேணுமென்று கட்டளை யிட்டதில் பாளையம் சேற்ந்து முன்பாக திருமலை நயினாத்தே சின்னப்பனாயக்கற் மொளஞ்சி பாளைகாறரெல்லோ ரையும் கூட்டி படையெடுத்து மேற்படி முகுலனான துலுக்கனை கணவாயிக்கி கீழே யிருக்காட்டாமல் தொறத்தி விட்டப்படினாலே கற்தாக்கள் வெகு சந்தோஷப் பட்டு பாளையகாற் யெல்லோறுக்கும் அவாளவாளுக்கு உடுகரைகள் குடுத்து திருமலை நயினாத்த சின்னப்ப னாயக்கறுக்கு வெள்ளி கட்டின பாலா, 1. பச்சபாலா 1. யிந்த ஆயுதமும் குடுத்து உன் சீற்மைக்கி வடக்கு கணவாயி வரைக்கும் தானே பாதி காவலாகவும் னம்முடை குமாற

வற்கமாகவும் இருக்கக் கடவதென்று மறியாதை பண்ணி அனுப்பிவைச்சாற்.

அவற் னாளையில் பல்லியப்பனாயக்கனூர் பல்லியப்ப னாயக்கற் க்ஷாம காலத்தில் குஞ்சி கொழந்தை ஜனங்கள் சகிதமாயி விறுபாக்ஷியில் வந்து யிருந்து சிலவுகளுக்கு வாங் கிக் கொண்டு யிருந்தாற்கள். அப்படினாளுக்குனாள் படி சிலவுகளுக்கு குடுத்துக்கொண்டு வந்தவிடத்தில் அவற்களுக்கு பேரும் போறாமல் யிந்த சமயத்தில் மேற்படி பல்லியப்ப னாயக்கற் தமக்கு சேற்ந்த வெல்லம்பட்டியும் அதை சேற்ந்த உபகிறாமங்களும் அறிதியாக்குடுத்து ஆயிறம் கலதவசமும் பொண்ணும் வாங்கிக் கொண்டு வந்தாற்கள்.

அன்றுமுதல் குட்டம் கல்வாறப்பட்டியுடனே சேற்ந்து தம்முட விருபாக்ஷி சீமையாண்டு கொண்டு சாலிவாகன 1503க்கு விஷு வருஷம் முதல் பிலவ வருஷம் வரைக்கும் பட்டம் ஆண்ட வருஷம் 21.

அவற்மகன் திருமலை கும்பளசின்னப்ப னாய்க்கற் பறம் பரையாயி உள்ள பாளையப்பட்டு பூமியை பரிபாலனம் பண்ணிக் கொண்டு கற்த்தாக்களாகிய திருமல னாயக்கறவற்கள் உத்திரவுபடிக்கி நடந்துக் கொண்டு யிருக்குற னாளையில், அவற் னல்லத்தங்கா வோடை ஆத்தில் அணைப்போட்டு ஆயிறம்அன்னூற்சில வளிச்சி வாயிக்கால் குளம் வெட்டி வைச்சி கருங்குளமென்றும் சிந்தல்வாடம்பட்டியில் கவுண்டன் குள மென்றும் மஞ்சனாயக்கன் பட்டியில் செங்குளமும் பொடுவாற் பட்டியில் பெரிகொளமும் யிப்படி னாலு கொளம் வெட்டி வைத்து நஞ்சை உண்டு பண்ணி பிறாம்மனாளுக்கி சிறுது னஞ்சை விட்டு தற்ம மாற்கமாயி குடிகளை ஆதறிச்சி கொண்டு யிருக்குற னாளையில் மைசூற் சமுஸ்தானத்திலிருந்து தேவ றாச ஓடையற் கறாசூற் னந்திறாசபா பாளையத்துடனே கண வாயிக்கி கீழே திண்டுக்கல் வரைக்கும் வந்தது. சீற்மை கட்டவந்ததில் அப்போ மதுரை கற்தாக்களாகியவாள் தளவாயி றாமப்பய்யனவற்கள் அனேகதளத்துடனே திண்டுக்கல்லுக்கு வந்து யிறங்கி பாளையப்பட்டாரை யெல்லாம் வறவளித்து னாம் மைசூற் சமுஸ்தானத்தின் பேரிலே தண்டுயெடுக்கு

றோம், நீங்க ளெல்லோரும் சகல ஜெனத்துடனே கூடவர வேணுமென்று சொல்லி நீங்கள் வெகுனாளாயி பாளையப் பட்டு ஜாகீறாகவும் சற்வமானியமாகவும் அனுபவிக்குறபடி யினாலே யிப்போது தண்டு சிலவுக்கு அவறவற்க்கு தக்கது குடுக்கவேணுமென்று தறாதறம் பாற்து திறந்து விட்டாற்கள். அப்போ விருபாக்ஷி கிறாமப்பய்யறாக வந்து மலைப்பாற்க வேணுமென்று சிறுதுமலை வரைக்கும் வந்து யேற மாட்டாமல் யிறங்கி வந்து விட்டாற். அவற் வந்த மட்டுக்கும் அந்த யிடயில் றாமப்பயற் குண்டென்று ஒரு கல்லுக்கு பேற் வறப்பட்டு அந்த யிடத்தில் யிருக்குறது. யிப்படிக்கி உள்ள சமயத்தில் விருபாக்ஷி பாளையப்பட்டுக்கு என்ன குடுக்கிறீரென்று கேட்டதில் னாங்கள் கோட்டியிலுந்து சண்டை முகத்துக்கு யிருக்குற வனானதால் தாங்கள் கட்டு பண்ணினபடி கேழ்க்குரே னென்று றொம்பவும் வணக்கமாயி திருமல குப்பன் சின்னப்ப னாயக்கற் கேட்டுக் கொண்டதில் சந்தோஷப்பட்டு றாமப் பய்யனவர்கள் ஆயிறம் கோபாலி செக்கிறம் பொன் குடுக்கச் சொல்லி வாங்கிக் கொண்டு அவரையும் அழைச்சிக் கொண்டு போயி மைசூற் சமுஸ்தானம் வரைக்கும் கறாகூனந்தி றாசாவை தொடற்ந்து முடிக்கி சமுஸ்தானமும் கைவசப்படுத்திக் கொண்டு தளவாயி றாமப்பய்யனவற்களும் மதுரைக்கி வந்து கற் தாக்கள் பேட்டி செயிதுகொண்டு யிப்படியிருந்து பின்னேயும் சிறுது னாளைக்கு பிறகு பாளையப்பட்டாரையும் கூட்டிக் கொண்டு சேதுபதி சமுதஸ்தான பேறில் போயி சண்டை செயிததில் சேதுபதிக்கு நிறுவாகம் யில்லாமல் றாமேசுறத் துக்கு போயிவிட்டதில் தொடந்து போயி பாம்பாறுக்கு கல்லணைகட்டி வைத்து அவரையும் சொவசப்படுத்திக் கொண்டு மதுரைக்கி வந்து சேற்ந்து கற்த்தாக்கட்கு றாமப்பய்யனவற்கள் திருமலை குப்பன்சின்னப்ப னாயக்கற் றெம்பவும் சண்டை முகத்தில் பிறயாசப்பட்டா ரென்று அறிக்கைப் பண்ணினது னாலே கற்த்தாக்கள் சந்தோஷப்பட்டு னம்முடைய பேற் கொண்டவனானதால் னம்முட பிறீதும் குடுக்கலாகுமென்று, மயிலெறகு குஞ்சம் தங்கக் காப்புடனே, ரெத்தினம் பொதைச்சி யிருக்குற வெகுபெறீசாயி யிருக்கப்பட்ட பிறுது பச்சக்கடயம் தங்க கடயத்தில் பச்சைபொதைப்புள்ளது,

1. பாஜிபந்து வைறத்தினமும் பொதைப்புள்ள கைக்கட்டு - 1. தாயித்து கைக்கட்டு கோவக்காயி போலே உள்ளது, தங்கத் தினாளே, 1. முத்துமாலை கழித்தில் போடுதற கண்டசறம், யிந்த அஞ்சி வெகுமதியும் பெத்து, சாலிவாகன செகாற்ப் பதம் 1524 க்கு மேல்செல்லும் சுபகுறது வருஷம் முதல் விஷு வருஷ வரைக்கும் வருஷம் - 40.

அவர் மகன் திருமலை தாசுறி சின்னப்ப னாயக்கற் பட்டமாண்டுக் கொண்டு வருதற னாளையில் கொத்தயம் கிறாமத்தில் நல்ல தங்கை ஆத்து பாஷாணத்தில் குளம் வெட்ட நினைத்து ஆயிறம் ரெண்டாயிறம் சௌவழிச்சி வேம்பு மறங்கள் றெம்பவும் மிதந்திருந்ததுனாலே வேப்பங் குளமென்று ஒரு கொளமும் பொருளுறில் சின்னக் கொள மென்று ஒரு கொளமும் வெட்டி வைத்து பிறாம்மணாளுக்கு தாறை வாற்து குடுத்து அக்கிறாறம் உண்டு பண்ணி தற்ம மாற்க்கமாக குடிகள் ஆதரிச்சி வைச்சிக் கொண்டு றாசிய பரிபாலனம் பண்ணிக்சொண்டு வருகுறனாளையில் மயிசூறாற் பாளையம் வந்து யிறங்கி திண்டிக்கல் வரைக்கும் வியாபிச்சதில் திருமல னாயக்கறவற்கள் தம்பிமுத்துறாச னாயக்கறவர்கள் யென்குறவற் சகலதளத்துடனே வந்து திண்டுக்கல்லுலே வந்து யிறங்கி பாளையப்பட்டரை யெல்லாம் சேகறித்துக் கொண்டு மைசூற் வரைக்கும் முடிக்கி விட்டு வருகுறதுக் குள்ளாக யிவடம் மதிரையில் திரும்லை னாயக்கறவர்கள் தைவிகமாயி போனதில் மதுரையிலிருந்து துஷ்டசாமாஜிகள் முத்து வீறப்ப னாயக்கறுக்கு பட்டம் கட்டி வைச்சிப் போட்டாற்கள். அப்படி யிருக்கையில் முத்துறாச னாயக்கறவற்களும் தளத்துடனே மதுரைக்கி வந்து கோட்டைக்குள்ளே போகாமல் வெளியிலெ யெறங்கிக் கொண்டு சாம்யாஜிகளுக்கும் முத்து விறப்ப னாயக்கறுக்கும் சொல்லியனுப்பிவிச்சது யென்ன வென்றால்; னான் பட்டத்துக்கு அருளனாக யிருக்க முத்து விறப்பனாயக்கனுக்கு பட்டம் கட்ட வேண்டிய தென்ன வேண்டும். அவனைப் பிடிச்சு கட்டிக் கொள்ளலாமென்று செலியம் பண்ணதில் அப்போ யெல்லா பாளையகாறறும் பெறியமனுஷறும் திருமலை தாசறி சின்னப்பனாயக்கரை முன்னிட்டுக் கொண்டு அவருக்குத் தக்க சமாதானம் பண்ணி

வைத்து சிலுக்காச்சி சீற்மையை விட்டுக் குடுக்கும்படியாயி முத்து வீறப்ப னாயக்கறுக்கும் சொல்லி யிருவருக்கும் சமாதானம் பண்ணி திட்டப்படுத்தி முத்து னாயக்கரை சிலுகாச்சிக்கி கூட்டிக் கொண்டு போயிவிட்டு அவறிடத்தில் அனுப்பிவிச்சிக் கொண்டு மதுரைக்கி வந்து முத்து வீறப்ப னாயக்கறாகிய கற்தாக்களிடத்தில் அனுப்பிவிச்சிக் கொள்ளுகுறபோது, பாளைகாற்ரெல்லாறும் சண்டை முகத்துக்குப் போயி வந்த வரெண்றும் னாம் புதிசாய் பட்டத்துக்கு வந்தோ மென்றும் நினைத்து பாளைகாறற் யெல்லோறுக்கும் வுடுகரை குடுக் குறபோது திருமலை தாசறி சின்னப்பனாய்க்கறுக்கு உடுகரை யும், பகல் மறி குதிரையும் குடுத்து யிண்ணு முதல் பகல்மறி கண்டால் உங்களுக்கு வொரு பிறுதாக வைச்சுக் கொள்ளுங்கள், தள்ள வேண்டியதில்லை யென்று வெகுமதி குடுத்ததில் அநுப்பி வைச்சாற்கள். யிப்படிக்கி சாலிவாகன செகம் 1561-க்கு மேல் செல்லும் சித்திரபானு வருஷ முதல் பறாபவ வருஷம் வரைக்கும் வருஷம்–25.

அவற் மகன் திருமலை பாப்பண சின்னப்ப னாயக்கற் பட்டத்துக்கு வந்து விரூபாஷி சிற்மை, குட்டம் கல்வாறப் பட்டியும் ஆண்டு வருகுற னாளையில் கற்தாக்களாகிய திருச்சினாபுரத்தில் சொக்கனாத னாய்க்கறவற்கள் பாளை யப்பட்டாரை யெல்லோரையும் வறவளைத்து தஞ்சாவூற் சமுஸ்தானத்தின் பேரில் தண்டு யெடுத்து கைவசப்படுத்திக் கொண்டு மறுபடி திருச்சினாபுரத்துக்கு வந்ததில் அப்போது தளவாயி கோவிந்தப்பய்யரை மட்டடக்கி துலுக்கன் றுஸ்தும் கான் பிறபலமாகி யெஜமானாகிய சொக்கனாதனாயக்கற வற்களை காவல் செயிது அவனே துரையானதில் கோவிந் தப்பய்யற் பாளைகாறற் சேதுபதியையும் வறவளித்து றுசுமுகான் ஒடுக்கி பழைபடிக்கி சொக்கனாத னாயக்கரை விடுதலை செயிது பாளையப்பட்டாருக்கெல்லாம் வெகுமதி செயிது அனுப்பிவிக்குற முன்னுக்கு நீங்கள் இத்தினி னாளும் சீற்மை சுத்த ஜாகீறாக அனுபவிச்சீற்களல்லவா யிப்போது அரைமனை சிலவுக்கு கொஞ்சம் பணம் குடுத்து வரவேணு மென்று யெல்லா பாளையப்பட்டுகளுக்கும் நிகுதி செயிததில் விரூபாஷி பாளையபட்டுகளுக்கு முன்தளவாயி றாமப்பய்யற்

சிலவுக்கு வாங்கிக்கொண்ட கணக்குப் படிக்கி கோபாலி செக்கிரம் ஆயிறம் பொன் வகையிறுப்பு கட்டளை யிட்டாற்கள்.

ரூஷ்தும்கான் என்ன துலுக்கனை கிட்டயிருந்த றாயசம் வெங்கனைய்யனும் கோவிந்தய்யனும் உள்ளாளாக யிறுந்து கவிசலம் செயிது முணு வெகு உள்ளது. பாதி செனம் வய்க்க வேணுமென்று துலுக்கனுடனே சொல்லி அந்த குறிக்கோள் சனம் வைச்சி அவாள் பறிக்ஷியில் துலுக்கனை சறிப்படித்திப் போட்டார்களென்றும் காதுலெ சீழ் வழியுற அடயாளமென்றும் சொல்லப்படுகிறது.

யிப்படிக்கி சாலிவாகன செகம் 1580க்கு பிலவங்க வருஷம் முதல் பிங்கள வருஷம் வரைக்கும் பட்டமாண்டு வந்த வருஷம்....

அவற் மகன் சின்னப்ப னாயக்கற் பட்டத்துக்கு வந்து திருமலை சின்ன பாப்பண னாய்கற்ரென்று பேற் பெத்து யிருக்கும் னாளையில், கற்தாக்கள் உத்திரவுக்கு கீழ்பணிந்து யிருந்துக் கொண்டு வருஷம் 1-க்கு கோபாலி செகறம் ஆயிறம் பொன் வகையிறுப்பு குடுத்துக்கொண்டு றாசதானியான விரூபாக்ஷியில் கதிரனாற் சிங்கபெருமாள் கோவிலும் யீசுறன் கோவிலும் ரெண்டு தெரிவு நூரு வீடு அக்கிரகாரமும் கட்டி வைத்து சத்திரமும் போட்டுவைத்து தலைக்குத்தில் பாறை புளற்ந்து வாயிகால் உண்டுபண்ணி, னஞ்சை செயித்து பிறாம்மணாளுக்கு குடுத்து நித்தியமும் பறிதம், பாகவதம், றாமாயணம், புறாணகதைகள் கேட்டுக்கொண்டு சாலிவாகன செகாற்தம் 1400 மேல் செல்லும் காளயுக்தி வருஷம் முதல் ரெக்தாஷி வருஷ வரைக்கும் வருஷம் 7.

அவற் மகன் திருமலை முத்துவேல் சின்னப்ப னாயக்கற் கற்தாக்களர்கிய ரெங்கிஷ்ண முத்து வீறப்பனாயக்கற் உத்திரவு படிக்கி நடந்து கொண்டு யிருக்கும் னாளையில் வொரு பிறாம்மன பிள்ளை போலேயும் வைகூஷணஸ்ரே போலேயும் னாமம் போட்டுக் கொண்டு சொற்பனத்தில் வந்து னாம் பெரியகோட்டைலே யிருந்து வருகுகிறோம். னமக்கு

கலியாணம் பண்ணி வைக்க வேணுமென்று கேட்டதாகக் கண்டு மறுனாள் பெரிய கோட்டையில் வந்து யிருந்துகொண்டு ரெதம் உண்டு பண்ணி உத்ஸவிக்கிறங்கள் னாச்சிமாறுடனே வாற்ப்பிச்சு மலை சுத்திபும் வீதி சட்டப்படுத்தி ரெதவுற்ஸவம் னடப்பித்து சட்டதிட்டம் பண்ணி புறட்டாசி மாதம் ரெதோர்ஸவம் நேமித்து பெரியகொட்டை குளமென்று குளமும் உண்டாக்கி கோவில் படித்தர நெமுகங்கள் செயிது, ஸ்ரீரெங்கம் வேதவியாச பட்டறய்யங்காற் யென்குற அய்யங்காரை தரிவிச்சி அவாளுக்கு மண்டவாடி கிறாமம் ச(ற்)வ மானியம் விட்டு தம்முடைய றாசியத்துக்குள்ள வகையிருப்பு கோபாலி ஆயிரம் பொன்னும் செலிதி வைச்சுக் கொண்டு தம்முட திறமையை பலிபாலனம் செயிது கொண்டிருந்தாற். சாலிவாகன செகம் 1607 மேல் குறோதன வருஷம் முதல் பிறமாதி வருஷம் வரைக்கும் வருஷம் 15.

அவற்மகன் திருமலை வெங்கிட சின்னப்பனாயக்கர் கற்த்தாக்களாகிய மங்கம்மா அவற்கள் உத்றாறபடிக்கினடந்து கொண்டு யிருக்கும் னாளையில் நித்திய தானமும் தேவாலயங்களும் கோவில் பட்டியும் கட்டிவைத்து வேதசாவறனை பூஜையும் தேவதாபத்தி குறுபத்தியுடனே நீலமலை அழகற் கோவில் மண்டபத்தில் தம்முடை பெறியோற்களை போலே கல்சிலைகளும் பண்ணி வைத்து சாலிவாகன செகம் 1621 மேல் விக்கிற வருஷம் முதல் விரோதி வருஷம் வரைக்கும் வருஷம்-10.

அவற்மகன் திருமலை யெதிறாமானுஜகிறி சின்னப்பனாயக்கற் அவற் தொகப்பனாற் தொரைத்தனம் பண்ணுகுற போது கூடயிருந்து சகல காறியமும் பாத்துக்கொண்டுயிருந்து பட்டத்துக்கு வந்து 44 னாள் யிருந்து மறணகாலத்தில் தன்னுடைய தயாறான னல்லிக்காமம்மாளை அழைத்து தன்னுடைய பிள்ளையான அந்தம்மாளுடைய பேறனான சப்பாணி சின்னப்பனாயக்கனை பட்டத்துக்கு வைச்சிக் கொண்டு நீ புத்திசாலியாகையினாலே றாச்சியம் ஆண்டிருக்கக் கடவதென்று சொல்லிப் போட்டு அவற்பட்டமாண்டு யிருந்த னாள் 50.

அவற் மகன் திருமலை சப்பாணி சின்னப்பனாயக்கற் பட்டம் ஆண்டுக் கொண்டு இருக்கிற னாளையில் கற்த்தாக்களாகிய மங்கம்மாள், விசையரெங்க சொக்கனாத னாயக்கற் அவற்கள் உத்தாறப்படிக்கி கீழ்பணிந்து வருஷம் 1-க்கு ரெண்டாயிறம் கோபாலி செக்கிறம் வகையிருப்புக்கு குட்டம், கல்வாறிப்பட்டி, விருபாஷி சீமையாண்டு வரும்போது ஒரு னாள் அவற் சொற்பணத்தில் பண்டாறம் போலே செடையும் முடியுமாக வந்து நாம் கொண்ட வெங்கிமலெ யென்றும் னம்முடைய பக்தனாகிய வற போக வழியுண்டாக்கி சாப்பாட்டுக்கு குடுத்து நடப்பிவிக்கச் சொல்லியும் கண்டவுடனே மறுனாள் ஒரு லிங்கம் கட்டி பண்டாறம் வந்து உம்மிடத்துக்கு போக சுவாமி யெனக்கு சொற்பனமாச்சி தென்று வந்து சொல்லக்கேட்டு சந்தோஷித்து கொண்டரெங்கி நட்டயாகிய வெருணாழி வழி மெத்தவும் உள்ள மலைக்கி ஆளேரி போகும் படியும் வழிப்படுத்தி, பூசை னெயிவேத்தியத்துக்கும் லிங்கம் கட்டிகளுக்கு மானியங்கள் விட்டு குடுத்து விருபாக்ஷிக்கி கிழக்கு னல்லிக்காமம்மாள் பேறால் ஒரு கல் மண்டப சத்திரம் கட்டி வய்த்து அக்கிறாறம் பண்ணி முத்து சமுத்திரமென்று கொளம் வெட்டி வைத்து அன்னச்சத்திரம் நடக்கும்படி செயிது மாவடை தோப்பும் வைச்சி அனுப்பட்டி யென்று ஊற்கட்டி கவுதமங் கொடை அக்கிறாறம் ஜீறணமானதை யெல்லாம் குடவனாத்துலே அ ...துற..... செயிது நிறவாயி கால்வெட்டி வைத்து னஞ்சை உண்டு பண்ணி குடுத்து பிறாம்மனாளுக்கு வீடுகளும் கட்டி வைத்து சிறிது புஞ்சை பூமியும் குடுத்து வாமன முத்திரைக் கல் னாட்டிவைச்சிக் குடுத்து பூதிபுறம் அக்கிறாறத்துக்கு னல்லிக்காமக புறமென்றும் பேற்விளங்கின படிக்கி சாலிவாகன செகம் 1632 மேல் விகுறுதி வருஷம் முதல் சோபகிறுது வருஷம் வரைக்கும் பட்டம் ஆண்ட வருஷம்14.

அவற்மகன் திருமலை வறாககிறி சின்னப்பனாயக்கற் பட்டத்துக்கு வந்து கற்தாக்கள் உத்திரவுபடிக்கி வகையிருப்பு செலுத்திக் கொண்டு யிருக்கும் னாளையில் தம்முடை சீமையில் சில காடு வெட்டி வைத்து காவேரியம்மாபட்டி யென்றும், கறட்டுப்பட்டி யென்றும், ரெட்டியபட்டி யென்றும், மூனு பட்டியும், காவேரியம்மா பட்டி குளமும் வெட்டி

வைத்து யிதுகள் உண்டுபண்ணி தன்சீமை பறிபாலனம் பண்ணிக் கொண்டு சாலிவாகன செகம் வருஷம் 1646 மேல் கொறோதி வருஷம் முதல் பிறமாதீ வருஷம் வரைக்கும் வருஷம் 10.

அவற்மகன் திருமலை தாசறி சின்னப்பனாய்கற் பட்டம் ஆண்டு வரும் னாளையில் கற்த்தாக்கள் ஆதீனம் பினாக்ஷி அம்பாளுக்கும் வங்காறு திருமருனாயக்கறுக்கும் விறோதங்கள் வந்து விழுந்து சந்தே சாயபு படேசாயபு என்றும் முத்து சாமி அய்யற் கோவிந்தப்பய்யற் றவணய்யற் யிப்படிக்கி பல சாமாஜிக்களாக னாலாவிதமாக சமுஸ்தானம் தட்டு கெட்டு அலங்கொலஞ்சதில் அப்போ மைசூற் சமுஸ்தா னத்தாற் வியாடிச்சி பறிகி வெங்கடறாயற், ஆறுணி வெங்கடப்பய்யற் இவாளிருவரும் டவுசுதனத்துடனேயும் குதி ரைகளுடனேயும் வந்து திண்டுக்கல் வரைக்கும் மகிமைக் கட்டிக் கொண்டு பாளையக்காறருக் கெல்லாறுக்கும் வகையிறுப்பு ஒசத்தி திறப்பு டண்ணுகுறமுன்னுக்கு, விரூபாக்ஷி பாளையப் பட்டுக்கு வருஷம் 1 க்கு வகையிருப்பு கோபாலி செக்கிறம் னாலாயிறம் பொன் தீற்துக் கொண்டு மயிசூற் சமுஸ்தானத் தாற் கட்டளைபடி னடந்துகொண்டு சாலிவாகன செகம் 1656 மேல் செல்லானின்ற ஆனந்த வருஷம் முதல் ஸ்ரீமுக வருஷம் வரைக்கும் வருஷம் 20.

அவற்மகன் திருமலை கதிறசின்னப்பனாயக்கற் பட்ட மாண்டு கொண்டு வருகிற னாளையில் மேற்படி தம்பி கும்பளனாயக்கர் சிறுனாயக்கனாக யிருந்து சீற்மை யாண்டு கொண்டு வருகுறதில், அப்போ ஆருணி வெங்கட்டப்பய்யற் பணம் செல்லயில்லை யென்றும், யவடம் சீமை பாளைகாற் மேல் பதினாயிறம் செனம் பதினாயிரம் குதிரை பிறங்கி ஒரு சறுதாரையும் அனுப்பவேணுமெண்றும், ஸ்ரீரெங்கபட்ட ணத்துக்கு யெழிதி அனுப்பின படிக்கி பசுவும் குதிரையுடனே அயிதற்னாயக்கனை அனுப்பிவைத்தார்கள் அயிதற். னாயக்கன் தளத்துடனே திண்டுக்கல்லுக்கு வந்துயிறங்கிக் கொண்டு பாளையப்பட்டும் பேறிலே பாளையம் போயி யிறங்கிக் கொண்டு சண்டை செயிததில் அந்த காட்டினியம் பொருக் காமல் றாசியமெல்லாம் அலைகொலஞ்சி போயிவிட்டுது.

அப்போது விருபாக்ஷியில் வந்துயிறங்கி ஆத்துக்கு வடகரை யில் கோட்டை போடுவோமென்று கடைக்கால் வெட்டி வகையிறுப்பு பதினாயிறம் பொன் குடுக்கச் சொல்லியும் கேட்ட தில், வந்தகால் பெறியமனுஷாள் சொல்ல காலம் ரெங்க செட்டியாற் மாறிபத்தாயி மனுஷரை யனுப்பிவிச்சதில் அப் போது அயிதற்னாயக்கற் மனுஷரை யனுப்பி வைத்துயெல்லை சுத்தி பாற்து வறச் சொல்லி உங்கள் யெல்கை யெந்த மட்டுயென்று கேட்டதில் நல்ல தங்கை ஆத்துக்குக்கு கிழக்கு, பழனி சீற்மை பாலப்பம்பட்டி பறதியூற் எல்லைக்கி கிழக்கு, பெறியாயி கவுண்டன் பொருளூற், மாம்டாரை சன்வாஜி பட்டிக்கி தெற்க்கு, கெதுகுறும்பு கன்னிவாடி சுள்ளெரும்பு ஆலாமறத்துக் கேட்டைக்கி மேற்க்கு, தாண்டிக்குடி மலைக்கி வடக்கு, ரெங்கமலை மஞ்சவளிக்கி தெற்க்கு, வேடசெந்தயூறுக்கு வடக்கு, யெடைய கோட்டைக்கி கிழக்கு, கொடனொத்துக்கு கிழக்கே யிருக்குற கூத்தம்பாரைப்பட்டி, வெல்லம்பட்டி வரைக்கும் யிவ்வளவு பூமியும் எங்களுதுயென்று சொன்னதில் யிவ்வளவு பூமி வைத்துக் கொண்டு கோபாலி னாலாயிறம் பொன் குடுக்க வேண்டிய தென்ன வென்று கோபித்துக் கொண்டு செலிய படுத்தினதில், அப்போது ரெங்கி செட்டி யாற் சலாஞ்செயிது ஜாகிறாயி அனுபவிச்சதால், யிப்போ நீங்கள் யெப்படியும் காப்பாத்த வேணுமென்று சமுதியாச்சி கேட்டுக் கொண்டாற். அப்போது பட்டம் கல்வாறபட்டி வல்லம்பட்டி உள்பட விறுபாக்ஷிக்கி நிகுதி கோபாலி செக்கி றம் பொன் 6000 யானைஉடுசனரயில் பொன் 500 ஆக கோபாலி 4500 பொன் வருஷா வருஷம் வகையிருப்பு தீற்த் துக்கொண்டு கைகாகிதமும் குடுத்து வெகுமதி செயிததில் அப்படியே வருஷம் ஒன்றுக்கு கலி 3250 பொன் வீதம் செலுத்த தாறாபுறம் கெட்டிக்கு குடுத்துக் கொண்டு வந்த சற்தாற்கள் உத்திரவு படிக்கி நடந்து கொண்டு தொரைத் தனம் பண்ணிக் கொண்டு யிருந்தாற். சாலிவாகன செகாற் பதம் வருஷம் 1676 மேல் செல்லும் பவ வருஷம் முதல் விஷூ வருஷம் வரைக்கும் வருஷம் 8.

அவற் தம்பி திருமலை குப்பள சின்னப்ப னாயக்கற் னாளயில் குட்டல்கப்லொற்ப்பட்டி ஆதியாகிய விருபாக்ஷி சீற்மை தம்முட பெறியோற்கள் உண்டு பண்ணின றாச்சி

மாண்டுக் கொண்டு வருமளவில் மகாறாசறாச ஸ்ரீ கும்பினி யாறவற்கள் மேற்கே தண்டு யெடுத்து, மகாறாச ஸ்ரீ மக்களூட்டு தொரை அவற்கள் பெறப்பட்டு வந்ததில் மேற் படி குப்பள னாயக்கற் பேட்டி செயிது கொண்டு கும்பிணி யாற் உத்திரவுப் படிக்கி கீழ்படிந்து நடந்துக் கொள்ளு குரேனென்று மேஸ்தற் கற்னல் லூட்டு தொரை அவற்கள் சமக்ஷமத்தில் அறிக்கை பண்ணிக்கொண்டதில் வகையிருப்பு கோபாலி 650க்கு பணம் வருஷம் 1-க்கு 3250 பொன் நெமுகம் செயிது கை காகிதம் வாங்கி சாலுவை சாதறா வெகுமதி செயிது கற்னல் லூட்டு தொரை அவற்கள் முத்திரை சைன் பண்ணப் பட்ட காகிதமும் குடுத்தாற். கற்னெல் துரை அவர்கள்ளுடனே கூட காடு வெட்டுகையும் வழி காட்டவும் சிறுது ஜனத்தையும் கூட்டியனுப்பினாற்.

மறுபடியும் மைசூறாற் வந்து சீற்மையை கட்டிக்கொண்டு எதாபிறகாறம் அதிகாறம் பெத்து மீறு சாயபு என்குறவற் மச்சுனன் அயிதற்னபாபு திண்டுக்கல் சீற்மை ஜாகிற் குடுக் குமளவில், விறுபாக்ஷியாற் கும்பினியாறுக்கு அனுகூலமா யிருந்தானெங்குற அடத்துனாலே வெகுசெல்லியம் செயிது சண்டைக் கிளேரிட்டு கும்பனாயக்கறும் எதிறாளியாக சண்டை பண்ண நிணைச்சதில் அப்போதைய கோட்டையாற் பழனியாற் ஆயக்குடியாற் கன்னிவாடியாற் யிவ்வகை பாளை காறறெல்லாம் மீறு சாயபு அவற்களுக்கு கும்மக்காக சண்டை செயிது விரூபாக்ஷியென்று விதமும் யெடுத்துப்போட நிணைச்ச தில் பெரியகோட்டை செண்டையிலும் விரூபாக்ஷி சண்டை யிலும் சிறிதுஜனங்கள் சேதம் வந்து போயி வேண்டியபடிக்கு ஊருகள் சுட்டுங் அரமனை அறாஜங்கள் சுட்டும் சகல வுபத்திர வங்கள் பண்ணினதில் கும்பளனாய்கற் குஞ்சி குட்டி சகிதமாயி மலையேறி யிருந்தாற்.

அப்பால் ஸ்தானாபதிகள் முகாந்திரமாக னான் கும்பி னியாறிடத்தில் உங்கள் அறமணை காறியம் பேசயில்லை யென்றும், பெறியதுரைகளானதுனாலே கண்டுக் கொண்டே னென்று மீறுசாயபு அவற்களுக்கு சொல்லி யனுப்பி சமாதா னம் பண்ணிக் கொண்டு, முன்வகையிருப்பு படிக்கி தீற்த்துக் கொண்டு விருபாக்ஷி சேந்து குட்டம் கல்வாற்பட்டி வெல்லம்

பட்டி வகையறா விரூபாக்ஷி சீற்மை ஆண்டு கொண்டு வந் தாற். மீறுசாயபும் பாளையமும் திண்டுக்கல் வந்து சேற்ந்து யிருந்து அனேளுத்திரவுப்படி சீழ்ப்படிற்ந்து நடந்து கொண்டு யிருந்தாற்கள்.

மீறுசாயபுக்கு பின் சையிது சாயபு அவற்கள் திண்டுக்கல் அதிகாறியாக வந்து ரெண்டு மூணு வருஷம் நிகுதிப் படிக்கி பணம் குடுக்கையும், வேண்டிய கட்டளையிட்டபடி நடந்துக் கொண்டுயிருக்கும் னாளையும் விறோதிகளானவற் மித்ர பேதம் பண்ணி சைதுசாயபு அவற்களுக்கு பொல்லாப்பு ஆக் கினபடியினாலே பெங்களூறுக்கு சைதுசாயபு அவற்கள் போயிருக்கும் போது விருபாக்ஷிபாளை பிடிக்க வேணுமென் றும் சேனங்களனுப்ப வேணுமென்றும் யெழிதவும், ஆறுமாசம் சைது சாயபு சண்டை செயிது சண்டை முடியாமல் நிறவற வேணுமென்று சையிது சாயபு அவற்கள் யெழிதினதில் டிப்பு சுலுதான் அவர்களெ விருபாக்ஷி பேறில் வந்து யிறங்கி மலை சுத்தியும், றாச்சியம் சுத்தியும், விரூபாக்ஷி பேறிலே வெகுகடினம் செயிதாற். அப்போ சகலமும் தோத்து மலெயிலுயிருக்க கூடா மல் கும்பினியாறே கெதியென்று கும்பினி சீற்மையாகிய மணப் பாறை பாளையபட்டு கடலூறில் குஞ்சி கொழந்தைகள் பெண்டுகள் சகிதமாயி கடலூறில் வந்து சேற்ந்தாற்.

யிப்படியிருக்கும் சமயத்தில் யெடைய கோட்டையாற் னாம் சகாயிச்சி சண்டை செயிது விரூபாக்ஷியாரை தெரித்தி விட்டோமென்று நினைத்து விருபாக்ஷி சீற்மையில் யெல்லை பெறவெணுமென்று நினைத்து புலியூற்னத்தம் வெறியப்பூற் யெல்லை வரைக்கும் நிசான் போட்டதில் அந்த ஊற் தண்டக்காற் மாதாறி குடிகள் யெல்லோரும் கூடி அந்த நிசானை பிடிங்கி யெடைய கோட்டையில் னட்டு பாது வரைக்கும் விரூபாக்ஷி சீற்மை னாங்கள் அறிவோம் யென்று சொன்னதில் யெடையகோட்டையாற் வெறியப்பூற் தண்டக் காற் வகையறா பேற்களை யெல்லோரையும் பிடித்து சைது சாயபு யிடத்தில் விட்டு டிப்பு பாக்ஷாயி அவற்களிடத்தில் கொண்டுபோயி விட்டதில் பஞ்சாயிதுகாறரை விட்டு நியாய விசாறணையில் யெடைய கோட்டையாற் வெரியப்பூறில் நிசான் போட்டது துளுதறதமென்று தெளிந்தப்படி

யினாலே னாம் அதை அரைமனையாற் சீற்மை கட்டினால் நீயெல்லை பெறண்டது உன்னிடத்தில் குத்தம் உண்டெண்றும், தண்டக்காறன் பிடித்த விவகாறம் ஜெயமென்றும் நேரித்தாற்கள். அப்போ அந்த தண்டக்காறனிடத்தில் யினி யாறாகிலும் யெல்லெ பெறளி செயிதால் னம்மிடத்தில் அறிக்கை பண்ணவேணுமென்று டிப்பு சுலுத்தான் கட்டளை யிட்டாற்கள். மணப்பாரை பாளைப்பட்டுக்கு சேற்ந்த கடவூரில் குப்பனாயக்கற் யிருக்குமளவில் கும்பினியாற் தயவு நினைத்து தஞ்சாவூறிலிருக்கும் பெரியபாதறியாறிடமாக ஸ்தானாதிபதி பிறதானி முத்து வீறசேறுவகாறனை யனுப்பி வைத்து பாதறியாற் முகாந்திரம் திருமலை னாயற் யென்ற மைசூற் பிறதானியாற் அருமுகம் பண்ணி அவற் முகாந்திரம் மேஸ்தற் சலவன்துரை அவற்களை கண்டு பேசிக்கொண்டு அவடத்து முகாந்திரம் திருசிரபுறந்து கற்னல் மெஸ்தற் ஆரன் துரை பேட்டி செயிதுக்கொண்டு அவடத்து முகாந்திரம் னபாபு பேட்டி செயிது மணப்பாரை பாளையப்பட்டுகளுக்கு மஞ்சூறான் யிருப்பெடம் பெறக்க உத்திரவு பெத்து யிருக்குமளவில் மேல்யெழுதிய விரூபாக்ஷி பிறதானி முத்து வீறசேற்வைக்காறன் தஞ்சாஊரிலே கும்பினியாற் தயவுலே மேற்படி பாதரியாறிடத்தில் காத்திருந்தான்.

யிப்படி யிருக்குமளவில் மேஸ்தர் னாமதுரை அவற்கள் விரூபாக்ஷி முத்து சேற்வைக்காற்களை அழைத்து கும்பினியாற் மேற்கே தண்டு எடுக்குறாற்களென்றும் நீ கும்பினிக்கி வேண்டிய சறஞ்சாமான் ஒத்தாசை செயிதால் உங்கள் பாளைப்பட்டு உங்களுக்கு யினாம் பண்ணி மேலும் உங்களை பெரிதனமாகவும் புள்ளைபாவமாக கும்பினிபாற் வைத்திருப்பாற்களென்று கட்டளையிட்டாற். அப்படியே நடந்துகொள்ள அத்தாக்ஷி எழுதி வாங்கிகொண்டு சென்னபட்டனம் யெழிதி மறுவுத்திரவு உடனே வறச் சொல்லியிருக்குறதுனாலெ நீ போயி ஜன்னல் மேடுசுதுரை அவற்களை காண வேணுமென்று முத்துவீற சேற்வைக் காறனுக்ு சேமஸ்தற் றாமதுரை யவர்கள் கட்டளையிட்டாற்கள். அப்படியே சென்ன பட்டணம் போயி சென்னல் மேடுசு துரை அவற்களை கண்டதில் மேஸ்தற் றாமதுரை அவற்கள் உங்களுக்காக யெழுதியிருக்கிறாற். நீற் உம்முடை பாளையகாறறுக்கெழுதியனுப்பி னம்

முடை தண்டுக்கு வேண்டிய சாமான் சேகரம் பண்ணச் சொல்லியும் நீற் யாதுகாறியம் சாகிரதை செயிதால் உங்கள் பாளையப்பட்டு உங்களுக்கு யினாம் விட்டு கும்பினியாற் கட்டுகிற சீமையில்லுள்ள பாளைகாற் யெல்லோரிலும் மொதமையாயி வைக்கலாதமென்று கட்டளையாச்சிது. சென்னபட்டணத்திலே யிருந்து முத்து வீறசேர்வைகாறன் வந்து கம்பளனாயக்கறுக்கு வற்தமானம் சொல்லி கும்பினியாற் கடாஷத்துக்கு பாத்திறனாக சறஞ்சாமான் ஜாக்கிரதை செயிது மறுபடி தஞ்சாவூரிலே காத்திருந்தாற்.

தஞ்சாவூறிலே யிருந்து ஜென்னல் மேடீசுதுரை அவற்கள் தண்டுடனே புறப்பட்டதில் விருபாக்ஷி பிறதானியாகிய முத்து வீறசேறுவைக்காறன் ஜெனங்களுடனே கூட சேவித்துக் கொண்டு வருகிறதில் தண்டுலே விருபாக்ஷி ஜனங்களுக்கு தடையில்லாத வுத்திரவும் பெத்து கறூர் கோட்டையில் 300, அறவகுறிசி கோட்டையில் 200, தாறாபுறத்தில் கோட்டையில்200, செக்கிறகிறி கோட்டையில் 200, யிந்த கோட்டைகள் கைவசம் படித்தி கறூறுக்கு தாசில் அறவகுறிசி தாசில் அப்பாணைய்யங்காற் தாறாபுறம் தாசில், வெங்கிட சேஷயங்காற் கிறிமலை தாசில், கண்ணயங்காற் யிப்படிக்கி தாசில் நெமுகப்படித்தி மேற்படி கெடிகளுக்கு மேலெழிதிய விருபாக்ஷி செனங்களை மாணியம் போட்டு கோயம்முத்தூற் சேந்ததில், தண்டு கிழக்கே ரெண்டு வாழி வழியிலும் கோயமுத்தூற் பட்டணத்தில் மேஸ்தற் சாம்பற் துரை அவர்களும் திருமல றாயறும் விருபாக்ஷி ஜனமும் யெறங்கியிறுந்ததில், டிப்பு சுலுத்தான் குதிரை வந்து வளைச்சிக் கொண்டதில் விருபாக்ஷி செனமும் சாம்பாற் துரை அவற்கள் செனமும் சென்டை செயிது, மிகவும் விருபாக்ஷி செனம் சேதப்பட்டு போயி, குதிரை துரத்தி விட்டு மேஸ்தர் மெடோசு துரை அவற்கள், மேஸ்தற் ஆறிசு துரை அவற்கள், மெஸ்தற் குளோசுதுரை அவற்கள் யிவர்களாகிய துரைகள், யெல்லோறும் முத்துவீற சேர்வைக்காறனுடனே நீ னம்முட தண்டுக்கு ஆடுமாடு கோழி சாமானும் குடுத்து ஜனமும் சேதப்படுத்திக் கொண்டு கட்டிக் காத்து உத்திரவாதம் பண்ணினபடியினாலெ னாங்கள் கணவாயிமேலே போயி ஸ்ரீ ரெங்கபட்டணம் கைவசப்படுத்திக் கொண்டு மறுபடி திரும்பதலையில் உங்கள் பாளைகாறுக்கு வெகுமதியும் குடுக்கலாகு

மென்றும், கணவாயி கீழே றகளையில்லாமல் பார்த்துக் கொள்ள சொல்லியும் கட்டளையிட்டாற்கள். கட்டளையிட்ட படி முத்துவீறசேறுவைகாறன் வந்து சேர்ந்து உடனே விரு பாக்ஷி வந்து யிருந்தாற்கள்.

திண்டுக்கல் சீற்மைக்கு அதிகாறிகளாகிய மேஸ்தற் அலெக் சாந்தற் குலோட்டுதுரை அவற்கள் வந்த சமயத்திலே விரு பாக்ஷி வகையிறுப்புக் கூடகூலி வருஷம் 1-க்கு 3250 பொன் நேமிச்சி சன்னது குடுத்து அப்படியே செலுதி வைத்துக் கொண்டு யிருந்தாற்கள். மேஸ்தர் ரெங்கன் துரை அவர்கள் னாளையிலும் மேல்படி வகை யிறுப்புப்படி கட்டளையிட்டு வந்தாற்கள்.

மேஸ்தற் உஞ்சிதொரை அவற்கள் னாளையிலும் அப் படியே கட்டளையிட்டுக் கொண்டு வந்தாற்கள். யிப்படி யிருக்கும் னாளையில் பழனிவேலாயுத னாயக்கற் விருபாக்ஷி கட்டிக்கொள்ள நினைத்து சண்டைக்கி வந்த விடத்தில் அந்த முன்னுக்கு மேஸ்தற் ஆலொற் துரை அவற்கள் வந்து அந்த பூமி பாறத்து மேஸ்தர் உஞ்சிதுரை அவற்களுக்கு யெழுதி அனுப்பி தகறாறு தீர்த்து நல்ல தங்கா ஓடையிலெ தெற்கே மலைவரைக்கும் கல்னாட்டி வைத்து குடுத்தாற்கள். அவாள் கடாட்சத்தில் கட்டளை படிக்கி குப்பளனாயக்கற் பட்டம் ஆண்டு கொண்டு வந்தாற்.

குட்டம், கல்வாறப்பட்டிக்காக அறவக்குறசிக்காறற் வியாசியம் செயிததில் மேஸ்தற் கற்னல் லூட்டு தொரை அவற்கள் குப்பளனாயக்கர் பேறுக்கு கொடுத்துயிருக்குற காகிதம் பாறது னக்கல்படித்திக்கொண்டு அதே மஞ்சூகுறாயி, குட்டம் கலவாறப்பட்டி விருபாக்ஷிக்கி சேறம்படதெண்று அலக்சாந்தம் மதலோட்டுதொரை திறபிச்சிக் குடுத்தாற்கள். கட்டியிலேயிருந்து மேஸ்தர் ஆறிங்கடன்துரை, மேஸ்தற் றிட்டுதுரை, மேஸ்தற் மகுலோட்டு தொரை மூன்று துரை களும் திண்டுக்கல்லுக்கு வந்து யிறங்கி குப்பள னாயக்கரை வறவளிச்சதில் பேட்டிக்கி வந்து தான் கும்பினியாற்களுக் காக பிறயாசப்பட்ட வகையை அறிக்கை பண்ணிக்கொண்ட தில் உன்னுடைய பிறயாசத்தை போற்டாற்கு தெரியப்

படுத்தி உமக்கு வெகுமதியும் வேண்டியகாறியமும் னடத்திக் குடுக்குறோமென்று கமிட்டியாற் கட்டளையிட்டாற்கள்.

மேஸ்தர் ஆறடிசுதுரை, அவற்கள் கலக்கட்டற் அதிகாற மாக வந்திருக்கும் னாளில், முன்வகையிருப்புப் படிக்கி ரெண்டொரு வருஷம் குடுத்துக்கொண்டு கட்டளைபடிக்கி னடந்து கொண்டுவந்தவற், கும்பினியாறவற்களுக்கு விறோதியான தம்பா கவுண்டனெயும் லக்கனாயக்கனையும் ஆதறிச்சதுப் போலேயும் ஸ்ரீரெங்கப்பட்டணத்துக்கு ஆளனுப்பினாரென்றும் கும்பினியாற் உத்திரவுக்கு விறோதியாக நடந்தாரெங்குற ஆயாசத்துனாலெ என் தொகப்பனாராகிய குப்பள னாயக்கரையும் அவருடனே கூடயிருந்த என் தமயன் முத்து வேல்னாய்க்கரெயும் துற்மதி வருஷம் காற்திகை மாதம் விருபாக்ஷியில் தூக்குப்போட்டு தெயிவகெதியானாற். சாலிவாகன செகம் 1684-க்கு மேல் செல்லாநின்ற சித்திரபானு வருஷம் முதல் துற்மதி வருஷ வரைக்கும் வருஷம் 40. குப்பள னாயக்கறுக்கு வருஷம் 73.

மேல் யெழுதிய வரலாற்களிலே எங்கள் விருபாக்ஷி பாளையப்பட்டு ஆண்டு வந்த என் முன்னோற்கள்பட்ட வரிசையும் வருஷங்கள் துகையும் யிதின் கீழே யெழிதி வருகுறது.

1. திருமலை சின்னப்ப னாயக்கர் சாலிவாகன செகம் 1303, கலியுகம் 4482-க்கு மேல் செல்லாநின்ற துற்மதி வருஷம் முதல் விசுவாவசு வருஷம் வரைக்கும் பட்டம் 45.

2. கதிறி திருமலை சின்னப்ப னாயக்கர் சாலிவாகன செகாற்பதம் 1348-க்கு பிறாபவ வருஷம் முதல் யுவ வருஷம் வரைக்கும் பட்டம் வருஷம் 30.

3. அவற் மகன் திருமலை குப்பளசின்னப்ப னாயக்கர் சாலிவாகன செகம் 1377. தாது வருஷம் முதல் பிலவ வருஷம் வரைக்கும் பட்டம் வருஷம் 26.

4. அவற் மகன் திருமலை பலபத்திற றாமசின்னப்ப னாயக்கர் சாலிவாகன செகம் 1404. சுபகிறுது வருஷம் முதல் ஸ்ரீமுகவருஷம் வரைக்கும் பட்டம் வருஷம் 32.

5. அவற் மகன் திருமலை எரதம்மச் சின்னப்ப னாயக்கர் சாலிவாகன செகம் 1436 பவ வருஷ முதல் சாதாரண வருஷம் வரைக்கும் பட்டம் வருஷம் 37.

6. அவற் மகன் திருமலை வறாககிறி சின்னப்ப னாய்கற் சாலிவாகன செகம் 1473 விரோதிகுறுது வருஷம் முதல் விக்கறம வருஷம் வரைக்கும் பட்டம் வருஷம் 30.

7. அவற் மகன் திருமலை நயினாத்தை சின்னப்ப னாய்கற் சாலிவாகன செகம் 1503 விஷு வருஷம் முதல் பிலவ வருஷம் வரைக்கும் பட்டம் வருஷம் 21.

8. அவற் மகன் திருமலை குப்பளசின்னப்ப னாயக்கற் சாலிவாகன செகம் 1524 சுபகுறுது வருஷம் முதல் விஷு வருஷம் வரைக்கும் பட்டம் வருஷம் 40.

9. அவற் மகன் திருமலை தாசறி சின்னப்ப னாயக்கற் சாலிவாகன செகம் 1564 சித்திரபானு வருஷம் முதல் பறாபவ வருஷம் வரைக்கும் பட்டம் வருஷம் 25.

10. அவற் மகன் திருமல பாப்பன் சின்னப்பனாயக்கற் சாலிவாகன செகம் 1589 பிலவங்க வருஷம் முதல் பிங்கள வருஷம் வரைக்தும் பட்டம் வருஷம் 11.

11. அவற் மகன் திருமலை சின்னப்பாப்பன் னாயக்கர் சாலிவாகன செகம் 1600 காளயுக்தி வருஷம் முதல் ரெக்தாக்ஷி வருஷம் வரைக்கும் பட்டம் வருஷம் 7.

12. அவற் மகன் திருமலை முத்துவேல் சின்னப்ப னாயக்கர் சாலிவாகன செகம் 1607 குறோதன வருஷம் முதல் பிறமாதி வருஷம் வரைக்கும் பட்டம் வருஷம் 15.

13. அவற் மகன் திருமலை வெங்கிட சின்னப்ப னாயக்கர் சாலிவாகன செகம் 1621. விக்கிறம வருஷம் முதல் விறோதி வருஷம் வரைக்கும் ஆண்ட பட்டம் வருஷம் 10.

14. அவற் மகன் திருமலை யெதிறாமனுஜகிறி சின்னப்ப னாயக்கர் பட்டம் வருஷம் 50.

15. அவற் மகன் திருமலை சப்டாணி சின்னப்ப னாயக்கர் சாலிவாகன செகம் 1632. விதறுதி வருஷம் முதல் சோபகிறுது வருஷம் வரைக்கும் பட்டம் வருஷம் 14.

16. அவற் மகன் திருமலை வறாககிறி சின்னப்ப னாயக்கற் சாலிவாகன செகம் 1646. குறோதி வருஷம் முதல் பிறமாதி வருஷம் வரைக்கும் பட்டம் வருஷம் 10.

17. அவற் மகன் திருமலை தாசறி சின்னப்ப னாயக்கர் சாலிவாகன செகம் 1656. ஆனந்த வருஷம் முதல் ஸ்ரீமுக வருஷம் வரைக்கும் பட்டம் வருஷம் 20.

18. அவற் மகன் திருமலை கதிற சின்னப்ப னாயக்கர் சாலிவாகன செகம் 1676. பவ வருஷம் முதல் விஷு வருஷம் வரைக்கும் பட்டம் வருஷம் 8.

19. அவற் தம்பி திருமலை குப்பள சின்னப்ப னாயக்கர் சாலிவாகன செகம் 1684. சித்திரபானு வருஷம் முதல் துற்மதி வருஷம் வரைக்கும் அவற் வயசு 73. தூக்குப்பட்டவன் பட்டம் வருஷம் 40.

20. அவற் மகன் முத்துவேல்னாயக்கர். மேற்படியான் பட்டத்தில் கூடயிருந்து தூக்குப்பட்டவன்.

21. அவற் தம்பி திருமல குப்பளனாயக்கர் மகனான திருமலை பொன்னப்ப னாயக்கன். யிப்போயிருக்குறவன் வருஷம் 15. மேற்படி யிருவத்தி ஒன்றாம் பட்டக்காறனாகிய திருமலை பொன்னப்ப னாயக்கற் யென்குற னான் திண்டுக்கல் மலைமேல் யென் தாயாற் முதலாகிய 22 யிருவத்திரெண்டு ஜனத்துடனே பாறாவிலேயிருந்து கொள்ளுமளவில் எனக்கு 16 வயசு ஆகையினாலேயும் எனக்கு வலது கால் பலஹீன மானதுனாலேயும் எனக்கு ஒரு சங்கதியும் தெரியாதவனாக யிருந்ததில் என் தொகப்பனாரையும் தமையனாரையும் சிக்ஷை டக்க வேண்டியதுக்காக மகாறாச ஸ்ரீ கும்பினியாற் கட்டளை யிட்டபடி அவற்களுக்கு கடினமான தெய்வகெதியாயி போச்ச. என் தொகப்பனாருாகிய குப்பளனாயக்கற் வருஷாந்திரம் கலி

30,000 பொன் காணுமான என்னுடைய விருபாக்ஷி சீற்மை அனுபவிச்சி கொண்டு வறப்பட்ட என் தொகப்பன் கெனம் பொரிந்திய கும்பினியாறவற்களை விறோதிச்சபடியினாலே என் தகப்பனுக்கும் என்தமயனுக்கும் தூக்கிப் போட்ட சிகடி பண்ணின சனம் 2 கைதிலகப்பட்ட 1805 முதல் 1815 வருஷம் வரைக்கும் பல வியாதியால் மரணமடைந்தியது. என் தாயாறாகிய பாப்பாயி அம்மாள் முதலாகி பெண் கள் 10. 1800 வருஷத்தில் கைது விட்டு என் தமயன் மகள் பொன்னயம்மாள், வெள்ளயம்மாள் ரெண்டு பேருக்கும் வேலக்காற் 2 ஆக னாலு பெங்களையும் கெனம் பொறிந்திய கும்பினியாற் தயவுனாலே கைது விட்டு அவாளிருப்பெடத்துக்கு பெண்சனங்கள் 4. னாலும் யென் பெரிய தாயாற் நமாஞ்சி யம்மாள் முதலாகிய ஆறுசெனமும் கைதுலேயிருந்து கெனம் பொறிந்திய கும்பினியாற் கடாஷம் வரும்படி என் யிஷ்டதை வத்தை புறாற்திச்சிக் கொண்டு யிருக்கும் னாளையில் 1815 வருஷம் சபிடம்பற் மாதத்தில் மதிரை ஜில்லா ஜெட்ஜி மகாறாச ஸ்ரீஉல்லிய மஹாலி ஹறசெஷஷ் துறை அவர்கள் என்னை வறவளித்து உனக்கு பாறாவிலை தலையாச்சி தென்றும், மிண்ணுமுதல் கைதுயில்லையென்றும் யிந்த அக்டோபற் முதல் மாசம் பொன் வராகன் 30 சம்பளமெண்றும் நீயிந்த சம்பளம் வாங்கிக்கொண்டு திண்டுக்கல் னகறத்திலியே யிருக்கக் கடவதென்று கட்டளையாச்சிது. னான் பாறாவிலே யிருக்குற னாளையும் மேஸ்தற் ஹாற்டிசு துரை அவற்கள் திண்டுக்கல் மலைவிட்டு கீழே யெறக்கி பேட்டையில் கைதுலே வைய்க்கும்படி உத்தரவாயி அன்னாளில் வெங்கல பாத்திரம் உருப்படி 11. யிருசல்லாற் கிஷ்ணம னாயக்கர் லக்கியன் ஜமதாறன் யிவற் முன்னிலைக்கி என்னிடத்தில் சேறத்து றசீது வாங்கிக் கொண்டாற்கள். யிதின் முன்போனது போக யின்னாள் முதல் உள்ள வகை நகைகளெல்லாம் அகப்பட்டது களை உனக்கு சேறப்பண்ணலாகுமென்று மேஸ்தற் ஆறடிசு துரை அவர்கள் கட்டளையிட்டாற்கள்.

யென் தமயன் பெண்ங்களாகிய வெள்ளம்மாள், பொன் னம்மாளுயிருவருக்கும் கெனம் பொறிந்திய கும்பினியாற் கடாஷம் வைத்து பொன் விறாகன் 200 குடுத்து கலியாணத் துக்கு உத்திரவு ஆகைனாலே மேஸ்தற் ஜற்ஜி அறவன் துரை

அவற்கள் னாளையில் அந்த கலியாணம் நிரைவேறி அவாளி ருப்பெடம் சேந்தாற்கள்.

யெனக்கு சிறுப்பத்திலியே கலியாணமாகி என் பெண்சாதி 1805 வருஷம், டிசம்பற் மாதம், 13 தேதி, ராத்திரி னாலு மணிக்கு ஆண் பிள்ளை பெத்து, னாளது மாதம் 14தேதி பகல் ஏழு மணிக்கி மறணமடைந்து போனாள்.

னான் பட்டக்காறனாகைனாலே என் விண்ணம் படிக்கி கற்ம்மாதிகளுக்கும் கொஞ்சம் செலவுகளுக்கு வந்து அது சங்கதிகளுக்கு உண்டான திரைகள் நடக்கயில்லை. அது விபரம் யென்னமென்றால்: யெங்கள் ஜாதி வழக்கமும் எங்கள் வமுச வழக்கமும் அனசறி(சறி)ச்சி னடக்கவேண்டியது களுக்கு னான் மிகவும் யேழ்மையாயி யிருக்கிறதுனாலேயும், சிலவு முதலுக்கு யில்லாதே கும்பினியார் அப்போதைக் கப்போ குடுக்கப்பட்ட சிலவுகள் னாலே னான் தட்டிக்கொண்டு யிருக்கறதுனாலேயும் யென் தகப்பனாற், தமயனாற், தாயாற், மதினிமாற் பெண்சாதி, முதலாகிய யெட்டு பேற்களுக்கு கற்மாதிகள் செய்யவேண்டிய காறியதுக்கு கொரைஞ்சது ஆயிறம் விறாகனும் என் கலியாணத்துக்கு முன்னூரு விறாகனும் ஆக னானூரு விறாகன் வந்து கட்டளை வந்து யிருப்பதுனாலே மேல் யெழிதிய கற்மாதிகளும் எனக்கு கல்லியாணமும் னடக்க சங்கதிகளில்லாம யிருக்குறது.

எங்கள் ஜாதி வழக்கம் னான் பட்டக்காற னாகைனாலே கலியாணமில்லாமலிருக்கலாகாது. பெண்ணுள்ள விட்டுக்கு னாங்கள் போறதேயல்லாமல் புள்ளையிடத்துக்கு பொண்ணை கூட்டிக் கொண்டு வந்து கலியாணம் பண்ணுகுற வழக்கமில்லை. என் புள்ளையாகிய ஒண்ணறை வயசு ஆண்புள்ளை குழந்தைக்கி னாளது வரைக்கும் பேற் வைக்குகயும் தலைமயிற் வாங்கு கையும் மில்லை. பேற் வக்குறதும் னாமம் கறணம் சாற்து குறதும் எங்கள் சீமையான விருபாக்ஷிக்கி சேந்த பெறிய கோட்டையில் யென்ங்கள் குலதைவமாகிய வெகுவம்மன் சன்னதியிலடைக்க வேண்டியத்துக்கு சற்க்கார் உத்தரவு யேற்கக் காத்திருக்கிறேன்.

னான் மிகவும் யேழையாயி எனக்கு புத்தி தெரியாமலிருக்கும் போதே பாறாவில் அசப்பட்டு அனேகம் கஷ்டப்பட்டு மகாறாச ஸ்ரீ குப்பினி தொரைகள் அபிமானத்து யிப்போ செம்பளம் நெமிச்சி யிருப்பதுனாலே அதைக் கொண்டுள்ள உத்திரவு படிக்கி திண்டிக்கல் னகறத்தில் யிருக்குறேன்.

கெனம் பொருந்திய கும்பினியாறவர்கள் கடாக்ஷம் வைத்து என் விரூபாக்ஷி சிற்மைக்கி என் ஜமிந்தாரி ஜாரிசெயிது என்னாலே வேண்டிய கும்பினி பணிவடைகள் நடத்திக் கொள்ளும் படியும் என்னையும் ஜமிந்தாரியாக நிலை நிருத்தும் படிக்கி கும்பினியாருக்கு பெத்த புள்ளையாக னான் யிருக்க வேணுமென்று வணக்கத்துடனே காத்திருக்குரேன்.

என் தொகப்பனாரைப் போலே கெனம் பொரிந்திய கும்பினியாறவற்வளை விறோதிச்சி நிலைக்கோட்டை குள்ளப்ப னாயக்கற், மணப்பாரை முத்து வீறலக்கய்ய னாயக்கற் யிவற்களுக்கும், சாபட்டூர் காமய னாயக்கறவற்கள் மக்களுக்கு ஜமீன் தாரியும் நடந்துவறக் கட்டளையிருப்பத்துனாலே எனக்கும் என்னுடைய ஜமிந்தாறி ஜாறியாக வேண்டிக் கோருகுரேன்.

**திருமலைப் பொன்னப்ப னாயக்கன்**

☆

